359

# தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 5, 1999 தொகுதி 69
எண் 1.

D
V2ll,31'N99
N99.691
2·1074

வெளியீடு 09-02-2000 Issued 09-02-2000

(126)

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 5, 1999 - தொகுதி 69 - எண் 1

Monday, 5th April, 1999—Volume 69 - No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

Legislative Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

5–4–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| rsonnel of the Government of Tamil Nadu | vii-x |
| ழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| ழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| ாக்கள்-விடைகள்— | |
| டுக்குறியிட்ட வினாக்கள் | 1-41 |
| 110-ன்கீழ் அறிக்கை— | |
| ாசனக் கட்டமைப்புகள் [illegible] மற்றும் கோலப்பன் குழு [illegible] தொடர்பாக 4-4-1999 அன்று அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகள் பற்றி முதலமைச்சரின் அறிக்கை | 42-46 |
| புக் கவன ஈர்ப்பு— | |
| முதி ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் காவல் துறையினரால் தாக்கப்பட்டது | 46-54 |
| அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் | 54-55 |

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) விதி 110-ன்கீழ் முதலமைச்சர் அளித்த அறிக்கை நகல் பத்திரிகையாளர்களுக்கு அளித்தல் — 55

(இ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு — 66

5. தகவல் கோரல்—

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப் பட்டினம் இஸ்லாமிய மக்கள் காவல் துறையால் பாதிப்பு — 55-56

6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 20 – வேளாண்மை
கோரிக்கை எண் 52 – வேளாண்மை குறித்த மூலதனச் செலவு — 56-150

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் — 56,62,69-70, 79-80,82,87, 97-98,99,101, 102-104, 121-145

திரு. ப. மோகன் கந்தசாமி — 67-74

*திரு. பா. கோபால் — 74-78

திரு. ஜி.கே. மணி — 78-83

திரு. ஜி. பழனிசாமி — 83-93

திரு. சி. வேலாயுதன் — [illegible]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 89-90,91,92, 93-95

திரு. பி.ஆர். சுந்தரம் — 96-104

*திரு. ஜி. நிஜாமுதீன் — 103-110

திரு. எல். மூக்கையா — 110-113

திரு. பி. வெங்கடசாமி — 113-116

திரு. க. மணிவர்மா — 116-120

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— — 150-151


221074



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை : அமைச்சர்** — **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை : அமைச்சர்** — **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் , சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர் :** — **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :** கால்நடை பராமரிப்பு |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko. Si. Mani :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture. Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport. Nationalised Transport. Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development. Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துண்ணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயல |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி. அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

18. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
19. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திருமதி என். துளசிபாய், பி.ஏ .. சார்புச் செயலாளர்
25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
30. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
31. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ .. தலைமை நிருபர்
32. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
33. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
35. திரு. நா. நடராஜன், பி.ஏ .. தலைமை நிருபர்
36. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
37. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். .. தலைமை நிருபர்
38. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 24. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 25. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 26. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 27. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 28. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 29. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 30. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். | .. கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 33. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 34. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 36. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 37. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 38. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 39. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 40. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 41. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |



| | | |
|---|---|---|
| 43. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 44. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 45. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 46. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 47. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 49. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 50. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 51. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 52. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 53. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 55. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. [illegible] சந்தூர் |
| 56. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 57. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 58. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 59. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. கும்மிடிப்பூண்டி |
| 60. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 61. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 63. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 64. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 65. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன். திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி. திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
211. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
220. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்
234. வெற்றிடம் .. திருவட்டாறு
235. வெற்றிடம் .. நத்தம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 22, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 5, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"உழுவார் உலகத்தார்க்(கு) ஆணிஅஃ தாற்றா(து)*
*எழுவாரை எல்லாம் பொறுத்து"*

*பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால், அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 241, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**241—**

### உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி

*** 15333—திரு. ஜி. பழனிசாமி :**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, நாச்சிகுளம் என்கிற உதயமார்த்தாண்டபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்குப் போதிய வகுப்பறை வசதி இல்லாததை அரசு அறியுமா?*

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, நாச்சிகுளம் என்கிற உதயமார்த்தாண்டபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டிக் கொடுக்க ரூ.4.4 இலட்சம் நிதி ஒதுக்கி, அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதயமார்த்தாண்டபுரம், நாச்சிகுளம் உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய வகுப்பறைகள் கட்டிக் கொடுப்பது குறித்து அமைச்சர் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று, இன்னும் பல்வேறு பள்ளிகளுக்குப் போதிய வகுப்புகளுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலே இருந்து, நாங்கள் நிதி ஒதுக்கியிருந்தபோதிலும்கூட, பல்வேறு இடங்களில் கீற்றுக் கொட்டைகளாகவே இருக்கின்றன. அவற்றை அரசு எடுத்துவிட்டு, கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்படுகிற நிதியைக் கொண்டு, பல்வேறு பள்ளிகளில் இப்படிப்பட்ட, இரண்டு அறைகள் அளவுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலைதான் இப்போது இருக்கிறது. அவற்றை மேலும் ஈடு செய்வதற்குத்தான், சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயமான ஒரு தேவை இருக்கிறது. எனவே, அந்த முறையிலேதான் ஓரளவுக்கு ஆண்டுதோறும் பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான கட்டடங்களுக்கு வழி காண முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 242, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**242—**

## சுயநிதிக் கல்லூரிகளில் அதிகக் கட்டணம்

*** 20782—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வித் தரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெயரால் அதிகக் கட்டணம் வசூலிக்கும் சுயநிதிக் கல்லூரிகளின் நடவடிக்கைகளை அரசு கவனித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சுயநிதிக் கல்லூரிகளில் அதிகக் கட்டணங்கள் வசூலிப்பதைத் தடை செய்ய, Prohibition of Capitation Fee Act என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இதனடிப்படையில் சுயநிதிக் கல்லூரிகளில் அதிகக் கட்டணங்கள் வசூலிப்பது குறித்து, குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால், மேற்படி சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுயநிதிக் கல்லூரிகளை நடத்துகிறவர்கள், இயல்பாகவே சட்டத்தின் சந்துபொந்துகளை மிக எளிதாகப் பயன்படுத்துகிற கூர்மையான அறிவு படைத்தவர்கள். எனவே, அவர்கள் சட்டத்தின் இத்தகைய சந்துபொந்துகளைப் பயன்படுத்தித் தப்பித்துக் கொள்வது நடைமுறை அனுபவத்திலே நமக்குத் தெரிகிறது. சுயநிதிக் கல்லூரிகள், உண்மையிலேயே அரசு வரையறைக்கு உட்பட்ட முறையிலேதான் கட்டணங்களை வசூலிக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் ஆசைப்படுவது நியாயம்தான். ஆனால், நடைமுறைப்படுத்துவது மிகக் கடினம். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்களே, சுயநிதிக் கல்லூரிகளில் சிபாரிசு செய்து, இடம்

[1999 ஏப்ரல் 5

பிடிக்க வேண்டிய சூழ்நிலையில்—பல்வேறு உறுப்பினர்கள்—இருக்கிறார்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். மற்றொன்று, நிதி கொடுத்த யாரும் புகார் கொடுக்கத் தயாராக இல்லை. நிதி கொடுக்க முடியாதவர்கள் புகார் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நிரூபிப்பது மிகக் கடினம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கல்வியாண்டில், சுயநிதி பொறியியல் கல்லூரிகளில், computer வகுப்புகள் நடத்துகிற கல்லூரிகளில், ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் சேர்ந்து படிக்கிறார்களா? எவ்வளவு மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ளார்கள்? எவ்வளவு இடங்கள் காலியாக நிரப்பப்படாமல் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் computer அல்ல. ஆகவே, தனியாகக் கேள்வி போட்டால்தான், இதற்கெல்லாம் விடை தரமுடியுமே தவிர, நானாகவே எதையும் கூறமுடியாது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த தொகையைவிட மிகக் குறைவாக வசூலித்துக் கல்லூரியை நடத்துகின்றவர்களுக்கு அரசு ஏதாவது சலுகைகளை வழங்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அப்படித் திட்டவட்டமாக இது குறித்து அறிய வந்தால், கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—Aided Colleges—அதாவது அரசு உதவியைப் பெறுகின்ற



1999 ஏப்ரல் 5]

கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில்கூட, இப்போது உதவி பெறாத காரணத்தினால், சில புதிய பாடத் திட்டங்களுக்கு Self Finance Courses-சுயநிதி மூலம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்படுகின்றபோது சில பட்டப் படிப்புகளுக்கு மாணவர்கள் வருவதில்லை. அரசு, எவ்வளவு கட்டணத்தை வசூலிக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறது. ஆனால், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் அந்தக் கட்டணத்தை செலுத்தக்கூட மாணவர்கள் முன் வருவதில்லை. சென்னையிலே வேண்டுமானால் வரலாம். ஆகவே, இதனைக் கருத்திலே கொண்டு அந்தப் பண விகிதத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில்கூட அப்படிப்பட்ட சுயநிதி வகுப்புகள் நடைபெறுகின்றன. அரசு ஒதுக்கியிருக்கின்ற நிதியைவிட அதிக நிதி செலவிடவேண்டிய அவசியம் வருகிறபோது, புதிய செலவினம் என்ற வகையிலே ஏற்க இயலாததால், சுயநிதி அடிப்படையில் சில சிறப்பான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. உதவி பெறுகிற கல்லூரிகளில் அப்படி நடத்தி, தொடங்கப்படுகின்ற வகுப்புக்கு மாணவர்கள் வரவில்லை என்றால், அந்த வகுப்பை நிறுத்திவிட்டு, வரக்கூடிய மாணவர்கள் எந்தப் பாடம் படிக்க விரும்புகின்றார்களோ, அப்படிப்பட்ட வகுப்பு தொடங்குவதை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கலைக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு பற்றி அரசு தலையிட்டு, அவை முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க கல்வி இயக்குநர் உட்பட்டுள்ள குழுவை கடந்த ஆண்டு நியமித்தது பற்றிய அரசு ஆணையை எதிர்த்து சுயநிதிக் கல்லூரிகள் நீதிமன்றம் சென்றதன் விளைவாக இப்போது காரியங்கள் தடைபட்டு நிற்கின்றன. மேலும் பல சுயநிதிக் கல்லூரிகள் இட ஒதுக்கீட்டினைப் பற்றியே கவலைப்படாமல், பணம் வசூலிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, சுயநிதிக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதை சட்டமாக இயற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால், சில சுயநிதிக் கல்லூரிகளில், சிறுபான்மைச் சமூகத்திற்காக என்றிருக்கின்ற கல்லூரிகளில், அந்த வகுப்பினைச் சேர்ந்த சிறுபான்மையினருக்கு 50 விழுக்காடுக்குக் குறையாமல் இடம் தரவேண்டும்; மீதி இடங்கள்தான் அரசின் கொள்கைப்படி ஒதுக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த இடங்களில் சிலவற்றுக்கு அதிக அளவிற்கு விண்ணப்பங்கள் வராத ஒரு நிலைமை ஏற்பட்டு, அந்த இடங்கள் நிரப்பப்படாத நிலைமையும் சில கல்லூரிகளிலே நிச்சயமாக இருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்வி நிறுவனங்களிலே முழுமையாக இடஒதுக்கீட்டை சிலர் பின்பற்றுவதில்லை. அது குறித்து கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்களும் கண்காணிப்பதில்லை. ஆகவே, இப்படி இடஒதுக்கீடு செயல்படுத்தப்படாத நிலை இருக்கிறது. அதேநேரத்தில் கல்விக் கட்டணத்தை தாறுமாறாக வசூலிக்கக்கூடிய ஒரு நிலையும் நிலவி வருகிறது. மேலும், அங்கே கற்றுக்கொடுக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கும் மிகக் குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. எனவே, அந்தத் தரமான ஆசிரியர்களுக்கு, தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு, அவர்கள் வாழக்கூடிய வகையிலே ஓரளவுக்காவது ஊதியம் வழங்கப்படுகின்ற வகையிலே அந்த ஊதிய விகிதத்தை அரசு நிர்ணயிக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகள் என்னென்ன முறைப்படி நடத்தப்படவேண்டும், நடைபெற வேண்டுமென்பதை பல்கலைக்கழகங்கள் முதற்கொண்டு மானியக் குழுவில் எல்லா அமைப்புகளும் தெரிவித்திருக்கின்றன. கட்டணங்களை அரசு தீர்மானித்து அறிவித்திருக்கிறது. அதிலே ஏதேனும் தவறுகள் நடைபெறுமேயானால், யாராவது தொடர்புடையவர்கள் அந்தத் தவறு குறித்து அல்லது தாங்கள் பாதிக்கப்பட்டது குறித்துத் தெரிவிப்பார்களேயானால், துறை இயக்குநர், அது குறித்து விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. புகார் தராமல்,



1999 ஏப்ரல் 5]

திட்டவட்டமான குற்றச்சாட்டு தராமல் பொதுவான கருத்தைச் சொல்கிறபோது, அதை வைத்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A.I.C.T.E யினுடைய அனுமதி பெறாமல் பாரதிதாசன் பல்கலைக்கழகம் தொடங்கிய பொறியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இன்றைக்கு மேலும் கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் கல்வி பயில்வதற்கு அரசு என்ன வகை செய்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களுக்கு எந்தப் படிப்பையும் தொடங்க எல்லா உரிமையும் இருக்கிறது என்ற ஒரு கருத்தும், ஒரு கொள்கையும் உண்டு. A.I.C.T.E. அமைக்கப்பட்டதற்குப் பின்னர் பொறியியல் சம்பந்தப்பட்ட எந்தக் கல்வியாக இருந்தாலும், பல்கலைக்கழகமாக இருந்தாலும், அனுமதி பெற்று நடத்த வேண்டுமென்று அவர்கள் ஒரு விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அதன் காரணமாக, இரண்டுவிதமான கருத்துகளுக்கு இடையில் ஒரு குழப்பம் ஏற்பட்டு—நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிற காரணத்தினால், அதன்மேல் மேல் முறையீடு—Appeal—செய்யப்பட்டிருக்கிறது என்ற நிலையில் பல்கலைக்கழகமும் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அரசும் உடனடியாகத் தலையிட்டு எதுவும் செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பெரும்பாலும் அவர்களே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக, 40 பேர் பயிலக்கூடிய அந்தப் பயிலகங்களில் 3, 4 பேர்களுக்கு மேல் மற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. எத்தனை சதவிகிதம் சிறுபான்மையினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதை வரையறுத்துச் சொல்லமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி தனிக் கேள்விக்குரியது. இருந்தாலும், சிறுபான்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் சிறுபான்மையினருக்கு இடம் தருவதைத் தடுப்பதற்கோ அல்லது அதைக் குற்றம் சொல்வதற்கோ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா ஏழை நாடு அல்ல என்றாலும், ஏழைகள் நிறைந்த நாடு. வருமான வாய்ப்பில்லாமல் வாழ்கிற, அடிமட்ட மக்கள் தங்களுடைய குழந்தைகள் உயர்கல்வி, கல்லூரி, கல்வியைப் பெறுவதற்கு, இந்த உயர்ந்தபட்ச கட்டணம் வாய்ப்பளிப்பதில்லை. அதாவது, வேலைவாய்ப்பும், மதிப்புமிக்க பாடப் பிரிவுகளும் தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலேதான் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகளில் வெறும் dummy-யான பாடத் திட்டங்கள் மட்டும்தான் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது சுயநிதிக் கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிற பாடப் பிரிவுகள் அத்தனையையும் அரசுக் கல்லூரிகளுக்கு மாற்றிவிட்டால்தான், ஏழைகள் கல்லூரி வாசலையாவது மிதிக்க முடியும். அது குறித்து அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பராயன் அவர்களுடைய கருத்தேகூட, அடிப்படையிலே உண்மையோடு தொடர்பில்லாதது. கல்லூரி வாசலை ஏழைகள் ஏராளமாக மிதிக்கிறார்கள். மிதித்துவிட்டு, ஏறி வெற்றியும் பெறுகிறார்கள். ஆனால், வேலைவாய்ப்புதான் இல்லை. அதிலும், அரசுக் கல்லூரிகளிலும் ஏராளமான நல்ல பாடத் திட்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. Fancy—புதுமையானது—என்ற முறையில் புதிது, புதிதான பாடங்களுக்குச் செல்கிறவர்களோ அல்லது அதிக நுணுக்கமான சில புதிய படிப்புகளுக்குச் செல்கிறவர்களோ அரசுக் கல்லூரிகளில் போதுமான இடம் கிடைக்காத காரணத்தினால் அங்கே செல்லக்கூடிய நிலை இருக்கும். ஆனால், இப்படிப்பட்ட தனியார் கல்லூரிகள் இருக்கிற காரணத்தினால், வசதி உள்ள பலபேர் அந்தக் கல்லூரிகளுக்குச் செல்கிற காரணத்தினால், ஏழைகளுக்கு அரசுக் கல்லூரிகளில் இடம் கிடைக்கிற வாய்ப்பு அதிகமாகத்தான் ஆகியிருக்கிறது. அதனாலே, அவர்களுடைய முன்னேற்றம் தடைபடவில்லை.



1999 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சுயநிதிக் கல்லூரி வந்த பிறகு, கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டு, Computer Science, அதேபோல B.E. (Computer Science) போன்ற நல்ல Information Technology மற்றும் B.E. Courses-ல் எல்லாம்-Management Quota-என்பதில் பல இலட்ச ரூபாய் அதாவது 4, 5 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் இடம் கிடைக்கிறது. அதேபோல, Deemed University என்று மருத்துவத் துறைக்கு வந்த பிறகு 20 இலட்சம், 17 இலட்சம் என்று டாக்டர் படிப்பை அவர்கள் விலை கூறி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Prohibition of Capitation Fee Act செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இங்கே, நம்முடைய அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டம் இயற்றப்பட்டதேயொழிய, இதுவரை ஒரு வழக்குகூட வந்ததாக நமக்குத் தெரியவில்லை. 'கைப் புண் பார்க்க கண்ணாடியும் வேண்டுமா' என்பார்கள். இன்று பல பேர் அதாவது பணத்தைக் கொடுத்து படிக்க மட்டும் புகார் கொடுக்கமாட்டார்கள். ஆனால், பொதுவாக இந்தக் கல்லூரியிலே வசூலிக்கிறார்கள் என்ற செய்தி நிச்சயமாக அரசுக்கு வந்துசேரும் அல்லது உளவுத் துறையோ அல்லது இருக்கக் கூடிய மேலதிகாரிகளை வைத்துக்கூட....

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினாவா? ஒரு பெரிய பேருரையே ஆற்றிவிட்டீர்கள். Capitation Fee-ல் வசூல் பிரச்சினையில் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்பதுதான் உங்கள் துணைவினா உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டார். புகார் பதிவு செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதிவு செய்வதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு பதிவு செய்யலாம். மற்றும் ஒன்று. ஏற்கெனவே சுயநிதிக் கல்லூரிகளில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்ததை மாற்றுவதற்காகத்தான் Single Window System கொண்டுவரப்பட்டு, ஒவ்வொரு பொறியியல் கல்லூரியிலேயும், அது சிறுபான்மையினர் கல்லூரியாக இருக்குமானால் 50 விழுக்காடும், சிறுபான்மையினர் என்னும் உரிமை பெறாத பொதுவான கல்லூரியாக இருக்குமானால் அந்தச் சுயநிதிக் கல்லூரியில் 95 விழுக்காடு

இடங்களும் -- Single Window System— ஒன்றைச் சாளர முறை மூலமாக நிரப்பப்படுகின்றன. ஒரு பைசாகூட அதிலே, அவர்கள் இந்த முறைப்படி தர வேண்டிய கட்டணத்திற்கு மேல் தரத் தேவையில்லை. எங்கேனும் தவறு நடைபெறுமானால் தெரிவிக்கலாம். இன்னும் சொல்லப்போனால், வழக்கறிஞருக்கு மிக நன்றாகத் தெரிய வேண்டும். திருட்டுக் கொடுத்தவர்கள் குற்றம் சாட்டிப் பதிவு செய்யாத நிலையில் காவல் துறை தலையிட வாய்ப்பே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**243—**

**பெண்களுக்குத் தொழிற் பயிற்சி**

***8030—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையிலுள்ள புனர்வாழ்வு மையத்தில் பெண்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்காததற்குக் காரணம் என்ன?

(ஆ) பெண்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அவைக்கு அளிக்க அனுமதி வேண்டுகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சானடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் தற்போது 71 பூரண குணமடைந்த ஆண் உள் நோயாளிகள் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர். பெண் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அவ்வாறு நியமனம் செய்யப்பட்டபின் பூரண குணமடைந்த பெண் நோயாளிகளுக்கும் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புனர்வாழ்வு மையத்திற்கு வருகின்றவர்கள் பெரும்பாலும் வாழ்க்கையினுடைய விரக்திக்குச் சென்று விட்டவர்கள். உற்றார் உறவினரால், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள்தான் வருகிறார்கள். அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனித நேயத்தோடு மகளிருக்கு-மகளிர் மேம்பாட்டில் முன்னேற்றம் அடைவதற்குப் பல வழிவகைகளைக் காண்பதைப் போல இந்தப் புனர் வாழ்வு மையத்தில் தையல் இயந்திரங்கள் வாங்கி பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்ற அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையல் இயந்திரம் அல்ல பிரச்சினை. தையல் ஆசிரியர் பதவி காலியாக இருக்கிறது. அதற்கு நியமனம் செய்ய வேண்டும். அப்படி நியமனம் செய்கின்ற நேரத்திலே, அங்கே வருகின்ற நோயாளிகளில் குணமடைந்த ஒருவரைத்தான் அங்கே நியமனம் செய்ய முடியும். அப்படித் தகுதி படைத்த ஒருவர் இதுவரையிலும் கிடைக்கவில்லை. கிடைத்தால் உடனடியாக நியமிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** . வினா எண் 244, திரு. கோ. தளபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**244—**

**பேரையூர் மருத்துவமனைக்கு வசதிகள்**

***11235—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூர் அரசு மருத்துவமனைக்குப் போதிய வசதிகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அம்மருத்துவமனைக்குப் போதிய வசதிகள் செய்து தரப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரையூர் மருத்துவமனையைப் போதிய வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு 23-6-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி, இருக்கையில் இல்லை.

வினா எண் 245, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**245—**

### தரைப் பாலம் அமைத்தல்

***380— திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணத்தூர், அரசம்பட்டி ஆகிய இடங்களில் தரைப் பாலம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏறக்குறைய 40 ஆண்டுக்காலக் கோரிக்கை. அரசம்பட்டிக்கும், பண்ணத்தூருக்கும், தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்ட வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கை. மருத்துவ வசதிக்கோ அல்லது கல்வி சம்பந்தப்பட்ட கல்லூரிக்கோ, பள்ளிக்கூடத்திற்கோ அல்லது வேறு ஏதாவது தொலைதூர நிகழ்ச்சிகளுக்கோ செல்லவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 18 கிலோ மீட்டர் சுற்றித்தான் செல்ல வேண்டும். ஆனால் அரசம்பட்டிக்கும் பண்ணத்தூருக்குமிடையே ஒரு தரைப்பாலம் அல்லது வேறு பெரிய பாலம் அமைத்துக் கொடுத்தால் கிட்டத்தட்ட 1½ கிலோமீட்டர் தூரத்திலேயே அந்த ஊரைக் கடந்துவிடலாம். ஆகவே அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரைப்பாலத்திற்கு ஏறத்தாழ ரூ.60 லட்சம் ஆகும் என மதிப்பீடு தயாரித்திருக்கிறார்கள். அந்த ஒன்றியத்தின் சார்பாக 60 இலட்ச ரூபாய்க்கு ஒரே பணியை எடுத்துச் செய்வதற்கான வாய்ப்பும் அதற்கான தகுதிகளும் இல்லை. வேறு சில துறைகளிடம் கேட்டபோதும் அவர்கள் தாங்கள் எடுத்துக் கொள்வதாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை மூலம் எடுத்துச் செய்ய வழிவகை உள்ளதா என ஆராயப்பட்டதில் அவர்களுக்கும் எடுத்துக்கொள்கிற தகுதியில்லை என்று திருப்பிவிட்டார்கள். அதுபோலவே, வேளாண்மைத் துறையின் மூலம் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வதற்கும் அந்தப் பாதை தகுதியற்றதாக இருக்கிற காரணத்தால், வேறு சிறப்பினமாக அரசாங்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுத்தான் இதுசம்பந்தமான முடிவை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 246, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**246—**

### சூலூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கல்

***16209—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, சூலூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் வால்வுகளை கோயம்புத்தூர் மாநகராட்சி கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து சூலூர் பேரூராட்சிக்கே வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இவை கோயம்புத்தூர் மாநகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருவதால் இதனை மாற்றுவதற்கு இல்லை.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி, இருக்கையில் இல்லை.

வினா எண் 247, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**247—**

**போக்குவரத்துக் கழகத்தின் நிதி ஆதாரத்தை நிலைப்படுத்துதல்**

***8—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகம் நட்டத்தில் இயங்கி வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், இப்போக்குவரத்துக் கழகத்தின் நிதி ஆதாரத்தை நிலைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) ஆம்.*

*(ஆ) முன்னாள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி ஆதாரத்தை நிலைப்படுத்த அரசு பல்வேறு நிதியுதவிகளை வழங்கியுள்ளது.*

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மாநாட்டில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்குவதோடு நாங்கள் அதை நிர்வகிக்கின்றவர்களுடைய ஆலோசனைகளையும் பெறுவோம் என்று சொன்னார்கள். டி.வி.எஸ். போன்ற நிறுவனங்களிலேயும் நல்ல நிர்வாகிகள் இருந்தார்கள். இவர்களைக் கர்நாடக அரசு பயன்படுத்தி, தேவராஜ அர்சு காலத்தில், இலாபத்தில் அந்தப் பேருந்துகளை ஓட்டினார்கள். அதைப்போல இப்படித்



1999 ஏப்ரல் 5]

திறமையான தனியார் நிறுவனங்களிலேயிருந்து ஓய்வுபெற்ற திறமையான நிர்வாகிகளைப் பயன்படுத்துகின்ற வகையில் ஒரு பேருந்து சீரமைப்பு ஆலோசனைக் குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இழப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் நிர்வாகத்திலே ஏற்படுகிற குறைகள் மட்டும் அல்ல. பேருந்துக் கட்டணத்தை உயர்த்த முடியாமல் இருக்கிற நிலையும்தான் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். அவ்வப்போது குழுக்கள் அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழகத்தில் பேருந்துகளை இயக்குவதில் நஷ்டம் ஏற்பட்டு இருப்பதால், பொதுமக்களுக்குக் கட்டணத்தை உயர்த்தாமல் முழுமையான பயன்பெற இயலாத நிலை இருப்பதால், குறிப்பிட்டுச் சொல்லப்போனால் மலை மாவட்டமாக இருக்கிற நீலகிரி மாவட்டம் போன்ற இடங்களிலேயாவது Special Buses அதாவது அதிகக் கட்டணம் செலுத்திப் பயன்படுத்துகிற பேருந்துகளை இயக்கி, மக்களுக்கு அந்த வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு வருங்காலத்தில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கக் கூடிய போக்குவரத்துக் கழகத்தில் ஒரு நாளைக்கு 26 இலட்சம் ரூபாய் வசூலும், 4 இலட்சம் ரூபாய் தினம் நஷ்டமும் ஏற்படுவதாக, நான் அந்தத் துறையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் கேள்விப்பட்டேன். மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கணக்குச் சொன்னார்கள். அதே நேரத்தில் தனியார் பேருந்துகளெல்லாம் இலாபத்தில் ஓடுகின்றன. இந்த அரசுத் துறை பேருந்திலும் எப்போது பார்த்தாலும் ஆட்கள்

நிரம்பித்தான் செல்கின்றன. ஆகையினால் இந்த நஷ்டம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தனியார் பேருந்துகளிலே பணியாற்றுபவர்கள், ஓட்டுநர்களுக்கும் நடத்துனர்களுக்கும் கொடுக்கிற ஊதிய விகிதங்களைப் பற்றி அனைவருக்கும் தெரியும். அதுபோல போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகிற ஓட்டுநர்கள், நடத்துனர்களுக்கு ஆகிற செலவுகளைப் பற்றியும் தெரியும். அதுமட்டும் அல்ல, போக்குவரத்துக் கழகங்களிலே ஓடுகிற பேருந்துகளில் 20 சதவீதம் பேருந்துகள்தான் இதுபோன்று இலாபம் தரக்கூடிய வழித் தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 20 சதவீதம் பேருந்துகள் break-even point என்று சொல்லப்படுகிற, செலவுக்கும் வருவாய்க்கும் ஏற்ற அளவிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. மீதியிருக்கிற பேருந்துகளெல்லாம் நட்டத்திலே இயங்குகிற வழித் தடங்களாகத்தான் இருக்கின்றன. தனியார் பேருந்துகளைப் பொறுத்தமட்டிலும், இதுபோன்ற வழித் தடங்களிலே அவர்கள் இயக்குவதில்லை. அவர்களுக்குக் கொடுத்திருக்கிற பேருந்துகளெல்லாம் பெரும்பாலும் எந்த வழித் தடங்களிலே வசூல் அதிகமாக இருக்கிறதோ அந்த வழித் தடங்களிலேதான் இயங்குகின்றன. ஆனால், நம்முடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் போகிறபோது அதிகமாக கூட்டம் செல்லும். நீங்கள் கேட்டிருக்கிற, அதுவும் குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொடுத்திருக்கிற பேருந்துகளையெல்லாம், இரவு நேரத்திலே, பள்ளிக்கூட நேரத்திலே நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். பல பேருந்துகள், நகரப் பேருந்துகள், முக்கிய வழித் தடங்களிலே ஓடுகின்ற நம்முடைய பேருந்துகள், போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இலாபத்தைக் கொடுக்கின்றன. அதாவது 20 சதவீதம் பேருந்துகள் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கின்றன. ஆனால் அந்த இலாபத்தை எல்லாம் நஷ்டத்திலே ஓடுகின்ற பேருந்துகளுக்கு ஈடுகட்டிக் கொடுக்கிறபோது மிக முக்கியமான நஷ்டம் ஏற்படுகின்ற வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஆங்காங்கு கொடுக்கிற ஊதிய உயர்வு, போனஸ் போன்றவை எல்லாம் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்றன. தனியார் போக்குவரத்துக் கழகங்களிலே அதுபோன்ற நடவடிக்கைகள் எல்லாம் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்றபோது 1995-96-ல் நெல்லை போக்குவரத்துக்





கழகத்திலே இருந்த கடன் தொகை மட்டும் 56.12 கோடி ரூபாய். அதற்கான வட்டியும் சேர்த்து 59.38 கோடி ரூபாய் ஆக இருந்தது. அதற்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ஆண்டுக்கு 9 கோடி ரூபாய் என இருந்தது. 1996-ல் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்தச் செலவுகளையும் உட்படுத்தித்தான், இப்போது இந்த நஷ்டங்களையெல்லாம் ஈடுகட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாகக் கொடுப்பதைப் போன்று, இந்தப் பேருந்துகளை, இவ்வளவு நஷ்டமாக இயக்கிக்கொண்டு இருப்பதற்கு, இரண்டு Driver-கள், 2 Conductor-கள், 10 பேருந்துகளுக்கு ஒரு Technician வைத்து, அவர்களிடமே இந்தப் பேருந்துகளைக் கொடுத்தாலாவது அவர்கள் திருப்தியாக ஓட்டுவார்களா என்று பரிசீலனை பண்ண வேண்டும் என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொழிற்சங்கங்களை வைத்து பேச்சுவார்த்தை நடத்தியபோது, அவர்களிடமே இதைச் சொன்னேன். நாங்கள் அப்படியே, அரசாங்கத்திலிருந்து தொழிற்சங்கங்களாகிய உங்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். நீங்களே நடத்துங்கள் என்று சொன்னேன். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? நடத்துவதற்காகத்தான் உங்களை வைத்திருக்கிறோமே தவிர, எங்களால் முடியாது என்று அவர்கள் ஒட்டுமொத்தமாக மறுத்துவிட்டார்கள். அவர்களுக்கும் தெரியும், இதிலே இருக்கிற ஆபத்து. ஆகவேதான், அவர்களுக்குக் கொடுத்துவிட்டால், நாம் கேட்கிற, சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற இலாபம் இல்லாத வழித் தடங்களிலே ஓட்டுவதற்கு அவர்கள் முன் வரமாட்டார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

[1999 ஏப்ரல் 5

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித் தடங்களைத் தொடங்குவதற்கு அரசால் முடியவில்லை. தொழிற்சங்கமும் முன்வராத நிலையில் அதுபோன்ற வழித் தடங்களைத் தனியாருக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எடுக்க வேண்டிய முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நகரத்தை அல்லது மாவட்டத்தைவிட நெல்லையில் அரசுப் பேருந்துகள் நஷ்டத்திலே ஓடுவதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, ஏற்கெனவே இனக் கலவரம் ஏற்பட்ட காரணத்தால் படுகொலைகள் நடந்து, மாலையிலே பஸ்கள் செல்லவில்லை. அதேபோன்று, கல்வி நிறுவனங்கள் அதிகமாக இருந்து, இலவச pass-கள் வழங்கியிருக்கிறோம். இந்த இரண்டும் காரணங்கள். அதுபோக, நகரத்தில் 50 வழித் தடங்கள் இருக்கின்றன. தனியார் பேருந்துகளும், அரசுப் பேருந்துகளும் போகின்றன. 30 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள்—Timing Conference—அந்த ஓடுகின்ற நேரத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள. அதை மாற்றாத காரணத்தால் இரண்டும் ஒரே நேரத்தில் ஓடுவதால் அரசு பஸ்கள் நஷ்டத்திலே ஓடுகின்றன. அதைத் தவிர்ப்பதற்காக, இந்த Timing Conference போட்டு, தனியார் பேருந்துகள், அரசுப் பேருந்துகளுக்கு நேரத்தைப் புதியதாக நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் Timing Conference நடத்தப்பட்டு, அதுபோன்று குறைகள் இருக்குமானால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 248, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 5]

**248—**

### சந்தைக்குப் பேருந்து இயக்குதல்

***14739—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பாலமேடு, அலங்காநல்லூர், சேந்தமங்கலம் உட்பட பல்வேறு கிராமங்களில் பழத்தோட்ட சீசன் காலங்களில் சுமைகள் ஏற்றிவர அரசுப் போக்குவரத்துக் கழகம், சந்தை வண்டிவிட அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, பாலமேடு, அலங்காநல்லூர், சேந்தமங்கலம் உட்பட பல்வேறு கிராமங்களில் பழத்தோட்ட season காலங்களில் பழக்கூடைகளை நகரப் பேருந்துகளிலேயே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதால், இதற்கென தனியாக சந்தைப் பேருந்துகள் இயக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இருக்கின்ற பேருந்துகளிலே ஏற்றுவதற்கு முடியாத ஒரு நிலை இருக்கிறது. அங்கு பெரும்பாலான விவசாயம் என்பது மா, கொய்யா போன்ற பழங்களைப் பயிரிடுவதுதான் முக்கிய விவசாயமாக இருக்கிறது. சாதாரணப் பேருந்துகளில் பள்ளி மாணவர்களுக்கு இலவச pass போன்றவை வழங்கப்படுகிற காரணத்தால் மிகுந்த இடநெருக்கடி இருக்கிறது. அந்த நேரங்களிலே விவசாயிகள் தங்களுடைய பழக்கூடைகளை ஏற்ற முடியாத நிலை இருக்கிறது. நாம் திருவிழாக்காலங்களில் எல்லாம் சிறப்புப் பேருந்துகள் விடுகிறோம். அதுபோல அந்த ஓரிரண்டு மாதங்கள், அந்த season காலத்திலே சிறப்புப் பேருந்துகள் விடுவதற்கு மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, season காலங்களில் சிறப்புப் பேருந்துகள் விட வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டால்

விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் சிறப்புப் பேருந்துகள் விடுவது என்றால் அதனுடைய கட்டணமும் உயரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்தபோது அங்கே road-களைப் போட்டு bus-களை விட்டோம். bus-களை விட்டோம் என்றால், அதிலே மக்கள் அதிக அளவிற்கு ஏறுவார்கள். கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்கள், அந்த bus-களிலே ஏறுவதற்கு உட்காரக்கூட இடம் இருக்காது. அந்த அளவிற்கு நின்றுகொண்டே வருவார்கள். அந்தச் சூழ்நிலையில் அதிலே கூடைகளைக் கொண்டு வந்து ஏற்ற முடியாத நிலை. நிறைய கொய்யாப்பழம் விளையும்; மாம்பழம் விளையும். அந்த கூடைகளைக் கொண்டு வந்து ஏற்ற முடியாது. ஆகையினால், மாண்புமிகு சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று தயவுசெய்து, கட்டணம் ஓரளவுக்கு ஏறினால்கூட பரவாயில்லை என்று கருதுகின்றேன். அந்தக் கூடைகளை ஏற்றுவதற்கான முயற்சியினை எடுத்துக் கொள்ளுவார்களா? தனி bus விடுவதற்கு முயற்சியினை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூடைகளை ஏற்றி வந்தாலும் அதை எடுத்துக் கொண்டு வருவதற்கு மக்களும் ஏறித்தான் ஆக வேண்டும். ஆகவே, எப்படியிருந்தாலும் அந்த நெரிசல் இருக்கத்தான் செய்யும். ஆகவே, வேண்டுமானால் சிறப்புப் பேருந்துகளாக எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளலாமே தவிர இதற்காகத் தனியாகப் பேருந்துகளை விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, this is the problem in Tamil Nadu wherever vegetables and fruits are exported to the town. May I know from the Hon. Minister whether special arrangements have been made





to transport the goods in the top or in the back side of the vehicle. We can give a trailer so that we can minimise the expenditure. Will the Government come forward to make such arrangements, Sir?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுதே அதுபோன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. Luggagae பேருந்துக்கு மேலேயும் ஏற்றிச் செல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. தொடர்ந்து அதுபோன்று வியாபாரிகள் வருவார்கள் என்று சொன்னால் அதற்கான ஏற்பாடுகளும் சில பேருந்துகளில் சிறப்பாகச் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**249—**

**இருவழிச் சாலை அமைத்தல்**

**•16817—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பெரியகுளம் ஒன்றியம், தேவதானப்பட்டியிலிருந்து சில்வார்பட்டி-செயமங்கலம்-வைகை அணை-ஆண்டிபட்டி வரையிலான ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் அனைவரும் கொடைக்கானலைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு தேவதானப்பட்டி

வந்து, சில்வார்பட்டி, செயமங்கலம் வழியாக வைகை அணையைப் பார்க்கச் செல்கிறார்கள். கொடைக்கானலுக்கு வரக்கூடிய அந்தச் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வைகை அணைக்கு வரக்கூடிய சாலையாக அது இருக்கின்ற காரணத்தினால், தேவதானப்பட்டி, சில்வார்பட்டி, செயமங்கலம், வைகை அணை, ஆண்டிபட்டி வரையிலான அந்தச் சாலையை மீண்டும் மறுபரிசீலனை செய்து இருவழிச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தச் சாலை முக்கியமான சாலைதான். ஒரே சாலையாக இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருந்தாலும் இதிலே 3 சாலைகள் வருகின்றன. பெரியகுளம்-தேவதானப்பட்டி 8 கிலோ மீட்டர் இருக்கிறது. அது இப்பொழுது ஒரு வழிப்பாதையாக இருக்கிறது. 3.75 மீட்டர் அகலம் இருக்கிறது. அதை இருவழிப் பாதையாக்க வேண்டுமானால் 8 கிலோமீட்டருக்கு ரூ. 80 இலட்சம் தேவைப்படுகிறது. செயமங்கலம்-ஆண்டிபட்டி சாலை 4.2 கிலோ மீட்டர் வருகிறது. அந்த 4.2 கிலோமீட்டரை இருவழிப் பாதையாக்க வேண்டுமானால் ரூ. 42 இலட்சம் தேவைப்படுகிறது. அதைப்போல, ஆண்டிபட்டி சாலை. 4.2 கிலோமீட்டரிலேயிருந்து பிரிந்து செல்லும் செயமங்கலம்-ஆண்டிபட்டி சாலை 8.8 கிலோமீட்டர். அதிலே 1.4 கிலோமீட்டர் இருவழிச்சாலையாக இருக்கிறது. மீதியுள்ள பகுதியான 7.4 கி.மீட்டர் இருவழிப்பாதைக்கு ரூபாய் 74 இலட்சம் தேவைப்படுகிறது. மொத்தம் 21 கிலோமீட்டரில் 1.4 கிலோமீட்டர் இருவழிச்சாலை போக மீதியுள்ள 19.6 கிலோமீட்டருக்கு இருவழிப்பாதை அமைக்க வேண்டுமானால் 196 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதி நெருக்கடியின் காரணமாக இதை உடனடியாக எடுத்துக்கொள்ள முடியவில்லையே தவிர, வருங்காலங்களில் இதற்கு முன்னுரிமை அளித்து இந்தச் சாலை விரிவுபடுத்தப்படும்; ஆலோசிக்கப்படும்; நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



**250—**

**பழுதடைந்த பாலத்தைச் சீர்செய்தல்**

**•22385—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வடவேர் கிராமத்தில் புத்தார் ஆற்றுப்பாலம் மிகவும் பழுதடைந்து போக்குவரத்து அடியோடு தடைபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம் வடவேர் கிராமத்தில் புத்தார் ஆற்றுப்பாலம் கட்டுவதை 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள முன்மொழிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியதைப்போல இன்னும் அந்தப் பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை என்பதோடு, அதுவொரு முக்கியமான பாலம். அதோடு அந்தப் போக்குவரத்துகூட வேறொரு பாதையிலே வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்ள திருவிடைச்சேரி, நெடுஞ்சேரி வழியாகத் திருவாரூர் செல்கிற அந்தச் சாலையிலே திருப்பிவிடப்பட்டிருந்தது. ஆனால் ஒருவார காலத்திற்கு முன்பு பெரும்பண்ணையூரிலேயிருந்த அந்தப் பாலம் இடிந்துவிட்டது. நான்கூட நேரிலே சென்று அந்தப் புகைப்படங்களையெல்லாம் எடுத்து வந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே கொடுக்கவிருக்கிறேன். அதோடு அந்தப் பாலம் சர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களால் 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்டு அவர்களாலேயே திறக்கப்பட்ட பாலம். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் சொல்கிற இந்தத் தகவலை வைத்துக் கொண்டு அந்தப் பாலத்தையும் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 5

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்துதான், நெடுஞ்சாலைத் துறை இந்தப் பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு 1999-2000 ஆண்டில் பகுதி-2 திட்டத்திலே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்து, அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், Tender கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**251—**

**குடமுழுக்குத் திருப்பணி**

***3240—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேசுவரம் அருள்மிகு உப்பிலியப்பன் கோயில், அருள்மிகு நாகநாதசுவாமி கோயில் ஆகியவற்றிற்கு 1995-96-இல் குடமுழுக்குத் திருப்பணி செய்ய ஆன மொத்தச் செலவு எவ்வளவு?

(ஆ) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை எவ்வளவு?

(இ) அரசின் பங்கு எவ்வளவு?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு உப்பிலியப்பன் கோயில் மற்றும் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் ஆகியவற்றிற்கு 1995-96-இல் குடமுழுக்குத் திருப்பணி செய்ய ஆன மொத்தச் செலவு முறையே ரூ. 9,44,221 மற்றும் ரூ. 26,64,989 ஆகும்.



1999 ஏப்ரல் 5]

(ஆ) அருள்மிகு உப்பிலியப்பன் திருக்கோயிலுக்குப் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை ரூ. 9,59,375 அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்குப் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடை ரூ. 4,15,401.50 ஆகும்.

(இ) அருள்மிகு உப்பிலியப்பன் திருக்கோயில் குடமுழுக்குத் திருப்பணிக்கு அரசின் பங்காக எத்தொகையும் விடுவிக்கப்படவில்லை. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு அரசின் பங்காகத் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதியிலிருந்து ரூ. 11,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96இல் இந்த இரண்டு கோயில்களுக்கும் குடமுழுக்குச் செய்யப்பட்டது. ஆனால் ஆகம விதிகளுக்கு முரணாக இந்தக் குடமுழுக்குச் செய்யப்பட்டது என அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா? அதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களிடமிருந்து இதற்காக வசூலிக்கப்பட்ட நன்கொடையில் முறைகேடு நடந்திருப்பதாகவும் அரசுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகம விதிகளுக்கு முரணாக நடந்தது குறித்து எந்த வகையான புகாரும் அரசுக்கு வரவில்லை. அதுமட்டுமல்லாமல், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் தொடர்பான முறைகேடுகள் என்ன என்பது குறித்தும் துறையிலிருந்து எந்தக் குறிப்பும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**252—**

**வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்**

***14289—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 5

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரில் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆவுடையானூரில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையானூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏராளமான விவசாயிகள் வசித்து வருகின்றனர். அங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இல்லாததால் சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நாகல்குளம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, ஆவுடையானூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய எல்லையாக நாகல்குளம், பெத்தநாடார்பட்டி, ஆவுடையானூர், ஆண்டிப்பட்டி, முத்துகிருஷ்ணபேரி என்ற இந்த எல்லைகள் இருக்கின்றன. ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க வேண்டுமானால் 'NABARD' நிறுவனத்தினுடைய அறிவுரைப்படி 2000 ஹெக்டேர் அங்கே விவசாயம் செய்யப்பட வேண்டும். பத்து இலட்சம் ரூபாய் குறுகியகாலக் கடனாக வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிற இடத்திலேதான் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற நாகல்குளம், ஆவுடையானூர் பகுதியிலே 996 ஹெக்டேர்தான் விவசாயம் செய்யக்கூடிய பகுதியாக இருக்கிறது. கடந்த 1995-96 மற்றும் 1997-98 ஆகிய காலங்களில் அவர்கள் குறுகியகாலக் கடனாக வெறும் 75 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் அங்கேயிருந்து பெற்றிருக்கிறார்கள் என்று அரசிடம் உள்ள செய்திக்குறிப்பு சொல்கிறது. ஆனால் நம்முடைய



1999 ஏப்ரல் 5]

முதலமைச்சர் அவர்கள் பல இடங்களில் விவசாயிகளுக்கு நேரடியாக இதில் உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தபிறகு, நேரடியாக 'NABARD' நிறுவனத்தோடு பேசி, செலவைக் குறைத்து ஆங்காங்கு மக்களுக்கு அதிக அளவிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தொடங்க வேண்டும் என்பதை ஒரு செயற்குறிப்பாக அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் வைத்து அதிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 253. திரு. ஐ. கணேசன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**253—**

**பால் உற்பத்தியை அதிகரித்தல்**

**•14021—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தி, பால் உற்பத்தியினைப் பெருக்க அரசால் திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 10-10

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்க எந்தெந்த வகைகளில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது; எவ்வளவு நிதி ஒதுக்கீடு இதற்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அரசு அறிவிக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்குவது என்பது அரசால் திட்டமிடப்பட்ட ஒன்று. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் நலத் துறை, TADCO மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக சேலம் ஒன்றியத்தில் 1,000 கறவை மாடுகள், மானியக் கடன்கள் மூலமாக வாங்கித் தரப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் சேலம், நாமக்கல் மாவட்டங்களில் 62 பால் பரிசோதனை மின்னணுக் கருவிகளும் — ஒவ்வொரு பரிசோதனை மின்னணுக் கருவியினுடைய மதிப்பும் ரூபாய் 25,000 ஆகும்— அதேபோன்று 675 பால் கேன்களும் வாங்கித் தரப்பட்டுள்ளன. மேலும் 120-க்கு மேற்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் பால் சேகரிப்பு மையக் கட்டடங்கள் — ஒவ்வொரு கட்டடமும் 1,80,000 ரூபாயாகும்—கட்டித்தரப்பட்டுள்ளன. ஒன்றியத்தின் மூலமாகக் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை செய்து தரப்பட்டுள்ளது. செயற்கைக் கருவூட்டல் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 15,000 கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 4,000 டன் முதல் 6,000 டன் வரை ஆவின் கலப்புத் தீவனம் இலாப நோக்கமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேலம் என்றும் நாமக்கல் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதிலே பால் குளிரூட்டும் நிலையம் சேலத்தில் மட்டும் இருக்கிறது. அந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தை நாமக்கல்லில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தற்போதுள்ள 28 மாவட்டங்களில் 17 ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, நாமக்கல்லில் 90,000 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது, அதேபோல சேலம் மாவட்டத்தில் 1,80,000 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. சேலம் பால் பண்ணையினுடைய கொள்ளளவு 3 இலட்சம் லிட்டர். ஆகவே அந்த அடிப்படையில்தான் செலவினங்களைக் குறைப்பதற்கு, இரண்டு, மூன்று மாவட்டங்களைச் சேர்த்து — ஏனென்று சொன்னால் இப்படி அதிக செலவினம் ஏற்பட்டால் விவசாயிகளுக்குப் பால் பட்டுவாடா செய்வதில் காலதாமதமும் நட்டமும் ஏற்பட்டு விடும். அந்த



1999 ஏப்ரல் 5]

நோக்கத்தில்தான் இரண்டு மாவட்டங்களுக்கு — ஒரு ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் எடப்பாடியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்படுமா? அங்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியில் 14,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அங்கே ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, திரு. கு. மனோகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**254—**

## வகுப்பறை கட்ட வன இலாகா இடம்

***5931—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒளவையார் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்குப் போதிய இடமின்மை காரணமாக கட்டடம் கட்ட முடியாததால் வகுப்பறைகளை அதிகப்படுத்த பக்கத்திலுள்ள வனச் சரகத்திற்குச் சொந்தமான இடத்தில் 50 சென்ட் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனச் சரகம் அமைந்துள்ள வன நிலத்தில் போதிய இடமில்லாததால், மேற்படி பள்ளிக்கு இடம் ஒதுக்கித் தர இயலாது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரில் தமிழ் மூதாட்டி ஒளவையார் பெயரில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. அந்த மேல்நிலைப்

[1999 ஏப்ரல் 5

பள்ளியிலே ஏறத்தாழ 5,000 மாணவிகள் பயின்று வருகின்றனர். ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் 5,000 மாணவிகள் படிக்க வகுப்பறையின்றியும், விளையாட்டுத் திடல் வசதியின்றியும் அதிக நெரிசலில் படித்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. மேலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட இடம் இல்லாத காரணத்தால் அந்தப் பள்ளியையொட்டி பக்கமாக இருக்கும் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் 50 சென்ட் நிலத்தை வழங்க அரசும் அமைச்சரும் மறுபரிசிலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி வனக் கோட்டத்தைச் சேர்ந்த வனச் சரக அலுவலக வளாகம் தருமபுரி நகரில் ஔவையார் மேல்நிலைப் பள்ளியையொட்டி அமைந்துள்ளது. அதன் பரப்பளவு 2.2 ஏக்கர். இவ்வளாகத்தில் வனச் சரக அலுவலகம், பணியாளர்கள் குடியிருப்பு, வனக் காவலர் நிலையம், வன ஓய்வு இல்லம், சந்தனக் கிடங்கு மற்றும் நீர்நிலைத் தொட்டி ஆகியவை 4773 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. மேலும், இவை தவிர, 600 சதுர மீட்டர் பரப்பில் கோவில் நிலம் ஒன்றும் உள்ளது. மேலும், வனக் குற்ற வழக்குகளுக்கு சம்பந்தப்பட்ட வாகனங்களை நிறுத்த 3100 சதுர மீட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 427 சதுர மீட்டர் குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதையாகப் பயன்படுகிறது. பள்ளியையொட்டியுள்ள பகுதியில் தடுப்புச் சுவருக்குப் பக்கத்தில் இரண்டு சந்தனக் கட்டை இருப்புக் கிடங்குகள் உள்ளன. இக்கிடங்குகளில் குற்றப் பணியில் சம்பந்தப்பட்ட சந்தனக் கட்டைகள் சுமார் 30 டன்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கு அருகிலுள்ள தடுப்புச் சுவர் பக்கத்தில் பணியாளர் குடியிருப்புகள் மூன்று உள்ளன. எனவே, வனத் துறைக்குப் போதிய இடம் இல்லாமையால் சிரமம் ஏற்பட்டுள்ளது. இக்காரணங்களினால் தருமபுரி வனச் சரக வளாகத்தில் ஔவையார் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கித் தர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை, வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தும்போது, இரட்டிப்புப் பங்காக நிலம் ஒதுக்கினால்



999 ஏப்ரல் 5]

தரப்படுமா? அப்படியெனில் அங்கே 2½ ஏக்கர் நிலத்தை அந்தப் பள்ளிக்கு வழங்கினால், மற்ற பகுதியில் 5 ஏக்கர் நிலம் வழங்கத் தயாராக இருக்கிறோம். மேற்கொண்டு அங்கு தேவையாக இருக்கும் கட்டடங்களைச் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நானே வழங்கி, வனத் துறைக்குக் கட்டித் தருகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து அந்த இடத்தை வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையினுடைய கட்டடங்கள் மற்றும் இடங்களுக்கு இரண்டு மடங்கு கொடுப்பதற்குப் பதிலாக பள்ளியையேகூட மாண்புமிகு உறுப்பினர் வேறு நல்ல இடத்திற்கு மாற்றலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, தருமபுரியைப்பற்றிக் கேட்கப் போகிறீர்களா? திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளில், பள்ளிக்கூடம் கட்டவருகிறபோது, மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற வேண்டுமென்றும், அது கிடைக்காத காரணத்தினால் இப்படிப்பட்ட இடம் இருந்தும், இடம் வழங்காததால், பள்ளி அழிந்துவிடக்கூடிய நிலையில் இருக்கிறது. அதைத் திரும்பக் கட்டுவதற்கு இடையூறாக மத்திய அரசினுடைய விதிமுறைகள் உள்ளன என்ற காரணத்தினால் அவை மறுக்கப்படுகிறதா? அப்படியென்றால் பள்ளிகள் இதுபோன்று இடமிருக்கின்ற இடத்திலே அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள மத்திய அரசோடு, மாநில அரசு இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்று உரிய அனுமதியைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான காடுகளோ, நிலங்களோ வேறு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால் மத்திய, மாநில வனச் சட்டங்களின்படி இருமடங்கு நிலம் வேறு இடங்களில் தரவேண்டும். மேலும், மத்திய அரசின் அனுமதியையும் பெற வேண்டும். ஆகவே, அதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால், குறிப்பிட்ட பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஔவையார் மேல்நிலைப் பள்ளி மிகவும் சிக்கலான இடத்திலே, நகரின் மையப் பகுதியிலே இடம் நெருக்கடி காரணமாக போதிய கட்டடம் இல்லாமல் மிகுந்த சிரமத்திலே செயல்படுகிறது. வனத் துறைக்குச் சொந்தமான இடத்தைத் தர முடியாவிட்டாலும் பரவாயில்லை. அந்தப் பள்ளியையொட்டி தென் பகுதியிலே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்தை கல்வித் துறைக்கு ஒதுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவலைத் துறைக்கு அனுப்பி வைத்தால் பரிசீலிக்கப்படும். அது நெடுஞ்சாலைத் துறைக்குத் தேவையில்லை என்று முடிவு செய்யப்படுமானால், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அனுமதி பெற்று, அதைப் பள்ளிக்குக் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 255, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**255—**

**சத்துணவு அமைப்பாளர்களுக்குப் பயிற்சி**

***7866—திரு. செ. மதிவாணன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சமையல் கலை மற்றும் சுகாதாரப் பயிற்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு சத்துணவு அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



1999 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. மதிவாணன் இருக்கையில் இல்லை.

அடுத்து வினா எண் 256, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**256—**

**சார் பதிவாளர் அலுவலகம்**

***18860—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடையாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள மக்கள் பத்திரம் பதிவு செய்ய வேண்டுமென்றால் ஒன்று, ஓமலூருக்கு அல்லது தருமபுரி மாவட்டம் அரூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 60, 70 கிலோ மீட்டர் தூரம் சென்று வரவேண்டியுள்ள நிலை இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் காடையாம்பட்டி ஒன்றியத்தில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அங்கே நாள் ஒன்றுக்குக் குறைந்தது 50 பத்திரங்கள், கிட்டத்தட்ட 100 வில்லங்கச் சான்றிதழ்கள் பதிவாகின்ற

[1999 ஏப்ரல் 5

வாய்ப்பு இருக்கிறது. பொதுமக்களுடைய நலன் கருதி அந்தப் பகுதியிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காடையாம்பட்டியிலிருந்து ஓமலூருக்குச் செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார். எனக்குக் கொடுத்து இருக்கிற குறிப்பின்படி 25 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஓமலூரில் நல்ல bus வசதி, போக்குவரத்து வசதி மற்றும் எல்லா வசதிகளையும் பெற்று இருக்கிற சார்பதிவாளர் அலுவலகமாக இருக்கிறது. அதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்போனால், காடையாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட ஓமலூர் உட்பட இந்த 17 கிராமங்களில் பதிவாகின்ற ஆவணங்களுடைய மொத்த எண்ணிக்கையே வருடத்திற்கு 848 என்றுதான் எனக்குக் குறிப்பு வந்திருக்கிறது. குறைந்தபட்சம் 2 ஆயிரம் ஆவணங்கள் பதிவு செய்ய முன்வந்தால் நிச்சயம் அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-20

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காடையாம்பட்டி நகரத்திலிருந்து ஓமலூர் நகரத்திற்கிடையே உள்ள தூரத்தைக் குறிப்பிடுகிறார்கள். காடையாம்பட்டி ஒன்றியம் என்பது தருமபுரி மாவட்ட எல்லை பொம்மிடி வரை பரவியிருக்கிறது. பொம்மிடியிலிருந்து ஓமலூர் வருவதென்றால் 65 கிலோ மீட்டருக்கு மேல் தூரம் ஆகிறது. அந்தப் பகுதி மக்கள் கிரயம் பெறுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ உண்டான ரொக்கத்தை, பணத்தைக் கொண்டுவரும்போது வழியிலே களவு போவதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. ஏனென்றால், மலைப் பகுதிகள் நிறைந்திருக்கின்ற பகுதி. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து காடையாம்பட்டி ஒன்றியத்திலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சார்பதிவகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தச் சார்பதிவகத்திற்கான செலவு அத்தனையையும் கணக்கிடும்போது குறைந்தபட்சம் 2 ஆயிரம் ஆவணங்களாவது பதிவு செய்யப்பட



1999 ஏப்ரல் 5]

வேண்டுமென்ற விதிமுறை இருந்தாலும், வெகு அத்தியாவசியமான, அவசியமான—அவர் காட்டுப் பகுதி, மிகவும் சிரமமான பகுதி என்று சொல்கிறார்—பகுதி என்று சொல்வதால் அவற்றை நேரிலே ஆய்வு செய்து, அவசியமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியில் விக்ரமங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று கோரி அதற்கான புள்ளி விவரங்களை அரசு கேட்டு, அந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டும், இன்னும் அதற்கான நிலையில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விக்ரமங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தை இவ்வாண்டு திறப்பதற்கான நடவடிக்கையை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கென்வே என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கின்றேன், குறைந்தபட்சம் 2 ஆயிரம் ஆவணங்கள் வருடத்திற்குப் பதிவு செய்கின்ற வாய்ப்பிருந்தால் அங்கே புதிய சார்பதிவகம் திறப்பதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர் சொல்கின்ற விக்ரமங்கலத்தில் ஆவணங்கள் பதிவு குறைவாக இருக்கலாம். ஏற்கெனவே, கடந்த ஆண்டு அவர் வைத்த கோரிக்கையினுடைய அடிப்படையில் இது சேர்க்கப்படுமா என்று கேட்டதில் மிகக் குறைந்த ஆவணங்களே அங்கே பதிவு செய்கின்ற நிலையிருக்கின்ற காரணத்தினால்தான் கடந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, உங்களுடைய கோரிக்கையை அரசு மீண்டும் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 257, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**257—**

### கால்நடை ஆய்வாளர் பயிற்சிப் பள்ளி

***16181—திரு. பி. இராசமாணிக்கம்:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கால்நடை ஆய்வாளர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக கால்நடை ஆய்வாளர் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது. இன்றைக்கு, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கிளை நிலையங்களில் பணியாற்றுகின்ற அந்த ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல, சரியான கட்டட வசதி, பயிற்சி மாணவர்கள் தங்குகின்ற விடுதி, அனைத்து வசதிகள் இருந்தும், நீண்டகாலமாக அந்தப் பயிற்சியை அங்கே தொடங்கவில்லை. எனவே, விரைவில் இந்த ஆண்டே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 91, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 15-5-1998-ல், கால்நடை பராமரிப்புத் துறையில் தற்போதுள்ள காலியிடங்களைக் கருத்திற்கொண்டு மீண்டும் கால்நடை ஆய்வாளர் பயிற்சியைப் புதுப்பிக்க வேண்டி, ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மட்டும் ஒவ்வொரு வருடமும் 125 நபர்களுக்கு 11 மாதங்கள் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அவர்களது சொந்தச் செலவில் அளிக்கலாம் என்று அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. கால்நடைத் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களில் கல்வித்தகுதி வாய்ந்த 45 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு, அதில் விருப்பம் தெரிவித்த 33 துறைப் பணியாளர்களுக்கு தற்போது ஒரத்தநாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலம் 11 மாதங்கள். அடுத்து, வேலைவாய்ப்பகம் மூலம் தேர்வுக் குழு அமைத்து இடஒதுக்கீட்டு முறையில் 12-வது வகுப்புப் படித்துத் தேறிய 125 பேரைத் தேர்வு செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.





**258—**

**தாட்கோ மூலம் கடன் வழங்குதல்**

***6352—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், TADCO நிறுவனம், திண்டிவனம் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருப்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் பகுதியில் TADCO மூலம் நிதி அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-25

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TADCO நிறுவனம் வேன், கார், ஆட்டோ போன்றவற்றிற்குக் கடன் வழங்கி வருகிறது. ஆனால், ஆதிதிராவிட மக்களுக்கு சிறு தொழில் கடன்கள், ஆடு வளர்ப்புக் கடன்கள் ஆகியவை வழங்கப்படவில்லை. அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதா? எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது? அது வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு சிறு தொழில் கடன் உதவி வழங்கப்பட்டு வந்தது. பெட்டிக் கடை, காய்கறிக் கடை, டீக் கடை, சைக்கிள் கடை போன்றவற்றிற்கும், ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கும் கடனுதவி வழங்கப்பட்டு வந்தது. குறிப்பாக, சிறு தொழில்களுக்காக வழங்கப்பட்ட திட்டங்கள் பெரும்பாலும் பல இடங்களில் தோல்வி அடைந்து இருக்கின்றன; பணத்தை அவர்கள் திரும்பக் கட்டுவதில்லை. மேலும் இடைத்தரகர்களின் பிடியிலும் அவர்கள் சிக்கிச் சீரழிந்த ஒரு நிலை

இருந்தது. ஆடு மாடுகள் வழங்குவதில் சில இடங்களில் ஆடுகள் காணாமல் போய் விடுவதும், சில ஆடுகள் இறந்து விடுவதும், அதற்காக நஷ்ட ஈடு கேட்பதுமான இப்படிப்பட்ட நிலையெல்லாம் இருந்தது. ஆகவே, ஆடுகள் வழங்கும் திட்டத்தில் சில கறுப்பு ஆடுகள் புகுந்துவிட்ட காரணத்தினால், TADCO நிறுவனத்தின் மூலமாக அதைச் சீர் செய்வதற்காக, சிறு கடன்களைப் பெரிய கடன்களாக மாற்றி, அந்தத் திட்டங்களுக்கும் அதிகமான பணத்தை ஒதுக்கி அவற்றை சிறப்பாக ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக TADCO நிறுவனம் செயல்படுத்தி வருகிறது என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TADCO நிறுவனம் மூலம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வங்கிகள் கடன் கொடுப்பதில்லை என்பதை அரசு அறியுமா? TADCO நிறுவனம் மூலமே நேரடியாகக் கடன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு பொதுவாக எல்லா இடங்களிலும் இருக்கின்றன. இருப்பினும், அடிக்கடி துறையின் மூலமாக வங்கி அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை செய்து, ஆதிதிராவிட மக்களை மிகவும் சிரமப்படுத்தக் கூடாது; நியாயமாகக் கடன்களை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் பயனாளிகளும் வாங்குகின்ற கடனை ஒழுங்காகக் கட்டுவதற்கு உரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் ஏதாவது வங்கிகள் குறிப்பாக அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆளானால், குறிப்பிட்டுக் காட்டினால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பயனாளிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தகுந்த ஆலோசனை வழங்கி, கடனைத் திருப்பிக் கட்ட அறிவுறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 259, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



**259—**

**சுற்றுலா மையமாக்குதல்**

***8283—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, செண்பகராமநல்லூர், பெருமாள் கோவிலைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, செண்பகராமநல்லூர் பெருமாள் கோவிலைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. மேலும் எந்த ஒரு இடத்தையும் அரசு சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்து, அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட செண்பகராம நல்லூரில் பழம்பெரும் கோவிலான ஜெகநாதப் பெருமாள் கோயில் உள்ளது. அந்தக் கோயிலில் சிற்பக் கலைக் கூடம் உள்ளது. அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவதற்குச் சாலைகள், மற்ற எந்த வசதிகளும் கிடையாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலைப் பொறுத்தமட்டில் தற்போது அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, சாலை வசதியைப் பொறுத்தமட்டில், நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்திய அரசு சுற்றுலாத் துறையின் மூலம் வெளியிட்டுள்ள

[1999 ஏப்ரல் 5

தகவல் அறிவிப்புக் கையேட்டில், சென்னை Mu seum உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள எந்தச் சுற்றுலாத் தலமும் இடம்பெறவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? இதனால் தமிழ்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் இருக்கின்றது. ஆகவே, அரசு இதுகுறித்து எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சுற்றுலாத் துறையின் சார்பாக அனைத்து சுற்றுலா இடங்களையும் பற்றிய குறிப்புகள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்படி கையேடுகளாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. கழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு சுமார் 6 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகள் இங்கு வருகை தந்து இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 260. திரு. செங்கை சிவம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**260—**

### உள்நாட்டு மீனவர்களுக்குத் தனி இணையம்

***22406—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழக அளவில் உள்நாட்டு மீனவர்களுக்குத் தனி இணையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1999 ஏப்ரல் 5]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம் பெங்களூர் மற்றும் மைசூர் போன்ற இடங்களில் இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று உள்நாட்டு மீனவர்களுக்கும் தனி இணையம் அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்று நம்முடைய மாநிலத்திலும் தொடங்கும் திட்டம் அரசுக்கு உண்டா? அதேபோல, உள்நாட்டு மீனவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் முழு மானியத்துடன் உள்நாட்டு மீனவர்களின் வியாபாரத்தை வலுப்படுத்தும்பொருட்டு ரூ.48.24 இலட்சம் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 30 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1994-95இல் ரூ.18.43 இலட்சம் ரூபாய் செலவில் அரசு ஆணை எண் 48, நாள் 17-3-1995இல் மேட்டூர் அணை மீனவ கூட்டுறவுச் சங்கத்திற்கு insulator van ஒன்றும், மீன் அங்காடி இரண்டும், மிதி வண்டிகள் 17-ம், மீன் கையாளும் கலம் இரண்டும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பீடு 9.14 இலட்ச ரூபாய். பழனி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு insulator van ஒன்றும், மீன் அங்காடி மூன்றும், மிதி வண்டிகள் 30-ம், மீன் கையாளும் கலம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பீடு 9.34 இலட்ச ரூபாய். மேலும் 5.5 இலட்ச ரூபாய் செலவில் 1-2-1999இல் ஆணையிடப்பட்டு திருவைகுண்டம் உள்நாட்டு மீனவர்களுக்கு insulator van வெகு விரைவில் வழங்கப்படவிருக்கிறது. இதுமட்டுமல்லாமல், 6.2 இலட்சம் ரூபாய் செலவில் மீன் அங்காடியும் மற்றும் தமிழக அரசின் சார்பாக மீனவர்களுக்கு இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 1997-98இல் 500 இலவச வீடுகளையும்—ஒரு நிமிடத்தில் இந்த ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்—மேலும் உள்நாட்டு மீனவர்கள் வளர்க்க 33 இலட்ச ரூபாய் செலவில் 125 இலட்சம் மீன் குஞ்சுகளையும் வழங்க அரசால் வகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1999 ஏப்ரல் 5

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

**பாசனக் கட்டமைப்புகள் சீரமைப்பு மற்றும் கோலப்பன் குழு பரிந்துரைகள் தொடர்பாக 4-4-1999 அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகள் பற்றி முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் (4-4-1999) நடைபெற்ற அமைச்சரவையில் எடுத்த இரண்டு முக்கியமான முடிவுகள் குறித்து இந்தப் பேரவையிலே சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் கீழ்க்கண்ட அறிக்கையினை அளிக்கிறேன்.

விவசாயிகளுக்கு வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், காவிரி கழிமுகப் பகுதிகளில் ஆறுகளிலும், கால்வாய்களிலும், வடிகால்களிலும் நீர் தங்குதடையின்றி கடைமடைப் பகுதிகளைச் சென்றடையவும், மாநில அரசினால் தூர்வாரும் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டு இதற்காக ரூ.32.66 கோடியும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.46.50 கோடியும் செலவிடப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் (1999-2000) இதற்காக 50 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப்பட்டுவரும் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் மாநிலத்தின் காவிரிப் படுகை தவிர்த்த மற்ற அனைத்துப் பாசன அமைப்புகளிலும் உள்ள கால்வாய்களில் தூர் அகற்றல், உள்ளுறை அமைத்தல், பாசனக் கட்டமைப்புகளைப் பழுது நீக்கி மேம்படுத்தல் போன்ற பணிகள் பெரிய அளவில் 350 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் செப்டம்பர் 2001-க்குள் முடிவடையும்.

ஆறுகளிலும், கால்வாய்களிலும், வடிகால்களிலும் இவ்வாறு தூர் வாரும் பணிகளை மேற்கொண்டபோதிலும், பாசனப் பிரிவு வாய்க்கால்களுக்குக் கீழேயுள்ள சிறு கால்வாய்களையும், வயற்கண்ணிகளையும் நன்கு பராமரிப்பது இன்றியமையாததாகும். இந்தப்





பராமரிப்பும், அவற்றின் பயனீட்டாளர்களான விவசாயிகளின் ஈடுபாட்டுடன் செய்யப்பட்டால் அது சிறப்பாக நடைபெறும். முன்பிருந்த குடிமராமத்து முறை முற்றிலுமாகக் கைவிடப்பட்ட நிலையில் பிரிவு வாய்க்கால்களின் கீழுள்ள பாசன அமைப்புகள் சீரழிந்துவிட்டன.

ஆந்திர மாநிலத்தில் பிரிவு வாய்க்கால்களின் கீழுள்ள பாசன அமைப்புகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்பினை விவசாயச் சங்கங்களிடம் ஒப்படைக்கும் பணி ஆந்திரப் பிரதேச விவசாயிகள் பாசன அமைப்பு மேலாண்மைச் சட்டம், 1997 (Andhra Pradesh Farmers' Management of Irrigation Systems Act, 1997) மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலும் 'நமக்கு நாமே' திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த 'நமக்கு நாமே' திட்டத்தின் அடிப்படையிலேயே, பிரிவு வாய்க்கால்களுக்குக் கீழுள்ள் பாசன அமைப்புகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்பினை விவசாயச் சங்கங்களிடமே ஒப்படைக்க வேண்டி, இத்தகைய சட்டத்தை நம் மாநிலத்திலும் கொண்டுவர அமைச்சரவை 4-4-1999 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) செயலாக்கம் மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்குத் தேவையான நிதி அரசின் மூலம் விவசாயச் சங்கங்களுக்கு ஒதுக்கப்படும்.

முற்பகல் 10-35

பொதுப்பணித் துறை, விவசாயத் துறை, உள்ளாட்சித் துறை அமைச்சர்களும், அதிகாரிகளும், பொறியாளர்களும் அடங்கிய குழு ஒன்று, ஆந்திர மாநிலத்திற்கு விரைவில் சென்று, அவர்களது சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்து, இதற்கானச் சட்டமுன்வடிவு ஒன்றினைப் பரிந்துரை செய்யும். இதற்கான முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்துடன் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு முக்கியமான முடிவையும் அவைக்கு அறிவிக்கிறேன். மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் இந்த அவையில் 17-2-1999 அன்று "விவசாயிகளின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அதுகுறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில்

அறிவிக்கப்படும்'' என்று கூறியிருந்ததையொட்டியும், 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் 17-3-1999 அன்று நான் அளித்தபோது "விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த திரு. கோலப்பன் குழுவின் அறிக்கையின் மீது அரசு உரிய முடிவு எடுத்து இக்கூட்டத்தொடரில் அறிவிக்கப்படும்" என்று தெரிவித்ததையொட்டியும், நேற்றையதினம் அமைச்சரவையிலே கோலப்பன் குழுவின் அறிக்கையிலே விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.55 என்று இருக்கிறது. இதிலே கோலப்பன் குழு செய்துள்ள பரிந்துரை ரூ.100 ஆகும். அரசு இந்தப் பரிந்துரையை அப்படியே முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

2. சொந்த ஏர் மாடு இல்லாமல் உழவு செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் ரூ.32. இதுகுறித்து கோலப்பன் குழு செய்துள்ள பரிந்துரை ரூ.54. இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

3. நெல் அறுவடை செய்யும் விவசாயத் தொழிலாளருக்கு — அறுவடைக் களத்திற்கு எடுத்துச் சென்று கதிரடித்தல், அளந்து மூட்டைகளில் கட்டுதல் - ஆகிய பணிகளிலே ஈடுபடுவோருக்கு தற்போதைய ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.32 அல்லது விளைச்சலில் எட்டில் ஒரு பகுதியாகும். ஆண் தொழிலாளர்களும் பெண் தொழிலாளர்களும் இந்தப் பணியை ஒரேவிதமாக மேற்கொள்வதால் இந்தப் பணியிலே ஆறு மணி நேரம் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.54 என்றும், ஐந்து மணி நேரம் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு ரூ.45 என்றும், அதாவது, இரு தரப்பினரையும் ஒரேவிதமாகக் கருதி, மணிக்கு ஒன்பது ரூபாய் வீதம் ஊதியம் இருக்க வேண்டுமென்று கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

4. நெல் தவிர்த்த பிற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்களுக்கு தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு



ரூ.32. இதனையும் கோலப்பன் குழு ஆராய்ந்து ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.54 என்றும் பெண் தொழிலாளர்களுக்கு ரூ.45 என்றும் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையும் அப்படியே அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

5. விதைத்தல், நாற்று பறித்தல், நடுதல், களை எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு விதைத்தலுக்கு ரூ.32 என்றும், நாற்று பறித்தல்/நாற்று நடுதல் ஆகியவற்றுக்கு ரூ.30 என்றும், களை எடுப்பதற்கு ரூ. 29 என்றும் உள்ளது. இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து இத்தகைய பணிகளிலே ஈடுபடுவோருக்கு ஆண் தொழிலாளருக்கு ரூ.54 என்றும், பெண் தொழிலாளருக்கு ரூ.45 என்றும், மணிக் கணக்குப்படி குறைந்தபட்ச ஊதியத்தை கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

6. பிற விவசாயப் பணிகளில் அதாவது வரப்பு வெட்டுதல், கோழி வளர்த்தல், தேனி வளர்த்தல், பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.32. கோலப்பன் குழு இதிலே செய்துள்ள பரிந்துரை நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.54 என்றும், பெண் தொழிலாளர்களுக்கு ரூ.45 என்றும் ஆகும். இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

7. சம ஊதியச் சட்டப்படி இதிலே நேரமும் பணியும் ஒரே மாதிரியாக இருக்குமேயானால் ஆண், பெண் தொழிலாளர் இருவருக்கும் சமமான ஊதியம் தரப்பட வேண்டும் என்ற ஒரு முடிவையும் அரசு இன்று இந்த அவையிலே அறிவிக்கின்றது. இது கோலப்பன் குழுவினால் சுட்டிக்காட்டப்படாவிட்டாலும்கூட அரசு அதை இன்றைக்கு, புதிதாக அறிவிக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

8. இந்தக் குறைந்தபட்ச ஊதியம் அரசுச் சார்புடைய பண்ணைகள், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கும் பொருந்தும். மேலும், ஏற்கெனவே நியாயக் கூலிச் சட்டம் அமலில் உள்ள 11 வட்டங்களுக்கும்கூட இந்த முடிவுகள் பொருந்தும்.

9. இது பொதுவான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயமாகும். சில பகுதிகளில் ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் கூட்டும் முத்தரப்புப் பேச்சுவார்த்தை மூலமாக தானியமாக வழங்குவதோ அல்லது பணமாக வழங்குவதோ ஆகியவைபற்றி முடிவு எடுத்துக்கொள்வார்களானால் அதனையும் அரசு ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

*முற்பகல் 10-40*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கமுதி ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் காவல் துறையினரால் தாக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 31-3-1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் காவல் துறையினரால் தாக்கப்பட்டது குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. கே.ஆர். இராமசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. லா. சந்தானம் ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-4-1999 அன்று கமுதி ஊராட்சி ஒன்றியக் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஊராட்சி ஒன்றியத்தினுடைய துணைப் பெருந் தலைவர் இராமமூர்த்தி அவர்கள் வந்துகொண்டிருந்த நேரத்தில், இடையிலே, கமுதி நகரத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி Sub-Inspector—அவரைத் தடுத்து Permit, Licence போன்றவை இருக்கின்றனவா என்று கேட்டிருக்கிறார். அப்போது அந்த ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் இராமமூர்த்தி அவர்கள் "நான் அவசரமாக ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திற்குச் செல்கிறேன், சென்றுவிட்டு வந்து உங்களுக்கு அத்தனையையும் காண்பிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். அவர் தமிழ் மாநில காங்கிரஸை சேர்ந்தவர். தமிழ் மாநில காங்கிரஸினுடைய கொடி அந்த வண்டியிலே பறந்திருக்கிறது. ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந் தலைவர் என்கின்ற வாசகம்கூட அந்த காரிலே இடம் பெற்றிருந்திருக்கிறது. அப்படி இருந்தும்கூட 'யாராக இருந்தாலும்,





எதற்காகச் சென்றாலும் நான் விடமாட்டேன்' என்று தடுத்து, அந்த ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரை காரிலே இருந்து இறக்கி, அடித்து, காயப்படுத்தி, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே போலீஸ் காவலில் வைத்துவிட்டார். அதை அறிந்த பொது மக்கள், ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், கவுன்சிலர்கள் அத்தனை பேரும் பதறியடித்து காவல் நிலையத்திற்கு ஓடிவந்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரை அந்த ஊரில், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுடைய கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையிலும், தமிழ் மாநில காங்கிரஸினுடைய மிகப் பெரிய தலைவர்களிலே ஒருவர் என்ற முறையிலும் எல்லோரும் நன்கு அறிவார்கள். அப்படி இருந்தும்கூட, அந்த போலீஸ் அதிகாரி, அவர்கள் உள்ளே வந்தால் சுட்டுவிடுவேன் என்று மிரட்டி ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரை விட மறுத்துவிட்டார்.

இப்படி பெரிய குழப்பம் ஏற்பட்ட நேரத்தில், அதற்குப் பக்கத்தில் இருக்கிற, 100 முதல் 200 அடிக்குப் பக்கத்தில் இருக்கின்ற பேருந்து நிலையத்தின் பக்கம் மிகப் பெரிய கூட்டம் கூடி பஸ் மறியலில் ஈடுபடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில், அங்கே வந்த Circle Inspector அந்த ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரை விடுவித்திருக்கிறார். அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. பி.கே. கிருஷ்ணன் அவர்கள் பேருந்து நிலையத்திற்குச் சென்றார். பேருந்து நிலையத்தில் மிகப் பெரிய கூட்டம் கூடி, மோசமான சூழ்நிலை ஏற்படவிருந்ததைத் தடுப்பதற்காக ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் முயற்சி செய்துகொண்டிருந்த நேரத்தில், அங்கே இருக்கின்ற D.S.P. போலீஸ் படையுடன் வந்து தடியடி நடத்தியிருக்கிறார். அந்தத் தடியடியால் 30 பேருக்கு மேலே பயங்கரமான காயத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். கட்சி வித்தியாசம் இல்லாமல், தமாகா. தோழர்களை மட்டும் அல்லாமல், திமுக. ஒன்றியச் செயலாளர், இளைஞர் அணி ஒன்றியச் செயலாளர், அ.இ.அ.தி.மு.க. இளைஞர் அணி ஒன்றியச் செயலாளர் என்று அத்தனை பேரையும் அடித்துக் காயப்படுத்தியதோடு, பொது மக்களையும், பெண்களையும் காயப்படுத்தி அத்தனைபேரும் மருத்துவமனைக்குச் சென்றிருக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. மிகப் பெரிய போர்க்களம் போன்று கமுதியிலே நடந்திருக்கிறது.

இந்தத் தகவல் அறிந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் பேசினேன். 'Sub-Inspector முறைகேடாக நடந்துகொண்டுவிட்டார், நான் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன், இப்போது அமைதி நிலவுகிறது' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். அதேபோல மாவட்ட கண்காணிப்பாளரிடமும் நான் பேசினேன். அவரும், 'போலீஸ் அதிகாரிகள் தவறாக நடந்து விட்டார்கள். அதற்குப் பரிகாரம் தேடியிருக்கிறேன், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரிடத்திலே நான் மன்னிப்புக் கேட்டிருக்கிறேன்' என்று சொன்னார்கள். நான் சொன்னேன், அமைதியாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நீங்கள் ஒருவார காலத்திற்கு யாரையும் கைது செய்யாமல் நிறுத்தி வையுங்கள், நான் சட்டமன்றம் முடிந்து 9 ஆம் தேதி புறப்பட்டு 10 ஆம் தேதி அங்கே வந்தவுடன் யார் யாரை நீங்கள் ஆஜர்படுத்தச் சொல்லுகிறீர்களோ அவர்களை எல்லாம் நான் ஆஜர்படுத்துகிறேன் என்று சொன்னேன். அதற்கு மாவட்ட கண்காணிப்பாளர் ஒத்துக்கொண்டார். 'எந்தச் சூழ்நிலையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று அவர் என்னிடம் சொன்னார். ஆனால் இன்று வந்த தகவல், பெருநாழி என்ற கிராமத்தில், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரின் சொந்த ஊர் என்ற முறையிலே அங்கே சில அசம்பாவிதங்கள் நடந்ததையொட்டி சிலரைக் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில், இன்று பரிட்சைக்கு ஆஜராக வேண்டிய பத்தாம் வகுப்பு படிக்கின்ற இளம் மாணவர்கள், இரண்டு பேரைக் கைது செய்திருக்கிறார்கள். இன்றுகூட அவர்கள் பரிட்சை எழுத வேண்டும். அதிலும் அந்த மாணவர்கள் — நான் இங்கே சாதியைச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம் — மிகச் சிறுபான்மையாக இருக்கின்ற ஆசாரி வகுப்பு, நாயுடு வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள்; இன்று பரிட்சைக்குப் போகவேண்டிய அவர்களைக் கைது செய்து, அங்கே துணைச் சிறைச்சாலையிலே வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விடவேண்டும் என்று, பரிட்சை எழுதுவதற்காகவாவது அனுமதிக்க வேண்டுமென்று கேட்ட நேரத்திலேகூட, அவர்களை அனுமதிக்கவில்லை. இது இன்னும் மோசமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற ஒரு நிகழ்ச்சி என்றுதான் நான் கருதுகிறேன்.

*முற்பகல் 10-45*

அங்கே இருக்கின்ற காவல் துறை கண்காணிப்பாளர், நல்ல நேர்மையான, திறமையான அதிகாரி என்பதில் எனக்கு எந்தவிதமான



சந்தேகமும் கிடையாது. ஆனால், அவர் கையை விட்டேகூட போய்விட்டதோ என்று நான் கருதுகிறேன். காரணம், நேற்று காலையில் என்னிடம் பேசினார்; எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல், 'யாரையும் கைது செய்யாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்; நீங்கள் வந்தபிறகு பேசிக்கொள்ளலாம்' என்று சொன்னார். ஆனால், நேற்று இரவு இப்படி, மாணவர்களைக் கைது செய்து, சம்பந்தம் இல்லாதவர்களையெல்லாம் பிடித்து வைத்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ஒரு மரியாதைக்குரிய குடும்பத்திலே பிறந்தவர். அத்தனைபேருக்கும் மிக நன்றாகத் தெரிந்தவர். அவருடைய தந்தையாரைக்கூட காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, எல்லோரையும் பிடித்துவந்த பிறகுதான் அவரை விடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் — ஏற்கெனவே முதுகுளத்தூர், கமுதி போன்ற பகுதி என்பது, sensitive-ஆன ஒரு பகுதி — இந்தப் பகுதியில் மேலும் மேலும் மோசமான சூழ்நிலை ஏற்படுவதற்கு, பலரைக் கைது செய்ததன் மூலம் அங்கே ஒரு அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு இது வழிகோலும் என்பதால், உடனடியாக அத்தனைபேரையும் விடுதலை செய்வதோடு — ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பி.கே. கிருஷ்ணன் அவர்கள் மீதுகூட, நியாயம் கேட்கப் போனதற்கே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அவர்களையெல்லாம் விடுதலை செய்து — இந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற்று, அமைதியானதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

* **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-4-1999 அன்று கமுதி ஊராட்சி ஒன்றியத்தின் துணைப் பெருந்தலைவர் இராமமூர்த்தி அவர்கள், அங்கு நடைபெறவிருந்த ஒன்றியக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக அவரது காரிலே சென்று கொண்டிருந்த நேரத்திலே, அங்கிருந்த காவல் துறை உதவி ஆய்வாளர் அவர்கள், அவரை நிறுத்தி, அந்த வண்டியினுடைய Licence போன்றவற்றைப் பரிசோதிக்க வேண்டுமென்ற நிலையிலே, அவர், 'அவற்றையெல்லாம் காண்பிக்கிறேன்; நான் அவசரமாக ஒன்றியக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன்' என்று சொன்னபோது, இருவருக்கும் இடையே ஏற்பட்ட சிறு வாய்த் தகராறின் காரணமாக, அவரைத் தாக்கி, காவல் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றிருக்கிறார்கள்.

அங்கே சென்ற இடத்திலேகூட, அவர் மிகக் கடுமையாகத் தாக்கப் பட்டிருக்கிறார்.

அவர்களெல்லாம் அரசு மருத்துவமனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கின்ற நேரத்தில், அவர்களை நான் பார்க்கச் சென்றபோது, அவர்களுக்கு—தலையிலே பலத்த காயத்தோடு, தையல் போடப்பட்டு—தலையிலே காயம்பட்டிருக்கின்ற நிலையை நான் காண முடிந்தது. மேலும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றிய கவுன்சிலர் செந்தூர்பாண்டியன்கூட மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்.

இந்த அரசு நல்ல எண்ணத்தோடு, எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கக்கூடாது என்கின்ற முறையில் இயங்கிவந்தாலும்கூட, ஆங்காங்கே காவல் துறையிலே இருக்கின்ற சில அதிகாரிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டு சில தவறுகளைச் செய்கின்ற நேரத்திலேதான் இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளெல்லாம் வருகின்றது. இதை நான் அரசின் கவனத்திற்கு எடுத்துச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-50*

கமுதியைப் பொறுத்தவரையில், அது எங்களுடைய தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சொந்தக் கிராமம் என்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற பல பேரும் எங்களிடத்திலே வந்து முறையிடுகிறார்கள்.

இப்படியெல்லாம் அந்தக் காவல் துறையைச் சேர்ந்த D.S.P. சோமசுந்தரம் அவர்கள்தான் மிகக் கடுமையாக நடந்துகொண்டு சாதாரணமாக அமைதியான முறையிலே நடந்து கொண்டிருந்த உண்ணாவிரதத்திலே புகுந்து தடியடியை நடத்தி பல பேருக்குத் தொல்லைகளைக் கொடுத்தார்கள் என்பதை அங்குள்ள மக்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அதோடு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல, பள்ளி மாணவர்களை எல்லாம்—அவர்கள் வாழ்க்கையிலே இன்றைக்கு S.S.L.C. தேர்வு நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்கள் அந்தப் பரிட்சையை எழுதவில்லை என்று சொன்னால் அவர்களுடைய



எதிர்காலம் மிகவும் பாதிக்கின்ற நிலையிலே அவர்களை எல்லாம்— பிடித்து உள்ளே வைத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது நம்முடைய அரசாங்கம் அதை மிக கவனத்தோடு கவனிக்க வேண்டும். அவர்கள்மீது, பெருந்தலைவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. மற்றும் அதிலே பங்குகொள்ளாத பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த மக்கள்மீதும் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக அறிகிறோம். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி அந்த வழக்குகளை எல்லாம் திரும்பப் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுப்பதோடு, அத்துமீறி நடந்துகொண்ட அந்தக் காவல் துறையினர்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் எடுத்துக் கூறியது அத்தனையும் உண்மை. வழக்கமாக அரசின் சார்பில் இதுபோன்ற கவன ஈர்ப்புகள் வரும்போது காவல் துறைக்கு சார்பாகப் பேசுவதுதான் பெரும்பாலும் நடைபெறுகின்ற காரியம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் உண்மைகள் தெளிவாகத் தெரிகின்ற நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க என்றைக்குமே தவறியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல ஒன்றியத்தினுடைய துணைப் பெருந்தலைவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. இராமமூர்த்தி அவர்கள், அந்தப் பகுதியிலே எல்லோருக்கும் தெரிந்தவர்தான். அங்கேயுள்ள Sub-Inspector-க்குப் புதியவரும் அல்ல. அவர்கள் குறிப்பிட்டதைப்போல—அவர்கள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் என்று காரிலேயே பெரிய எழுத்துக்களில், கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அவருடைய காரை நிறுத்தி R.C. புத்தகம் இருக்கிறதா என்று கேட்டு, 'நான் அவசரமாகக் கூட்டத்திற்கு செல்ல முயல்கின்றேன். எடுத்துவர மறந்துவிட்டேன்' என்று சொன்ன பிறகும் Sub-Inspector-க்கும் அவருக்கும் வாய்த் தகராறு முற்றி—இவர் சொல்கிறார் அவர் சட்டையைப் பிடித்து இழுத்தார் என்று; அவர் சொல்கிறார், இவர் சட்டையைப் பிடித்து இழுத்தார் என்று—அதற்குப் பிறகும் அவரை விடாமல் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதன் காரணமாக

அங்கே ஒரு குமுறல், ஒரு கிளர்ச்சி ஏற்பட அது காரணமாக ஆகியிருக்கிறது. இதைக் கூட்டத்திலே இருந்த ஒன்றியப் பெருந்தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு.பி.கே. கிருஷ்ணன் அவர்கள் கேள்விப்பட்டவுடன் அந்தக் கூட்டத்திலே இருந்த அத்தனை பேருமே போலீஸ் நிலையத்திற்கு அவரை விடுவிப்பதற்காக வந்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட வாய்ப் பேச்சு அல்லது தகராறு இவற்றின் காரணமாக அவர்களிடத்திலே மிகுந்த கண்டிப்போடும், வன்முறை வார்த்தைகளைப் பயன்படுத்தியும் காவல் துறையினர், அதிலும் குறிப்பாக Sub-Inspector நடந்து கொண்டார் என்கின்ற தகவலும் எனக்கு உடனடியாகக் கிடைத்தது. அன்று இரவே நான் அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்று கேட்டு எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டேன். அவரும்—சந்தானம் அவர்களும்—குறிப்பிட்டதைப் போல, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. பி.கே. கிருஷ்ணன், துணைப் பெருந்தலைவர் திரு. இராமமூர்த்தி, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியினுடைய ஒன்றியச் செயலாளர், அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே கவுன்சிலராக இருப்பவர் செந்தூர்பாண்டியன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பஞ்சாயத்து யூனியன் மற்றொரு கவுன்சிலர் குருவையா, நாகப்பன் என்கிற மாவட்டத் தொண்டர் படை தி.மு.க. துணை அமைப்பாளர்—அவரும் தி.மு.க. கவுன்சிலர் — அ.தி.மு.க-வைச் சேர்ந்த கவுன்சிலர் பூமிநாதன், அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர் காளிமுத்து, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த காசி ஆகியோரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள் போலீசாரால். இதிலே அதிகமாகக் காயம்பட்டவர்கள், செந்தூர்பாண்டியன், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த வெள்ளைச்சாமி, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த காசி, ஆகிய இந்த 3 பேர்களும் — தமிழ் மாநிலக் காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. - ஆகிய 3 இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் — பெரிதும் பாதிக்கப்படுகின்ற அளவுக்குக் காயம்பட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-55*

இந்தச் செய்திகள் எல்லாம் எனக்கு உடனடியாக வந்தன. உரிய நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உள்துறைச் செயலாளரிடத்திலே கூறியதற்கிணங்க, அவர் ஆணையிட்டு, அந்த Sub-Inspector-ஐ—உடனடியாக முதலிலே அவரை—மாற்றி, கொண்டு போனார்கள். அவரைத் தற்காலிக வேலைநீக்கம் செய்து, அவர்மீது விசாரணை நடைபெறுவதற்கு ஏதுவாகச் செய்யப்





பட்டிருக்கிறது. இவற்றைப்பற்றி உடனடியாக அறிந்து எனக்கு விவரம் தெரிவிக்க, இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும், கடலாடி சட்டமன்றப் பேரவை உறுப்பினருமான பரமக்குடி தங்கவேலன் அவர்களையும் அனுப்பிவைத்தேன். இங்கே இருந்து தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, விசாரித்து எனக்குத் தகவல் தருமாறு அவரையும் கேட்டுக்கொண்டேன். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் சொன்ன அதே தகவல்களைத்தான் அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையிலே ஒன்றை விட்டுவிட்டார். அதற்கிடையிலே அவர் என்னிடம் பேசினார். அவர் என்னிடத்திலே பேசி, இந்தத் தகவலையும் சொன்னார். சொல்லும்போது நான் சொன்னேன் : "இப்போது அவரை suspend செய்திருக்கிறோம்" என்று சொன்னேன். "அந்த Dy. S.P.-யைப் பற்றியும் விசாரிக்க வேண்டும்; அவரும் தவறு செய்திருக்கிறார்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இவ்வளவையும் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இரண்டு மாணவர்கள் பரிட்சை எழுதுகிற காலகட்டத்திலே கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தியைச் சொல்லவில்லை. ஒருவேளை (குறுக்கீடு) அது இன்றைக்கு நடந்ததாகச் சொல்கிறார்கள். இப்போது சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நான் கடிதம் எழுதி அனுப்பிவிட்டேன். அதற்கான பதிலும் வந்துவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, கைதானவர்களை உடனே விடுதலை செய்யச் சொலலவும் என்று எழுதி அனுப்பினேன். அதற்குப் பதிலாக I.G. Intelligence மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தியும் வந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற காரியங்களில் சில நேரங்களில், காவல் துறையினர் அத்துமீறி ஈடுபடுகின்றார்கள். அதுவும் இந்தக் காவல்துறை Sub-Inspector ஒரு நல்ல திடகாத்திரமான வாலிபர் என்பதும், முரட்டுச் சுபாவம் உடையவர் என்பதும் எனக்கு வந்த தகவல். காவல் துறையிலே உள்ளவர்கள் மக்களுக்கு நண்பர்களாக இருக்க வேண்டுமேயல்லாமல், மக்களோடு சேர்ந்து சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமேயல்லாமல், அதுபோல மக்களும், மக்களின் பிரதிநிதிகளும், காவல்துறையோடு சேர்ந்து சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க உதவிகரமாக இருக்க வேண்டுமேயல்லாமல், இதுபோன்ற சூழ்நிலை உருவாவது நல்லதல்ல என்பதை இந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டுவந்த

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 5

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போல, திரு. சந்தானம் அவர்களைப் போல, அவையிலே உள்ள அனைவரையும் போல நானும் உணர்கிறேன்.

ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக இப்போது பரமக்குடியிலே Sub-Collector-ஆக இருக்கின்ற திரு. உதயசங்கர் அவர்கள் மூலமாக Police Standing Order 145-ன்கீழ், விசாரணை போடப்பட்டிருக்கிறது. திரு. கிருஷ்ணன் அவர்கள்கூடச் சொன்னார்களாம்; தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த ஒன்றியத் தலைவர், நேர்மையான விசாரணை நடைபெறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். அந்த விசாரணையைத் தொடர்ந்து, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு இரண்டு உறுப்பினர்களும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு மூன்று உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். மேலே குறிப்பிட்ட ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவையின் உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இந்த உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள், தங்கள் நியமனத் தாள்களை 13-4-1999 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடத்திலே சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர், பேரவைச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 15-4-1999 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள், 16-4-1999 பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு



1999 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

மேற்படுமாயின், 19-4-1999 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (ஆ) விதி 110ன்கீழ் முதலமைச்சர் அளித்த அறிக்கை நகல் பத்திரிகையாளர்களுக்கு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஓர் அறிக்கையைப் படித்தார்கள். மிக முக்கியமான அறிக்கை என்ற காரணத்தினால், அந்த அறிக்கையின் நகல்களைப் பத்திரிகையாளர்கள் சிறிது நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கிறேன்.

முற்பகல் 11-00

## 5. தகவல் கோரல்

### கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப் பட்டினம் இஸ்லாமிய மக்கள் காவல் துறையால் பாதிப்பு

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம் பகுதி என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதி. அங்கே இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் காவல் துறையினரால்... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய அறிவிப்பை மட்டும் படியுங்கள். நீங்கள் அதனுடைய விவரங்களைச் சொல்ல வேண்டியதில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அந்த இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், காவல் துறையினரால் மிகவும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதுபற்றி ஏற்கெனவே பேரவைத் தலைவருக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். மேலும், அங்கே ஒரு tension-ஆன சூழ்நிலை இருந்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் அதை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கொடுத்திருக்கிறேன், நம்முடைய விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மணி அண்ணாச்சியும் கொடுத்திருக்கின்றார்கள். திரு. வேலாயுதன் அவர்களும் கொடுத்திருக்கின்றார்கள். திரு. குமாரதாஸ் அவர்களும் கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் கிட்டத்தட்ட 10 சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறோம். அதிலே நாட்கள் பல

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான்கைந்து பேர் கொடுத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்ற காரணத்தினாலேதான், அங்கே ஏற்பட்டிருக்கின்ற tension, இங்கேயும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் கொஞ்சம் காலதாமதம் செய்யப்படுகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 20—வேளாண்மை

### கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.7,58,44,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு விதைகளை இலவசமாக கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 182, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து தரப்பு விவசாயத் தொழிலாளர்களுக்கும் 50 சதவீத மானியத்தில் மண்வெட்டி, கடப்பாரை போன்ற விவசாயக் கருவிகளை



வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1511, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1040, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 705, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிளகாய், பருத்தி, நிலக்கடலை விதைகளையும், உரம், பூச்சி மருந்து, ஆகியவைகளையும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1572, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,58,44,05,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 118, திரு. க. மணிவர்மா.

[1999 ஏப்ரல் 5

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விதைகள் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 556, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்புக்கு ரூ.1000 என விலை நிர்ணயம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 904, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1265, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1409, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு உரம் மற்றும் பூச்சி மருந்துகள் மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1, திரு. சி. வேலாயுதன்.



1999 ஏப்ரல் 5]

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி புலியூர்குறிச்சி உதயகிரி கோட்டையில் மத்திய அரசின் வேளாண்மை ஆராய்ச்சி மையத்திற்கு இடம் வழங்கி, உடனே அமைக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 582, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மை விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2677, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சந்தியூர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை மூலம் மரவள்ளிக் கிழங்கு விதை கரணைகளை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கவும், மானியத்தில் வழங்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1679, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1356, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தரமற்ற விதைகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1155, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 155, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் அம்மாவட்டத்தில் வேளாண்மை பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3513, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 483, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"...பாதிக்கப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1646, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி ஒன்றியம், பூதவராயன்பேட்டையில் உலர்களம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 48, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல், மரவள்ளிக் கிழங்கு, வெங்காயம் போன்ற விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 665, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to start vegetable shops through the Agricultural Department by purchasing vegetables from the ryots and sell them in the open markets at minimum rates', I move—

"That the allocation of Rs.7,58,44,05,000/- under Demand No.20—Agriculture, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1173, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதியில் உள்ள குளாங்குறிச்சி, லா. கடலூர் இளையணார்குப்பம், பழயசிறுவாங்கூர், சீர்ப்பனந்தல், தேவியகரம், தகடி, எடையூர், தேஷியகரம், மாடம்பூண்டி, வேங்கூர், பழங்கூர் ஆகிய ஊராட்சிகளில் புதியதாக உலர்களங்கள் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1193, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி ஒன்றியம், தலையாரிதாங்கல் கிராமத்தில் புதிய நெல் சுத்திகரிப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,58,44,05,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

### (ஆ) கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,54,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11.05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1376, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இடுபொருட்களையும், கலப்பை, டிராக்டர் போன்றவற்றையும் மானிய விலையில் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 195, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் கரும்பு விளைச்சலைப் பெருக்கும் வகையில் விதை மற்றும் இடுபொருட்களை மானிய விலையில் கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 735, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி, கொல்லப்பட்டி கிராமங்களில் தரமான பருத்தி சாகுபடி செய்யப்படுவதால் விவசாயிகளை ஊக்குவிக்கும்வகையில் தரமான பருத்தி விதைகளையும் பூச்சி மருந்துகளையும், மானிய விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1573, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1393, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் தென்னை பயிரிடும் அனைத்து விவசாயிகளுக்கும் தென்னங்கன்றுகளை மானிய விலையில் அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,54,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 584, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை, ஊத்துக்குளி வட்டார விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை தாராளமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1688, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 473, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1613, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,54,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss policy", I move –

"That the allocation of Rs.11,54,61,000/-under Demand No.52-Capital Outlay on Agriculture, be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2648, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க வழங்கப்படும் மானியத் தொகையைக் கம்பெனிகளின் மூலம் வழங்கப்படுவதை மாற்றி விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,54,61,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்புகள் தங்கள் மூலம் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் தமிழில் உள்ள விளக்கக் குறிப்பை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாக ஏற்றுக்கொண்டு நடவடிக்கை குறிப்பிலே பதிவு செய்வதோடு, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு பற்றிய விவரங்கள் அடங்கிய அந்தக் கருத்துகளின் மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொன்ன பிறகு அரசின் சார்பிலே அதன்மீது நான் விளக்கத்தைத் தர விரும்புகிறேன் எனக் கூறி அமர்கிறேன்.

## 4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (இ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை முன்னிட்டு, உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்குவதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். சிற்றுண்டி இன்று முற்பகல் 11.30 மணியளவில் பேரவையை ஒட்டியுள்ள லாபியில் வழங்கப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கொடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 20 - வேளாண்மை

### கோரிக்கை எண் 52 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன் கந்தசாமி அவர்களை விவாதத்தைத் தொடங்குமாறு அழைக்கிறேன். தொடங்கவிருப்பவர் 10 நிமிடங்கள், மற்றவர்கள் எல்லாம் 7 நிமிடங்களில் முடிக்க வேண்டும்.

@ 153 முதல் 290 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளன.



**திரு. ப. மோகன் கந்தசாமி:** மீனாட்சி கடாட்சத்தோடு நடுநிலைமையாக நின்று தீர்ப்பளிக்கக்கூடிய தங்கள் முன்னால் என்னைப் பேசப் பணித்த என்னுடைய தகப்பனாகிய முருகனுக்கும், என்னுடைய அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய மக்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய இந்த விவசாயத் துறையிலே இன்றைக்குப் பேசுவதிலே நான் பெருமைப்படுகிறேன். இந்தியாவினுடைய கிராமங்களிலேதான் இந்திய நாட்டினுடைய பொருளாதாரமே இருக்கிறது என்று காந்தி மகான் சொன்னார்கள். ஆகவே, இந்த கிராமம் வளர்ந்தால்தான் நாடு வளரும், அந்த அடிப்படையிலே கிராமத்திலே இருக்கிற விவசாயிகள் முன்னேற வேண்டும் என்று சொன்னால், அந்த விவசாயிகளுக்குள்ள உபகரணங்கள், அவர்களுக்குள்ள ஆதாரங்கள் பெருக வேண்டும். அந்த அடிப்படையிலே விவசாயிகளுக்கு மிகவும் உயிர்மூச்சாக இருக்கக்கூடிய மின்சாரம் உடனடியாக வழங்கப்பெற வேண்டிய சூழ்நிலை இதுவரை இல்லை.

முற்பகல் 11-10

இலவச மின்சாரத்தை நாம் கொடுத்தோம், மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், விவசாயிகள் மின்சாரம் பெறுவதற்கு 10 ஆண்டுகள் ஆகின்றன. ஒரு சம்சாரத்தைப் பெற வேண்டும் என்று சொன்னால், ஒரு நாளிலே பெற்றுவிட முடியும். ஆனால், மின்சாரத்தைப் பெற வேண்டும் என்று சொன்னால், கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் காத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக விவசாயிகள் இலவசமாக நாம் கொடுத்த மின்சாரத்தை உபயோகப்படுத்தும் காலத்திலே, நிலத்தடி நீர் கீழேபோய், மேலும் அதிக மின்விசை இப்போது வேண்டியிருக்கிறது. ஆனால், அதற்காக அவர்கள் விண்ணப்பித்தால் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே additional load வேண்டுமென்று நினைக்கும்போது அதற்காக ஒரு தொகையைக்கூட அவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே மூப்பு அடிப்படையிலே யார், யார் முன்னுரிமை கேட்கிறார்களோ, அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாட்கள் காத்திருந்து மின்சாரம் பெற்று விவசாயம் செய்ய வேண்டுமென்று சொன்னால் மிகக் கஷ்டமாக

இருக்கிறது. மத்திய அரசிலே இன்றைக்கு M.P.-க்களுக்கு எல்லாம் 'quota' கொடுக்கிறார்கள். அதாவது முன்னுரிமையுடன் அவர்கள் 'gas connection' இன்னும் அதைப்போல 'Telephone connection' போன்றவற்றையெல்லாம் பெற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நம்முடைய அரசு தொகுதி மேம்பாட்டிற்காக ரூ.35 லட்சம் என்று இருந்ததை ரூ.50 லட்சமாக உயர்த்திக் கொடுத்ததற்கு நான் பெருமைப்படுகிறேன். அதைப்போல மின்சாரத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒவ்வொரு M.L.A.வும் பரிந்துரை செய்தால் 25 H.P. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்து ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வந்தால் ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுய நிதி மின்இணைப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் பரிந்துரை செய்யவார்களேயானால், ஒரு மாத காலத்திற்குள்ளாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அதுபோல் இன்றைக்கு அரசினுடைய சிரமங்கள் எல்லாம் எங்களுக்கும் தெரியும். விவசாயிகளுடைய கடன்கள் முழுவதையும் நீக்காவிட்டாலும்கூட, வட்டி, அபராத வட்டி மற்றும் அந்தத் தபால் செலவு முதற்கொண்டு போட்டு ஏராளமான பணம் அவர்களிடமிருந்து வரவேண்டுமென்று சொல்லி ஒரு கணக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை எல்லாம் உடனடியாக நீக்குவதற்கு ஏற்பாடு செய்தால், ஒரு காலவரையறை கொடுத்தால்கூட, நிச்சயமாக விவசாயிகள் அதைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஒரு கணிசமான தொகையும் அரசுக்கு வரும். எனவே இந்த வட்டி, அபராத வட்டி, கூட்டுவட்டி போன்றவற்றையெல்லாம் விவசாயிகளுக்கு நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000 வேண்டுமென்று எல்லோருமே பேசிவிட்டோம். இப்போது விவசாயிகள் மத்தியிலே ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. டன்னிற்கு ரூ.1,000 கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டன் ஒன்றுக்கு ரூ. 1,000 கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்கு எங்கள் பகுதியிலே தீ போல பரவிக்கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை பற்றி இப்போது நான் சொல்ல விரும்புகிறேன். பெற்ற பிள்ளை சோறு போடாவிட்டாலும், வளர்த்த பிள்ளை சோறுபோடும் என்று சொல்வார்கள். இன்றைக்கு தென்னை மரத்திற்குப் பிடித்திருக்கின்ற மிகக் கடுமையான நோய் அதாவது Eriophyide Mite என்கின்ற நோய், அதேபோல நத்தைப் பூச்சி, இலைப் புழுநோய் போன்றவற்றால் தாக்கப்பட்டு, கிட்டத்தட்ட 1.50 லட்சம் ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்யக் கூடிய அந்த நீண்டகாலப் பயிரான தென்னைக்கு மிகப் பெரிய கேடு விளைந்திருக்கிறது. இன்றைக்கு விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக வருமுன் காக்க வேண்டியது நம்முடைய கடமை. ஆனால் நம்முடைய விவசாயத் துறையிலே இருக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இன்றைக்கு அந்தப் பூச்சி வந்ததற்குப் பின்னாலும், அதைச் சரி செய்வதற்கு இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதுதான் வருத்தத்தைத் தருகிறது. சென்றமுறைகூட நான் இங்கே பேசினேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் நத்தைப்பூச்சி தாக்கியது. உடனடியாக வேளாண்மைத் துறை மற்றும் பல்கலைக் கழக அதிகாரிகள் சென்று அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஆராய்ச்சி செய்து உரிய மருந்துகளைப் பரிந்துரை செய்து அது கட்டுப்படுத்தப் பட்டது.

அதைப்போல கடந்த 1998-ல் பொள்ளாச்சி, கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில் Eriophyide Mite என்ற நோய் தாக்கியது. உடனடியாக அரசுக்குத் தகவல் கிடைத்ததும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினுடைய விஞ்ஞானிகளை அனுப்பி, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளை எல்லாம் அனுப்பி, அதைக் கட்டுப் படுத்துவதற்கு என்ன மருந்து பரிந்துரை செய்கிறீர்கள் என்ற முடிவைச் சொல்லுங்கள் என்று கேட்டு, அவர்களும் அதற்கான பரிந்துரை செய்தார்கள். நானும் அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று விவசாயிகளோடு கலந்து பேசி, வேர் மூலம் root feeding கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது; தெளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தாலும் அதை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. தொடர்ந்து வேளாண்மைத்துறை அலுவலர்கள்,

அதைப்போல பல்கலைக்கழக பேராசிரியர்கள் அதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதியிலே இந்த நத்தைப் பூச்சி சோலைகளைத் தாக்கி அவை அழியக் கூடிய நிலையில் இருப்பதைக் கவனித்து அதன் மீதும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

*முற்பகல் 11-15*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம்கூட ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும்கூட, நேற்றைக்குக்கூட அந்தப் பகுதிக்கு நான் சென்று வந்தேன். அங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் மருந்துக்குக்கூட கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்ற அந்தப் பூச்சிகளை ஒழிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வேகமாக தண்ணீரைப் பீச்சியடித்தால், அந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டு அந்தப் பூச்சி கீழே விழுந்துவிடுகிறது என்று ஒரு ஆராய்ச்சியில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது டிராக்டர் மூலமாக பவர் கருவிகளை வைத்து அந்தப் பூச்சிகளுள்ள தென்னை மரங்களுக்குத் தண்ணீரைப் பீச்சியடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம்கூட, ஒரு பரிட்சார்த்தமாக நம்முடைய அரசிலேயுள்ள Fire Service engine-ஐ வைத்து ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு தண்ணீரைப் பீச்சியடித்தால் அந்த நோய் கட்டுபபடுகிறதா என்று பார்த்தால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

அதேநேரத்தில் டிராக்டர்களிலே பொருத்தி மருந்து தெளிக்கும் கருவிகளுக்காக அந்த விவசாயிகளுக்கு subsidy கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாதிரிக்காக ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு Fire Service மூலம் அந்தத் தண்ணீரை பீச்சியடித்து அந்த நோய் போகிறதா என்று பார்த்தால் மிகவும் சரியாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அடுத்தபடியாக சொட்டுநீர்ப் பாசனம். சொட்டுநீர்ப் பாசனத்திற்கு ஏராளமான நன்மைகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் கம்பெனிகள் குறித்து சென்ற ஆண்டுகூட அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதை



Central Government னுடைய Act என்று சொல்லி, இருந்தாலும்கூட, (மணியடிக்கப்பெற்றது) ஐயா, முக்கியமான விஷயங்கள். அதுவும் என் தொகுதியில் இருக்கிற பிரச்சினை, சொட்டுநீர்ப் பாசனத்திற்கு, நீங்கள் கொடுக்கின்ற மானியத்தை அந்தக் கம்பெனிகள் மூலமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் சரியாகக் கொடுப்பதில்லை. அதிலே ஏராளமான ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த மானியத் தொகை கிடைக்கவில்லை. ஆகவே, நம்முடைய அதிகாரிகளை வைத்து, அந்த சொட்டுநீர்ப் பாசனத்திற்குள்ள அந்த மானியத்தைக் கொடுத்தால் சரியாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சென்ற ஆண்டிலேகூட, 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் இந்த சொட்டுநீர்ப் பாசனத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் 90.4 இலட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 22 இலட்சம் ரூபாய் மீதமாகப் போய்விட்டது. அதேபோன்று மீதம் ஆகக்கூடிய அந்தப் பணத்தை விவசாயிகளுக்குக் கொடுத்திருந்தால் இன்னும் பயனாக இருக்கும். இன்னும்கூடச் சொல்லப் போனால் மற்ற மாவட்டங்களில் உபயோகப்படுத்தாத பணத்தை எங்களுடைய கோவை, ஈரோடு போன்ற மாவட்டங்களுக்குக் கொடுத்தால் அதை நிச்சயமாக நல்ல முறையிலே கண்டிப்பாக உபயோகப்படுத்துவார்கள்.

அதுபோல, இந்த விவசாயிகள் மருந்து தெளிக்கக்கூடிய தெளிப்பானை—Power sprayer—நம்முடைய கோவை மாவட்டத்திலே தான் தயாரிக்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களிலே அந்த Power Sprayer-க்கு வரியில்லை. எங்களுடைய மாவட்டத்திலே வரி போடுகிற காரணத்தினால் மற்ற மாவட்டங்களிலே இருக்கின்ற தெளிப்பான்களை உபயோகப்படுத்துகிறார்கள். எங்களுடைய மாவட்ட தெளிப்பான்களை உபயோகப்படுத்துவதில்லை. விவசாயிகளுக்கு முக்கியமாக இப்போது எல்லா பயிர்களிலேயும் பூச்சி விழுந்து விடுகிறது. உங்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆகவே Power Sprayer-க்கு தயவு செய்து அந்த வரியை நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தி விளைச்சல் நமக்கு வரவர குறைந்து கொண்டிருக்கிறது. இப்போது ஏராளமான ஆலைகள் பருத்தியில்லாமல் வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கி உபயோகப்படுத்துவதன் காரணமாக விலை கூடுதலாக இருக்கிறது. ஆகவே, நமது மாநிலத்திலே பருத்தி

உற்பத்தி செய்வதற்கு ஒரு மிகக் கடுமையான ஆராய்ச்சி செய்து, பருத்தி விவசாயிகளுக்கு நீங்கள் உதவிகரமாக இருந்தால் நிச்சயமாக அதன் விளைச்சல் அதிகமாகி முன்போல நல்ல விளைச்சல் கொடுக்கிற பருத்தியை நமக்கு நாமே உபயோகப்படுத்த முடியும். ஆகவே, அதற்குள்ள வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலையோரங்களிலே விவசாயிகள் குழாய் போட்டுத்தான் தண்ணீரைக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. அதற்குக் கடுமையான வரி விதிக்கிறார்கள். ஆகவே, அந்த வரியை நீங்கள் நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு தேசிய வங்கியின் மூலமாக மாடு வாங்குவதற்கு கடன் கொடுக்கிறோம். இன்றைக்குக்கூட நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.. ஒரு மாட்டுக்கு 25,000 ரூபாய் என்று. ஆனால், அங்கே கூட்டுறவு வங்கியிலே கொடுக்கின்ற பணம் ஒரு மாட்டுக்கு 7,500 ரூபாய்தான். ஆட்டுக்கு 1,000 ரூபாய். அந்த விலைக்கு நாம் வாங்குவதற்கு முடியாது. ஆகவே, மாட்டுக்கு 12,000 ரூபாயும் ஆட்டுக்கு 2,500 ரூபாயும் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோக, கிராமப்புறத்திலே படித்துவிட்டு ஏராளமான இளைஞர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நகரங்களிலே இருக்கின்ற இளைஞர்களுக்கு P.M.R.Y கடன் போன்றவை எல்லாம் கிடைக்கின்றன. ஆனால், அந்தக் கடன் போன்றவற்றையெல்லாம் கிராமப்புறத்து இளைஞர்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு என்று தனியாக Computer வைக்க முடியாது. கிராமப்புறத்திலே Typewriter வாங்கி வைக்க முடியாது. ஆகவே, அந்தக் கடனை ஆடு, மாடு வாங்குவதற்கு கிராமப்புற இளைஞர்களுக்குக் கொடுத்தால் நிச்சயமாக அதனால் பயன் பெறுவார்கள். கிராமப்புற இளைஞர்கள் நகரத்தை நோக்கிப் பரிதாபகரமாகத் திரியக் கூடிய சூழ்நிலை இருக்காது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே நான் இரண்டொரு கோரிக்கைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 11-20

சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டேன். ஏராளமான காய்கறிகள் விளையக்கூடிய என்னுடைய தொகுதியில் குளிர்பதன godown வேண்டும் என்று நான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசிலனை செய்வதாகச் சொன்னார்கள். இப்போது மத்திய அமைச்சகத்திலேகூட அதற்காக நிதியொதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய தொகுதியிலே ஒரு காய்கறி பதப்படுத்தும் godown, குண்டடத்திலோ, பொங்கலூரிலோ ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** ஒரேயொரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகம் ஆகிவிட்டது; நீங்கள் உரையாற்றத் தொடங்கி 12 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டன.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** விவசாயிகளுக்கு ஏராளமான காய்கறிகளை நகரங்களுக்குக் கொண்டு வருவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, bus-களிலே இருக்கைகளை பெருமளவில் எடுத்துவிட்டு கொஞ்சம் இருக்கைகளை மட்டும் வைத்து காலையிலே தனியாக விவசாயிகளுக்கு என்று ஒரு பேருந்தையும் இயக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு ஒரு கால்நடை மருந்தகம் வேண்டும் என்று நான் அமைச்சரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். நிறைய விவசாயிகள் மாடுகள் வைத்திருப்பதன் காரணமாகக் கால்நடை மருந்தகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பொங்கலூர் தொகுதி main road-லே இருப்பதனால் அரசு கால்நடை மருத்துவமனை ஒன்று வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அங்கு அரசு கால்நடை

மருத்துவமனை ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

***திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் நான்காவது முறை முதல்வர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, நம் வேளாண்மைத் துறை அமைச்சரின் சீரிய முயற்சியினால் வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, துறைக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருப்பது அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளபடி, பல்வேறு பயிர் சாகுபடி செறிவையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம், அனைவரையும் மகிழ வைக்கின்ற மிகப் பெரிய திட்டமாகும். அதைப்போலவே, அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்கும் திட்டம் வரவேற்கத்தக்க ஒன்று.

நிலையான வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், தரமான வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்தல், பண்ணைக் குடும்பங்களில் வருமானத்தை அதிகரித்தல் போன்ற அரசின் நோக்கங்கள், வேளாண் பெருங்குடி மக்களுக்கு உற்சாகம் தரக்கூடிய செய்திகள் ஆகும். 1999-2000 கல்வியாண்டில் வேளாண்மை அறிவியல் பாடத்தினை உயர்நிலைப் பள்ளியிலும், மேல்நிலைப் பள்ளியிலும் பாடத் திட்டமாகக் கொண்டுவர, பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்ற செய்தி கிராமப்புற மாணவர்களுக்கு இனிப்பான செய்தியாகும்.

ஒருங்கிணைந்த ஆதிவாசி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, அருநூற்று மலை மற்றும் பச்சை மலை, நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை, வேலூர் மாவட்டம் ஏலகிரிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை போன்ற பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களின் சமூக, பொருளாதார நிலைமையை உயர்த்தும் நோக்குடன் செயல்படுத்தப்படும் திட்டத்தை சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் பழங்குடியினர் வாழும் என்னுடைய மேட்டூர் தொகுதியில் கொளத்தூர் ஒன்றியம், பாளைமலை ஒன்றியத்தில்



நடைமுறைப்படுத்திடக் கேட்டுக்கொள்கின்றேன். அதே திட்டத்தின்கீழ், அந்த மலைப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாளைமலைக்குச் சாலை வசதி செய்து தரும் பணியினை இந்த நிதியாண்டில் நிறைவேற்றித் தர மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடமும் இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அரசினர் விதைப் பண்ணை ஒன்று நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றது. தேவையான நல்ல நில வசதியும் நீர் வளமும் மிகுந்த மேட்டூர் அணைப் பகுதியில் வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

மேலும், மேட்டூரில் தோட்டக் கலைத் துறையின் சார்பில் அரசு பழப் பண்ணை ஒன்று ஏற்படுத்தித் தர ஆவன செய்திட வேண்டிக்கொள்கின்றேன்.

மேட்டூர் வட்டம், கொளத்தூரில் இயங்கி வருகின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஒரு நல்ல நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமாறு நான் இந்த நேரத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரை விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் நங்கவல்லி ஒன்றியத்திலே காய்கறிகள், பழங்கள் நிறைய விளைகின்றன. சேலம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற குளிர்பதனக் கிடங்கை என்னுடைய தொகுதியிலே நங்கவல்லி பகுதியில் கட்டித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதியில், நங்கவல்லி ஒன்றியம், வனவாசி மற்றும் ஜலகண்டபுரம் ஆகிய பகுதிகளில் தேங்காய் பெருமளவில் விளைவிக்கப்படுகின்றது. எனவே, அரசு சார்பில் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை நங்கவல்லியில் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். கடந்த காலங்களில் மேட்டூர் அணையிலிருந்து மேட்டூர் அணை நீர்மட்டம் 80 அடியாக இருக்கும்போது கிழக்கு மற்றும் மேற்குக் கரைக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், ஆகஸ்ட் மாதத்தில் தண்ணீர் மட்டம் 80 அடியாக இருந்தாலும்கூட, தண்ணீர் திறந்து விடப்படுவதில்லை. எனவே, காவிரி டெல்டா பகுதிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பதற்கு ஜூன் 12-ஆம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, மேட்டூர் கால்வாய்க்குத் திறக்கும் தேதியை அரசே நிர்ணயிக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11-25

மேட்டூர் அணை, கிழக்கு மற்றும் மேற்குக் கரைக் கால்வாய்களில் concrete lining அமைத்து கடைமடை விவசாயிகளுக்குச் சீரான நீர் கிடைக்க ஆவன செய்திட வேண்டுகின்றேன். அத்துடன், கிளை வாய்க்கால்களையும் புனரமைப்பு செய்து தர வேண்டுகின்றேன்.

கொளத்தூர் ஒன்றிய விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான சாம்பள்ளி ஊராட்சி உள்கோம்பை ஏரி கட்டும் திட்டம், சிங்கிரிப்பட்டி ஊராட்சி சாம்பார்பள்ளம் ஏரித் திட்டம், லக்கம்பட்டி ஊராட்சி தோடுமடுவு நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய இந்த 3 திட்டங்களையும் நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

வனவாசி, நங்கவல்லி, சாணாரப்பட்டி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான மேட்டூர் அனல் மின் நிலைய சாம்பல் நீர்த்தேக்கம் அணையிலிருந்து நீரேற்றும் நிலையம் அமைத்து, தண்ணீர் எடுத்து அந்தப் பகுதி வேளாண் நிலங்களில் பயன்படுத்தும் வகையில் அனுமதி வழங்கிட அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் காவிரி ஆறு மாசுபடாமல் பாதுகாக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதியில் மிகமிக முக்கியமான பிரச்சினை, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாகும். 2500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்த அந்த ஆலை 1985 ஆம் ஆண்டு மூடப்பட்டு, 1989இல் நம் தலைவர் கலைஞர் அவர்கள் 3-வது முறையாகத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றபொழுது திறக்கப்பட்டது. ஆனால் ஆட்சி கலைக்கப்பட்டதும் 1991-ல் அந்த ஆலை மீண்டும் மூடப்பட்டு விட்டது. தற்பொழுது பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக உள்ளது. ஆலையின் அனைத்துப் பொறுப்புக்களும் உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள Official Liquidator வசம் உள்ளது. இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து அந்த ஆலையைத் திறக்கவோ அல்லது அந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு உரிய நஷ்டயீட்டுத் தொகையை வழங்கிடவோ வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், அந்த ஆலைத் தொழிலாளர்கள் ஆலைக்குச் சொந்தமான குடியிருப்புகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய நிலையைக் கருதி அந்த ஆலைத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு ஒரு விளக்கு மின்சாரம் இலவசமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொழிலாளர்கள் குடியிருப்பின் பொதுக் கழிப்பிடங்கள் மிகவும் பரிதாப நிலையில் உள்ளன. எனவே, அந்தக் கழிப்பிடங்களைப் பழுதுபார்க்கச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து தரக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலை மேட்டூர் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மட்டும் ரூபாய் ஒன்றேகால் கோடிக்கு மேல் உள்ளது. எனவே, நகராட்சி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் அரசு மானியமாக மேட்டூர் நகராட்சிக்கு ஒன்றேகால் கோடி ரூபாய் வழங்கி உதவுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேட்டூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு ரூபாய் மூன்றேகால் கோடி ஒதுக்கியிருப்பதாக நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் எனக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அந்தத் திட்டத்தை உடனடியாகத் தொடங்கி வருகின்ற 2000 ஆண்டிலே அமலுக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேட்டூரில் ஒரு அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியும், வீரக்கல்புதூர் பேரூராட்சி புதுச்சாம்பள்ளியில் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியும் இந்தக் கல்வியாண்டில் தொடங்கிட மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய ஒன்றியம் ஆகும். மேலும், கர்நாடக மாநில எல்லையை ஒட்டியுள்ள அந்த ஒன்றியத்தில் SIDCO சார்பில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது கொளத்தூரில் இயங்கிவரும் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தி 110/11 கே.வி. துணை மின் நிலையமாக அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்தூர் நீதிபுரம் மற்றும் கொளத்தூர் கண்ணாமூச்சி சாலையை இந்த நிதியாண்டில் புனரமைப்புச் செய்து தர வேண்டுகின்றேன்.

கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம் ஊராட்சியில் ஒரு காவல் நிலையமும், ஒரு கால்நடை மருத்துவமனையும் இந்த நிதியாண்டில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்தூர் ஒன்றியம், நவப்பட்டி மற்றும் கோலநாயக்கன்பட்டி ஊராட்சிப் பகுதிகளிலும், செக்கானூரிலும் மின் வாரியத்தால் குறுக்கணை கட்டப்பட்டு மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதில் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு மின் வாரியத்தால் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் சிலருக்கு நேர்காணல் முடிந்தும் வேலைவாய்ப்பு வழங்கப்படாமல் உள்ளது. எனவே, அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழக அரசும், மத்திய அரசும் அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வை வழங்குகின்றபோது அதை நாம் மனதார வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்; ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், விலைவாசி உயர்வுக்கேற்ப அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்துகின்ற அதே நேரத்திலே, இந்த நாட்டிலே உழைத்து ஓடாய் உருக்குலைந்து போய்க்கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளினுடைய நலன் கருதி அதே விகிதாச்சாரத்திற்கேற்ப அரசு, நலத் திட்டங்களை வகுத்து அளிக்கிறதா என்று சிந்திக்கின்றபொழுது சற்றுக் கேள்விக்குறியாகவும் இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-30*

"வரப்புயர நீர் உயரும்;
நீர் உயர நெல் உயரும்;
நெல் உயர குடி உயரும்,

குடி உயர கோன் உயர்வான்" என்று சொல்லுவார்களே,



அதைப்போல இங்கே இந்த ஆட்சி சிறப்பான ஆட்சியாக இருக்கவேண்டும் என்று சொன்னால் விவசாயிகளின் நலனிலே இன்னும் அக்கறை கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியை இன்னும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரை தாம் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு சரியான விலை இல்லை, உற்பத்தி செய்யக்கூடிய கரும்புக்கு சரியான விலை இல்லை என்று பெரிதும் குறைபட்டுக்கொள்கிறார்கள். நெல்லின் விலை குறைவாக இருக்கிறது. அதேநேரத்தில் அரிசியினுடைய விலை மிகக்கூடுதலாக இருக்கிறது. அதேபோல கரும்பு விலை மிகக் குறைவாக இருக்கிறது. சர்க்கரை விலை கூடுதலாக இருக்கிறது. இதைத்தான் நாங்கள்கூட இந்தச் சட்டமன்றத்திலே, பலமுறை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அதற்கு அரசு ஒரு குழுவை நியமித்து அதிலே விவசாயிகள், அதிகாரிகள், நுகர்வோர் இவர்களை உள்ளடக்கி அதன்மூலமாக ஓராண்டிலே நெல்லின் விலை எவ்வளவு, அரிசியின் விலை எவ்வளவு என்று நிர்ணயித்தால், விலைவாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய அதே நேரத்திலே விவசாயிகளுக்கும் சரியான விலை கிடைக்கும், நுகர்வோர்களுக்கும் நியாயமான விலையில் பொருட்கள் கிடைக்கும் என்ற வகையில் அரசாங்கம் இதிலே ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களை எல்லாம் ....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாநில அரசாங்கத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் நெல்லுக்கு என்ன விலை தரவேண்டும்; — அவர்கள் பயிர் செய்யக்கூடிய ஒரு ஹெக்டேரில் வரக்கூடிய விளைச்சல், அதற்கு ஏற்படக்கூடிய செலவு இவற்றை எல்லாம் கணக்கிட்டு ஒரு குவிண்டால் நெல்லுக்கு எவ்வளவு விலை கொடுத்தால்தான் விவசாயிக்குக் கட்டுப்படியாகும் என்றும், அதேபோல கரும்புக்கு இவ்வளவு என்றும் நாம் மத்திய அரசாங்கத்திற்குத் தான் பரிந்துரை செய்யமுடியும். மாநில அரசாங்கத்திற்கு விலை நிர்ணயிக்க அதிகாரம் இல்லை. ஆனால், நாம் பரிந்துரை செய்கிற அந்த விலையையேகூட மத்திய அரசாங்கம் தருவதில்லை.

**திரு. ஜி. கே. மணி:** மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட இன்னும் கூடுதலாகக் கொடுக்கிறீர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இருந்தாலும்கூட, விவசாயிகள் தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, இன்னும் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்ற காரணத்தால்தான் இந்தக் கோரிக்கையை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு தொழிற்சாலை தொடங்குகிறபோது. அதற்கு மின்சாரம் வழங்குகிற நேரத்தில் அல்லது பல்வேறு நிலைகளில் நாம் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குகிறோம். ஆனால் விவசாயிகள் கிணறு வெட்டி, அந்த விவசாயக் கிணறுக்கு மின் இணைப்புப் பெற விண்ணப்பிக்கிற நேரத்தில் பத்தாண்டுக் காலம், பன்னிரண்டு ஆண்டுக் காலம் காத்திருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய நம்முடைய அரசு விவசாய pump set-களுக்கு உடனடியாக முன்னுரிமை கொடுத்து மின் இணைப்பு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, என்னுடைய தொகுதியில் பெண்ணாகரம் வட்டம், தர்மபுரி வட்டத்திற்குட்பட்ட விவசாயிகள் எல்லாம் ஒரு வருட காலமாக மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், அங்கே 110 கிலோவாட் மின் நிலையம் அமைத்து எல்லாப் பணிகளும் முடிவடைகிற நேரத்திலே, அந்த மின் பாதை செல்கிற ஒரே இடத்தில் மட்டும், ஒரு பேருந்து உரிமையாளர், மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினராக இருக்கிற ஒருவர், வழக்கு மன்றத்திலே தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, அங்கே மின்சாரம் செல்ல தடை ஏற்பட்டு, அதனால் விவசாயிகள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். அதனால் மின்சார அழுத்தக் குறைவு காரணமாக அடிக்கடி 'coil' போய்விடுகிறது. மிகுந்த இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, அரசு அதிலே தலையிட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், அதிகாரிகள்கூட இதற்கு உடந்தையாக-நீதி மன்றத்திலே 'Public Prosecutor'-கூட அதற்கு உடந்தையாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை உடனடியாகக் கவனித்து தடையாணையை விலக்கிக்கொள்ள முன்வர வேண்டும். அவர் ஒரு பேருந்து உரிமையாளர். இப்படி அரசுக்கு விரோதமாக, பொதுமக்களுக்கு விரோதமாகச் செயல்படக்கூடிய நிலையில் இருப்பதால், அவருடைய அந்தப் பேருந்தினுடைய permit-ஐகூட இரத்து செய்யலாம் என்று



இந்தநேரத்திலே கூறிக்கொள்கிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாளை கூட விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள இருக்கிறார்கள். அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து மத்தளபள்ளம் அணைக்கட்டுத் திட்டம் என்ற திட்டத்தைத் தீட்டி இன்னும் அது நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட வாக்குறுதி அளித்தார்கள். அந்த அணைக்கட்டுத் திட்டத்தை நடப்பு ஆண்டில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பாப்பாரப்பட்டி என்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி இருக்கிறது. அதைச் சுற்றி 16 ஏரிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு அதிகமான மழை பெய்த நேரத்தில்கூட அந்த ஏரிகள் எல்லாம் நிரம்பவில்லை. அதன் வரத்து வாய்க்கால்கள், பஞ்சப்பள்ளி அணை வாய்க்காலோடு சேர்ந்துவிட்ட காரணத்தால் அது மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. ஆகவே பஞ்சப்பள்ளி அணை வாய்க்காலை பாப்பாரப்பட்டியைச் சுற்றிலும் இருக்கக்கூடிய ஒரு வாய்க்காலோடு இணைத்தால் 16 ஏரிகளும் பயனடையும். அந்த வாய்க்காலை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர், பெண்ணாகரம், பாலக்கோடு ஆகிய பகுதிகள் பட்டு உற்பத்தியில் பிரசித்தி பெற்றிருந்தன. ஆனால், இன்றைய நிலையிலே பட்டு விவசாயிகள் எல்லாம் பட்டுப்போன நிலையில் இருக்கிறார்கள். இதற்கு அரசு காரணம் என்று குறையாகச் சொல்லவில்லை. அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகளுடைய போக்கு, விவசாயிகளுக்கு மிகவும் விரோதப் போக்காக இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு அந்த அதிகாரிகளுடைய போக்கை மாற்றி, விவசாயிகளுக்கு மீண்டும் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலே இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

இந்த ஆண்டு மழை பெய்தது, நீர்வரத்து அதிகமாக இருந்தது, ஓரளவுக்கு விளைச்சல் எல்லாம் நல்ல நிலையினை எட்டி இருக்கின்றது.

இருந்தாலும்கூட வறட்சியான காலங்களிலே, மழை இல்லாத காலங்களிலே நம்முடைய தமிழகம் பஞ்சமான நிலைக்குக்கூட ஆளாகக்கூடும். அதையெல்லாம் கருத்திற்கொண்டு—கங்கை-காவிரி இணைப்பு என்பது மிக அத்தியாவசியமானது—மத்திய அரசும் மாநில அரசும் நிதி ஆதாரத்தை அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, இங்கே தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன, விவசாயிகள் இருக்கிறார்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் இருக்கிறார்கள், ஒரு மாதத்திற்கு வீட்டிற்கு ஒருவர் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னாலும்கூட விவசாயக் குடும்பத்திலேயிருந்து வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மாநில வாரியாக அல்லது மாவட்ட வாரியாக அந்தக் கால்வாய்களை வெட்டுவதற்கு விவசாயிகள் வீட்டிற்கு ஒருவர் வரவேண்டும், மாணவர்கள் வரவேண்டும் என்று சொன்னாலும்கூட வருவார்கள். தொண்டு நிறுவனங்கள் இப்படிப்பட்ட நல்ல காரியத்திற்கு...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட அந்தக் கருத்தை இந்த அவையிலே ஒருமுறை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எதிர்காலத்தில் கங்கை-காவிரி இணைப்பு போன்ற பெரிய திட்டங்களை நீண்டகாலத் திட்டமாக நிறைவேற்றுவதன் மூலமாக இந்தியாவில் உணவு உற்பத்தியிலும், தொழில் வளத்திலும் நாம் தன்னிறைவு அடைய முடியும், முன்னேற முடியும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அதை நிறைவேற்றுவது மத்திய அரசாங்கத்தினுடைய கடமை. அதற்குப் பின்னாலே சமீபத்திலேகூட மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு சோம்பால் இங்கு வந்தபோது அவர்களிடம் அந்தக் கருத்தைக்கூட முதலமைச்சரின் சார்பாக, எங்கள் முதலமைச்சர் இப்படிப்பட்ட ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார், மத்திய அரசாங்கம் பரிசீலிக்கலாம் என்று சொன்னபோது, அது சாத்தியமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு 'சாத்தியம் இருக்காது' என்ற பதிலைத்தான் எனக்கு தந்தார்கள். வேண்டுமானால், மத்தியிலே, இப்போது இருக்கக்கூடிய ஆட்சி கூட்டணி ஆட்சி, பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவோடு நடைபெறுகிறது, அவர்கள் அந்த முயற்சி எடுத்து வெற்றி பெறுவார்களேயானால் தமிழக அரசின் சார்பிலே அதற்குப் பாராட்டுத் தெரிவிக்க முதலமைச்சர் தயங்கமாட்டார்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய, அந்த ஆட்சியினுடைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேகூட எங்களுடைய கட்சியின் நிறுவனர் மரியாதைக்குரிய டாக்டர் ஐயா இராமதாஸ் அவர்கள் இதை வலியுறுத்திச் சொல்லி இருக்கின்றார்கள். மத்திய அரசுக்கு நாங்களும் வலியுறுத்துகிறோம், மாநில அரசு தீர்மான வடிவிலே மத்திய அரசிடம் இதனைக் கோர வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் தாருங்கள். அதேபோல Diploma in Agriculture பெற்றவர்கள் எல்லாம் நீண்டகாலமாக எங்களுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். பணி நியமனத்திலே இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர், பாலக்கோடு, பெண்ணாகரம் போன்ற பகுதிகளிலே காய்கறி மற்றும் பூக்கள் உற்பத்தி அதிகமாக இருக்கின்றன. அங்கே சென்ட் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால் அது வேலை வாய்ப்பளிக்கக்கூடியதாக இருக்கும் என்று சொல்லி, அதையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூரை அடுத்துள்ள கொளத்தூர் பகுதியிலே உள்ள தோணிமேடு என்பது மிகப் பெரிய அணைத் திட்டம். நம்முடைய மேட்டூர் சட்டப் பேரவை உறுப்பினர்கூட அதை வலியுறுத்தினார். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகம் முழுவதும் பரவலாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு மிகக் குறைவான ஊதியம் தரப்படுகிறது. ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் போன்றவற்றை வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொண்டு, இப்படி நல்லதைச் செய்யக்கூடிய அரசுக்கு நாங்கள் ஆதரவாக பாராட்டு சொல்கிறோம், அதேநேரத்திலே இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டுகிறோம் என்பதைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு உணவு அளிக்கின்ற மானியமாகத் திகழ்கின்ற

வேளாண்மைத் துறையினுடைய மானியத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110 விதியின்கீழ்—திருவாரூரிலே நடந்த விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாநாட்டிலே கலந்துகொண்டு அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்விலே தமிழ்நாட்டிலே இருக்கிற ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும் என்பதற்காக உயர்மட்டக் குழு, கோலப்பன், I.A.S., அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டு, அதை பலதடவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேரடியான கவனத்திற்கு எடுத்துச் சென்று, குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவையிலே பரிசீலிக்கப்பட்டு ஒரு நல்ல செய்தியை, தமிழ்நாட்டிலே இருக்கிற 20 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல உத்தரவாதத்தை, இன்றையதினத்திலே அறிவித்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நீண்ட நாட்களாக விவசாயத் தொழிலாளர்கள் எந்த ஒரு அமைப்பின்கீழும் வரமுடியாத அளவுக்கு இருந்தார்கள். அவர்களுக்கு ஊதிய முரண்பாடு மாவட்டத்திற்கு மாவட்டம், இடத்திற்கு இடம் மாறுபட்டு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்ற நிலை இருந்தது. அரசு விதைப் பண்ணைகளில் பணியாற்றக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள்கூட தங்கள் வாழ்க்கையில் உயரக்கூடிய வகையில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், அந்த உயர்மட்டக் குழு, இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்து, தமிழ்நாடு முழுவதும் சென்று அதனுடைய அமைப்புகளை அறிவித்து இருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கின்ற 20 இலட்சம் தொழிலாளர்களை ஏதாவது ஒரு துறையிலே இணைத்து அவர்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் வராமல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது அவர்களுக்குரிய பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பது நல்லது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

அதேமாதிரி, நீண்டநாள் பிரச்சினை, 1924-ல் ஆரம்பித்த காவிரி நதிநீர் பிரச்சினை. 1974-லிருந்து பேசிப் பேசி முடிக்க முடியாமல் தீர்வு



காண முடியாமல், தொடர்ந்து வழக்கு, வழக்கு என்று சொல்லி, கர்நாடக அரசோடும், மத்திய அரசோடும் மோதிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு சுமுகமான தீர்வு கண்டு, தஞ்சை மாவட்ட காவிரிப் பாசனத்தை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள், நிம்மதியோடு விவசாயத்தைத் தொடங்கலாம் என்று கூறுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் விளைவாக கடந்த இரண்டாண்டுகளாக, அநேகமாக இந்த ஆண்டுகூட ஜுன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் - நிம்மதியாக விவசாயத்தைச் செய்யலாம் என்ற நிலையை உருவாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நல்ல முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேபோன்று, 1937 ஆம் ஆண்டு எங்கள் பகுதியிலே இருக்கின்ற கால்வாய்கள் தூர் எடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர், ஆங்காங்கு சிறு வேலைகள் மட்டும் நடைபெற்று, புதர் காடுகள் மண்டியிருந்த அந்தக் கால்வாய்களை எல்லாம் சீரமைக்க கடந்த மூன்று ஆண்டுகளாக நிதி ஒதுக்கி அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. அதன்காரணமாக, வெள்ளம், இயற்கைச் சீற்றம் போன்றவற்றால் பாதிப்பு வருகின்றபோது, விவசாயிகள் நிம்மதியாக விவசாயம் செய்ய முடியும் என்ற நிலைமை இப்போது வந்திருக்கிறது. அதற்குக் காரணம், விவசாயிகளுடைய நலனை உணர்ந்து, அந்தப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஒரு Master Plan அளவிற்கு அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய வடிகால்களை, இயற்கைச் சீற்றம் வரக்கூடிய அந்தப் பகுதியிலே சீரமைத்துக் கொடுப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத்தில் மட்டும் தீவிர சாகுபடி செய்ய வேண்டுமென்றால், இயற்கைச் சீற்றம், சுற்றுப்புறச் சூழல் தன்மைகளின் பாதிப்பு இல்லாமல் இருந்தால்தான், விவசாயிகள் பாதிப்பு இல்லாமல் உற்பத்திப் பெருக்கத்திலே, அரசு நிர்ணயிக்கக்கூடிய அரிசி உற்பத்தியிலே ஈடுபடமுடியும், விவசாயிகள் நிம்மதியாகச் செயல்பட முடியும், உற்பத்தி செய்ய முடியும். ஆக அந்த இயற்கை பாதிப்பு இல்லாமல் செய்கிற அளவுக்கு பாதுகாப்பதிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. உண்மையிலே இது நல்ல நடவடிக்கை. அதைத்

தொடர்ந்து இந்த அரசு செய்யுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று விவசாயிகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்களுடைய பிரச்சினைகளை எப்படிச் சொல்வது? ஒன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது; மற்றொன்று அவர்களின் இயக்கத்தின்மூலமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. பத்திரிகைகள் மூலமாகவும் சொல்ல வேண்டி இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நம்முடைய மாநில அரசின் சார்பாக ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் விலை நிர்ணயம் என்பதைப் பொறுத்தவரையில் இப்போது கட்டுப்படியாகக்கூடிய நிலையில் விலைகள் இருக்கின்றனவா என்று எண்ணிப்பார்க்கும்போது - நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். அநேகமாக ஒரு ஹெக்டேருக்கு 7 மெட்ரிக் டன் அதாவது 7000 கிலோ உற்பத்தி செயய வேண்டுமென்ற அளவைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தாது. சில குறிப்பிட்ட ஏக்கரில் சாகுபடி செய்து, அரசாங்கம் கொடுக்கின்ற பரிசுப் பொருட்களைப் பெறுகிற நோக்கத்தோடு செய்யக்கூடியவர்கள் மட்டும்தான் இந்த உற்பத்தியைச் செய்ய முடியுமே தவிர, ஒரு சமவெளிப் பகுதியிலே அதாவது தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டம் மற்றும் திருவாரூர் மாவட்டம் ஆகிய பகுதிகளில் சீரான உணவு உற்பத்தியில் ஈடுபடமுடியுமா என்று சொன்னால் நிச்சயமாக முடியாது. இந்த ஆண்டை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஒரு ஏக்கருக்கு 10 குவிண்டாலிலிருந்து 11 குவிண்டாலுக்குமேல் கொள்முதல் ஆனதே கிடையாது, நெல் உற்பத்தியில் ஆனால் நீங்கள் 6000 குவிண்டால் நெல் உற்பத்தி செய்யக்கூடிய அளவைச் சொல்கிறீர்கள். அப்படியென்று சொன்னால், அதனுடைய நிலத் தன்மைகள், அந்த நிலத்தினுடைய அமைப்பு, அந்த நிலத்தற்குப் போடக்கூடிய உரங்கள், இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், சாதாரண அமைப்பாக இருக்க முடியாது.



*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண்மையில் உணவு தானிய உற்பத்தி 5 டன் என்ற சாதனையை நாம் படைத்திருக்கிறோம். இந்த 5 டன் என்பது, மாநில அளவில் விளையக்கூடிய எல்லாவிதமான கணக்குகளையும் ஒப்பிட்டு அறிந்தது. மாநில அளவில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு என்றுதான் கணக்குப் பார்க்க முடியும். அதைப்போல, இப்போது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு 7 டன் என்று நிர்ணயம் செய்து தொழில்நுட்ப உதவிகள், நல்ல விதைகள் வழங்குவதன் மூலம் நம்முடைய குறிக்கோளை அடைய முடியும் என்று குறியீடு நாங்கள் வைத்திருக்கிறோம். இப்போதே தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் 7 டன்னுக்கு மேல் ஒரு ஹெக்டேரில் விளைகிறது. அதைப்போல, கோவை மாவட்டத்திலே, ஈரோடு மாவட்டத்திலே விளைகிறது. குறியீட்டுக்கு மேல் இருக்கிறது. ஆகவே, மாநில அளவிலேதான் சராசரியாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே இப்போது 5 டன்னாக இருக்கின்ற உணவு தானிய உற்பத்தியை 7 டன்னாக நாம் உயர்த்த வேண்டுமென்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அங்கே குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** விளக்கத்திற்கு மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. ஆனால், என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், அதனுடைய மண் தன்மை வேறு, அங்கேயிருக்கக்கூடிய மண்ணினுடைய வளம் என்பது வேறு. நீண்டகாலமாக உணவு தானிய உற்பத்தி செய்ததால் அந்த மண்ணினுடைய தன்மை இப்போது கெட்டுப்போய் இருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு குறைந்தபட்சம் 9 ஆயிரத்திலிருந்து 10,500 ரூபாய் வரை இப்போது செலவாகிறது. இது அரசாங்கத்தினுடைய கணக்கு மட்டுமல்ல, விவசாயிகள் செலவு செய்கின்ற கணக்குள் ஆனால், உற்பத்தியிலே வரக்கூடிய நெல் என்பது, 6 மாத காலங்கள் அவர்கள் உற்பத்தியிலே ஈடுபட்டு, விற்பனை செய்கிறபோது, அநேகமாக 12 ஆயிரம் ரூபாயைத் தாண்டுவதில்லை. இது என்னுடைய அனுபவம். நானே விவசாயத்தில ஈடுபடுகின்ற காரணத்தால் சொல்கிறேன். ஆக, 6 மாத காலம் ஒரு குடும்பமே உணவு தானிய உற்பத்தியிலே ஈடுபடுகிறபோது, ஒரு வருடத்திற்கு 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிடைப்பதிலலை. அதனால்,

வாங்குகிற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை அங்கே ஏற்படுகிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடத் தொடர்ந்து சொல்கிறார்கள். NABARD வங்கியில், விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். NABARD வங்கியே இந்த வேளாண்மைத் துறைக்கு மட்டும்தான் இருக்கிறது. வேறு எதற்கும் இல்லை. வேளாண் உற்பத்திக்காக, வேளாண் உணவு தானிய உற்பத்திக்காக, வேளாண்மை மேம்பாட்டிற்காகத்தான் இந்த உலக வங்கித் திட்டத்தையே மத்திய அரசு உருவாக்கியது.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், கிராமத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காக, சாலை மேம்பாட்டுக்கு ஒரு துறைகூட தமிழ்நாட்டில் இருந்தது. இப்போது அந்தத் துறையையே எடுத்துவிட்டார்கள். அதன்மூலம்தான் கிராமப்புறத்திற்கு பிரதானமாக இணைப்புச் சாலைகளையும், பாலங்களையும் கொடுக்கக்கூடியது. நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவிற்கு இணைப்புத் திட்டங்களில், பாலங்களும் சாலைகளும் போடப்பட்டிருக்கின்றன. இப்போது அந்தத் துறையைக்கூட மாற்றிவிட்டார்கள். அதையெல்லாம் முயற்சி செய்து வாங்க வேண்டும். இப்போதுகூட, நாடாளுமன்றத்திலே ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. "இப்படியெல்லாம் விவசாயிகள் பெற்றிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்ய முடியாது, உலக வங்கி ஒத்துக்கொள்ளாது, NABARD வங்கி ஒத்துக்கொள்ளாது" என்று ஏற்கெனவே இருந்த முன்னாள் முதலமைச்சர்கூட இந்தச் சபையிலே, சொன்னார்கள். நான் தங்கள் மூலமாக இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற கடன் உதவித் திட்டங்களைச் சீரமைக்குமாறும், ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற கடனினுடைய வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்யுமாறும் Reserve வங்கி மற்றும் NABARD வங்கிகள், மத்திய அரசின் உத்தரவு பெற்றுள்ளனவா என்று காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார். பயிர் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள நமது நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிறார்கள். இதைக் கருத்திலேகொண்டு மேற்கண்ட உத்தரவை மத்திய அரசு பிறப்பித்துள்ளது. மக்களவையில் இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலில் அளித்த விவரங்கள்:



"ஆகவே, அளிக்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்ய அவசியம் நேரிட்டதால் அதை நடைமுறைப்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கடன் உதவி போதுமானதாக இல்லை என்பதாலும், உண்மையை நாங்கள் உணர்ந்து, வாங்கிய கடன்களையும், வட்டியையும் விவசாயிகள் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்படுகிறார்கள்; இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற தேசிய நிவாரணம் சீரான அளவில் இல்லை" என்று சோம்பால் என்கிற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். "பல விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வதெல்லாம் உண்மை, அது கவலை அளிக்கின்ற விஷயம். ஆனால் அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அந்த மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாக இருந்தால், இதை மத்திய அரசு மறுப்பதற்கில்லை" என்று நம்முடைய பாரதப் பிரதமர்கூட அறிவித்து இருக்கிறார்கள். இப்படி விவசாயிகள் படும் வேதனைகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

பொறியியல் துறையைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் பல்வேறு கருவிகள் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அநேகமாக.....

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விவசாயக் கடன் குறித்து மாநில அரசு முயற்சி எடுத்தால் ஆட்சேபணை இல்லை என்று பிரதமர் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் சொன்னார்களா, இல்லையா என்பது எனக்குச் சரியாகத் தெரியாது; சொல்லி இருந்தால், இப்போது NABARD ஏன் இந்த மறுப்பைத் தெரிவிக்க வேண்டும்? நாங்கள் NABARD-ஐ திரும்பத் திரும்பக் கேட்டோம். கடந்த 2, 3 வாரமாக, 'அபராத வட்டியையாவது அரசின் சார்பிலே கொடுத்துவிடுகிறோம்' என்று சொன்னபோதுகூட, "நீங்கள் கொடுக்கக் கூடாது; அது ஒரு கெட்ட வழக்கமாக ஆகிவிடும். பிறகு எப்போதுமே விவசாயிகள் கடன் வாங்கும்போதே, நம் கடனை அரசு திருப்பிக்

கட்டிவிடும் என்ற எண்ணத்தில் கடனைத் திருப்பித் தரமாட்டார்கள்; பிறகு NABARD இயங்குவதற்கே வழி இல்லை" என்று அவர்கள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். இப்படி, பாராளுமன்றத்திலே ஒன்று சொல்லி, ஆனால் நடவடிக்கையிலே வரும்போது அதற்கு நேர் மாறாகச் சொன்னால், எப்படி மாநில அரசுகள் அதைச் சமாளிக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் விளக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். விவசாயிகள் படுகின்ற பல்வேறு சிரமங்களினால்தான் இப்போது ஆந்திரா, பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் விவசாயிகள் தற்கொலை பண்ணிக்கொள்கிறார்கள். அந்தச் சூழ்நிலை நம்முடைய மாநிலத்தில் ஏற்படவில்லை. கடன் தொல்லையினால், அப்படிப்பட்ட நிலைமையில் விவசாயிகள் யாரும் தற்கொலை செய்து கொள்ள முடியாத ஒரு அளவுக்கு நாம் அவர்களை இதுவரை பாதுகாத்து வந்து இருக்கிறோம். மேலும், அவர்கள் பெற்று இருக்கிற கடனுக்கான ஜப்தி நடவடிக்கையை, நீங்கள் ஒத்திவைத்து இருப்பதை அறிந்து உண்மையிலே, விவசாயிகள் மன நிம்மதி அடைந்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற நடவடிக்கையை அனைவரும் ஒத்துக்கொள்கிறார்கள். அநேகமாக விவசாயிகள் ஒரு செயலை இழந்த நிலையில், உற்பத்திப் பெருக்கத்தில், விவசாயத்தில் ஈடுபட முடியாத ஒரு சூழ்நிலை வந்து இருக்கிறது. விவசாயிகளுக்கு பல்வேறு பணிகள்—இலவசமாக மின்சாரம் கொடுப்பது, தூர் வாருவது, குவிண்டால் நெல்லுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை கொடுப்பது இத்தனையும் சரியாக இருக்கின்றது. ஆனால், அவர்கள் பெற்று இருக்கிற கடன், அதற்கு வட்டி இன்றைக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காகி இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால், இன்னும் நீங்கள் காலத்தைக் கடக்க கடக்க, அது பல மடங்காக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நீங்கள் மத்திய அரசிடத்திலே....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'கடன் வாங்கினால் திருப்பித் தர வேண்டியதில்லை' என்கின்ற சுலோகத்தோடு வங்கிகளைத் தொடங்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் [illegible]க்கொள்கின்றேன்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நம்முடைய வங்கிகள் செயலிழக்காமல், இயங்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் கூட்டுறவு வங்கிகள் இல்லாத காலத்தில் கந்து வட்டிக்காரரிடத்திலே விவசாயிகள் பட்டு இருக்கிற துயரமான நிகழ்ச்சிகள் போன்று வேறு ஒன்றும் இருந்திருக்க முடியாது. பண்ட பாத்திரங்கள் வரையிலும்கூடக் கொண்டு போய் கந்து வட்டிக்காரனிடத்திலே அடகு வைத்துவிட்டு, அவர்களுடைய மனைவி கழுத்திலே கட்டி இருக்கிற தாலி வரையிலும்கூட அடகு வைத்துவிட்டு விவசாயம் செய்தார்கள். ஆனால், இப்போது கூட்டுறவு வங்கிகள் வந்த காரணத்தினாலேதான், விவசாயிகள் கந்து வட்டிகாரர்களிடத்திலிருந்து தப்பித்து இருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். எந்தக் கூட்டுறவு அமைப்பும் நலிந்துவிடக் கூடாது; அதையும் பாதுகாக்க வேண்டும். அதேநேரத்தில் அரசாங்கம் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தமட்டில், விவசாயிகளுக்கு ஏதாவது ஈடு செய்ய வேண்டும் என்பதுதான் நான் கேட்டுக்கொள்வதெல்லாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் எடுத்துக் கொண்டீர்கள், திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவசம் என்று சொல்லி வரக்கூடிய ஒரு சூழ்நிலை வந்ததன் காரணமாகத்தான், வாங்கிய கடனைக்கூடத் திரும்பக் கட்ட வேண்டாமோ என்று சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டது. எனவே, சுருக்கமாக என்னைப் பொறுத்தவரையில், இலவசம் என்று சொல்லக்கூடியதே மக்களுடைய மன நிலையைப் பாதித்து விடுமோ என்று கருதுகின்றேன். எனவே, இலவசமாக அரசு எதைக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறதோ, அதைக் குறைந்த விலையில் அல்லது மானிய விலையில் கொடுக்கக்கூடிய நிலை வந்தால், மனித சமுதாயத்தின் மன நிலை பாதிக்காமல் இருக்கும் என்று கூற ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசினுடைய கொள்கையே மானியங்கள் கூடாது என்பதுதான். அப்படி, மானியங்கள் கூடாது என்ற ஒரு கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளலாம்; அது வேறு விஷயம். ஆனால் இதுவரையிலும்

கொடுத்ததை இனிமேல் இல்லை என்று சொல்கிறபோது, பெற்றது கிடைக்காது என்கின்ற அந்தக் கோபம் மக்களுக்கு நிச்சயமாக வரும். அந்தச் சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது. மானியம் பெறாமலேயே சில காரியங்கள் நடைபெற முடியும் என்ற சூழ்நிலையை பொருளாதார ரீதியாக நாம் உருவாக்குகின்ற வரையில் மானியங்களை, சில நேரங்களில் தவிர்க்க முடியாமல் இலவசமாக வழங்குகின்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

*முற்பகல் 11-55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே நேரம் அதிகமாகிவிட்டது. அவர் பேசி முடித்துவிடட்டும். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு ஏற்கெனவே கவன ஈர்ப்பின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த ஆண்டைப் பொறுத்தவரை, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற விதை நெல் தன்மையிழந்த காரணத்தால், விதை என்பது சரியில்லாமல், வெள்ளை அரிசி என்பது சிவப்பு அரிசியாக மாறி, நெல் சாகுபடி செய்கிறபோது, ஒரே மாதிரியாக இல்லாமல், ஒன்று உலர்ந்து, ஒன்று கட்டியாக மாறி, மொத்தமாக அந்த மாவட்டம் முழுவதும் பெரிய சேதாரத்திற்கு உள்ளாகியிருப்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்குப் பிறகு அதிகாரிகளெல்லாம் வந்து அதைப் பரிசோதித்தும் இருக்கிறார்கள். ஆகவே புதிய ரக நெல் விதைகளை நீங்கள் கண்டிப்பாக அறிமுகப்படுத்த வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. பி.ஆர். சுந்தரம். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** விவசாயிகள் பிரச்சினை ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். புதிய ரக நெல்லை நீங்கள் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும்.



மாவட்டங்களுக்கு உரத்தை மானிய விலையில் வழங்குகிறோம். என்னுடைய மாவட்டத்திற்கு உரம் வருவதே இல்லை. கடந்த இரண்டாண்டு காலமாக இந்த நேரத்தில்தான் உரங்கள் வருகின்றன. இந்த நேரம் சாகுபடி கிடையாது. அந்த உரத்தை அதிகாரிகள் திருச்சி மாவட்டத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். மானியத்தில் உரம் கிடைக்க வேண்டிய தஞ்சை மாவட்டத்திற்கு உரம் கிடைக்காமல் தடைபட்டு இருக்கிறது. இப்போதும் தடைபட்டிருக்கிறது. இதை உண்மையாக விசாரித்துதான் சொல்கிறேன். அதனால் ஏற்படுகிற முறைகேடுகளை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*(திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. சி. ஞானசேகரன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் எழுந்து நின்றால் யாரைக் கூப்பிடுவது. திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த வட்டியை, அபராத வட்டியை அரசே செலுத்திவிட்டாலும்கூட, NABARD அதற்கு ஒத்துழைக்கவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற பாண்டிச்சேரியிலேகூட, வாங்கிய அளவுக்கு வட்டியைக் கட்டிவிட்டால், கடனைத் தள்ளுபடி செய்வதற்கான திட்டத்தினை இப்போது அறிவித்திருக்கிறார்கள். NABARD அதற்கு எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை என்று அங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் கண்ணன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு முதல்வரிடம் தெரிவித்துக்கொள்வதெல்லாம், அசல் அளவுக்கு வட்டி வந்துவிட்டால் கடனைத் தள்ளுபடி செய்கிறமாதிரி, அதேபோல ஜெயலலிதா காலத்தில் Bonus என்று ஒன்றை அறிவித்த மாதிரி, ஒரு முறையை முதல்வர் கையாள முடியுமா; முதலமைச்சர் இதனை ஆராய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களைவிட, அதிக அக்கறையோடு, அந்தச் செய்தி வெளிவந்தவுடன் நான் பாண்டிச்சேரி முதல்வரோடு தொடர்பு கொண்டு, தொலைபேசி

மூலமாகக் கேட்டேன், எப்படி உங்களால் சாத்தியமாயிற்று என்று. ஆனால் நாம் இரத்து செய்தால் ரூ. 47 கோடியை இழக்கிறோம். அங்கே 45 இலட்சம்தான் அவர்களுக்கு இழப்பு. அதையும் ஞானசேகரன் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

NABARD அங்கேயும் மறுத்துக் கொண்டுதான் இருக்கிறது. மாண்புமிகு பாண்டிச்சேரி முதலமைச்சர் அந்தச் செய்தியையும் எனக்குச் சொல்லியிருக்கிறார். ஆந்திரா பாணியிலேதான் அவர்களாலும் செய்ய முடியும். நாமும் ஆந்திரா பாணியிலேதான், 6¼ சதவீதத்தை—முழுக் கடனையும் கட்டிவிட்டால் அரசின் சார்பாக 6¼ சதவீதம்—தருகிறோம். அதற்கு என்ன பொருள் என்றால் கழித்துக்கொள்வதில்லை; கொடுத்துவிட்டு அவர்கள் அதைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தர வேண்டிய வட்டியை நாம் கொடுத்துவிடுகிறோம் மறைமுகமாக. இது எப்படியென்றால், இந்தியாவிலே எந்த ஒரு மாநில அரசும் செய்யாத காரியத்தை பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தபோது, அன்றைக்கே, தமிழகத்திலே முதலமைச்சராக இருந்த நான்தான் அப்போது செய்தேன். 'நீங்கள் தருகின்ற விலை நெல்லுக்குக் கட்டுப்படியாகவில்லை; விவசாயிகள் குமுறுகிறார்கள்; ஆகவே அதிக விலை தர வேண்டும்' என்று சொன்னபோது அவர் சொன்னார். 'மற்ற மாநிலங்களிலும் இதை ஆரம்பித்து விடுவார்கள்; நான் இரகசியமாக ஒரு வழியைச் சொல்கிறேன்; அதைச் செய்' என்று எனக்குச் சொன்னார். அதுதான் Bonus என்ற பெயரில் அப்போது 15 ரூபாய் கொடுக்க ஆரம்பித்து, இன்றைக்கு 50 ரூபாய் வரையில் கொடுக்கிறோமே, அது. ஜெகஜீவன்ராம் அவர்கள் அன்றைக்கு எனக்கு சொல்லிக் கொடுத்த யுக்திதான் இன்றைக்கும் இருக்கிறது. எந்த மத்திய அரசும் அன்றைக்கு அதிகமாக விலையைத் தரவில்லை. அப்போது நாம் அதிக விலை தந்தோம், வேறு வழியிலே அவர்களுக்கு. விவசாயிகளுக்கு இலாபகரமாக இருப்பதற்காக ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்தது அன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

NABARD வங்கியிடமிருந்து வாங்கிய கடனை அவர்கள் திருப்பித் தர முடியாது, வட்டியைத் திருப்பித் தர முடியாது என்கிற ஒரு சூழ்நிலையினை நாமே அவர்களுக்கு வழக்கப்படுத்தக் கூடாது என்கின்ற



கொள்கையைக் கடைபிடிக்கின்ற காரணத்தினாலேதான், வட்டியைத் தள்ளுபடி செய்வதோ, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதோ, அரசாங்கமே அந்தத் தொகையைத் தந்தால்கூட, அதற்கு நாங்கள் இணங்க முடியாது என்று கூறுகிறார்கள். அதற்காக நாங்கள் இந்த வழியைப் பின்பற்றுகிறோம். ஆந்திர மாநிலம் பின்பற்றி இருக்கிற அதே முறையைத்தான் இப்போது பின்பற்றி, அதன் காரணமாகக்கூட 40 கோடி ரூபாய் செலவு அரசுக்கு ஏற்படவிருக்கிறது இந்த விவசாயிகளினுடைய பிரச்சினைக்காக என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை. இந்தியாவினுடைய மிக முக்கியமான உணவு உற்பத்தி சக்தியான விவசாயிகள், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என விவசாயப் பொருளாதாரத்தை ஆராய்ந்தவர்கள் சொல்கிறார்கள். தனிப்பட்ட விவசாயியினுடைய பொருளாதாரம் தாழ்ந்து போய், விவசாய உற்பத்தி பெருகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு முரண்பாடான நிலைமை இந்தியாவில் நிலவுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் எனக்கு நூற்றுக்கு நூறு சதவிகிதம் உடன்பாடு இருக்கிறது. மாநில அரசு இதில் பிரத்யேகமாகச் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. NABARD வங்கியினுடைய கொள்கை நிலை ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்று அவர்கள் சொன்னதை நான் நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு வருடமும் வங்கிகளில் Industrialists-க்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் right- off செய்யப்படுகிறது. அதாவது பெரு முதலாளிகளுக்குச் சலுகை வழங்கப்படுகிறது. அவர்கள் கட்டாத கடனை இரத்து செய்ய அனுமதிக்கப்பட்டு, நாட்டிலே இருக்கக்கூடிய உற்பத்தி சக்தியான விவசாயியினுடைய கடனைத் தள்ளுபடி செய்வதிலே ஒரு மாறுபட்ட கொள்கையை மேற்கொள்வதும் ஒரு சிக்கலை ஏற்படுத்துகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, விவசாயிகளுடைய உணர்வு நியாயமானது என்பதால் NABARD வங்கி தன்னுடைய இந்தக் கடன் கொள்கை நிலைகளில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை

வற்புறுத்துவதற்காக, நம்முடைய மாநில சட்டப்பேரவையில்கூட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப யோசிக்கலாம் அல்லவா? அதுகுறித்து மாநில அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற இந்த பட்ஜெட்டிலே விவசாயத்திற்காக எந்தவிதமான உருப்படியான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்று இந்த அரசை ஆதரித்துக் கொண்டிருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் விமர்சித்திருக்கிறது. அதேபோல, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் இங்கே விமர்சித்து இருக்கிறார்கள். அதை நான் விமர்சித்தால், எதிர்க்கட்சி என்ற முறையில் நீங்கள் நினைப்பீர்கள். ஆகவே இந்த அரசுக்கு இதிலே ஒன்றுமே அக்கறை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வது, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவருடைய முதல்வர் அவர்களாலே போடப்பட்ட ஒப்பந்தத்தினால்தான் இந்த விவசாயிகள் இந்தக் கதிக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்ஜெட் விமர்சனத்தில் உங்களுடைய தலைவர் பழனிசாமி அவர்கள் பேசியதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் குறுகிய காலம். எனவே என்னைப் பேசவிடுங்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகின்ற விலையை அரசு கொடுப்பதற்கு முதலில் ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதால், திரு. சுப்பராயன் அவர்கள் பதில் சொல்லியாகவேண்டும்.



**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை பற்றி சுந்தரம் அவர்கள் இங்கே சொல்கிறார்கள். விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அதிகாரம் உள்ள மத்திய அரசிலே அமைச்சரவையில் இருக்கின்ற கட்சி அ.தி.மு.க. எனவே, இங்கே கோரிக்கை வைக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், தாங்கள் ஆளுகின்ற மத்திய அரசில், விவசாய விளைபொருட்களுக்கு உண்டான விலை நிர்ணய குழுவில் அதிகாரம் செலுத்துகின்ற இடத்தில் இருப்பதால், மத்திய அரசிடம் அத்தகைய நிலையை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா? அவருடைய தலைவி ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை எடுக்க நிர்பந்திப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். (சிரிப்பு) விவசாய விளைபொருளைப் பொறுத்தவரையில், விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசுதான். ஆகவே, மாநில அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். உதாரணமாக கரும்புக்கு நீங்கள் பரிந்துரை செய்திருக்கிறீர்கள். அதைப்போல, சேலம் மாவட்டத்தில் அதிகமாக விளைகின்ற மரவள்ளிக் கிழங்குக்கும் குறிப்பிட்ட விலையைத் தரவேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும். அதற்குப் பிறகு என்னுடைய நிலைமை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை மரவள்ளிக் கிழங்குக்கு விலை நிர்ணயம் கிடையாது. இப்பொழுது விலை வீழ்ச்சி ஏற்பட்டவுடன், நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்கும், எனக்கும் வழங்கிய ஆலோசனையின்பேரில், மரவள்ளிக் கிழங்கு 75 கிலோ கொண்ட மூட்டைக்கு—அரிசிக்கு என்ன விலை பரிந்துரை செய்கிறோமோ அதுபோன்று—மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தால் அது விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகுமா என்று ஆராய்ந்து அதற்கு ஒரு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும், அதாவது மற்ற உணவுப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்திருப்பதைப் போல, மரவள்ளிக் கிழங்குக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல பரிந்துரை செய்வதற்கு இப்போது அரசு விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே நாங்கள் பரிந்துரை செய்ய இருக்கிறோம். அந்தப் பரிந்துரை விலையை, மத்திய

அரசிடத்திலேயிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவருடைய கட்சியின் சார்பிலே பெற்றுத் தந்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள்.

*பிற்பகல் 12-05*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** குச்சிக் கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது தற்போது ஆலோசனையில் இருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். அந்தப் பரிந்துரை விலையை அங்கே அனுப்பி வையுங்கள், அப்போது இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து, மத்தியிலே இருக்கின்ற கட்சி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி — ஆட்சியிலே இருப்பவர்கள் யாரும் எங்களுடைய உதவி இல்லாமல் ஆட்சியிலே இருக்க முடியாது எனவே, எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் சரி—நீங்கள் கேட்கின்ற விலையை எங்களுடைய பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வாங்கிக் கொடுப்பார்கள் என்ற உத்தரவாதத்தை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருப்பது 10 நிமிடங்கள்தான். அதற்குமேல் போனால் நீங்கள் மணியடித்துவிடுவீர்கள். என்னால் பேசமுடியாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்து, சென்ற ஆண்டு ஏற்பட்ட மின் தடையின் காரணமாக விவசாயிகளுடைய விளைபொருட்கள், உதாரணமாக, நெற்பயிர்கள் குறிப்பிட்ட நேரத்திலே வளர்ச்சி இல்லாமல் விவசாயிகள் , எல்லாம் பெருத்த நஷ்டம் அடைந்து விட்டார்கள். மேலும், மின்சாரத் தடையின் காரணமாக, குறைந்த மின்னழுத்தம் ஏற்பட்டதன் காரணமாக, motor coil-கள் தீய்ந்துபோய் ஏராளமான விவசாயிகள் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, motor coil தீய்ந்துபோன விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குச்சிக் கிழங்கைப் போல, மஞ்சள் விலை சென்ற ஆண்டு, குவிண்டாலுக்கு 4 ஆயிரம் ரூபாய் என்று இருந்தது. அது தற்போது இரண்டாயிரம் ரூபாய் அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்தும் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து மஞ்சளுக்கும் ஒரு விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும். மஞ்சளாக இருந்தாலும் சரி, கரும்பாக இருந்தாலும் சரி, குச்சிக் கிழங்காக இருந்தாலும் சரி,



இவற்றின் விலை வீழ்ச்சியின் காரணமாக விவசாயிகள் அனைவரும் மிகவும் கஷ்டத்திலே இருக்கிறார்கள்.

இங்கே நீங்கள் கொடுத்திருக்கின்ற மஞ்சள் பூ தோட்டக் கலைத் துறையின் மூலமாகக் கொடுத்திருக்கின்ற இந்தப் பூ எப்படி வாடியிருக்கிறதோ அதைப்போல விவசாயிகளுடைய மனமும், விவசாயிகளுடைய சூழ்நிலையும் வாடிக்கொண்டுதான் இருக்கிறது. நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் எந்த நிலையிலே இதைக் கொடுத்திருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் பார்த்தவரையில் . . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் உறுப்பினர் சுந்தரத்திற்கு மட்டும் தனியாகக் காகிதப் பூ தருகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரோஜாக்கள் சிவப்பாக மலர்வதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கேதான் புதிதாக மஞ்சள் பூ பூத்திருக்கிறது. யாரைத் திருப்திப்படுத்துவதற்காக நீங்கள் இதைக் கொடுத்திருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சில தோட்டங்களில் கருப்பு ரோஜாக்களும் உண்டு.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பித்தது 12-05 மணி. இதில் குறுக்கீடுகள் கிட்டத்தட்ட 4 நிமிடங்கள். நான் பேசியது இரண்டு நிமிடங்கள்தான். இந்த நிலையில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உங்களைப் பார்த்து, கடிகாரத்தைப் பார்த்து குறைக்கச் சொல்வது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உங்களுடைய பேச்சிலே மற்றவர்கள் குறுக்கிடுவதற்கு அனுமதிக்க வேண்டாம் என்றுதான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் தெரிவித்தபோது, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் பேசும்போது குறுக்கீடுகளை அனுமதிக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொண்டேனே தவிர, அவருடைய நேரத்தைக் குறைக்கச் சொல்லவில்லை. எதையும் புரிந்துகொள்ளாமல் இப்படியெல்லாம் பேசுவது அவருடைய வாடிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் வசதிக்காக நீங்கள் நேரத்தை மாற்றிச் சொல்லுகிறீர்கள். நீங்கள் 12.01-க்கு பேச ஆரம்பித்தீர்கள். இப்போது 12.05-க்கு பேச ஆரம்பித்தேன் என்று சொல்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே அவ்வாறு கூறியிருந்தால் அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் குறுக்கீடுகள் இல்லாமல் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நான் subject-க்கே வரவில்லை. எங்களுடைய சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நிலத்தடி நீர் கீழே சென்று விட்டது. ஆழ்துளைக் கிணறுகள் போடக்கூடிய சூழ்நிலைதான் அங்கே இருக்கிறது. கிட்டத்தட்ட 500 அடி, 600 அடி என்ற அளவில் ஆழ்துளைக் கிணறுகள் போடக்கூடிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, விவசாயத் துறையின் மூலமாக, கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கின்ற கடன்களை, ஆழ்துளைக் கிணறுகளுக்காகக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குச்சிக் கிழங்குகளைப் பொறுத்தவரையில், தென்னை மரங்களில் எப்படி நோய் தாக்குகிறதோ, அதைப்போல குச்சிக் கிழங்கிலும் பெரிய நோய் தாக்கியிருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கே, ஆட்டையாம்பட்டியிலே ஒரு பெரிய ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இருந்தாலும், அந்த ஆராய்ச்சி நிலையம் செயல்படுகிறதா என்றே தெரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, அது அவருடைய தொகுதி என்ற காரணத்தினால், அது அவர்களுக்குத் தெரியும் என்ற காரணத்தினால், இந்தக் குச்சிக் கரணையில் ஏற்படுகின்ற நோயை விரைவிலே தீர்ப்பதற்கு ஒரு பெரிய ஏற்பாட்டைச் செய்து, விவசாயிகளுக்குக் குச்சிக் கரணைகள், தரம் வாய்ந்த கரணைகள் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

அடுத்தபடியாக, பக்கம் 18-லே குறிப்பிட்டிருக்கிறீர்கள்; மரக்கன்றுகள் நடுகின்ற திட்டம். இந்த மரக்கன்றுகள் நடபபடுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இங்கே ஒரு சர்ச்சை கிளப்பப்பட்டு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் செல்லக்குமார்



அவர்கள்கூட குற்றஞ்சாட்டி, அந்த வழக்கு விசாரணையிலே இருந்து, வழக்கிற்காக அவர் சேலம் செல்லும்போது அடி வாங்கிய கதையெல்லாம் தெரியும். இருந்தாலும், நான் அதையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கண்டிப்பாக இதில் ஊழல் நடந்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், . . . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படி ஊழல் நடைபெற்றிருக்கிறது; அதற்கான ஆதாரம் என்ன, என்ற அதன் விவரத்தைச் சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மரக்கன்றுகள் நடுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில், "1997-98 ஆம் ஆண்டில் நட்ட மரக்கன்றுகளைப் பராமரிக்க 1998-99 ஆம் ஆண்டில் ரூ.299.531 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. "இதில் "நீர் ஊற்ற, காவலர் கூலி மற்றும் 20% தழைக்காத மரக்கன்றுகளை மாற்றுவதற்கு" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த 20 சதவிகிதம் என்று குறிப்பிடுவதே ஊழல் செய்வதற்காகத்தான். ஆனால் . . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு செடி வாங்குவதற்கு, செடியை நட்டு, அதற்கு ஆளை நியமித்து, தண்ணீர் ஊற்றிப் பராமரிப்பதற்கு, குழி வெட்டுவதற்கு முதற்கொண்டு கணக்கிட்டு, செடி நடப்பட்டது. இதிலே, செடி இறந்துவிட்டால், அதை replacement பண்ண வேண்டும். முழுமையாக, நூற்றுக்கு நூறு செடி காப்பாற்றப்பட வேண்டும். அந்த அக்கறையோடு அதற்கான செலவை நாம் காண்பிக்கிறோம். அது எப்படி ஊழல் ஆகும்? ஒரு செடி வாங்குவதற்கு இருபது ரூபாய் செலவாகிறது என்று சொன்னால், அதிலே என்ன ஊழல் இருக்கிறது? என்ன commission வாங்கினார்கள்? commission வாங்கியே பழக்கப்பட்டுவிட்டவர்கள் இப்படி சந்தேகப்பட்டுப் பேசுவது தவறு. இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். இதுபற்றிய பிரச்சினை, இதே சட்டமன்றப் பேரவை உறுப்பினரால் எழுப்பப்பட்டு, சொல்லப்பட்டு, உடனடியாக நீதிமன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு, விசாரணைக்கு வந்த நேரத்திலே, உயர்நீதிமன்றத்திலே அந்த வழக்கை அங்கே விசாரிக்கக் கூடாது என்று தடை வாங்கிவிட்டார்கள். அந்தத் தடையையும் நீக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

22074

உயர்நீதிமன்றத்தினுடைய தடை நீக்கப்பட்ட பின்பு, அந்த வழக்கு விசாரணைக்கு வரும். உண்மை நாட்டிற்குத் தெரியும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மரக்கன்றுகளைப் பொறுத்தவரையில், நடாத மரக்கன்றுகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஆதாரத்துடன் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு ஊராட்சி மன்றத்தில் உள்ள அந்த சாலைகளில்தான் நட்டிருக்கிறோம். எந்த ஊராட்சி மன்றத்திலே அப்படி நடாத மரக்கன்றுகளுக்குப் பணம் செலவழிக்கப்பட்டது அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டது என்று, அந்த ஊராட்சி மன்றத்தையாவது சொல்ல வேண்டும்; அல்லது அந்த ஊராட்சி ஒன்றியத்தையாவது சொல்ல வேண்டும். பொதுவாகச் சொல்லக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில், வீரபாண்டி ஒன்றியத்தில் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஆதாரம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இங்கே.....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி உண்மைக்கு மாறாக, அபாண்டமாகச் சொல்லிக்கொண்டே போகக்கூடாது. நான்தான் சொல்கிறேனே; வீரபாண்டி ஒன்றியத்தில் எந்த ஊராட்சி மன்றம் என்று சொல்லுங்கள். எத்தனை செடி நடாமல், அப்படி கணக்கு எழுதப்பட்டு அந்தத் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லுங்கள். நாடு முழுவதும் அந்தத் திட்டத்தைப் பாராட்டி, எல்லோரும், அசோகர் காலத்திலேதான் இப்படிப்பட்ட மரம் வளர்ப்புத் திட்டங்கள் இருந்தன. இப்பொழுது முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான் வேளாண்மைத் துறையில் இவ்வாறு நடப்பட்டு, 100-க்கு 80, 90 சதவிகிதம் செடிகள் இன்று வளர்ந்துகொண்டிருக்கின்றன என்று பாராட்டி, இந்த அரசுக்குக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, எந்த ஊராட்சி மன்றத்திலே எத்தனை செடிகள் நடாமல் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லுங்கள். சும்மா, பொதுவாகச் சொன்னால்—நான்கூட எதையும் சொல்லிக் கொண்டு போய்விடலாம்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே இதைப்பற்றி விசாரிக்க ஒரு குழுவைப் போடுங்கள். எதிர்க்கட்சித் தலைவரைப் போடுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் போடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். இந்தமாதிரி குற்றச்சாட்டுச் சொல்கின்றபோது, பேரவைத் தலைவரிடம் அதற்கான ஆதாரங்களைக் காட்டி, அனுமதி பெற்று நீங்கள் பேசினால், அதற்கான பதிலைப் பெற முடியும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு குழுவைப் போடட்டும். எதிர்க்கட்சித் தலைவர் இருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர்கள்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு குற்றச்சாட்டைச் சொல்லாமல், மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி அவர்கள், இங்கே கேட்ட அந்தக் கேள்விக்குச் சரியான பதிலைக் கூறாமல், ஒரு குழுவைப் போடுங்கள், விசாரணைக்குத் தயார் என்கிறார்கள். நீங்கள் விசாரணைக்கு எவ்வளவு தயார் என்பதை உலகமே அறியும்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி பேசுங்கள். திரு. நிஜாமுதீன் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுப்பதைப்பற்றி இந்த

அவையிலே ஆயிரம் முறை பேசியாகிவிட்டது. நீங்கள் முதலிலே தேர்தல் அறிக்கையிலே போடவில்லை என்றீர்கள். அதற்குப் பிறகு மகாநாட்டிலே கூறினேன் என்றீர்கள். அதற்குள் எல்லாம் நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. இறுதியாக அமைச்சர் கூறியிருப்பது தடையாணை வாங்கிவிட்டார்கள் என்று. யார் தடையாணை வாங்கியிருக்கிறார்கள்? இப்போது, 'SISMA' என்ற அமைப்பு தடையாணை வாங்கி இருக்கிறார்கள். அவர்கள் என்ன கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் சேர்த்து தடையாணை வாங்கியிருக்கிறார்களா? நீங்கள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு 1000 ரூபாய் கொடுப்பதிலே என்ன தவறு?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அது வேறு விவகாரம். அதை நான் பதிலிலே சொல்கின்றேன். ஆனால் 'SISMA'-வில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி நிஜாமுதீன்.

**திரு. ஜி நிஜாமுதீன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்தற்கு முன்பு .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். நீங்கள் அதிக நேரம் பேசி விட்டீர்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** NABARD ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இந்த விவசாயிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட அந்த அ.இ.அ.தி.மு.க.-வினருக்கு கண்டனம் தெரிவிப்பவனாக எனது உரையைத் தொடங்குகின்றேன் .....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு கருத்தை .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினரை நான் பேச அழைத்த பிறகு அவர் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் இப்படி நிற்பது நன்றாக இல்லை. நீங்கள் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள். என் பக்கத்தில் வந்து பாருங்கள் தெரியும். திரு. சுந்தரம் உட்காருங்கள். திரு. ஜி. நிஜாமுதீன் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை நீங்கள் பேச அனுமதிக்காததனால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 12 மணி ஒரு நிமிடத்திற்குப் பேச ஆரம்பித்து 12 மணி 16 நிமிடத்திற்கு முடித்திருக்கிறீர்கள். 15 நிமிடங்கள் பேசிவிட்டு பேச அனுமதிக்கவில்லை வெளிநடப்புச் செய்கிறேன் என்கிறீர்கள். அது பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. திரு. நிஜாமுதீன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 10 நிமிடம் குறுக்கீடுகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் தொடக்கத்திலேயே சொன்னார், தொடங்கி வைப்பவருக்கு 10 நிமிடம், மற்றவர்களுக்கு 7 நிமிடம் என்று. எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான் உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். அதற்குமேலே உங்கள் விருப்பம். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** வேளாண்மைத் துறையையும், தோட்டக் கலைத் துறையையும் தனித்தனியே பிரித்து நடத்துவதிலே நிர்வாகத்திற்கு அதிகப்படியாக செலவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இரண்டும் ஒரே நிர்வாகத்தைச் சேர்ந்தவையாகும். எதற்காக இந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்றால் விவசாயம் இருக்கின்ற இடத்திலே தோட்டக் கலை அதிகமாக இல்லை. தோட்டக் கலை இருக்கின்ற இடத்திலே விவசாயம் அதிகமாக இல்லை. ஆகவே அதற்கும் இதற்கும் தனித் தனியாக துறைகளை வைத்து செலவுகளை அதிகப்படுத்துவதைவிட வேளாண்மைத் துறையையும், தோட்டக் கலைத் துறையையும் ஒன்றாக இணைத்து நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, வேளாண்மைத் துறைக்குத் தலைவராக வருபவர் அந்தத் துறையில் வல்லுநராக இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறேன். Marketing Committee தனித் துறையாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குத் தனி நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனென்று சொன்னால் பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே Marketing Committee உதவியால் அந்த மாநிலத்தினுடைய பொருளாதாரம் மேம்பட்டவண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதைக் கருத்தில்கொண்டு Marketing Committee-க்குத் தனியாக ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், அதைத் தனித் துறையாக ஆக்க வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் Marketing Committee பிரிக்கப்படவில்லை. ஆகவே அதை உடனடியாகப் பிரித்து மூன்று மாவட்டங்களிலும் Marketing Committee ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனைத் துறைப் பணியாளர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த விற்பனைத் துறையிலேயே அவர்கள் சம்பளத்தைப் பெறுகிறார்கள். அதனால் ஓய்வு கால ஊதியங்கள் பெறும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே அவர்களுக்கு அரசு நிதியிலிருந்து ஊதியம் வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குப் போதிய நீராதாரம் நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் மழைக்காலங்களில் பெரும்பாலான நீர் கடலிலே போய் வீணாகக் கலக்கிறது. ஆகவே துறையூர் போன்ற பகுதிகளிலே போதிய இடங்கள் இருப்பதால் அந்தப் பகுதியிலே ஒரு அணை அமைத்து மழைக் காலங்களில் கடலில் சென்று வீணாகின்ற நீரைத் திருப்பி, அதைச் சேமித்து விவசாயிகள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுககொள்கிறேன.

அதுபோல, நாகை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஆறு, வாய்க்கால்களைத் தூர் எடுப்பதற்காக நிதி ஒதுக்கியதிலே 12 கோடி ரூபாய் மிச்சம் ஏற்பட்டிருப்பதாகவும், அதைப் பல மாவட்டங்களுக்கு ஒதுக்கவிருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியை மீண்டும் மேம்படுத்துவதற்காக அந்தப் பகுதியிலே புதிய வாய்க்கால்களை ஏற்படுத்துவதற்கும், ஏரிகளைத் தூர் வாருவதற்கும் அந்தத் தொகையைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோல, பயிர் Insurance திட்டம்; பயிர் Insurance திட்டத்திலே, விவசாயிகள் தங்கள் பயிருக்கான Insurance செய்கிறபோது, அந்த ஒன்றியம் முழுவதும் பாதிக்கப்பட்டால்தான் அவர்களுக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. அப்படி இல்லாமல், அந்த ஊராட்சிப் பகுதியில், எந்தப் பகுதி பாதிக்கப்பட்டாலும், அதற்கென்று தனியாகக் காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கடந்த மழைக்காலத்திலே, கீழையூர் ஒன்றியத்திலே சில கிராமங்கள் மட்டும் பாதிக்கப்பட்டன; பாக்கி கிராமங்கள் எல்லாம்



தப்பித்துக் கொண்டன. பாதிக்கப்பட்டவர்கள் காப்பீட்டுத் தொகையைக் கேட்கும்போது, யூனியன் முழுவதும் பாதிக்கப்பட்டால்தான் கொடுப்போம் என்றும் உங்களுக்கு பாதிப்பு இருந்தால் நஷ்டஈடு இல்லை என்றும் அதிகாரிகள் அறிவித்துவிட்டார்கள். ஆகவே, Insurance என்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது. தனிநபர் யார் insur செய்திருந்தாலும், அவர்களுடைய நலன் பாதிக்கப்படுமேயானால், அவர்களுக்கு உரிய காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்வதைப் பற்றி இங்கே விரிவாக விவாதம் நடைபெற்றது. கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய் தொழிற்சாலைகளில் நட்டம் ஏற்பட்ட காரணத்தினால், 'NABARD' வங்கி அதனைத் தள்ளுபடி செய்வதற்கு அனுமதி அளிக்கின்ற காலத்திலே, கிட்டத்தட்ட 1900 கோடி ரூபாய் இலவச மின்சாரம் வழங்குகிற காலத்திலே, சுமார் 50 கோடி ரூபாயை ஏற்று அதைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அபராத வட்டியையும் தள்ளுபடி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். சாதாரணமாக மழைக் காலங்களிலே பாதிக்கப்படும்போது நாம் வெறும் உதவிகளைக் கொடுத்துக்கொண்டு போகிறோம். ஆனால், உழைத்த விவசாயிகளுக்கு, பாடுபட்ட விவசாயிகளுக்கு, அவர்கள் போட்ட முதலை எடுக்காத நிலையிலே, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு வழிவகை இல்லை என்று அரசு சொல்கிறது. கடந்த அரசு இந்த நிலையை ஏற்படுத்தி இருந்தாலும், அதை இந்த அரசு உணர்கிற காரணத்தினால், ஒன்றுபட்ட தஞ்சைத் தரணியிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு பிறந்த காரணத்தினால், விவசாயக் குடும்பத்திலேயிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிற காரணத்தினால், இதைக் கவனத்திலே கொண்டு, விவசாயிகளின் கடனுக்கான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து, அவர்கள் தொடர்ந்து விவசாயம் செய்வதற்கு, வேறு வழி இல்லாமல் இருக்கின்ற நிலையையும் கவனித்து, இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்கின்றபோது, அவற்றினுடைய விலை market-லே குறைகிறது. அதற்கான விலை நிர்ணயம் செய்வது, மாநில அரசிடம் இல்லை என்றாலும், அந்த விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரத்தை, மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்று, இங்கே ஒரு குழு அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளின் பிரச்சினைகளை அவ்வப்போது குழுக்களை அமைத்து ஆராயாமல், வேளாண்மை உயர்மட்டக் குழு ஒன்றை நிரந்தரமாக ஏற்படுத்தி, அதிலே அனைத்து விவசாயப் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாக்கி, அதன்மூலம் நிரந்தரமாக விவசாயிகளின் பிரச்சினைகளைப் போக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல், நாகையிலே அதிகப்படியான நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், அதற்கு முறையான, பாதுகாப்பான ஒரு சேமிப்புக் கிடங்கு இல்லை. ஆகவே, அங்கு Marketing Committee மூலம் ஒரு பெரிய சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நாகையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பத்தாண்டுகளாக தோட்டக்கலை பட்டயம் பெற்ற மாணவர்கள், வேலை கிடைக்காமல் உள்ளார்கள். ஆகவே, அவர்கள் வேலைபெறும் வகையில், வயது வரம்பை நீட்டித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நெய்வேலி காட்டாமணக்கை ஒழிப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து, பெரும்பாலும் அதை ஒழித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில், மீண்டும் மீண்டும் கிளம்புகின்ற அந்த நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை மக்கள் வெட்டி, ஆற்றங்கரையிலும் குளத்தங்கரையிலும் கொட்டிவிடுகிறார்கள். மீண்டும் அவை தழைத்து வளர்கின்றன. ஆகவே, மக்களிடம் இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களிடையே விளம்பரங்களைச் செய்து, அவற்றை எரித்து அழித்துவிட வேண்டுமென்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். மக்களிடையே அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினால்தான், அவற்றை முழுமையாக அழிக்க முடியும். இல்லையென்று சொன்னால், இன்னும் பத்தாண்டுக் காலத்திலோ, ஐந்தாண்டுக் காலத்திலோ மீண்டும் அவை ஆற்றங்கரையிலும், குளத்தங்கரையிலும் ஆக்கிரமிப்புச் செய்துவிடும். ஆகவே, அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தோட்டக்கலைத் துறையால் வழங்கப்படும் உர மானியம் சில இடங்களில் மக்களுக்குப் போய்ச் சேராமல், சில தரகர்களுக்குச்



சென்று விடுகிறது. அந்த முறைகேட்டை இந்த அரசு கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே இந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்ட விஷயமாக இல்லையென்றாலும், இந்த நாட்டின் நலனைக் கருதி, நான் இன்னொரு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நாட்டை நிரந்தரமாக ஆள்வோம் என்று மக்களிடத்திலே வாக்குக் கொடுத்து, வாக்குகளைப் பெற்றவர்கள், ஏதோ, தான் இரயில் எஞ்சின் என்றும், தான் யாரை வேண்டுமானாலும் ஓட்டலாம்—தன்னை மட்டும்தான் ஓட்டமுடியாது; என்று— நினைத்தவர்கள் எல்லாம் இன்று ஒட்டிக்கொண்டு செல்லமுடியாத நிலையிலும், ஒரு தேர்தலைச் சந்திப்பதன் மூலம் மக்களை மீண்டும் பொருளாதாரத்திலே கீழ்நிலைக்குத் தள்ளுகிற நிலையை, அண்ணா தி.மு.க.வினர் இன்று செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள், இந்த நாட்டை ஒரு இக்கட்டான நிலைக்கு, கேவலமான நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு POINT OF ORDER. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு இக்கட்டான நிலைக்கு நாட்டை இழுத்துச் செல்கிறார் என்று சொல்கிறார். அவர் நன்றாக சிந்தித்துத்தான் இந்த நாட்டை, ஒரு நேர்மையான நல்ல பாதையிலே அழைத்துச் செல்வதற்கு வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் சொல்லியதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன்....*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அவர் சிந்தித்துத்தான் அந்த முடிவிற்கு வந்திருக்கின்றார். மாநிலத்தைக் கெடுத்தார். ஏற்கெனவே முன்னாள் பிரதமர் சந்திரசேகர் சிறுபான்மை அரசை ஆண்டது மாதிரி, நாமும் அப்படி ஒரு பெரிய வண்டியை, சின்ன என்ஜினோடு இழுத்துக் கொண்டு போய்விட மாட்டோமா, மத்திய ஆட்சியிலே அமர்ந்து,

இந்த நாட்டைக் கெடுத்துவிட்டுப் போய்விட பாட்டோமா என்று கருத்திலேதான் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது நீங்கள் உட்காருங்கள். திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகளின்மேல் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு நானும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றையதினம் நாட்டு மக்களில் 65 சதவீதம் பேர் வேளாண்மைத் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாயி சேற்றிலே காலை வைத்தால்தான் நாம் சோற்றிலே கையை வைக்க முடியும் என்றெல்லாம் நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்கின்றோம். ஆனால், அந்த விவசாயி, உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சவில்லை, தார்க்குச்சி கூட மிச்சமில்லை என்று புலம்பிக்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். 10 ஏக்கர் அளவிற்கு நிலத்தை வைத்திருக்கக்கூடிய ஒரு சாதாரண விவசாயி, அரசிலே பணிபுரியும் சாதாரண ஊழியர் வாழுகின்ற அளவிற்குக் கூட 10 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு நன்றாக வாழமுடியவில்லை என்ற நிலையில் மனம் நொந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் ஏறியிருக்கின்ற உர விலை, ஏறியிருக்கின்ற பூச்சிமருந்து விலை, ஏறியிருக்கின்ற விவசாயக் கூலி, அது போல விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலை கிடைக்காத நிலைகள்தான். இதன் காரணமாக விவசாயிகள் பெருந்த நஷ்டத்திற்கு ஆளாகி பல்வேறு சங்கடங்களுக்கிடையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அந்த விவசாயிகளுக்கு, நம்முடைய தலைவர், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், 1989-90-ல் ஏழை விவசாயி, பணக்கார விவசாயி என்ற பாகுபாடு இல்லாது, அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத்தை வழங்காமல் இருந்திருந்தால், கூட்டுறவுச் சங்கங்களிலே 10,000 ரூபாய் வரை வாங்கிய கடன்களை எல்லாம் இரத்து என்று நம்முடைய முதலமைச்சர் அறிவிக்காமல் இருந்திருந்தால், வட மாநிலங்களில் விவசாயிகள் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொள்கிறார்களே, அந்த நிலை தமிழ்நாட்டு விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடும். இந்த உண்மையை விவசாயிகளே சொல்லிக்



கொண்டிருக்கின்றார்கள். அந்த விவசாயிகளுடைய கஷ்டத்தைத் தீர்க்க நம்முடைய தலைவர் மீண்டும் முதலமைச்சராக வந்த பிறகுதான் வேளாண் தொழிலில் விருத்தி ஏற்பட்டு, அந்தத் துறை விரைவுபடுத்தப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அந்த நல்ல நோக்கத்தோடு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் கண்மாய்களைச் செப்பனிட 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அந்தப் பணிகளைப் பார்த்துப் பாராட்டுகிறார்கள். 50 ஆண்டுகாலமாக செப்பனிடப்படாத கண்மாய்கள் எல்லாம் இப்போது தூர் வாரப்பட்டிருக்கின்றன என்று மக்கள் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு கூட அத்தகைய கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கு, செப்பனிடுவதற்கு நம்முடைய அரசு 50 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

அதோடு மட்டுமல்லாமல் கண்மாய்க்கு வரக்கூடிய வரத்துக் கால்வாய்களில் எல்லாம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதைப் பார்த்து நம்முடைய முதலமைச்சர் அவர்களை விவசாயிகள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்து ஊராட்சிகளில் இருக்கின்ற ஊரணிகளெல்லாம் ஆழப்படுத்தப்படுகின்றன. இப்படி ஆழப்படுத்துவதன் காரணமாக கண்மாய்களில் நீர் பெருகி, தண்ணீர் தேக்கப்பட்டு, கண்மாய்களுக்குக் கீழே இருக்கின்ற கிணறுகளுக்கெல்லாம் ஊற்று கிடைத்த காரணத்தினால்தான், கடந்த ஆண்டு 85 இலட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி, இன்று 98 இலட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது.

கண்மாய்களில் சமூகக் காடுகள் திட்டத்தில் கருவேல மரத்தை வளர்க்கின்ற திட்டத்தினை நம்முடைய அரசு கைவிட வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். காரணம், கண்மாய்களில் கருவேல மரங்களை வளர்த்தால் கண்மாய்கள் மேடாகி அங்கே தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், போடி தொகுதியில் கிராம விவசாயிகள் அந்தப் பகுதியில் நிலத்தடிநீர் இல்லாமல், அங்கே தோண்டப்பட்ட கிணறுகளில் ஏறத்தாழ 200 அடி ஆழத்திற்குக் கீழே தண்ணீர் கிடைத்த

காரணத்தினால் அந்த விவசாயிகளுடைய பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு தாழ்ந்து போய் அப்பகுதியில் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் பல்வேறு நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அங்கேயிருந்து பிழைப்பு தேடி திருப்பூருக்கு குடியேறிவிட்டனர். இன்று அந்தப் பகுதி விவசாயிகளுடைய துயர் துடைக்கின்ற வகையில், சங்கடத்தைப் போக்குகின்ற வகையில் போடி சட்டமன்றத் தொகுதியினுடைய விவசாயிகளினுடைய நீண்டநாள் கோரிக்கையான 18 ஆம் கால்வாய்த் திட்டத்திற்கு நம் முதல்வர் அவர்கள் 26 கோடியே 52 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை, போடி தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும், தேனி தொகுதி மக்களின் சார்பாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்தத் திட்டம் வருவதற்கு முழு காரணமாக இருந்த நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அதேபோல் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

எங்களுடைய மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில கொடிக்கால் வெற்றிலை பயிர் செய்கின்றார்கள். அந்த வெற்றிலைக்கு வாடல் நோய் ஏற்பட்டு, கொடிக்கால் அழிந்து, அந்த விவசாயிகள் எல்லாம் பிழைப்புக்காக திருப்பூருக்கு அனாதைகள் போல் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளை வாழ வைக்க நம்முடைய வேளாண்மைத் துறை மூலம், தோட்டக்கலைத் துறை மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் கண்டறிந்து, நிவாரண உதவிகள் எல்லாம் செய்து, மீண்டும் அவர்கள் கொடிக்கால் பயிர் செய்வதற்குத் தேவையான உதவிகளை எல்லாம் அரசு நம்முடைய வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மூலம் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் வேளாண்மைத் துறை மூலம் இரு வழி கலப்பை, ஒரு வழி கலப்பை ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகின்றன. மாடுகள் இல்லாத காலத்தில் இது தேவையற்றது என்று விவசாயிகள் கருதுகின்றார்கள். எனவே, கலப்பைகளை வழங்குவதற்குப் பதிலாக அன்றாடம் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய கடப்பாரை, மண்வெட்டி, இரும்புச்சட்டி, போன்றவற்றை 50 சதவிகிதம் மானியத்தில், எந்த அளவிற்கு விவசாயிகளுக்குத் தேவையோ, அந்த அளவிற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, motor pump set-களுக்கு மின் இணைப்பு கோரி விவசாயிகள் மனு செய்தால், 6 மாத காலத்திற்குள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு தார்ப்பாய் 50 சதவிகிதம் மானியத்தில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சரியாகச் செயல்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் முறையாகச் செயல்பட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அடுத்து, தேனி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அந்தத் தென்னை மரங்களில் தற்போது சிலந்தி பூச்சியின் தாக்குதல் அதிகமாகி தேங்காய் தரம் குறைந்து, தேங்காயில் சொறி ஏற்பட்டு மகசூல் குறைந்து, அந்த விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, வேளாண்மைத் துறை ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளித்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து, குறிப்பாக கம்பம் பள்ளத்தாக்கில் தென்னை மரங்களில் வாடல் நோய் ஏற்பட்டு, மரங்கள் செத்துப்போய் விட்டன. எனவே, அவர்கள் மீண்டும் தென்னை பயிரிடுவதற்குத் தேவையான உதவிகளை எல்லாம் நம்முடைய வேளாண்மைத் துறை மூலம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I thank you very much for giving me this opportunity to speak on an important Demand, viz., Agriculture, which provides food and energy to the entire world. Agriculture in our State is really fast developing and being given good attention by our Hon. Chief Minister and the Minister for Agriculture because the

Hon. Minister himself is an agriculturist. I am glad that the Hon. Chief Minister's Tree Planting Scheme which is being implemented very properly and we are admiring the Scheme. One Hon. Member was telling that this Scheme was not implemented properly. But wherever I have seen this Scheme is very properly implemented. I request that stern action be taken if there is any negligence among officers in implementing this Scheme.

It has been mentioned in the Policy Note that various State Schemes like Coconut Development Programme, Reclamation of Saline and Alkaline Lands, Soil Testing Laboratories; Modified Comprehensive Crop Insurance Scheme; are being implemented. I am sorry to state that these Schemes are not properly implemented. However, it is there. Similarly, Centrally Sponsored Schemes like the Integrated Cereals Development Programme for Rice based Cropping System, National Pulses Development Project, Intensive Cotton Development Programme are being implemented through the Agriculture Department. But these Schemes are not properly informed to the farmers. I am sorry to state this. I request the Hon. Minister for Agriculture to see that all the schemes that are being implemented by the Department must be made known to the Panchayat Presidents, Councillors, Chairmen and M.L.A.s so that they can give good suggestions. Lot of Schemes are being implemented and subsidies are given by the Department to the farmers. These Schemes should be properly utilised and I request the Hon. Minister to see that proper publicity is given, as it is more important. Even some of our M.L.A.s do not know what is happening.

*பிற்பகல் 12-35*

Coming to other points, in addition to agriculture, your Department is also implementing various schemes through Horticulture and Floriculture Departments. I am very happy to know that you have supplied rose flowers produced from Hosur Green House, because I am coming from Hosur. Our Hon. friend was telling that the rose has faded. If the water is not provided adequately, naturally it will fade.

I am very happy to state that Hon. Chief Minister has sanctioned 20 crores of rupees for Floriculture Project at Hosur and I request the Hon. Chief Minister to see that it is implemented urgently.



With regard to Drought Prone Area Programme, I am happy to know that 50% of subsidy is given by State and 50% of subsidy is given by the Centre and it is appreciated.

Some of our friends were speaking about agriculturists and they asked why should the agriculturists be given subsidy. I don't want the subsidy for Agriculture and in support of this I have already given cut motions. Agriculturists are not beggers and we do not want any subsidy. If you give good and fair price for our produce, we do not want any subsidy of any other thing. We are not beggers and we are working hard day and night. You should give good price to us and I request the Hon. Chief Minister and the Hon. Minister for Agriculture to see that the agriculture is made as an Industry. If you make the Agriculture as an Industry and give good price, we do not want any subsidy and waiver of loan.

When the Janatha Dal Government was in power at the Centre, they announced parity price. If the parity price is given to the agriculturists, we do not want any subsidy.

Now I come to another point, Vegetable Marketting. The present rate for vegetables like cabbage and tomato is very low. I raised this point during the last week also in the Assembly. Lot of vegetables are perished in the garden itself because the rate is not adequate. I request the Hon. Minister to see that good price is given to vegetables and fruits. If the price is down the Government should come forward to procure them. At least the State and Central Governments should join together and give subsidy. Actually, I raised this question to the Hon. Minister for Agriculture and he was telling that some of the farmers have consumed poison because they lost lot of money in agriculture and he assured us that this Government will not leave them to that extent.

In Karnataka, they have created a Marketting Federation, called APCONS. There are nearly 3000 units and in the entire State they are procuring vegetables. APCONS supply the vegetables to the entire State and even in the Bus Stand and Railway Station, they have got a shop. 15% of the cost of the material is paid immediately and the rest of the amount will be paid on the same day. I request the Hon. Minister for Agriculture to send some of our officers to Karnataka to see how they are functioning. They are really functioning very well.... (gong was sounded). Yes Sir. I will finish. I request the Hon. Minister to see that it is done Sir.

At present bananas, robusta are growing very well and lot of diseases and viruses are affecting its growth. For hill bananas, Government give some subsidy for preventing viruses. In the same way, subsidy may also be given for robusta. You have planted lot of medicinal plants. If you start a juice factory at Hosur, lot of fruits would be absorbed by the factory and we can get better price.

Dehydration of vegetables is also important. Lot of vegetables are grown here and we have got a good market in foreign countries for dehydrated vegetables. We can start Village Industries in various places like Ooty, Hosur, etc., where vegetables are grown. We can start dehydration plant for vegetables. Dharmapuri is the place where mangoes are largely grown. They are not getting good price for crops. I request the Hon. Minister for Agriculture to have a Crash Programme to increase the production of mangoes. Mangoes have a very good market at the international level. Export potential is there.

I welcome Organic Farming introduced in Tamil Nadu. But, chemical fertilizers and pesticides are dangerous to the health of the people. Hence, I request the Hon. Minister for Agriculture to see that some steps are taken to protect the health of the people.

Thank you very much for giving me this opportunity, Sir.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறை மானியக் கோரிக்கையின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளைப் பொறுத்த அளவிலே மிக மிக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பதிவு செய்யப்படும் கரும்புகள் 10 அல்லது 12 மாதத்திற்குள்ளாக அரவைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், 18 மாதங்கள் கழித்தும் அரவைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எடுத்துக்கொள்ளப்படுகின்ற கரும்புக்கு கட்டுப்படியான விலை, ஒரு டன்னுக்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும். அல்லது லாரி வாடகை,



வெட்டுக் கூலி இவற்றை சர்க்கரை ஆலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். எடுக்கின்ற கரும்புக்கு 15 நாட்களுக்குள்ளாக, விவசாயிகளுக்கு பணத்தைப் பட்டுவாடா செய்ய வேண்டும். விவசாயிகள் ஏற்கெனவே கடன் பெற்று கரும்பு உற்பத்தி செய்கின்றார்கள். அவர்கள் மிக மோசமான நிலைமையிலே இருக்கின்றார்கள். உற்பத்தியான கரும்பை ஆலைக்கு அனுப்பிய உடனே, கடன்காரர்கள் அவர்கள் வீட்டுக்கு வந்து கடனைக் கொடுக்க வேண்டுமென்று தொல்லை செய்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் 15 நாட்களுக்குள்ளாக கரும்பு உற்பத்திக்கான பணத்தைப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். மேலும், ஏராளமான விவசாயிகள் கரும்பு அதிக அளவிலே பயிரிட்டு, உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் இரண்டு அல்லது மூன்று சர்க்கரை ஆலைகளைத் தொடங்க வேண்டும். சர்க்கரை ஆலைகளைத் தொடங்கும்போது தனியார்களுக்கும் உரிமை வழங்க வேண்டும். தனியார்கள்தான் சிறந்த முறையில் சர்க்கரை ஆலைகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அப்போதுதான் உற்பத்தியாகின்ற கரும்புகள் அனைத்தும் அரவைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விவசாயிகள் சீரடைவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த கால ஆட்சியிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் விரிவாக்கம் என்ற பெயரால் கொள்ளையடிக்கப்பட்டன. எல்லா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் பெரும் கடனிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, 45 கோடி ரூபாய் கடனில் இருக்கின்ற கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை சிறந்த முறையிலே இயங்குவதற்கு வாய்ப்பில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த 45 கோடி ரூபாயை அரசு மானியமாக அளித்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், நெல் சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பெரும் கடனாளியாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்வதற்கு 6,000 ரூபாய் செலவாகின்றது. ஆனால் அவர்கள் பெறுகின்ற வருமானம் 5,000 ரூபாய் ஆகத்தான் இருக்கின்றது. விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்தால் 1,000 ரூபாய்

என்னுடைய தொகுதியிலே தாணிப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டும். தண்டராம்பட்டில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத்தர வேண்டும். தாணிப்பாடியில் விவசாயக் கிடங்கு ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

சூ. வாளவட்டியில் விவசாயக் கிடங்கு ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற என்னுடைய தொகுதி மக்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், மாவட்ட அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் 30 கிலோ மீட்டர் செல்கின்றார்கள். ஆனால், தாலுகா அலுவலகம் மற்றும் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் 75 கிலோ மீட்டர் மூன்று பேருந்துகளில் மாறி மாறிச் செல்கின்ற நிலையால் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் இன்னலுக்கும் துன்பத்திற்கும் ஆளாகின்றார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்து, இந்த ஆண்டு தண்டராம்பட்டை தனி வட்டமாக அறிவித்து தாலுகா அலுவலகம் அமைக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப் பெற்றது)

தச்சம்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

சாத்தனூர் அணையில் இடதுபுறக் கால்வாயின் கிளைக் கால்வாய்களை சீரமைத்துச் செப்பனிட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களின் இந்தச் சீர்கேடுகளையும் இன்னல்களையும் போக்குகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் நல்ல செய்தியினை அறிவிப்பார்கள் என்று இன்றைக்கு எல்லா விவசாயப் பெருங்குடி மக்களும் வானொலிச் செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பூஞ்சோலையாகப் பூத்துக் குலுங்குகின்ற இந்த அவையிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் தங்கள் பதிலுரையிலே விவசாயப் பெருங்குடி மக்களின் வயிற்றிலே பாலை வார்க்கின்ற வண்ணம் கரும்புக்கும், நெல்லுக்கும் கூடுதல் விலை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1999-2000 ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைமீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் 9 பேர் தங்களுடைய அரிய கருத்துகளையெல்லாம் இந்த அவையிலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றில், இரண்டொரு உறுப்பினர்கள் பேசிய கருத்துகளுக்கு முதலிலேயே நான் பதில் அளித்து விட்டால் அந்தப் பதிலைப் பெற்ற திருப்தியோடு அவர்கள் எழுந்து சென்று விடுவார்கள் என்பதால் இறுதியிலே அவர்களுக்குப் பதிலளிக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது பேரவை உறுப்பினர்கள் 27 பேர் 183 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த 27 பேர் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும், "கரும்புக்கு விலை 1000 ரூபாய் நிர்ணயிக்கப்பட வேண்டும்; வெட்டுக் கூலி, லாரி வாடகையை ஆலையே ஏற்றுக்கொள்ள வேண்டும்; உணவுப் பொருட்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; உரம், பூச்சி மருந்துகள் விரைவாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று பல்வேறு கோரிக்கைகளுக்காக கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்த 183 வெட்டுப் பிரேரணைகளுக்கும் பதிலளித்தால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் அதற்கே சரியாகி விடும். அவ்வளவுக்கும் பதில் சொல்லாவிட்டாலும், நான் ஒட்டுமொத்தமாகச் சொல்கின்ற பதில் வேளாண்மைத் துறையில் நம்முடைய பேரவை உறுப்பினர்களுக்கு நிரம்ப அக்கறை இருக்கிறது என்ற அந்தக் காரணத்தினாலேதான் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கே தந்திருக்கின்ற அந்த வெட்டுப் பிரேரணைகளை எடுத்துக்கொண்டு, நான் கடந்த ஆண்டு சொன்னதைப்போல அந்த வெட்டுப் பிரேரணைகளை அரசின் சார்பிலே பரிசீலித்து, நிறைவேற்றக் கூடியவற்றை நிச்சயமாக இந்த அரசு முதலமைச்சரினுடைய ஆணைக்கேற்ப நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று இங்கு விவாதிக்கப்பட்ட ரூபாய் 769 கோடியே 98 இலட்சத்து 69 ஆயிரத்துக்கான மானியக் கோரிக்கைமீது 9 பேரவை உறுப்பினர்கள்

கருத்துகளைத் தெரிவித்திருந்தாலும் கொள்கை விளக்கக் குறிப்பை அனைத்து உறுப்பினர்களும் படித்துப் பார்த்திருப்பார்கள் என்று நான் மனதார நம்புகின்றேன்.

இந்த அரசு, அதுவும் நம்முடைய முதலமைச்சர், அண்ணன் கலைஞர் அவர்கள் தலைமை வகிக்கின்ற இந்த அரசு ஒரு வேளாண்மைத் துறை அரசு என்பதை நான் இங்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-55

இந்த மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படக்கூடிய இந்த நேரத்தில், இங்கு நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் பழனிசாமி அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, நீண்டகாலமாக, குறைந்தபட்ச ஊதியம் விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, நியமிக்கப்பட்ட கோவைப்பன் உயர்மட்டக் குழு பரிந்துரையை, இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில், ஏற்று அறிவித்திருப்பது நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் என்பதை, நான் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்று கரும்பு விலையைப் பற்றி இங்கே நற்பண்பு நிறைந்தவர்களான மாண்புமிகு உறுப்பினர்கள் பெரிதும் பேசியிருக்கின்றார்கள். உடனடியாகத் தடையாணை நீக்கப்பட வேண்டும் என்று அரசின் சார்பிலே உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்து அதன்பேரிலே இன்று அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு கிடைத்தவுடன் கரும்பு குறித்து மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை காலம் தாழ்த்தாமல் விரைவாக அரசு முடிவெடுத்து அறிவிக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இருப்பினும் நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப 1997-98-வது ஆண்டுக்கு 8.5 சதவீத சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலை, மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலை ஆகியவற்றின்பேரில் ஆலைகள் 660 ரூபாய் ஒரு டன்னுக்குக் கொடுக்க வேண்டுமென்ற அந்தத் தொகையை இந்த ஆண்டு அதாவது இந்தத் தீர்ப்பு வந்து, மாநில அரசாங்கம் பரிந்துரைகளைச் செய்கிற வரை, அது கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் அல்லது பொதுத் துறையாக இருந்தாலும், அல்லது



தனியார் துறை ஆலைகளாக இருந்தாலும் உடனடியாக, சென்ற ஆண்டின் விலையே இப்போதும் வழங்கப்பட வேண்டுமென்று, இரண்டு நாட்களுக்கு முன்பு நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப உரிய ஆணை ஆலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், "நம் நாட்டில் படித்தவர்கள் குறைவு; அப்படிப் படித்தவர்களில் மிகக் குறைவானவர்களே உழவுத் தொழிலில் ஈடுபடுவதால் வேளாண் விஞ்ஞான முறைகளைப் புகுத்தி விவசாயப் புரட்சியைத் தோற்றுவிப்பது குறித்து தொடர்ந்து விவசாயிகளுக்கு இன்னும் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது" என்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னது இன்றைக்கும் பொருந்தும் என்பதைப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் அறிவீர்கள். மேலும் 2-வது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-லே நடந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த உலகத் தமிழ் மாநாட்டிலே கருத்தைச் சொல்கிறபோது, "உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய அவசியத்தை விளக்கும் வகையில் வறண்டுபோன நிலங்களை விளைநிலங்களாக மாற்றவேண்டும். காடு திருந்திட வேண்டும். வளம் பெருகிட வேண்டும். உணவு உற்பத்தி பெருகிட வேண்டும். இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றிட மக்கள் ஒத்துழைக்க வேண்டும். உள்ளத் திறமையிலே தமிழர்கள் செழிப்படைய வேண்டும். இப்பணிகளைச் செய்யத் தயங்காதே தமிழா" என்று அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். இந்தக் கொள்கையை ஆழமாக தன்னுடைய இதயத்திலே ஏந்தி தமிழகத்திலே இருக்கின்ற ஆறு கோடி மக்களுக்கும் இன்றைக்கும் உழைத்து வரக்கூடியவர், நான்காவது முறையாக தமிழ்நாட்டு மக்கள் தந்த தீர்ப்பை ஏற்று ஆட்சி நடத்தக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வின் அடிப்படையிலே இன்று வேளாண்மைத் துறைக்கே ஒரு முக்கியத்துவம் தமிழகத்திலே ஏற்பட்டு அதிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் பெரும் பயனை கலைஞர் அவர்களால் பெற்றிருக்கிறார்கள், பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை மறுக்க இயலாது.

பிற்பகல் 1-00

1996-லே ஆட்சிக்கு வந்தவுடன் — கடந்த காலங்களிலே அவர் மூன்று முறை ஆட்சியிலே இருந்தபோது செய்ததை நான் சொல்லித்தான்

நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதல்ல — வறட்சிக்கு இலக்கான அல்லது தரிசு நிலங்களாக இருக்கக்கூடிய நிலங்களை விளைநிலங்களாக கொண்டுவர வேண்டுமென்பதற்காக டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்தார்கள். அவர்கள் தந்திருக்கிற அறிக்கையைப் பெற்று, அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்போல மண்ணுக்கேற்ற வேளாண் விளைபொருளை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும்; அவை எல்லாம் இலாபகரமாக இருக்க வேண்டும்; அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட வேண்டும்; அதற்கான தொழில்நுட்பத்தைத் தரவேண்டும் என்பதற்காக இஸ்ரேல் நாட்டினுடைய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்காக 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவழித்து, அந்தத் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெற்று, அதையும் வறட்சிக்கு இலக்கான மாவட்டங்களான நான்கு மாவட்டங்களிலே நிறைவேற்ற — ஏற்கெனவே நான் சொல்லி இருக்கிறேன்; அந்த மாவட்டங்களிலே நிறைவேற்றுவதற்கும்—இப்போது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

இருக்கின்ற தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற, 10,000 எக்டேர் நிலப்பரப்பை விளைச்சல் நிலங்களாக மாற்ற டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய பரிந்துரையின் பேரில், தரிசு நில மேம்பாட்டு ஆணையம் Waste Land Development Authority ஒன்று அமைக்க முடிவு எடுத்து, நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களாகிய நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்த அறிக்கைக்கேற்ப இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் எக்டேர் நிலங்களைத் தேர்வு செய்து, அந்தத் தரிசு நிலங்களை மேம்படுத்த 6 திட்டங்களும், 4000 எக்டேரிலிருந்து 40,000 எக்டேர் பரப்பு வரை மேம்படுத்த 7 திட்டங்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன. இது டாக்டர் குழந்தைசாமி அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்ற திட்டம். மொத்தம் அதற்காகும் தொகை 72 கோடியே 24 இலட்சம் ரூபாய். இதில், 1,11,756 எக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அரசு மீண்டும் பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகாலமாக தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. சராசரியாக நம்முடைய மாநிலத்திலே பெய்கின்ற மழை அளவைவிடக் கூடுதலாக 11 சதவிகிதம் பெய்திருக்கிறது. அதனால், 1998-99 ஆம் ஆண்டில் நெல் பயிரிடும் பரப்பு உத்தேசிக்கப்பட்ட 22



இலட்சம் எக்டேர் பரப்புக்குக் கூடுதலாக ஒரு இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. அதனால் உணவு உற்பத்தி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்பட்டது. 1996-97 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி தமிழ்நாட்டில் சாகுபடியில் உள்ள நிலப்பரப்பில் 28.11 இலட்சம் எக்டேர் நிலங்கள் பாசன வசதிகள் பெற்றிருக்கின்றன. இதில் 13.69 இலட்சம் எக்டேர்கள் கிணறுகள் மூலமும், 8.19 இலட்சம் எக்டேர்கள் கால்வாய்கள் மூலமும், 6.23 இலட்சம் எக்டேர்கள் ஏரிகள் மூலமும் பாசன வசதியைப் பெற்றிருக்கின்றன. கிணற்றுப் பாசனத்தின் முக்கியத்துவம் இப்போது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தமிழகத்தில் 17.89 இலட்சம் கிணறுகள் இன்றைக்கு இருக்கின்றன.

பிற்பகல் 1-05

1995-96-வது ஆண்டு மொத்த உணவு உற்பத்தி அரிசி இலக்கு 66.75 இலட்சம் மெட்ரிக் டன். ஆனால் உற்பத்தி ஆனது 52.90 இலட்சம் மெட்ரிக் டன். 1996-97-வது ஆண்டில், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் 68 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தி 58.05 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். 1997-98-வது ஆண்டு இலக்கு 70 இலட்சம் மெட்ரிக் டன் என்று நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தி 70.52 இலட்சம் மெட்ரிக் டன் என எய்தி சாதனை படைத்துள்ளோம். 1998-99-வது ஆண்டின் இலக்கு 75 இலட்சம் மெட்ரிக் டன். பிப்ரவரி மாதம் வரை 72 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி வந்துள்ளது. மேலும் இந்த ஆண்டு இறுதியில் சுமார் 75 இலட்சம் மெட்ரிக் டன் அதாவது குறியீட்டைவிட—இன்னும் சொல்லப்போனால், 75 இலட்சம் மெட்ரிக் டன்னுக்குக்—கூடுதலாக இருக்கும் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியும், அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் 75 இலட்சம் மெட்ரிக் டன் என்று நிர்ணயித்து இருக்கிறோம். 1999-2000-வது ஆண்டில் அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்த அரசு நிர்ணயித்து இருக்கும் குறியீடு 74 இலட்சம் மெட்ரிக் டன். மொத்த உணவு உற்பத்தி இந்த அரசு நிர்ணயித்து இருப்பது 100 இலட்சம் மெட்ரிக் டன். உணவு உற்பத்தியில் நம்முடைய முதலமைச்சர் ஆட்சியில், century அடிப்போம் என்ற அந்த மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை மானியம் என்றாலே பேசுவதற்கு கொஞ்சம் இனிமை இருக்காது என்றுதான் காலையிலே இனிப்பெல்லாம் தந்தேன். ஆனால்

அது பசியை மட்டும் போக்கும். இந்த subject dull-ஆக இருந்தாலுமகூட, இது நமக்குத் தேவையானது என்ற காரணத்தாலேயே இதையெல்லாம் பொறுத்துக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

நெல் கொள்முதல் பற்றியெல்லாம இங்கே பேசினார்கள். 1998-ஆது ஆண்டில் நெல் கொள்முதல், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 440 ரூபாயாகவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 470 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இது மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடியது. மாநில அரசாங்கம் பரிந்துரை செய்திருக்கிறது. நேரத்தின் குறைவு கருதி அந்த விவரங்களுக்குள் நான் போகவில்லை. ஆனால் இது மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, ஏற்கெனவே, 15 ரூபாயாக அவர் காலத்திலே ஊக்கத்தொகை உயர்த்தப்பட்டு, 35 ரூபாயாக அது உயர்ந்திருந்த நிலையில், இந்த ஆண்டு 50 ரூபாய் என்று சொன்னால், வெளி மார்க்கெட்டிலே, மற்ற மாநிலங்களிலே, மற்ற மாவட்டங்களிலே நெல் ஒரு குவிண்டால் எவ்வளவுக்கு என்ன விலை விற்கிறது என்று கணக்குப் பார்த்து, கூடுதலாக விற்கிறது என்று தெரிந்து அதை விவசாயிகளுக்குக் கொடுத்துதான் ஆக வேண்டுமென்று சொல்லி ஊக்கத் தொகையைக் கூடுதலாக்கி 50 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதன்மூலம், 10 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நாம் செய்திருக்கிறோம். அந்த வகையில் விவசாயிகளுக்குச் சென்றிருக்கின்ற பணம் 50 கோடி ரூபாய் இந்த ஊக்கத்தொகை மூலம் விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கிறது. விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லையென்று நாம் பேசுகிறோமே. இதை நம்முடைய முதலமைச்சர் தராவிட்டால் இந்த 50 கோடி ரூபாய் எங்கே யாருக்குப் போகும்? வியாபாரிக்கு வேண்டுமென்றால் போய் இருக்கலாம். ஆனால், நாம் கொள்முதல் செய்து இந்த ஊக்கத்தொகை கொடுத்ததால் 50 கோடி ரூபாய் — கோடி என்றால் சில பேருக்கு, சில கட்சிக்காரர்களுக்கு கோடி என்பதெல்லாம் ரொம்ப சர்வசாதாரணம்—முன்னாலே இருக்கிறீர்கள், உங்களுக்கெல்லாம் அது ரொம்ப பெரிய தொகை என்று தெரியும். ஆக, 50 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பிற்பகல் 1-10

அதைப்போல, விதை நெல்லுக்கு இன்றைக்கும் மானியம் நாம் வழங்குகிறோம். கிலோவுக்கு 2 ரூபாய் வழங்குகிறோம். வீரிய ஒட்டு நெல்லுக்கு 5 ரூபாய்; பயிர் வகைகளுக்கு 3 ரூபாய் வழங்குகிறோம்.



அதைப்போல, விதை உற்பத்தி, புதிய ரகங்கள் உற்பத்தி என்பனவற்றில் மத்திய அரசாங்கம் நிர்ணயித்ததைவிட இந்தத் தமிழக அரசு கூடுதலாக சாதித்திருக்கிறது. மத்திய அரசு பரிந்துரை இலக்கின்படி விதை மாற்று விகிதங்களில் சாதனை எவ்வளவு இருக்க வேண்டுமென்று சொன்னால், 17 சதவீதம் நெல்லுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இப்படி 17 சதவீதம் என மத்திய அரசாங்கமே நிர்ணயித்திருக்கிறது. ஆனால், தமிழக அரசின் வேளாண்மைத் துறை சாதனை 21 சதவீதம் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள முடியும்.

இந்தத் துறை மூன்று ஆண்டு காலமாக அவர்களை வேகமாக முடுக்கிவிட்டது மட்டுமல்ல, தரமான விதைகளை உற்பத்தி செய்ய, வாங்க, அதை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய அல்லது யாராவது தவறான விதைகளை விநியோகம் செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க என்றெல்லாம், நாங்கள் அவர்களுக்குக் கொடுத்த ஊக்கத்தின் காரணத்தினாலே இன்றைக்கு இந்தச் சாதனையை நாம் அடைந்திருக்கிறோம். அதனாலேதான் உணவு உற்பத்தி நம்முடைய இலக்கை மிஞ்சியிருக்கிறது. நாம் சாதனை படைத்திருக்கிறோம்.

1998-99 ஆம் நிதியாண்டிலே, பிப்ரவரி 1999 வரை, 21,291 மெட்ரிக் டன் விதைகளை விவசாயிகளுக்கு நாம் வழங்கியிருக்கிறோம். அதைப்போல, இந்த ஆண்டின் குறியீடாக 18 ஆயிரம் டன். ஏன் குறைக்கிறீர்கள் என்று கேட்பீர்கள். இது இந்த ஆண்டு. நம்முடைய குறியீடு. ஏதாவது நிலுவையிலே இருந்தால், அதை Germinate செய்து பார்த்து சரியாக இருக்கிறது, முளைக்கும் என்றால் அந்த விதைகளையும் சேர்த்துக் கொடுக்கிறபோது, கூடுதலாக வரும். ஆகவே, ஒவ்வோர் ஆண்டும், நாம் விதை உற்பத்தி செய்வது அல்லது கொள்முதல் செய்வது, பிறகு விவசாயிகளுக்கு வழங்குவது என்ற வகையில் இந்த மூன்று ஆண்டு காலமாக உரிய நேரத்திலே எல்லா மாவட்டங்களிலும் தேவையான விதைகளைத் தங்குதடையின்றி நாம் வழங்கியிருக்கிறோம்.

அதேநேரத்திலே, நான் சொன்னதைப்போல, 1995-96 ஆம் ஆண்டிலே இந்த விதைகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று மாதிரிகள் எடுத்தது, 39,227. 1996 ஆம் ஆண்டு 44,153 விதை மாதிரிகள் எடுத்தோம். 1997-98-ல் 52,863 விதை மாதிரிகள் நாம் எடுத்தோம். 1998-99 ஆம் ஆண்டில் 58,389 மாதிரிகள் எடுத்தோம். ஏன் என்றால், விதைகளைத் தரக்கட்டுப்பாடு செய்து, நல்ல விதையாக இருக்க வேண்டும்

என்பதற்காக, நாம் ஆய்வு செய்வதற்காக எடுக்கின்றோம். இந்த அளவுக்கு 58 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாதிரிகளை எடுத்து விதைகளைப் பரிசோதித்து, நல்ல விதைகளை விவசாயிகளுக்கு நாம் கொடுத்திருக்கிறோம்.

இதிலே எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று நீங்கள் கேட்டால், 1996-97-ல் தரமற்ற விதைகளை விற்பனை செய்த 190 பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம், 1997-98 ஆம் ஆண்டில் 235 பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1998-99 ஆம் ஆண்டிலே 342 பேர் மீது நடவடிக்கை எடுத்து, நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டு சில பேருக்கு அபராதம், தண்டனை ஆகியவை பெற்றுத் தரப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கு நாங்கள் விடுகிறோம். அப்படிச் செயல்படவிடக்கூடிய காரணத்தினாலேதான் இப்போது ஓரளவுக்குத் தரமான விதைகள் நம்முடைய விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய அந்த வாய்ப்பை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

பிற்பகல் 1-15

இங்கே தமிழ்நாட்டிலே உள்ள மொத்த சாகுபடியில், முன்பு சொன்னதைப் போல 28.11 இலட்சம் எக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது. இந்த நிலங்களுக்கு மழைக்காலங்களிலே, வாய்க்கால்கள், கிணறுகள், ஏரிகள் ஆகியவற்றிலிருந்து தண்ணீர் கிடைப்பது மட்டுமல்ல; தமிழகத்திலே 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கசிவுநீர்க் குட்டைகள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இப்போது கட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றின் மூலமும் நிலத்தடி நீர் நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, கிணற்றை நம்பி விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கு அது பயன்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதைப்போல பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், அதன் அடிப்படையிலே பண்ணை மேன்மைப் பணிகள், சுழற்சி முறை நீர்ப்பாசன விவசாயிகள் சங்கங்கள் அமைத்தல் போன்ற பணிகள், காவிரி, கீழ் பவானி, பரம்பிக்குளம், ஆழியாறு, கம்பம் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கோதையாறு, சித்தாறு பட்டணங்கால் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் நீரை எடுத்துச் செல்லுதல், பங்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு சிமெண்ட் வாய்க்கால்கள் கட்டுதல், பிரிவுத்



தொட்டிகள் கட்டுதல் போன்ற பணிகளை ஒரு எக்டேருக்கு 5,800 ரூபாய் செலவிலே நாம் செய்கிறோம். இந்த விவசாய சலுகைகளுக்கு மேலாண்மை மானியம் வழங்கப்படுகிறது. அதாவது, ஒரு எக்டேருக்கு 5,800 ரூபாய் அரசு செலவு செய்கிறது. மேலாண்மை மானியம் விவசாயிகளுக்கு எக்டேருக்கு 50 ரூபாய்; மீண்டும் அந்த வாய்க்காலை பராமரித்துக்கொள்வதற்காக விவசாயிகள் 50 ரூபாய்தான் கட்ட வேண்டும், மத்திய அரசாங்கம் 250 ரூபாய், மாநில அரசாங்கம் 250 ரூபாய் சேர்த்து 500 ரூபாய் ஒரு எக்டேருக்குத் தரப்படுகிறது. அதை அவர்கள் வைத்துக்கொண்டு அந்த வாய்க்கால்களைப் பராமரிக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு 448 விவசாய சபைகளும், 8,216 விவசாயச் சங்கங்களும் அமைக்கப்பட்டு, விவசாயிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி முடிய 49,743 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும், 73,823 எக்டேர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனப் பணிகளும் ரூ.35.84 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன; செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு தாமிரபரணி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நம்முடைய மாநில அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியதால் 1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக 1999-2000 ஆம் ஆண்டில் 34 கோடியே 8 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவில் 64 ஆயிரம் எக்டேரில் பண்ணை மேன்மைப் பணிகளும், 75 ஆயிரத்து 600 எக்டேரில் சுழற்சி முறை பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட உள்ளன. இதுவரை மொத்தம் தமிழகத்தில் 6 இலட்சத்து 98 ஆயிரத்து 871 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டன. இவையெல்லாம் விவசாயிகளுக்குச் செய்கின்ற காரியங்கள்தான். நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கின்றார்கள். பல்வேறு திட்டங்களிலே விவசாயிகளுக்கு நாம் உதவி செய்கிறோம். அப்படிச் செய்கின்ற அந்தப்பணிகளிலே

இவையும் அடங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகள் இவர்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் ஆகிய முறைகளிலே 90 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அதைப்போல இதர விவசாயிகளுக்கு 70 சதவீதம் மானியம் சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனத்திற்கு நாம் வழங்குகிறோம். அதிகபட்சம் ஒரு எக்டேருக்கு ரூ. 25 ஆயிரம் மானியமாக இந்தத் திட்டத்தின் மூலம் நாம் வழங்குகிறோம். இதை. கோவை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் பெரும்பாலும் பெற்று பயன் அடைந்திருக்கிறார்கள்; அதுவும் தென்னை மரத்தை வளர்க்கக்கூடிய விவசாயிகள். ஏனென்று சொன்னால் அவர்களுக்கு நிலத்தடி நீர் இல்லை; கிணற்றில் தண்ணீர் இல்லை. இருக்கிற தண்ணீரை வைத்துக்கொண்டு தென்னை மரத்தை காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி--திராட்சை மற்றும் எல்லாவற்றுக்கும் தான் — அந்த அடிப்படையிலே சொட்டு நீர்ப் பாசன, தெளிப்பு நீர்ப் பாசன முறையைப் பயன்படுத்துகின்றனர்.

*பிற்பகல் 1-20*

1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய 904.12 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 35,000 எக்டேர் பரப்பில் சிக்கன பாசன முறை கொண்டு வரும் இத்திட்டத்தை வரும் நிதியாண்டில் 1,400 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த முடிவெடுக்கப் பட்டிருக்கிறது. இது குறித்து கோவை மாவட்டத்தில் இருக்கக் கூடியவர்கள் சொல்வார்கள். 'என்னுடைய மாவட்டத்திற்கு அதிகமான நிதி கொடுங்கள்' என்று மோகன் கந்தசாமி சொல்லலாம். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்பார். எல்லா மாவட்டங்களினுடைய தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது.

தோட்டக்கலைத் துறை மூலம்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பதைப் போல—பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம். சென்ற ஆண்டு 60 இலட்ச ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். உங்களுக்கே தெரியும், உதகையிலே தேயிலை பயிரிடுகிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1 ஏக்கர், 2 ஏக்கர்தான் அதிகபட்சமாக இருக்கும் அங்கே. சிறிய விவசாயிகள்தான் அதிகம். பெரிய தோட்டம் வைத்திருப்பவர்கள், தேயிலைத் தோட்டம் வைத்திருப்பவர்கள் குறைவு. அங்கு பருவ மழை தவறிவிட்டால், பயிர் செய்திருக்கிற தேயிலை பட்டுப்போய்விடுகிறது. ஆகவே இந்த தெளிப்பு நீர்ப் பாசன முறையை நாம் ஏன் அங்கே செய்யக் கூடாது என்று ஒரு முடிவெடுத்து, முதலமைச்சரிடம் எடுத்துச் சென்றவுடன், இது நல்ல ஆலோசனை, மாநில அரசாங்கத்திலே இதற்கான நிதியைத் தருகிறோம், உடனடியாக அதை நிறைவேற்றுங்கள் என்று சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 62 இலட்சம் ரூபாயை அதற்கான நிதியாகத் தந்தார்கள். அந்த நிதியைக் கொண்டு அந்த மாவட்டத்திலே சென்ற ஆண்டு நாம் அந்தத் தெளிப்பு நீர்ப் பாசன முறையை —sprinkler irrigation system—போட்டுக் கொடுத்தோம். எல்லா விவசாயிகளும் இதைப் பாராட்டுகிறார்கள். உதகையில் இருக்கிற பெரும்பாலான விவசாயிகள் 'இதுபோன்ற முறையை எல்லா பகுதிகளுக்கும் விரிவுபடுத்த. நீங்கள் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, அல்லது மாநில அரசாங்கமே அந்த முறையைக் கொண்டு வந்தால் மிகச் சிறப்பாக நாங்கள் உற்பத்தி செய்ய முடியும்; நாங்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும்' என்ற அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பணியும் இந்த அரசு, கழக அரசு வந்த பிறகு, முதலமைச்சராக கலைஞர் பொறுப்பேற்ற பிறகுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.



காவிரி டெல்டா பகுதிகளிலும், மற்ற பகுதிகளிலும் வளர்கின்ற நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் நலன் காக்க மாண்புமிகு முதலமைச்சர் மரம் வளர்க்கும் திட்டத்தைப்பற்றி இப்போதுகூட சர்ச்சை எழுந்தது. அந்தத் திட்டத்தினைப் பற்றி நம்முடைய முதலமைச்சரிடத்திலே கேட்டபோது, — என்னுடைய ஆசை. அதிலே ஒன்றும் தவறு இருக்க முடியாது. யார் யாரோ, யார் யாரையோ புகழ்கிறபோது, தந்தை பெரியாருடைய பிள்ளை, பேரறிஞர் அண்ணாவினுடைய தம்பி, நான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த, ஒரு சிறு விவசாயக் குடும்பத்திலே பிறந்த நான், அதேபோல இருக்கக்கூடிய மக்களைக் கைதூக்கி விடுவதற்கு என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன் என்று இந்த

அவையிலே மட்டுமல்ல, வெளியிலும், நாட்டு மக்களுக்கும் சொல்லக்கூடிய தலைவரின் பெயராலே (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திட்டம் வர வேண்டும் என்று அவருடைய இலட்சியத்தினைப் பின்பற்றுகிற என்னைப் போன்றவர்களுக்கு அந்த உணர்வு ஏற்படுவதை யாராலும் தடுத்துவிட முடியாது. அந்தத் திட்டத்தினைக் கொண்டு வரலாம் என்று கருதுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே அதைப்பற்றிக் கேட்டபோது—அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் உடன் இருந்தார்கள்—அவர் சொன்னார், என்னுடைய பெயராலே வேண்டாம்; ஏனென்றால் இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, 1994-லேயே சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, என்னுடைய பிறந்த நாளை நீங்கள் மேடை போட்டு, பெரிய poster போட்டு, light எல்லாம் போட்டு கொண்டாடுவதைவிட, நாட்டு மக்களுடைய நலன் முக்கியம்; சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் மரங்கள் நடுங்கள்; செடிகள் நடுங்கள்; செடிகளை வைத்து மரங்களை வளருங்கள் என்று சொன்னார். சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லி அவர் விடுத்த அறிக்கையை ஏற்று நாங்களெல்லாம் அந்தப் பணியிலே ஈடுபட்ட காரணத்தினாலே, இப்போது மரம் வளர்க்க வேண்டுமென்று சொன்னபோது அவர்கள் சொன்னார்கள். "ஜனநாயகத்திலே இன்றைக்கு நான் முதலமைச்சராக இருக்கலாம். நாளைக்கு இன்னொருவர் வரலாம், மீண்டும் நான் வரலாம். ஆனால் இதற்காக என்னுடைய பெயரை வைத்துவிட்டால், இன்னொருவர் வரக்கூடிய காரணத்தால்—அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக பெயரை எடுப்பதையெல்லாம் நாமே பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்—ஒரு திட்டத்திற்குப் பெயரை மாற்றுவது, மீண்டும் வந்துவிட்டால், பெயரை வைப்பது என்பதெல்லாம் தேவையில்லை. ஆகவே, யார் வந்தாலும் சரி, அந்தப் பெயரை எடுக்க முடியாமல் இருக்க வேண்டும்" என்று அந்த அடிப்படையிலேதான் அவர் சொன்ன பெயர் இது. மக்கள் நலம் காக்க, 'மாண்புமிகு முதலமைச்சர் மரம் வளர்ப்புத் திட்டம்' என்பது. யார் வேண்டுமானாலும் முதலமைச்சராக வரலாம். நாட்டுக்காக 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கிற கலைஞரும் வரலாம் அல்லது அறிக்கை விட்டுக்கொண்டே இருப்பவர்களும் வரலாம் ஜனநாயகத்திலே. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே பெயரை மாற்றும் அப்படிப்பட்ட ஒரு நிலை வரக்கூடாது என்பதற்காக இதை அறிவித்து இன்றைக்கு மரம் நடுகின்ற அந்தப் பணியில் ஈடுபட்டு நாம் 1997-98-லே மரங்களை நட்டோம். அந்தப் பணம் மீதமிருந்தது. 1998-99-லே அந்தப் பணத்தை மேலும்



பயன்படுத்தினோம். இப்பொழுது சில மாவட்டங்களில் 90 சதவிகிதம் அந்தச் செடிகள் இருக்கின்றன. சில இடங்களில் 75, 80 சதவிகிதம்; சராசரியாகப் பார்த்தால் 80, 85 சதவிகிதம் செடிகள் இருக்கின்றன. பட்டுப்போன இடங்களில் மீண்டும் செடி வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், எங்களுக்கெல்லாம் யார் என்றுகூட தெரியாது. எல்லாக் கட்சிகளிலிருந்தும் கடிதம் எழுதுகிறார்கள், இதைப் பாராட்டி இந்த ஆண்டும் எந்த ஊராட்சி ஒன்றியத்திலாவது செய்யுங்கள்; என்று சொன்னார்கள். ஆக இந்த வருடம் மேலும்' இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்று நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். இதுபோன்ற நல்ல திட்டங்களை உருவாக்குவதிலே இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

*பிற்பகல் 1-25*

உரத்தைப் பொறுத்தவரைக்கும் ஐக்கிய முன்னணி அரசு இருந்தபோது, உரத்தின் விலையைக் குறைத்தார்கள். மானியம் கொடுத்தார்கள், மத்திய அரசின் சார்பில். அந்த மானியம் விவசாயிகளைச் சென்றடைய உரம் விலை குறைக்கப்பட்டது. இப்பொழுதும் உரத்திற்கு மானியம் தந்தார்கள். யூரியா போன்ற உரத்திற்கு மானியம் கொடுத்தார்கள். ஆனால் அந்த மானியம் உற்பத்தியாளருக்குத்தான் என்று சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொன்ன காரணத்தால் இப்பொழுது உரத்தின் விலை கூடிவிட்டது. யூரியா விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.183-லிருந்து ரூ.200 ஆக ஆகிவிட்டது. மானியம் என்று சொல்லும்போது, அது மத்திய அரசோ, மாநில அரசோ எதுவாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தக்கூடியவர்களுக்கு சலுகை இருக்க வேண்டுமென்று நினைப்பது இயற்கை. அதுதான் நம்முடைய மாநில அரசின் கொள்கை. ஆனால் மத்திய அரசு இப்பொழுது உர விலைக்குக் கொடுத்த மானியம் முழுவதும் உரம் தயாரிக்கின்ற ஆலை அதிபர்களுக்குச் செல்லக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்டது. அதனால் பயன்படுத்தக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. கிடைக்காத காரணத்தினால் ஒரு குவிண்டால் ரூ.183-லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்பட்டது. ஆகவே அது இந்த அரசினுடைய பொறுப்பு அல்ல. மத்திய அரசினுடைய அந்தக் கொள்கையின் காரணத்தால், விலை உயர்த்தப்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பயிர்ப் பாதுகாப்புக்காக எத்தனையோ நடவடிக்கைகள்; அதையெல்லாம் நான் இங்கே சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை. நல்ல முறையில் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Slug caterpillar பற்றி மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்களும் மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு விளக்கம் தந்ததைப்போல, 1997 மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஈரோடு மாவட்டத்தில் நத்தைக்கடையூர், கொளாநள்ளி, முத்தையன்வலசு, இலயாத்தூர் போன்ற பகுதிகளில் Slug caterpillar வந்தது. இந்தத் தகவல் கிடைத்தவுடன் உடனடியாக வேளாண்மைத் துறை, வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அனைவரையும் முடுக்கிவிட்டு நடவடிக்கை எடுத்து அது இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதைப்போல, இந்த ஆண்டும் கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நத்தைப்பூச்சி வந்திருக்கிறது. அதற்கான ஆலோசனை வழங்கி spray செய்வதற்கான முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளின் சார்பில் 'ஹெலிகாப்டர் மூலம் spray செய்ய முடியுமா' என்று கேட்கிறார்கள். அதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. அப்படிச் செய்தால், குடிநீரில் பட்டால் பாதிப்பு ஏற்படலாம்; அல்லது ஆடு, மாடு போன்ற உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்று சொல்லப்பட்டது.

*பிற்பகல் 1.30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இன்னொன்று தொழில்நுட்ப அடிப்படையில் பார்த்தால் தென்னை மரம் உயரமாக இருக்கும்; அதன் சோலை அடிக்குள்ளேதான் Slug caterpillar என்ற அந்த நத்தைப்பூச்சி இருக்கிறது எனவே மேலே தெளிப்பதனால் பயன் இல்லை, spray செய்தால்தான் வேகமாக பீச்சி அடித்தால்தான் அந்தப் புழுக்கள் எல்லாம் கீழே கொட்டி அழியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, அதுதான் சரியான வழி என்று வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியது. அதன் அடிப்படையில் இப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.



அதோடு இன்னொரு கடுமையான வியாதி. தென்னையைத் தாக்கும் Eriophyde சிலந்தியானது தென்னையின் குரும்பிலே, அதன் அடிப்பாகத்திலே உட்கார்ந்து, அதன் ஓட்டுக்குள்ளே சென்று சக்தியை உறிஞ்சி விடுகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கி, உரிய மருந்துகள் தெளிப்பதற்கு எல்லாவிதமான ஆலோசனைகளையும் வழங்கி, தக்க நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். அந்த நடவடிக்கையின் அடிப்படையிலேயே தொடர்ந்து நாம் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Eriophyde பொறுத்தவரையிலே அதை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இன்னும் வரவில்லை. ஆனால் காலப்போக்கிலே அதைக் கட்டுப்படுத்தலாம். இதிலே இரண்டு முறைகள் இருக்கின்றன. Spray செய்வது ஒரு முறை; வேர் மூலமாக root feeding கொடுத்து, மருந்து செலுத்தி உடனடியாக கட்டுப்படுத்துவது மற்றொரு முறை. இந்த இரண்டு முறைகளிலே எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற ஆலோசனையை நாங்கள் வழங்கியிருக்கிறோம். அதனால் விவசாயிகள் இப்போது பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். Eriophyde Mite-க்கு மருந்து அடிப்பதற்கு அல்லது root feeding மூலமாக மருந்து செலுத்துவதற்கு 2.53 கோடி ரூபாய் செலவாகும் என்ற ஓர் அறிக்கையை நாங்கள் முன்பு பெற்றிருந்தோம். இப்போது இரண்டாவது வந்திருக்கிறது. இது முன்பு நாங்கள் வந்தபோது பெற்றது. கொச்சியிலே இருக்கின்ற தென்னை வளர்ச்சி வாரியம் (Coconut Development Board) இதற்காக 25 இலட்ச ரூபாயைக் கொடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கும் எழுதியிருக்கிறோம். மாநில அரசின் நிதிநிலைக்கேற்ப அதற்கு நிதி ஒதுக்க யோசித்துக் கொண்டிருக்கிறோம், அதை முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்ய இருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறை வேகமாகச் செயல்படுவதற்காக 14 இடங்களில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களும், 56 வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களும், வேளாண்மை இயக்குநர் அலுவலகமும் 29 கோடி ரூபாய் செலவிலே 1998-99 ஆம் ஆண்டிலே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிக் கட்டி முடிக்கப்பட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களிலே ஒரே குடையின் கீழ் இயங்குவதைப்போல, வேளாண்மைத் துறையைச் சார்ந்த எல்லா அலுவலகங்களும் இயங்க வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதை நடைமுறைப்படுத்த உரிய ஆணை

வழங்கியிருக்கிறோம். அவ்வாறு கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களிலே ஒருங்கிணைந்து அவர்கள் எல்லாம் செயல்படுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (D.P.A.P.) தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய 16 மாவட்டங்களில், 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படவிருக்கிறது. மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 50 சதவிகிதம் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தச் சங்கங்கள் மூலமாக மொத்தம் 58.40 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் water sheds நிறுவி நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

அதைப்போல, ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இதில் 1998-99 ஆம் நிதியாண்டில் 21 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை, ஈரோடு, சிவகங்கை, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் 35,302 எக்டேர் பரப்பிலே திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இதுபோன்ற திட்டங்கள் தமிழக அரசாலே மிகச் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின் பேரிலே என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

அறுவடை செய்த முதல் பொருள் சேதமின்றி நுகர்வோரைச் சென்றடையவும், அதிக உற்பத்தியாகும்போது விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும், அதுபோல, நுகர்வோரையும் திடீர் விலை ஏற்றத்தின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிலுக்காகவும் ஒரு புதிய துறையை ஏற்படுத்த வேண்டும் என சமீபத்திலே மத்திய அரசு ஒரு ஆலோசனையை வழங்கியிருக்கின்றது. அந்த ஆலோசனையின் பேரிலே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு ஆலோசனை வழங்கியதன் பேரில், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கழகம், தொழில் முனைவோர்களுடன் சேர்ந்து, பங்கு மூலதனம் அளித்து உதவி புரிந்து வருகிறது. அதுபோல, தோட்டக்கலைத் துறையும் உணவு பதப்படுத்தும் தொழிலுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி, இத்தொழில்



வளர்ச்சிக்கு உதவிபுரிந்து வருகிறது. விவசாயிகளின் நன்மையைக் கருத்திற்கொண்டு, உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்தோடு, புதிய உணவு பதப்படுத்தும் கொள்கையினை அறிவித்து, இதற்காக, தனியாக ஒரு துறையை உருவாக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, பல்வேறு தொழில் நுட்ப ஆலோசனைகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம் இன்று வழங்கியிருக்கிறது. அவற்றையெல்லாம் நான் இங்கே நேரத்தின் அருமை கருதி, சொல்லவில்லை.

அதைப்போல, செவ்வழுத்தல் நோய் கரும்பிற்கு வருகிறது. அதுவும் ஒரு கடுமையான நோய். அந்த செவ்வழுத்தல் நோய் வந்துவிட்டால், அந்தக் கரும்பையே எடுத்துவிட்டு, மீண்டும்தான் போட வேண்டுமே தவிர, அதைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசனை இல்லை. அதற்கு மருந்து இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை. புதிய கரும்பு இரகங்களைக் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டுமென்று, நம்முடைய கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு, இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 47 இலட்ச ரூபாயை, நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நம் விவசாயிகளுக்கு புதிய இரகக் கரும்புகளை, நோய் தாக்காத கரும்பு இரகங்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய விவசாயிகள் சார்பாக இங்கே பேசியவர்களெல்லாம் சொன்னார்கள்; பயிர் Insurance திட்டத்தைப் பற்றி. ஏற்கெனவே தமிழகத்திலே 1985-லேயிருந்து பயிர் Insurance திட்டம், யார் யார் கடன் வாங்கினார்களோ அவர்களுக்கு இருந்தது. பிறகு ஐக்கிய முன்னணி அரசு வந்தபிறகு, கடன் வாங்கிய விவசாயிகள், கடன் வாங்காத விவசாயிகள் அனைவருக்கும் Premium என்ற தொகையை மத்திய அரசாங்கமே செலுத்துவது; மாநில அரசாங்கம் ஒரு பங்கைச் செலுத்துவது என்ற ஒரு முறையை வைத்து, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை நம்முடைய மாநிலத்திலே எடுத்துக் கொண்டார்கள். அதேபோல, இந்தியா முழுவதிலும் எடுத்துக் கொண்டார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பே அந்த ஆட்சி போனவுடன், இப்போது பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, அதையே மாற்றிவிட்டு, அவர்கள் இந்தப் பயிர் Insurance திட்டத்திற்கு வேறொரு வடிவம் தந்து, இப்போது அதை அறிவித்து இருக்கின்றார்கள். அதை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும்

பயன்படுத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் பரிசிலித்துக் கொண்டிருக்கின்றது. அதற்காக மாநில அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஏற்படும்; நிதிநிலை எப்படியிருக்கும்; ஒத்துவருமா என்பதைப் பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே பயிர் Insurance திட்டத்தை தமிழக அரசின் சார்பிலே நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையை மட்டும் நான் உங்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-40*

இன்னொரு பிரச்சினை. Terminator gene விதை பற்றி இப்பொழுது பத்திரிகையிலே வருகிறது. அந்த விதையினாலே ஒரு பெரிய பாதிப்பு; ஏற்கெனவே இருக்கக்கூடிய விதைகள்கூட மலடாகிவிடும் என்கின்ற ஒரு நிலை. ஆகவே, இந்த Terminator gene Gatt ஒப்பந்தம், புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, மத்திய அரசாங்கத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையின் காரணத்தினாலே, அமெரிக்க நாட்டினுடைய நிறுவனமான மான்சாண்டோ நிறுவனம் Terminator விதைக்குக் காப்புரிமையைப் பெற்று, இந்தியாவிலுள்ள மைக்ரோ விதை நிறுவனத்தின் அதிகப் பங்குகளை வாங்கியிருக்கிறது. இந்த Terminator seeds மரபு பயிர்க் கொல்லி விதைகள் என்பதால் அது தமிழகத்திலே ஒருவித அச்சத்தை நம்முடைய விவசாயிகளிடத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த Terminator விதைகளைப் பயன்படுத்தினால், முதிர்ந்து அறுவடை நிலைக்கு வருவதற்கு ஒருசில நாட்களுக்கு முன்பே அப்பயிர்களில் உள்ள விதைகளே ஒருவித விஷத்தை உற்பத்தி செய்து அவ்விதையின் முளைப்புத் திறனை அழித்து மலடாக்கிவிடும் என்கின்ற ஒரு அச்சம் விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. பல மாநிலங்களிலே—ஆந்திர மாநிலத்தில் இதனாலேதான் பருத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி, விவசாயிகள் தற்கொலைக்கு ஆளானார்கள் என்பது ஒரு தகவல். அது சரியா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. கர்நாடகத்திலேகூட பாதிப்பு ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்து நம்முடைய மாநிலத்திலே இந்த விதை உற்பத்தியை அவர்கள் செய்வதற்கு 3 இடங்களிலே அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். தேனி மாவட்டத்திலே வீரபாண்டியிலும், தருமபுரி மாவட்டத்திலே கண்ணனூரிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலே கொண்டையம்பாளையத்திலும் அவர்கள் இப்போது உற்பத்தி



செய்வதற்குத் தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே விவாதித்து அதுபோன்ற நிலை இருக்குமானால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும், நாம் அதை அனுமதிக்கக்கூடாது, நம்முடைய விவசாயிகளுக்கு அதனாலே பெரிய பாதிப்பு வந்துவிடக்கூடாது என்றார்கள். இந்திய அளவில் தொழில்நுட்ப அங்கீகாரத்தைப் பெற்று அவர்கள் ஒரு இறுதியான முடிவுக்கு வந்து இதனாலே பாதிப்பு இல்லை என்ற முடிவுக்கு வந்து அறிவித்த பிறகு வேண்டுமானால் அமல்படுத்தலாமே தவிர, அந்த நிலை இல்லாத வரையில் இதை நாம் அனுமதிக்கக்கூடாது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கக்கூடிய காரணத்தாலே அதை வேளாண்மைத் துறை அனுமதிக்காது என்பதை இந்த அவையின் சார்பிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையிலே சில அறிவிப்புகளைச் செய்ய நான் விரும்புகிறேன். சுருக்கமாக அதன் தலைப்பை மட்டும் சொல்கிறேன். முழுவதையும் படித்தால் அதற்கே நேரமாகிவிடும். நெல் உற்பத்திக்கு Zinc Sulphate. நெல் உற்பத்தியைக் கூடுதலாக்குவதற்கு—ஒரு எக்டேருக்கு கூடுதலாக்குவதற்கு—Zinc Sulphate. பயறு வகைகளில் உற்பத்தியைத் தருவதற்கு Di-Ammonium Phosphate தெளிப்பதற்கு, அதற்காக நெல்லுக்கு 25,000 எக்டேருக்கும், அதைப்போல பயறு வகைகளுக்கு 50,000 எக்டேருக்கும் 25 சதவிகித மானியத்தில் இந்த ஆண்டும் நிதி உதவி விவசாயிகளுக்கு வழங்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நுண்ணுயிர் உரங்களுக்கு தரக் கட்டுப்பாடு. இது நமக்கு மிகவும் அவசியம். அதாவது தரக் கட்டுப்பாடு செய்து வாங்குவதற்காக திருச்சியிலே ஒரு ஆய்வகம் அமைக்க 17.50 இலட்சம்; இதற்கும் முதலமைச்சர் அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். விதைகள் தரமான விதைகளாகத் தரப்பட வேண்டும் என்பதில் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட நாம் முன்னேறித்தான் இருக்கிறோம். தரமான விதைகள் நம்முடைய விவசாயிகளுக்குத் தந்தாலும் விதைகள் வாங்குகின்றபோது ஈரப்பதத்தைக் கண்டறிய வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் ஆலோசித்து அதற்காக ஈரப்பதத்தைக் கண்டறியக்கூடிய கருவியினை 15,000 ரூபாய் விலையிலே, 160 வட்டாரங்களில் அமைக்க சுமார் 25 இலட்சம் ரூபாயை அனுமதித்திருக்கிறார்கள். 160 வட்டாரங்களிலே அது

அமைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல தோட்டக் கலைத் துறை. 50-லிருந்து 59-க்கும் மேற்பட்ட தோட்டக் கலைப் பண்ணைகள் இருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்கின்ற செடிகள், தென்னைமரக் கன்றுகள் ஆகியவற்றை எல்லாம் விவசாயிகளுக்குத் தருகிறார்கள். அவர்கள் அந்தப் பணத்தைக் கொண்டு வந்து அரசாங்கக் கணக்கிலே கட்டிவிடுகிறார்கள். மீண்டும் அந்தச் செடிகளை உற்பத்தி செய்ய வேண்டுமானால் அரசாங்க அனுமதி பெற்றுத்தான் அந்தத் துறை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பணத்தை அவர்கள் தனியாக ஒரு கணக்கில் வைத்து உடனடியாக அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசித்து, இப்போது அதற்கான அனுமதியை வழங்கி இருக்கிறார்கள். என்வே, தனியாக தோட்டக் கலைத் துறையிலே அவர்கள் பணியாற்றுவதற்கு நிதி வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே: பசுமைக் குடில்கள். அந்தப் பசுமைக் குடில்கள் திட்டத்தின்கீழ் பூச்செடிகள் வளர்ப்பது; ஒரு பசுமைக குடில் அமைப்பதற்கு 3 இலட்சம் ரூபாய செலவாகும். விவசாயி வங்கிக் கடனாக ஒரு இலட்சம் ரூபாய் பெறலாம். மானியமாக ஒரு இலட்சம் ரூபாய். தமிழ்நாடு எங்கும் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று எனக் கணக்கிட்டு எப்படியாவது 25 இடங்களில் பசுமைக் குடில்கள் அமைத்து விவசாயிகளை ஈர்க்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன.

*பிற்பகல் 1-45*

வேளாண்மையைப் பொறுத்தவரையில், வேளாண்மைப் பொறியியல் துறையில் புதிதாக — ஏற்கெனவே 120-க்கும் மேற்பட்ட Tractors வாங்கி 25 வருடங்கள் ஆகிவிட்டன; அவையெல்லாம் சரியாக ஓடவில்லை; ஆகவே புதிதாக —100 Tractors வாங்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 500 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது.



அதேபோல், பயன்படுத்தாத 10 ஆயிரம் எக்டேர் நிலங்களைச் சீரமைக்கின்ற பணிக்கு நிதியுதவியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் —ரூ. 8 கோடி திட்டத்திற்கான நிதியுதவியை - அளித்து, அதனைச் செயல்படுத்த அனுமதித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் ஒரு Depot வைத்து இடுபொருட்கள், பண்ணைக் கருவிகள் ஆகியவற்றையெல்லாம், வாங்கி வைத்தால், விவசாயிகள் தங்கள் விளைபொருள்களைக் கொண்டுவந்து விற்றுவிட்டு, இடுபொருட்களை வாங்கிச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்று அறிந்து, முதற்கட்டமாக வரத்து அதிகமாக இருக்கக்கூடிய 10 விற்பனைக் கூடங்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு விற்பனைக் கூடத்திற்கு 7½ இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் மற்றும் அதற்கான நடைமுறை மூலதனச் செலவுக்கு நிதியைச் செலவழிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அவை எந்தெந்த ஊர்கள் என்பது பற்றிய விவரங்கள் என்னிடத்திலே உள்ளன; அதையெல்லாம் படிப்பதற்கு நேரம் இல்லை; அதனால் சொல்லவில்லை.

அதுபோல, விளை பொருட்களைக் கொண்டுவரக்கூடிய விவசாயிகள் அவற்றை எடை போடுவதற்கு, எடை மேடை இல்லை என்றும், அதனால் எடை குறைவாக இருக்கிறது என்றும் விவசாயிகளின் மத்தியிலே புகார் இருக்கிறது. வியாபாரிகள் விளைபொருட்களை வாங்கிக் கொண்டு வெளியே போகிறபோது, தங்களுக்கு எடை போடுவதற்கான வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, நல்ல வரத்துள்ள விழுப்புரம், செஞ்சி, திருப்பூர் ஆகிய இந்த 3 இடங்களிலும் எடை மேடை அமைக்கலாம் என்றும், ஒவ்வொன்றும் ரூ.15 இலட்சம் என்ற அளவிலே, ரூ.45 இலட்சம் செலவிலே அமைக்கலாம் என்றும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே விவசாயிகள் தங்குவதற்கு இடவசதி செய்திருக்கிறோம். இருந்தாலும், அது போதவில்லை என்கிறார்கள். வியாபாரிகளும், தாங்கள் தங்குவதற்கு இடவசதி வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அறைகள் கட்டிக் கொடுப்பதற்கு, 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், அறை ஒன்றுக்கு 8 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 80 இலட்சம்

ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலர் களங்களைப்பற்றி எல்லோரும், இங்கே பேசினார்கள். உலர் களம் அமைக்க சென்ற ஆண்டு நாம் திட்டமிட்டு அது சிறப்பாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் அதை விரிவுபடுத்தி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் மாவட்டத்திற்கு 10 உலர் களங்கள் அமைப்பது என்றும், மற்ற மாவட்டங்களுக்கு 5 உலர் களங்கள் என்று மொத்தம் 175 உலர் களங்கள் அமைக்க நம்முடைய முதலமைச்சர் ரூ.2,97,50,000 அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், பொருளீட்டுக் கடன் விவசாயிகளுக்குத் தருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருகிறபோது, விலை குறைவாக இருந்தால், அவற்றை வைத்துவிட்டு 50 சதவிகிதம் தொகையை வாங்கிக் கொள்ளலாம். அதேபோல், வியாபாரிகளுக்கும் நாம் 25 ஆயிரம் ரூபாய்தான் என்று சொல்லியிருந்தோம். அவர்களுக்கு அது போதாது; 5 இலட்சம் ரூபாய்க்குப் பொருட்களை வாங்குகிறார்கள் என்றால், 4 இலட்சம் ரூபாய்தான் கிடைக்கும் என்றால், அந்தப் பொருளை வைத்துவிட்டு போகும்போது, தங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் விவசாயிகளுக்கு உடனடியாக அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 50 சதவிகிதம், இதில் எது அதிகமோ அதைக் கொடுக்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

1996ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் பெய்த பெரு மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினாலும் காற்றினாலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு, பயிர்களுக்கு, கால்நடைகளுக்கு, மனித உயிர்களுக்கு மற்றும் விவசாயிகளுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்று சிலர் சொல்கிறார்களே அதற்காக இந்தத் துறையின் மூலம் சில தகவல்களைத் திரட்டியபோது எனக்குக் கிடைத்தவற்றை நான் சொல்கிறேன். இதற்காக மட்டும் 192 கோடியே



58 இலட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த மூன்று வருடத்திலே, ஏற்பட்ட சேதங்களுக்காக விவசாயிகளுக்கு 192 கோடியே 58 இலட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கின்றோம்.

இது மட்டுமல்லாது 1989-ல் கழக ஆட்சியில் இதே முதலமைச்சர் இருந்தபோதுதான் இலவச மின்சாரம் வந்தது. அப்போது இலவச மின்சாரத்திற்கு சலுகை கொடுத்தபோது 12 இலட்சத்து, 35 ஆயிரத்து, 941 pumpset-களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஆண்டு ஒன்றிற்கு 40,000க்கு மேற்பட்ட pumpset-களுக்கு seniority அடிப்படையிலேதான் கொடுத்திருக்கிறோம். அது பற்றிக்கூட இங்கே பேசப்பட்டது. 15 இலட்சத்து, 71 ஆயிரத்து, 431 pumpset-கள் இப்போது இருக்கின்றன. இதிலே 1989 முதல் 1999 வரை மொத்தமாக, மின்சார வாரியத்திற்காக மட்டும் அரசின் சார்பிலே செலுத்தப்பட்டிருக்கின்ற பணம் -- இவையெல்லாம் விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் —ரூ.4,556.48 கோடி. இப்படி தொடர்ந்து 1989-லிருந்து விவசாயத்திற்காக ஒவ்வொரு வருடமும் மின்சார வாரியத்திற்கு, விவசாயிகள் கட்ட வேண்டியவற்றை அரசாங்கம் கட்டியிருக்கிறது. அதாவது இப்படிக் கணக்கைப் போட்டுப் பார்த்தால் 4,556.48 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு, விவசாயிகள் பயன்படுத்திய மின்சாரத்திற்கு, இந்தச் சர்க்கார் கட்டுகிறது என்று சொன்னால், கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாராவது இருந்தால், இந்தச் சலுகை விவசாயிகளுக்கு கிடைத்திருக்குமா? யோசித்துப் பார்க்க வேண்டாமா? நன்றியுள்ள விவசாயிகள் நினைப்பார்கள், இவ்வளவு பெரிய சலுகையை.

அது மட்டுமல்ல, 1990ஆம் ஆண்டு விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது—தேசிய முன்னணி அரசு வந்தபோது, அறிவித்த கொள்கை—அதாவது 10,000 ரூபாய் வரை கடன் வாங்கியிருந்தால் அந்த ஆண்டிற்குப் பிறகு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அறிவித்ததை, இந்தியாவிலேயே முதன்முதலாக அமலாக்கியது கலைஞர் அவர்கள்தான். அப்படிச் செய்யும்போது, 209 கோடியே, 42 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம் தள்ளுபடி வகையிலே. அதாவது கூட்டுறவுச் சங்கங்கள் தள்ளுபடி செய்ததை நம்முடைய அரசாங்கம் திருப்பிக் கொடுத்தது. ஆக, இது போன்ற சலுகைகளை, திட்டங்களை, வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு நம்முடைய விவசாயிகளுக்கு தமிழக அரசாங்கம் சிறப்பாகச் செய்து வருகிறது.

ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். ஜனநாயகம் என்ற பெயரால் சில காலித்தன அராஜகம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில், பகுத்தறிவாளர்களைக் கொண்ட ஆட்சி, தமிழ்நாட்டில் எதிரிகள்கூட வியக்கக்கூடிய வண்ணம் சிறப்பாக, நடைபெற்றுக் கொண்டுள்ளது. அண்ணாவின் மறைவுக்குப் பின், கலைஞர் அவர்களின் தலைமையிலான அமைச்சரவை, தமிழகப் பெருமக்கள் அனைவரின் நம்பிக்கைக்கு பாத்திரமானதாகும். அதேபோல காரியங்களை சிறப்பாகச் செய்து வருவதுடன், இப்படிப்பட்ட ஒரு ஆட்சி மாறினால், இனி நம் தமிழர்களின் கதி அதோகதியாகிவிடும் என்று துணிந்து சொல்லலாம் என்று இந்தத் தலைவரை ஆளாக்கிய பெரியார் அவர்கள் சொன்னதுதான் இன்றைக்கும் நடக்கிறது.

அதுபோலவே, அண்ணா அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையிலே சொல்கிறபோது—விவசாயத்திலே எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்து அவர் செயல்படுகிறார் என்றால்,—"அரசின் திட்டம் எதுவாக இருந்தாலும் இந்த நாட்டினுடைய ஏழையெளிய மக்கள், தொழிலாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களை மையமாகக் கொண்டே திட்டம் தீட்டப்படும்" என்று அன்றைக்குச் சொன்னார். அதுதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் சொல்லியிருப்பது.

*பிற்பகல் 1-55*

அதைப்போல, அண்ணா அவர்கள் மேலும் ஒன்றைச் சொன்னார்கள். "ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம். அதிலே நியாயம் இருக்கிறது. கப்பல் வேண்டுமென்று கேட்கலாம், அந்தத் துறையில் இன்னும் நாம் முழுமையாக தேர்ச்சி பெறவில்லை. ஆனால், சோறு போடு என்று இன்னொரு நாட்டுக்காரனைப் பார்த்துக் கேட்டால், அதைவிடக் கேவலம் ஒன்றும் இருக்க முடியாது. ஆகவே விவசாயத்திலே நாம் கவனம் செலுத்த வேண்டும்." என்று அன்றைக்கு அண்ணா உணர்த்தினார். அந்தக் கருத்தைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தினாலே, அவர் சொல்கிறார் "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, அதுவே எல்லா தொழில்களுக்கும் மேலானது, மூலமானது. வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சாதனையைப் பொறுத்தே பொருளாதாரத் திட்டங்களின் வெற்றியும் அமையும், வேளாண்மைப் பொருட்களின் நிலையான விலைவாசிகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும். எனவேதான், இன்றைய தமிழக அரசு வேளாண்மை வளர்ச்சியில்



தீவிர கவனம் காட்டுகிறது" என்று இந்த முதலமைச்சர் எங்கள் தலைவர் கலைஞர் சொன்ன அந்த இலட்சிய அடிப்படையிலே இன்றைக்கு நீங்கள் தெரிவித்த நல்ல ஆலோசனைகளின்பேரில் இந்தத் துறை தொடர்ந்து செயல்படும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று, மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## கோரிக்கை எண் 20 - வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் - 20 வேளாண்மை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.7,58,44,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

கோரிக்கை எண் **52**—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

[1999 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,54,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையில் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*117. 1997-98ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*



1999 ஏப்ரல் 5]

*118. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*52. பள்ளிக் கல்வித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ்)*

*53. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)*

*54. ஆடுகளங்கள் விளையாட்டு வசதிகள் பற்றிய கையேடு 1999. (தமிழ், ஆங்கிலம்)*

*55. தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்)*

# இணைப்பு

*(66 ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண் 20—வேளாண்மை**

**கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

### அத்தியாயம் 1

**முன்னுரை**

*'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை'*

*-திருவள்ளுவர்*

நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை முக்கிய பொறுப்பு வகிக்கிறது. உணவு தானிய உற்பத்தியில் நமது நாடு தன்னிறைவு எய்திய போதிலும் பெருகிவரும் மக்கள் தொகையும் சுருங்கி வரும் சாகுபடி பரப்பும் உணவு உற்பத்தியில் நமது முயற்சிக்குச் சவாலாகவே உள்ளன. எனவே, பல்வேறு பயிர்களின் சாகுபடி செறிவினையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல்வேறு மத்திய-மாநில அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த பத்தாண்டுகளில் உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்கும் நோக்குடன் மத்திய அரசும் மாநில அரசும் தங்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நிலையான வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், தரமான வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்தல், பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரித்தல் ஆகியவையே இவ்வரசின் முக்கிய நோக்கங்களாகும். இதுவரை அடையப் பெறாமல் இருக்கும்

[1999 ஏப்ரல் 5

உற்பத்தித் திறனை அடைதல், மானாவாரி நிலங்களுக்கு உரிய தொழில் நுட்பங்களைப் பரப்புதல், தரிசு நிலங்களைப் பசுமை நிலங்களாக்குதல், அரிசி உற்பத்தியினை அதிகரித்திட 'எக்டேருக்கு 7 மெ.டன்.' அளவுக்கு உயர்த்திட, பயறு உற்பத்தியினை 'எக்டேருக்கு 600 கிலோ' அளவுக்குப் பெருக்கிட திட்டங்களைச் செயல்படுத்துதல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டம், மரம் வளர்ப்புத் திட்டம், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களின் மூலம் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், நுண்பாசனம், உயிர் உர உபயோகம், பண்ணை வருமானத்தைப் பெருக்க 'பலமுனை விரிவாக்கம்' போன்றவற்றின் மூலம் சாகுபடி செலவைக் குறைத்தல் ஆகியவற்றில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி 'இரண்டாவது பசுமைப் புரட்சியை' நோக்கி நடைபோடுகிறது.

**வேளாண்மைத் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு**

கோரிக்கை எண் 20

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்கு தலைப்பு | | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1998-99 | திருத்திய திட்ட மதிப்பீடு 1998-99 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000 |
|---|---|---|---|---|
| 2059 | பொதுப்பணிகள் | 72,61 | 72,61 | 76,60 |
| 2216 | வீட்டு வசதி | 10 | 10 | 10 |
| 2401 | பயிர்வளர்ப்பு | 5,37,65,10 | 8,76,65,47 | 5,41,58,28 |
| 2402 | மண்வள, நீர்வள பாதுகாப்பு | 47,46,11 | 61,31,71 | 56,63,37 |
| 2415 | வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி | 46,05,38 | 47,31,13 | 48,94,06 |
| 2435 | ஏனைய வேளாண் திட்டங்கள் | 30,84,54 | 36,08,78 | 31,33,17 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்பு திட்டங்கள் | 6,42,70 | 6,42,70 | 1,03,00 |
| 2551 | மலைப்பகுதிகள் | 12,63,39 | 11,66,79 | 11,43,10 |
| 2702 | சிறுபாசனம் | 11,14,80 | 11,28,86 | 12,58,72 |
| 2705 | பாசனப்பகுதி மேம்பாடு | 36,36,21 | 43,89,54 | 43,88,66 |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | 9,69,25 | 9,82,51 | 10,25,00 |
| 3435 | உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 1 | 7,00 | 1 |
| | துணை மொத்தம் | 7,39,00,20 | 11,05,27,18 | 7,58,44,07 |



1999 ஏப்ரல் 5]

கோரிக்கை எண் 52

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்கு தலைப்பு | | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1998-99 | திருத்திய திட்ட மதிப்பீடு 1998-99 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000 |
|---|---|---|---|---|
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவுகள் | 30,98,14 | 33,66,16 | 7,08,21 |
| 4402 | மண் வள மற்றும் நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 1,06,03 | 81,02 | 75,02 |
| 4408 | உணவுப் பொருட்கள் சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | 1 | 1 | |
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி குறித்த மூலதனச் செலவு | 15,02 | 1,39,00 | 23,36 |
| 4435 | ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 7,02 | 7,02 | 7,01 |
| 4551 | மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 2 | 2 | 2 |
| 5054 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 4,13,00 | 4,03,00 | 3,41,00 |
| | துணை மொத்தம் | 36,39,24 | 39,96,23 | 11,54,62 |
| | பெரு மொத்தம் | 7,75,39,44 | 11,45,23,41 | 7,69,98,69 |

**1999-2000 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்**

| வரிசை எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | 1999-2000-ல் செலவு (ரூ. இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| **வேளாண்மைத் துறை :** | | |
| 1 | புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் உள்ள விதை பதப்படுத்தும் பிரிவுக்கு 10 கி.வோ. திறனுள்ள டீசல் மின் உற்பத்தி சாதனத்தை வழங்குதல் | 0.50 |
| 2 | வம்பன் விதைப் பெருக்கப் பண்ணையில் 3 துளைக் கிணறுகளைப் புதிதாகத் தோண்டுதல் | 12.24 |
| 3 | பழைய வேளாண்மை விரிவாக்க மையங்களில் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 10.00 |
| 4 | அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் மூட்டை இடைச் செருகுக் கட்டைகளை வழங்குதல் | 20.88 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5 | 50 எக்டரில் உயர்க நெல் உற்பத்தி குறித்த செயல் முறை விளக்கம் | 3.50 |
| 6 | அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விதை பதப்படுத்தும் பிரிவுகளுக்குக் கட்டட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் | 14.78 |
| 7 | விதையின் தரத்தை மேம்படுத்துவதற்காக, விதை பதப்படுத்தும் பிரிவுகளை வலுப்படுத்துதல் | 30.60 |
| 8 | பழைய வேன்களுக்குப் பதிலாக புதிய வேன்கள் வழங்கி நடமாடும் மண்வள ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்குதல் | 22.50 |
| | மொத்தம் | 115.00 |
| | **தோட்டக்கலைத் துறை :** | |
| 9. | கன்னியாகுமரி மாவட்டத்தில் பழத்தோட்டம். அந்தூரியம் சாகுபடியை மேம்படுத்துதல். | 3.60 |
| 10. | தமிழ்நாட்டில் பாரம்பரியமாக மலர்செடி பயிரிடுவோருக்கு குளிர்பதன வசதியுடன்கூடிய பொருள் போக்குவரத்து வண்டிகளை வழங்குதல். | 4.00 |
| 11. | வேலூர் மாவட்டம் குடப்பட்டில் இரு திறந்த நிலைக் கிணறுகளை ஆழப்படுத்துதலும் மேலும் ஒரு திறந்த நிலைக் கிணறு தோண்டுதலும், நீரேற்றும் பொறி அறைகள் கட்டுதலும். | 4.00 |
| 12. | நாட்டுமங்கலம், பிச்சிவாக்கம் ஆகிய இடங்களில் 10 அடி விட்டமுள்ள துளைக்கிணறுகள் அமைத்து மூழ்கு வகை நீரேற்றுப் பொறி பொருத்துதல். | 8.50 |
| 13. | தோட்டக்கலை உதவி இயக்குநர். கோத்தகிரி, கொடைக்கானலிலுள்ள பிரையண்ட் பூங்கா, செட்டியார் பூங்கா ஆகிய இடங்களிலுள்ள அலுவலகக் கட்டடங்களைப் பழுது பார்த்தலும், பதசோலை, அரசு தோட்டக்கலைப் பண்ணையிலுள்ள பணியாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து கொடுத்தலும். | 4.25 |
| 14. | உதகமண்டலம், சேரிங் கிராஸ் தோட்டத்தில் தகவல்–விற்பனை மையத்தைக் கட்டுதல். | 20.00 |
| 15 | புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டம் உட்பட மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கும், தலைமையிட தோட்டக்கலை இணை இயக்குநர்கள் வீடுகளுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல், அறைக்கலன்களுக்கு வகை செய்தல். | 4.80 |
| | மொத்தம் | 49.15 |
| | **விதைச் சான்றளிப்பு :** | |
| 16. | கண்ணம்பாளையத்தில் முளைவிட்ட விதை ஆய்வுப் பண்ணைகளில் தற்போது இருக்கும் வசதிகளை மேம்படுத்தல். | 2.80 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 17. | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்குநர் அலுவலக வளாகத்திலுள்ள கண்ணாடி இல்லத்தில் தற்போது இருக்கும் வசதிகளை மேம்படுத்தல். | 3.00 |
| 18. | மதுரையிலுள்ள விதை ஆய்வுக் கூடத்தில் கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல். | 0.50 |
| 19. | கோயம்புத்தூரிலுள்ள விதை ஆய்வுக் கூடத்தில் கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல். | 1.80 |
| | மொத்தம் | 8.10 |
| | **வேளாண்மை விற்பனை :** | |
| 20. | மாநில "அக்மார்க்" தரநிர்ணய ஆய்வுக் கூடங்கள் 4-ஐ வலுப்படுத்துதல். | 25.00 |
| | மொத்தம் | 25.00 |
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் (அக்ரோ:.பெட்) :** | |
| 21. | வளர்ச்சி கட்டாா நிலையிலான 5 மையங்களுக்கு வாடகை இயந்திர வசதி செய்து கொடுத்தல். | 10.00 |
| | மொத்தம் | 10.00 |
| | **தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம் :** | |
| 22. | தருமபுரி, காளிப்பேட்டை நெக்டர் பயோடெக் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம் வேம்பை அடிப்படையாகக் கொண்ட உயிரி பூச்சிக் கொல்லிகள் தயாரிக்கும் திட்டத்தின் சமவீதப் பங்குகளில் முதலீடு செய்தல். | 22.00 |
| 23. | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழக சூரியகாந்தி எண்ணெய் ஆலையில் ஒரு எண்ணெய் பிழியும் இயந்திரம், உதிரிபாகங்கள் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றைக் கூடுதலாக அமைப்பதன் மூலம் அதன் திறனை உயர்த்துதல். | 25.00 |
| | மொத்தம் | 47.00 |
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :** | |
| 24. | புதிய ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி. | 36.96 |
| | மொத்தம் | 36.96 |
| | பெருமொத்தம் | 291.21 |

[1999 ஏப்ரல் 5

## அத்தியாயம் 2

### வேளாண்மை

**பருவநிலை :**

1998-99 ஆம் ஆண்டு ஒவ்வொரு பருவத்திலும் பெறப்பட்ட மழை விவரம், இயல்பான மழை மற்றும் சென்ற ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவு விவரம் பின்வருமாறு :

(மில்லி மீட்டரில்)

| வ. எண் | பருவம்/மாதம் | இயல்பான மழை | பெய்தமழை 1997 | பெய்தமழை 1998 | வேறுபாடு (%) இயல்பு மழையுடன் | வேறுபாடு (%) கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோடை '98 (மார்ச்-மே) | 136.5 | 96.2 | 77.9 | (-)43 | (-)19 |
| 2. | தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்) | 307.6 | 230.4 | 329.0 | (+)7 | (+)43 |
| 3. | வடகிழக்கு பருவம் (அக்-டிச) | 438.7 | 785.5 | 601.3 | (+)37 | (-)23 |
| 4. | குளிர்பருவம் (சனவரி '99 பிப்ரவரி '99) | 42.2 | 4.6 | 21.5 | (-)49 | (+)367 |
| | மொத்தம் (ஏப் '98-பிப்ரவரி '99) | 925.0 | 1116.7 | 1029.7 | (+)11.3 | (-)7.8 |

### 1998-99 ஆம் ஆண்டில் வேளாண்மை நிலைமை விவரம் :

மார்ச் '98 முதல் பிப்ரவரி '99 வரை பெறப்பட்ட மொத்த மழையளவு சராசரியுடன் ஒப்பிடுகையில் 11.3% அதிகமாகவும், கடந்த ஆண்டு இதே காலத்தை ஒப்பிடுகையில் 7.8% குறைவாகவும் உள்ளது. தென்மேற்கு பருவ மழை குறைவினால் மானாவாரி சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது.

மேட்டூர் அணை பாசனத்திற்காக வழக்கமாகத் திறந்துவிடப்படும் ஜூன் 12 ஆம் நாளுக்குப் பதிலாக ஒருவார கால தாமதத்துடன் ஜூன் 20 ஆம் நாளன்று திறந்துவிடப்பட்டது. நீர் நிலைமை குறைவாக இருந்ததால் விவசாயிகளின் மனதில் ஏற்பட்ட ஐயப்பாட்டினால்



1999 ஏப்ரல் 5]

காவிரி நதிப்படுகை பகுதிகளில் குறுவை சாகுபடி 1.181 இலட்சம் எக்டேரில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் குறுவை சாகுபடியில் 0.893 இலட்சம் எக்டேர் குறைவு ஏற்பட்டது. எனினும் 1997-98 ஆம் ஆண்டு குறுவை சாகுபடி பரப்பைக் காட்டிலும் 1998-99 ஆம் ஆண்டில் குறுவை சாகுபடி 4,800 எக்டேர் கூடுதலாகும். இக்குறைபாடு சம்பா பருவத்தில் ஓரளவு ஈடு செய்யப்பட்டது. டிசம்பர் '98-ல் இரண்டாம் வாரத்தில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் நெல் மற்றும் இதர பயிர்கள் சேதமடைந்தன. அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 41.11 இலட்சம் முழுவதுமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணமாக அளித்துள்ளது. இவ்வாறு நிலவிய சாதகமற்ற பருவநிலையால் சிறுதானிய மற்றும் பயறுவகைகள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. கரீப் பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு ரபி பருவத்தில் சரிசெய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் எதிர்நோக்கும் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இல.எக்) இலக்கு | பரப்பு (இல.எக்) பிப்ரவரி '99 வரை | பரப்பு (இல.எக்) எதிர் நோக்கும் சாதனை | உற்பத்தி (இல.மெ.டன்) இலக்கு | உற்பத்தி (இல.மெ.டன்) பிப்ரவரி '99 வரை | உற்பத்தி (இல.மெ.டன்) எதிர் நோக்கும் சாதனை |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 22.00 | 22.820 | 23.00 | 72.00 | 72.000 | 75.00 |
| சிறுதானியங்கள் | 15.00 | 10.665 | 12.00 | 19.25 | 13.845 | 16.00 |
| பயறுவகைகள் | 10.00 | 9.925 | 10.00 | 6.50 | 5.085 | 6.12 |
| உணவு தானியங்கள் | 47.00 | 43.410 | 45.00 | 97.75 | 90.930 | 97.12 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 12.730 | 14.00 | 21.00 | 18.800 | 21.00 |
| பருத்தி (இல.பொதிகள்) | 2.50 | 2.229 | 2.50 | 7.00 | 5.790 | 6.00 |
| கரும்பு (வெல்லமாக) | 2.50 | 2.869 | 3.00 | 30.80 | 35.340 | 36.96 |

### 1999-2000 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி இலக்கு :

இயல்பான மழை மற்றும் பருவநிலை நிலவும் என எதிர்பார்த்து ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூன்றாம் ஆண்டு திட்டமிடப்பட்ட உற்பத்தி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு 1999-2000 ஆம் ஆண்டின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

[1999 ஏப்ரல் 5

| | பரப்பு (இலெக்டர்) | உற்பத்தி (இலடன்கள்) |
|---|---|---|
| அரிசி | 22.00 | 74.00 |
| சிறுதானியங்கள் | 15.00 | 19.00 |
| பயறுவகைகள் | 10.00 | 7.00 |
| உணவு தானியங்கள் | 47.00 | 100.00 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 22.00 |
| பருத்தி (இல.பொதிகள்) | 2.50 | 6.50 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 37.00 |

## இடுபொருள் திட்டங்கள்

### அ. விதைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் வல்லுநர் விதைகள் 39 அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதைகளாக பெருக்கம் செய்யப்பட்டு பின் இந்த ஆதார விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி சான்று விதைகளாக பெருக்கம் செய்யப்படுகின்றது. சான்று விதைகளின் தரம் குறித்து விதைச் சான்றுத் துறையினரால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மாநிலத்தில் செயல்படும் 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இச்சுத்திகரிப்பு நிலையங்கள் ஆண்டுதோறும் 28,500 மெ.டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்டவை. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

1999-2000 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் விதை மாற்று சதவிகிதம் பின்வருமாறு:

| வ. எண் (1) | பயிர் (2) | மாநில அரசு பரிந்துரைக்கும் விதைமாற்று விகிதம் (3) | மத்திய அரசு பரிந்துரைக்கும் விதைமாற்று விகிதம் (4) |
|---|---|---|---|
| 1. | அரிசி | 21 | 17 |
| 2. | சிறுதானியங்கள் | 7 | - |
| 3. | பயறு வகைகள் | 12.5 | 11 |



1999 ஏப்ரல் 5]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | பருத்தி-மானாவாரி | 10 | 15 |
| | பருத்தி-இறவை | 15 | 15 |
| 5. | நிலக்கடலை | 5 | 3 |
| 6. | எள் | 15 | 10 |
| 7. | சூரியகாந்தி | 50 | 50 |
| 8. | ஆமணக்கு | 30 | 20 |
| 9. | சோயாமொச்சை | 20 | - |

1998-99 ஆம் ஆண்டின் கொள்முதல், விநியோக இலக்கு, பிப்ரவரி '99 வரையிலான சாதனை மற்றும் 1999-2000 ஆம் ஆண்டின் திட்டம் பற்றிய விவரங்கள் வருமாறு:

(அலகு மெ.டன்கள்)

| வ. எண் | பயிர் | இலக்கு 1998-99 | பிப்ரவரி '99 வரை சாதனை | 1999-2000 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| **(அ) கொள்முதல் :** | | | | |
| 1. | நெல் | 18000 | 15721 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 335 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1909 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11200 | 4701 | 11910 |
| 5. | பருத்தி | 375 | 181 | 375 |
| **(ஆ) விநியோகம் :** | | | | |
| 1. | நெல் | 18000 | 21291 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 320 | 400 |
| 3. | பயறுவகைகள் | 2600 | 1879 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11200 | 5136 | 11910 |
| 5. | பருத்தி | 375 | 202 | 375 |

குறிப்பு: 1997-98 ஆம் ஆண்டில் இருப்பில் இருந்த விதையையும் சேர்த்து விநியோகிக்கப்பட்டது.

## ஆ. உரங்கள்

[1999 ஏப்ரல் 5

பயிர்களின் பல்வேறு நிலைகளில் சரியான விகிதத்தில் தழை. மணி, சாம்பல் போன்ற பெரு ஊட்டச் சத்துக்களைத் தருவதில் இரசாயன உரங்களே முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. இவற்றை உபயோகிப்பதால் அதிக மகசூல் பெறுவது உறுதி. 1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 வரை இரசாயன உர உபயோகமும் 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டமும் வருமாறு:

(அலகு இல.மெ.டன்கள்)

| சத்துக்கள் | இலக்கு 1998-99 | பிப்ரவரி '99 வரை சாதனை | 1999-2000 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|
| தழை | 5.05 | 4.82 | 5.20 |
| மணி | 2.00 | 1.69 | 2.10 |
| சாம்பல் | 1.95 | 1.98 | 2.00 |
| மொத்தம் | 9.00 | 8.29 | 9.30 |

### நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மற்றும் விநியோகம் :

குடுமியான்மலையில் இயங்கிவரும் நுண்ணூட்ட உரக் கலவை தயாரிக்கும் மையம் ஆண்டுதோறும் 1,250 மெ. டன் நுண்ணூட்ட உரக் கலவையினைத் தயாரித்து விநியோகித்து வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி '99 வரை 1,098 மெ. டன். நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி செயயப்பட்டு 1,085 மெ. டன். விநியோகம் செய்யப்படடுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டும் 1,250 மெ. டன். நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

### இயற்கைப் பண்ணையம்

தரமான மக்கு எரு, உயிர் உர உபயோகம், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉர உபயோகம் போன்றவை சாகுபடி செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த பயிர்சத்து மேலாண்மையை உறுதி செய்யவும், வேளாண் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் இயற்கைப் பண்ணையம் பரிந்துரைக்கப்படுகிறது. இதன்படி பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

### உர அடையாள அட்டை விநியோகம்

விவசாயிகள் உரங்களை உரிய நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பெறுவதை உறுதி செயய உர அடையாள அட்டைகள்



1999 ஏப்ரல் 5]

வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு உர அடையாள அட்டைகள் வழங்கும் நோக்கோடு முதற்கட்டமாக தெரிவு செய்த 5 மாவட்டங்களான காஞ்சிபுரம், சேலம், திருச்சி, திருவாரூர் மற்றும் மதுரை ஆகியவற்றில் கோட்டத்திற்கு 30,000 உர அடையாள அட்டைகள் வீதம் 1,50,000 உர அடையாள அட்டைகள் தெரிவு செய்த கோட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக, 6,50,000 உர அடையாள அட்டைகள் அச்சிட்டு மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகித்திட அனுப்பப்பட்டுள்ளன.

### உயிரின உர உற்பத்தி மற்றும் விநியோகம்

வேளாண் துறையால் உயிர் உர உபயோகம் குறித்து தொடர்ந்து நம் மாநிலத்தில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய 6 இடங்களில் செயல்படும் உயிரின உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுதோறும் 1,400 மெ. டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. பிப்ரவரி 1999 வரை 1,386 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டும் 1,400 மெ. டன் உற்பத்தி செய்து விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

பசுந்தாள் உரத்தினைப் பயிர் செய்து அந்நிலத்திலேயே மடக்கி உழுவதால் மண்ணின் மக்கு அளவு அதிகரிக்கிறது 1998-99 ஆம் ஆண்டிற்கு 90 டன் பசுந்தாள் உர விதைகள் ரூ. 9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து 25% மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

### நீலப்பச்சைபாசி

1998-99 ஆம் ஆண்டில் 390 மெ. டன் நீலப்பச்சை பாசி உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிடப்பட்டு பிப்ரவரி 1999 வரை 372 டன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் இதே அளவு 390 மெ. டன் நீலப்பச்சை பாசி உற்பத்தி மேற்கொள்ளவும், விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கலவை உர உற்பத்தி போட்டி

[1999 எபரல் 5

நகராட்சிகள் ஒவ்வொரு ஆண்டும் தரமான அதிக கலவை உரம் தயாரிக்கும் முயற்சியை ஊக்குவிக்க, கலவை உர உற்பத்தி போட்டி நகராட்சிகளுக்கிடையே நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 32 நகராட்சிகள் கலவை உரப் போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்துள்ளன. மிகவும் தரமான அதிக அளவில் நகர கலவை உரம், உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நகராட்சிகளுக்குப் பரிசுத் தொகையும், சுழற்கேடயமும் வழங்கப்படும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிலை வாரியாக பரிசுகள் அளிக்கப்படும் விவரம் வருமாறு

| | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) |
|---|---|---|---|
| 1. மாநகராட்சிகள் சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் | 6000 | 3200 | 2250 |
| 2. முதல்நிலை நகராட்சிகள் | 5000 | 2400 | 1875 |
| 3. இரண்டாம் நிலை நகராட்சிகள் | 4000 | 2000 | 1500 |
| 4. மூன்றாம் நிலை நகராட்சிகள் | 3000 | 1400 | 1125 |
| 5. பேரூராட்சிகள் | 2000 | 1000 | 750 |

இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## கழிவுநீர் பண்ணைகள்

கழிவுநீரைப் பயன்படுத்தி தீவனப்புல், தென்னை, கரும்பு, காய்கறிப் பயிர்கள் மற்றும் இதர பயன்தரும் பயிர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் 18 கழிவு நீர்ப் பண்ணைகள் மூலம் பயிரிடப்பட்டு வருகின்றன. கழிவுநீரைப் இப்பண்ணைகளில் முறையாகப் பயன்படுத்தி, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து சுகாதாரக் கேடுகளைக் களையும் வகையில் நகராட்சிகள் செயலாற்றி வருகின்றன.

## இயந்திரக் கலவை உரம் தயாரித்தல்

நகராட்சிகளில் தினமும் சேகரிக்கப்படும் திடக் கழிவுகளைக் கொண்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மத்திய அரசு நிதி



1999 ஏப்ரல் 5]

உதவியுடன் இயந்திரங்களைப் பயன்படுத்தி தரமான கலவை உரம் தயாரிக்கும் அலகுகள் ரூ. 90.20 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் நாகர்கோவில், தாம்பரம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளில் செயல்பட்டு வருகின்றது. இதே போன்று ஈரோடு, புதுக்கோட்டை, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய நகராட்சிகளில் இயந்திரக் கலவை உரம் தயாரிப்பு அலகு ரூ. 100 இலட்சம் செலவில் அமைக்கும் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இ. பயிர் பாதுகாப்பு

மாநிலத்தில் முறையான பூச்சி நோய் கணிப்புப் பணி செயல்படுத்தப்பட்டு, பூச்சி மற்றும் நோய்களின் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் 7,356 இடங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து ஒவ்வொரு வாரமும் விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்பட்டு வருகிறது. பிப்ரவரி '99 வரை உணவுப் பயிர்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் 54 இலட்சம் எக்டேரிலும், உணவு அல்லாத பயிர்களில் 22 இலட்சம் எக்டேரிலும் மற்றும் விதை நேர்த்தி 22.50 இலட்சம் எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது.

## ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

குறைந்த செலவில் பயிர்களின் பூச்சி சேதத்தைத் தவிர்த்தல், மேலும் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுதல், மண்ணின் நச்சுத் தன்மை மற்றும் பூச்சிகளின் பெருக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் தமிழகத்தில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில் நுட்பம் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசுத் திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம் (அரிசி), தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம், தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் ஆகிய திட்டங்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு ஒரு இனமாக சேர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் மத்திய அரசுத் திட்டங்கள் மூலம் பின்வரும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1999 ஏப்ரல் 5

| வ. எண். | திட்டம் | செயல் இலக்கு | பிப்ரவரி '99 வரை சாதனை |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் விவசாய வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 1400 | 1390 |
| 2. | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் விவசாய வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 1200 | 1112 |
| 3. | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்கள்) | 533 | 414 |
| 4. | எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டேரில்) | 3000 | 2500 |

ஒதுக்கீட்டு தொகை ரூ. 233 இலட்சத்தில் பிப்ரவரி '99 முடிய ரூ. 192.472 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிலும் மத்திய அரசின நிர்வாக ஒப்புதலின் அடிப்படையில் இத்திட்டங்கள் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய வயல்வெளிப் பள்ளி அணுகுமுறையினை நிலக்கடலை மற்றும் பயறுவகைப் பயிர்கள் போன்ற பிற பயிர்களில் விரிவுபடுத்தும் நோக்குடன் 1998-99 ஆம் ஆண்டில் தமிழக அரசு ரூ. 26.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தில் மாவட்ட அளவிலான பயிற்சிகளுடன நிலக்கடலை பயிரில் 200 வயல்வெளிப் பள்ளிகளும் பயறுவகைகளில 180 வயல்வெளிப் பள்ளிகளும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி '99 முடிய ரூ. 16.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு இனமாக பூச்சிநோய் கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகளையும் வேளாண் துறையின் அலுவலர்களையும் பூச்சி நோய் கணக்கெடுப்பு பணிகளில் பயிற்றுவிக்க மதுரையிலும் மற்றும் காஞ்சிபுரத்திலும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையங்கள் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் ஒரு மத்திய அரசு மையம் செயல்படுகிறது. இம்மையங்கள் உயிரினக் கட்டுப்பாட்டு ஒட்டுண்ணிகளையும வளர்த்து விவசாயிகளுக்கு வழங்குகின்றன.



1999 ஏப்ரல் 5]

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையின் உபயோகத்தை வலுப்படுத்த திருச்சிராப்பள்ளி, சேலம், தர்மபுரி, ஈரோடு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எட்டு உயிரின கட்டுப்பாட்டு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு உயிரியல் கொல்லிகள் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்**

பல்வேறு பயிர்களில் ஒட்டுண்ணி விடுதல் மூலம் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும் பரப்பு பின்வருமாறு:

*(பரப்பு எக்டேர்)*

| பயிர்பூச்சிகள் | நிலையங்கள் (எண்கள்) | 1998-99 இலக்கு | பிப்ரவரி '99 வரை சாதனை | 1999-2000-க்கான குறியீடு |
|---|---|---|---|---|
| 1. கரும்பு இடைக்கணுப்புழு | 21 | 10500 | 10200 | 10500 |
| 2. தென்னை கருந்தலைப்புழு (பெத்திலிட்ஸ், பிரகோனிட்ஸ், யூலோபிட்ஸ்) | 19 | 10250 | 9028 | 10250 |
| 3. பருத்தி (காய்ப்புழு/என்பிவி) | 3 | 1500 | 1375 | 1500 |
| 4. மணிலா சிகப்பு கம்பளிப்புழு (என்பிவி) | 4 | 480 | 380 | 480 |
| 5. தென்னை காண்டாமிருக வண்டு (குப்பிகள்) (பச்சை மஸ்கார்டின் பூஞ்சாணம்) | 2 | 10000 | 9000 | 10000 |

**இலை மூலம் டை-அம்மோனியம் பாஸ்பேட் தெளித்து பயறுவகைகள் உற்பத்தியை அதிகரித்தல்**

இலை மூலம் டை-அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை 2 சதம் நீர்க்கரைசலாக பூக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் பயறுவகைகளின் மகசூல் எக்டேருக்கு சுமார் 150 கிலோ கூடுதலாக்க முடியும் என்ற ஆராய்ச்சியின் அடிப்படையில் இவ்வுத்தியை விவசாயிகளிடையே பரவிடச் செய்ய 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 62.50 இலட்சம் செலவில் இடுபொருட்கள் மற்றும் தெளிப்பதற்கான செலவில் 50 சதம் மானியமாக எக்டேருக்கு ரூ. 125 வழங்கி 50,000 எக்டேர் பரப்பில்

இத்திட்டம் செயல்படுத்த தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. பிப்ரவரி 99 வரை 37600 எக்டேர் பரப்பில் திட்டம் செயல்படுத்தப்பட்டு ரூ. 46.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**நெய்வேலி காட்டாமணக்கை அழித்தல்**

காவிரிப் படுகையில் உள்ள வாய்க்கால் மற்றும் பாசன வழிகளில், பாசனத்திற்கு இடையூறாக இருக்கும் நெய்வேலி காட்டாமணக்கு என்ற களையை அகற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 1997 ஆம் ஆண்டு முதன் முறையாக 2384 எக்டேர் பரப்பில் 2-4-டி என்ற களைக்கொல்லி பயன்படுத்தப்பட்டு காய்ந்த செடிகள் எரித்து அழிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ. 102.32 இலட்சம் செலவிடப்பட்டது.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய எட்டு காவிரிப் படுகை மாவட்டங்களில் தொடரப்பட்டு 3344 எக்டேர் பரப்பில் 2-4-டி களைக்கொல்லி தெளிக்கப்பட்டு அதன் காய்ந்த செடிகளை அப்புறப்படுத்தி எரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்காக அரசு ஒதுக்கீடு செய்த ரூ. 299.334 இலட்சத்தில் ரூ. 290.190 இலட்சம் செலவிடப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிலும் காவிரிப் படுகை மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்**

வேளாண் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க மக்கள் நலன் காக்க மழைவளத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி 25 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று ஊராட்சி ஒன்றியம் வீதமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 25 கி.மீ. தூரத்திற்குச் சாலைகளின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் நட்ட மரக்கன்றுகளைப் பராமரிக்க 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 299.531 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதில் நீர் ஊற்ற, காவலர் கூலி மற்றும் 20% தழைக்காத மரக்கன்றுகளை மாற்றுதல் ஆகியவற்றிற்குச் செலவினங்கள்





மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. தற்போது இதில் பிப்ரவரி '99 வரை ரூ. 191.882 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டம் சென்ற ஆண்டு செயல்படுத்தியது போல் இவ்வாண்டு புதிதாக உருவாக்கப்பட்ட விடுபட்ட 2 மாவட்டங்களான திருவள்ளூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ. 58.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. தற்போது பிப்ரவரி '99 வரை ரூ. 41.790 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வேளாண் மன்றம்**

அகில இந்திய அளவில் வேளாண்மையில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ள வேளாண் வல்லுநர்களைக் கொண்ட "வேளாண் மன்றம்" ஒன்று அமைக்க அரசு கொள்கை அளவில் ஏற்று அதன் முதற்கட்டமாக ஒரு அடிப்படைக் குழுவையும் ஏற்படுத்தியுள்ளது. இக்குழு மாநில வேளாண் மன்றம் அமைப்பது குறித்து ஆராய்ந்து "மாதிரி சட்ட முன்வடிவினை" விரைவில் அரசுக்குச் சமர்ப்பிக்கும்.

**துறைகளின் செயல்பாடுகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வருதல்**

வேளாண்மை மற்றும் அதன் சகோதரத் துறைகளின் செயல்பாடுகள் தனித்தனியே வெவ்வேறு அலுவலகங்களில் உள்ளதால் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் எளிதில் பெற இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்வதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**இஸ்ரேல் நாட்டு "தஹல்" நிறுவன ஆலோசனை ஆய்வு**

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தருமபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அதிக வருவாய் தரவல்ல பயிர்கள் சாகுபடி மற்றும் அதிக வருவாய் தரவல்ல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உகந்த திட்டமிடுதலுக்கான ஆய்வுப் பணி இஸ்ரேல் நாட்டை சார்ந்த 'தஹல்' ஆலோசனை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி

[1999 ஏப்ரல் 5

நிறுவனத்தால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

## மாநிலத் திட்டங்கள்

### தென்னை மேம்பாட்டுத் திட்டங்கள்

தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு தமிழ்நாட்டில் பல்வேறு தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. நெட்டை மற்றும் நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென 26 தென்னை நாற்றங்கால்களும், நெட்டை இரக நெற்றுகள் உற்பத்தி செய்வதற்கென ஆறு தாய்மரத் தோட்டங்களும் பராமரிக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெட்டைக் கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ. 12 எனவும், நெட்டை x குட்டைக் கன்றுகள் ரூ. 20 எனவும் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டு தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆண்டு இலக்கு, பிப்ரவரி 1999 வரை சாதனை மற்றும் 1999-2000 குறியீடு ஆகியவை பின்வருமாறு:

அலகு இலட்சம் எண்கள்

| வ. எண். | இரகங்கள் | 1998-99 இலக்கு | பிப்ரவரி '99 வரை சாதனை | 1999-2000 குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் | | | |
| | அ. நெட்டை | 15.50 | 13.14 | 15.50 |
| | ஆ. நெட்டை x குட்டை | 9.65 | 8.60 | 9.65 |
| | மொத்தம் | 25.15 | 21.74 | 25.15 |
| 2. | தென்னங்கன்றுகள் விநியோகம் | | | |
| | அ. நெட்டை | 12.00 | 10.25 | 12..00 |
| | ஆ. நெட்டை x குட்டை | 7.00 | 5.75 | 7.00 |
| | மொத்தம் | 19.00 | 16.00 | 19.00 |

### தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்

இத்திட்டம் தென்னை சாகுபடி பரப்பை அதிகரிப்பதன்மூலம் தென்னை நெற்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன்



1999 ஏப்ரல் 5]

செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியம் வழங்கும் 100 சத நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ. 3000-மும் இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 1500 வீதமும் மொத்தம் எக்டேர் ஒன்றுக்கு ரூ. 6000 மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை தென்னை நடுவோர்க்குத் தேவையான கன்றுகள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் பராமரிப்பு செலவுகளுக்கும் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 70.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### குட்டை x நெட்டை மற்றும் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி

ஆண்டுதோறும் வேலூர் மாவட்டம் நவ்லாக் அரசு தென்னை நாற்றங்கால் பண்ணையில் குட்டை x நெட்டை தென்னங்கன்றுகள் 30,000 உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பிப்ரவரி '99 முடிய 30,000 குட்டை x நெட்டைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. குட்டை x நெட்டை கன்று ஒன்றின் விலை ரூ. 30.

மேலும் இந்தப் பண்ணையில் ஒவ்வொரு ஆண்டும், 100000 தரம் வாய்ந்த நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பிப்ரவரி '99 முடிய 1,29,000 நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டமானது தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் (50:50 பங்கு) செயல்படுத்தப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 20 இலட்சத்தில் பிப்ரவரி மாதம் முடிய ரூ. 14.20 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### தென்னையில் சிவப்பு சிலந்தியின் (ஈரியோபிட்) தாக்குதல்

தென்னையில் இச்சிலந்தியின் தாக்குதல் கோயம்புத்தூர், கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தென்பட்டது. பின்னர் அது திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களுக்குப் பரவியது. இத்தாக்குதல் பிற மாவட்டங்களிலும் பரவக்கூடிய வாய்ப்புள்ளது.

[1999 ஏப்ரல் 5

இச்சிலந்தி பாளையின் காம்பின் அடிப்பாகத்திலிருந்து மிருதுவான திசுக்கள் மற்றும் குரும்பைகளின் சாறுகளை உறிஞ்சி சேதப்படுத்துகிறது. இத்தாக்குதலின் அறிகுறி முதலில் பாளைகளில் முக்கோணத் திட்டுகளாகவும், பின்னர் பழுப்பு நிறத் திட்டுகளாகவும் மாறுகிறது. இதனால் தேங்காய்களில் தழும்புகளும் நீள்வாக்கில் பிளவுகளும் காணப்படுகிறது. இப்பகுதிகளில் பிசின் போன்ற திரவமும் உருவாகிறது. இதனால் தேங்காய்களின் அளவு சிறியதாகவும், குறைந்த பருப்பு உடையதாகவும், தரமற்ற நார்களை உடையதாகவும் ஆகிறது.

இச்சிலந்தியின் தாக்குதலுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் பல்வேறு வயல் ஆராய்ச்சிகளை வெவ்வேறு மருந்துகளைக் கலந்து, மேற்கொண்டு பின்வரும் பரிந்துரைகளை செய்துள்ளது.

பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 30 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கலாம்.

1. மீத்தைல் டெமட்டான் 25 ஈசி - 4 மிலி/லிட் நீரில்
2. டிரைஅசோஸ்பாஸ் 40 ஈசி - 5 மிலி/லிட் நீரில்
3. மோனோகுரோட்டோபாஸ் 36 (நீரில் கரையும் தன்மையுடையது) 1.5 மிலி /லிட்டர் நீரில்

**45** நாட்களுக்கு ஒருமுறை வேர்மூலம் மருந்தளித்தல்

மோனோகுரோட்டோபாஸ் 36 (நீரில் கரையும் தன்மையுடையது) - 15 மிலி + 15 மிலி நீர்

கருத்தரங்குகள், வானொலி, துண்டுப்பிரசுரங்கள், மடிப்பான்கள், செய்தித்தாள்கள் மற்றும் விரிவாக்கச் சாதனங்கள் மூலம் மேற்கூறிய பரிந்துரைகளை தென்னை வளர்ப்பவர்கள் கடைபிடிக்க விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ரூ. 253 இலட்சத்திற்கு கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்திடமிருந்து 100 சத மானியமாக நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இதற்கிடையில் தென்னை வளர்ச்சி வாரியம் ரூ. 25 இலட்சம் இச்சிலந்தியினைக் கட்டுப்படுத்த 1998-99 ஆம் ஆண்டு வழக்கமான தென்னை வளர்ச்சித் திட்டத்தில் உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த தென்னை பயிரிடும் இனத்தின்கீழ் கூடுதலாக வழங்கியுள்ளது. இதைச் செலவு செய்ய அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



1999 ஏப்ரல் 5]

**ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே ஆகும்.

1998-99 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரை சாதனை, 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன பின்வருமாறு :

| வ. எண். | இனங்கள்/அலகு | 1998-99 இலக்கு | பிப்ரவரி 1999 வரை சாதனை | 1999-2000 குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | சாகுபடி பரப்பு (இல.எக்.) | 2.50 | 2.229 | 2.50 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 7.00 | 5.790 | 7.30 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3750 | 1808 | 3750 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 3750 | 2019 | 3750 |
| 5. | விதைகொள்முதல் (நிதி இல.ரூ.) | 79.00 | 44.525 | 79.00 |
| 6. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (எக்) | 1500 | 1500 | 1500 |
| 7. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (இல.ரூ.) | 0.45 | 0.775 | 0.90 |

**பருத்தி தொழில் நுட்பவியல் குழு**

நடைபெறும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1999-2000 ஆம் வருடத்தில் மத்திய அரசு உதவியுடன் பருத்தி தொழில் நுட்பவியல் குழு (Technology Mission on Cotton) அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பரிசிலனையில் உள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறு குழு II (Mini Mission II)-விற்கு மொத்த ஒதுக்கீடான ரூ. 465 கோடியினை மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும். 1999-2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ. 9.8 கோடியாகும். இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 7.4 கோடி. மாநில அரசின் பங்கு ரூ. 2.4 கோடி. பருத்தியின் உற்பத்தியைப் பெருக்க, தக்க பயிர் பாதுகாப்பு செய்து பின் அறுவடை முறைகளைப் பின்பற்றி விற்பனை செய்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

[1999 ஏப்ரல் 5

மாநிலத்தில் பருத்தி நூற்பாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய பருத்தி பயிரிடும் பரப்பளவை அதிகப்படுத்தி, உற்பத்தித் திறனை உயர்த்த மாநில அளவில் பருத்தி அபிவிருத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது.

**கரும்பு அபிவிருத்தித் திட்டம்**

பல்வேறு தொழில் நுட்பங்களைக் கையாண்டு, கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1998-99 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரை சாதனை, 1999-2000 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன பின்வருமாறு:

| வ. எண். | இனங்கள்/அலகு | 1998-99 இலக்கு | பிப்ரவரி 1999 வரை சாதனை | 1999-2000 குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | பரப்பு (இல.எக்) | 2.50 | 2.869 | 2.75 |
| 2. | உற்பத்தி (இல.மெ.டன்) (வெல்லமாக) | 30.80 | 35.340 | 37.00 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் (எக்) | 10500 | 10200 | 10500 |
| 4. | ஒட்டுண்ணி விடுதல் (நிதி இல.ரூ.) | 3.13 | 3.04 | 3.75 |
| 5. | செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் (எண்) | 575 | 575 | 575 |

**கரும்பு கொள்முதல் விலை**

1997-98 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 8.5 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் கொண்ட ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக ரூ.484.50 நிர்ணயம் செய்தது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள சட்டபூர்வ குறைந்தபட்ச விலை கட்டுபடியாகாததால் கரும்பிற்கு அதிக விலை கொடுக்கப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று கரும்பு பயிரிடுவோரிடமிருந்து முறையீடுகள் வந்ததால், 8.5 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானம் கொண்ட ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு ரூ. 660 கொடுக்க தமிழக அரசு பரிந்துரை செய்தது.



1999 ஏப்ரல் 5]

கரும்பிற்கு நடப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீத சர்க்கரைத் திறன் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 527 என சட்டபூர்வ, குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து மத்திய அரசு, அறிவித்துள்ளது. தமிழகத்திலுள்ள கரும்பு விவசாயிகள், கரும்பு பயிரிடுவதற்காகும் செலவினங்கள் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசு அறிவித்துள்ள விலைக்கும் கூடுதலாக கட்டுப்படியாகக் கூடிய ஒரு விலையை மாநில அரசு நிர்ணயிக்க வேண்டுமென கோரி வருகிறார்கள். எனினும், தமிழகத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் நடப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு விலை பரிந்துரை செய்வதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன. இவ்வழக்கின் பேரில் உயர் நீதிமன்றம் மாநில அரசு, கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யவோ அல்லது அறிவிக்கவோ கூடாது என இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக மாநில அரசு கரும்புக்கு விலை பரிந்துரை செய்வதை நிறுத்தி வைத்துள்ளது. அரசு இந்த வழக்கினை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் மறுப்புரை தாக்கல் செய்து இடைக்கால தடையை நீக்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம்**

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. கரும்பு போக்குவரத்தை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதி முறைகளின்கீழ், இம் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் கரும்புக்கு, டன் ஒன்றுக்கு ரூ. 5 என்ற விகிதத்தில் வசூலிக்கப்படும் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து, கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது.

இந்த ஆண்டு உயர்விளைச்சல் தரும் தரமுடைய செவ்வழுகல் நோய் எதிர்க்கும் திறன் கொண்ட கரும்பு இரகத்தை உருவாக்குவதற்கென, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 14.69 இலட்சம் ஒப்பளிப்பு செய்யக் கருதப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 5

கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி விவரம் கீழ் வருமாறு :

| வருடம் | (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 1994-95 | 691.15 |
| 1995-96 | 836.19 |
| 1996-97 | 626.63 |
| 1997-98 | 393.98 |
| 1998-99 | 370.00 |

கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் புதிய சாலைப் பணிகள், சாலைப் பராமரிப்பு பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | புதிய சாலைகள் செலவு | அமைத்த தூரம் (கி.மீ.) | பராமரிப்பு செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1994-95 | 420.76 | 28.500 | 309.84 | 730.76 |
| 1995-96 | 273.65 | 46.870 | 225.86 | 499.51 |
| 1996-97 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 | 411.30 | 34.900 | 475.12 | 886.42 |
| 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) | 260.00 | 25.050 | 300.00 | 560.00 |

1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 560 இலட்சம் செலவில் புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 730 இலட்சம் செலவில் பழைய சாலைகளைப் பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உழவர் பயிற்சி நிலையங்கள்**

விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சியளித்து அதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாய பண்ணை, மகளிர் மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்குக் கிராம அளவிலான அடிப்படைப் பயிற்சியும், களப்பயிற்சி செயல்விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மேலும் பண்ணைச் செய்திகள் வானொலி மற்றும் தினசரிகள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. வருடந்தோறும்



1999 ஏப்ரல் 5]

உழவர் தினவிழா நடத்தப்பட்டு, விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள இதர வல்லுநர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் பயனடைய வழி வகுக்கிறது. மற்றும் விவசாயிகள் ஆண்டுதோறும் சுற்றுலாவாக ஆராய்ச்சி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அந்த ஆராய்ச்சி நிலையங்களின் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்து அதனைத் தங்கள் வயல்களில் செயல்படுத்துகின்றனர்.

விவசாயிகளுக்கு வேளாண்மை பற்றிய பயிற்சி அளிப்பதுடன் மட்டுமல்லாது, உழவர் பயிற்சி நிலையங்கள் வேளாண் சார்ந்த சிறுதொழில் குறித்து சிறப்புப் பயிற்சிகளும் அளித்து விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன. காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தருமபுரி, பவானி, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம், ஆகிய இடங்களில் இயங்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 40,000 விவசாயிகள் பயனடைகின்றனர்.

**மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்**

குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண் துறையின்கீழ் பணியாற்றிவரும் விரிவாக்க அலுவலர்கள் மேன்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட, நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மாநில அளவிலான இப்பயிற்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள், இதர அரசுத் துறை மற்றும் இதர நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு ரூ. 12.53 இலட்சம் செலவில் 1,984 அலுவலர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் இந்நிலையத்தில் அளிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் பிப்ரவரி 1999 வரை 644 அலுவலர்களுக்கு ரூ. 3.81 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு**

மண்ணின் தன்மை, அதன் பௌதீக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவற்றைக் கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து சர்வதேச நிலைக்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி நில அமைப்பியலின்படி வரைபடம் வரைந்து பயன்படுத்தும்

நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் இம்மண் அளவை அமைப்புகளில் ஆண்டு இலக்கான 1.50 இல.எக்டேரில், பிப்ரவரி 1999 வரையில் 1.13 இல.எக்டேர் பரப்பில் விரிவான அளவை மேற்கொள்ளப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டு இவ்வளவைத் தொடர்ந்து 1.50 இலட்சம் எக்டேரில் மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட மண்வளத் தொகுப்பேடு**

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க மண் வகைபீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஏட்டளவில் இருந்த மண்வளத் தொகுப்பேடுகள் உலகவங்கி நிதி உதவியுடன் அச்சிடப்பட்டு தகவல் களஞ்சியமாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 7.13 இலட்சம் செலவில் 7 மாவட்டங்களுக்கும் இரண்டாவது கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் 16 மாவட்டங்களுக்கும் மண்வளத் தொகுப்பேடுகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் பொதுவான தகவல்கள் மண்ணின் குணாதிசயங்கள், உற்பத்தித் திறன், பாசனத் திறன், ஏற்புடைய பயிர்கள் போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. வேளாண் பெருமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கிராம அளவில் பிரதான மண்வகைகளும், பேருட்ட நிலையும், பாசன நீரின் தன்மையும், இடம் பெற்றுள்ள இம்மண்வளத் தொகுப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-12-1998 அன்று சேலத்தில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டார்கள்.

**களர், உவர் நிலச் சீர்திருத்தம்**

தமிழ்நாட்டில், நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஆண்டிற்கு 1,600 எக்டேர் விகிதம் மூன்று ஆண்டுகளில் (1998-99 - 2000-2001) 4,800 எக்டேர் களர், உவர் நிலங்களைச் சீர்திருத்தும் திட்டம் தொடங்கபபட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் 1600 எக்டேர் நிலப்பரப்பில் களர், உவர் நிலங்களைச் சீர்திருத்துவதற்காக ரூ. 127.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி 1999 முடிய 400 எக்டேர் களர், உவர் நிலங்கள் ரூ. 44.40 இலட்சம் செலவில் சீர்திருத்தப்பட்டுள்ளன.

**மண் பரிசோதனை நிலையங்கள்**

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்



மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து குறிப்பான உரப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இலக்கிடப்பட்ட 8.68 இலட்சம் மண் மாதிரிகளில் பிப்ரவரி 1999 முடிய 5.99 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 5.54 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 2.88 இலட்சம் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வகங்கள் களர், உவர் மண் பகுதிகளுக்குச் சீர்திருத்த ஆலோசனை வழங்குதல், கிராம அளவிலான மண்வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர் தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம், கருத்துக்காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உர தொழில் நுட்பங்களை பரப்புவதில் இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் உறுதுணை புரிகின்றன.

**உரப் பரிசோதனை நிலையங்கள்**

விவசாயிகளுக்குத் தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி வழங்கும் நோக்கத்துடன் உரக் கட்டுப்பாடு ஆணையின்கீழ் உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர்கள், சில்லறை மற்றும் மொத்த உர விற்பனை மையங்கள், உர உற்பத்திக் கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகளை எடுக்கின்றனர். ஆண்டொன்றுக்கு 17,220 உர மாதிரிகள், 14 உரப் பரிசோதனைக் கூடங்கள் மூலம் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்விலக்கில் 1998-99 ஆம் ஆண்டு 15,772 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு 15,625 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் 729 உர மாதிரிகள் தரக்குறைவானவை என கண்டறியப்பட்டன. அவற்றில் 477 இனங்களுக்கு துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 115 இனங்கள் பல்வேறு நிலைகளில் துறையின் பரிசிலனையிலும் 137 இனங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது. சட்ட நடவடிக்கையின்கீழ் நீதிமன்றத்தில் 5 இனங்களில் வழக்கு பதிவாகியும் 132 இனங்கள் நீதி மன்றத்தில் வழக்கு மேற்கொள்ள பரிசிலனையிலும் உள்ளன.

இத்துறையின் தரக் கட்டுப்பாடு பிரிவால் அமலாக்கப்படும் 1985 ஆம் ஆண்டு உரக் கட்டுப்பாடு ஆணை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் தரமான இரசாயன உரங்களை விநியோகிக்க வழி வகுக்கிறது.

[1999 ஏப்ரல் 5

**பூச்சிமருந்து பரிசோதனை நிலையங்கள்**

வேளாண்மைத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு 16,236 பூச்சிமருந்துகள் ஆய்வு செய்யும் திறன் கொண்ட 9 பூச்சிமருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பூச்சிமருந்து தரக் கட்டுப்பாட்டு திட்டத்தின்கீழ் 14,683 மாதிரிகள் எடுக்கப்பட்டு 13,792 எண்கள் இதுவரையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதில் 287 மாதிரிகள் தரமற்றது என கண்டறியப்பட்டுள்ளன. 33 தரமற்ற மாதிரிகள் தயாரித்த தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர் மற்றும் விற்பனையாளர்கள் மீது 1968 பூச்சி மருந்து சட்டப்படி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தரமற்ற பூச்சிமருந்து மாதிரிகள் 195 எண்கள் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 59 எண்கள் பூச்சிமருந்து மாதிரிகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரமற்ற மாதிரிகள் 2.08 சதவிகிதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை நீதிமன்றத் தீர்ப்பின்படி 15 தரமற்ற மாதிரிகள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டு ரூ. 87,000 அபராதம் செலுத்தப்பட்டுள்ளது. 18 தரமற்ற மாதிரிகளின் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது.

**பயிர் விளைச்சல் போட்டி**

பயிர் விளைச்சல் போட்டிகளில் விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்துகொள்ள விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியை அதிகப்படுத்துவது அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய பயிர் விளைச்சல் போட்டித் திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா (இறவை) சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வருமாறு:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| இதர பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |



1999 ஏப்ரல் 5]

1998-99 ஆம் ஆண்டில் இந்தப் போட்டிகள் ரூ. 16.87 இலட்சம் ஒதுக்கீட்டுடன் நடத்தப்படுகின்றன. மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ. 100 ஆகவும் மற்றும் இதர பயிர்களுக்கு ரூ. 50 ஆகவும் மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ. 50 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1999 வரை மாநில அளவில் 1,254 விவசாயிகளும், மாவட்ட அளவில் 1,370 விவசாயிகளும் பதிவு செய்துள்ளனர். 1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**திருந்திய விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில், கடன் பெறாத சிறு/மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்கென திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மத்திய அரசின் சோதனை முறை பயிர் காப்பீட்டுத் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் ரபிபருவத்தில் செயல்படுத்தப்பட்டது. கரீப் 1998-99 முதல் சோதனை முறை பயிர் காப்பீட்டுத் திட்டம் கைவிடப்பட்டு விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசு தற்போது மாநிலம் முழுவதும் மாற்றியமைக்கப்பட்ட விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த பரிந்துரைத்துள்ளது. இதன்படி கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு வழங்கப்படும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு காப்பீட்டுக் கட்டணத்தில் 50% மானியமாக வழங்கப்படும். இத்தொகையினை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்கும். இத்திட்டத்தில் உணவு தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் வணிக பயிர்களான கரும்பு, பருத்தி, மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பயிர்கள் அடங்கும். கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் பயிர் உற்பத்திக்கும் பயிர் இழப்பின்போது விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு வழங்கவும் உதவியாக இருக்கும்.

**பள்ளிக் கல்வியில் வேளாண்மையைப் பாடமாக அமைப்பது**

1997-98 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றியபோது வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று அறிவித்தார்கள்.

[1999 ஏப்ரல் 5

1999-2000 கல்வி ஆண்டில் வேளாண்மை அறிவியல் பாடத்தினை உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் பாடத்திட்டமாகக் கொண்டுவர பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## மத்திய அரசு சார்புத் திட்டங்கள்

### ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி)

தமிழ்நாட்டில் நெற்பயிர் மிகுதியாக பயிரிடப்படும் மாவட்டங்களில் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. நெல் சாகுபடியில் மேலும் அதிக கவனம் செலுத்தும் வகையில் தொழில் நுட்பங்களைப் பரவலாக்குவது மற்றும் அவசிய இடு பொருட்களை மானிய விலையில் விநியோகித்தல் போன்ற இனங்களைக் கொண்ட இத்திட்டம் ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக, மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனைவிட உற்பத்தித் திறன் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 140 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனவாரியாக 1998-99 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரை சாதனை பின்வருமாறு:

| வ. எண் (1) | இனம்/அலகு (2) | பொருள் இலக்கு 98-99 (3) | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை (4) | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 (5) | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | சான்று பெற்ற விதை விநியோகம் நெல் (மெடன்) மற்றும் சிறுதானியங்கள் (மெடன்) | 19600 | 10271 | 400.00 | 211.861 |
| 2. | உற்பத்தித் தொழில் நுட்ப நிருபணம் (ஏக்கர்) | 1400 | 2170 | 28.00 | 28.500 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 280 | 280 | 14.00 | 14.000 |
| 4. | ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு தொழில் நுட்பம் (எண்) | 1400 | 1390 | 84.00 | 79.800 |
| 5. | வீரிய ஒட்டு நெல் உற்பத்தி தொழில் நுட்பம் (எண்) | 2000 | 1895 | 20.00 | 18.950 |



1999 ஏப்ரல் 5]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 6. | பண்ணைக் கருவிகள் விநியோகம் (எண்) | 15220 | .. | 76.10 | 76.100 |
| 7. | விசை உழுவைகள் விநியோகம் (எண்) | 513 | 376 | 153.90 | 153.900 |
| 8. | சில்லறைச் செலவினம் | .. | .. | 6.30 | 4.958 |
| | மொத்தம் | .. | .. | 782.30 | 587.569 |

1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் விதை சிறுதளை இனம் (100% மத்திய அரசு செலவினம்) தவிர மீதமுள்ள இன செலவினங்களை மத்திய / மாநில அரசுகள் 75:25 என்ற சதவிகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டம் கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

1998-99 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரை சாதனை விவரம் வருமாறு:

| வ. எண். (1) | இனம்/அலகு (2) | பொருள் இலக்கு 98-99 (3) | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை (4) | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 (5) | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | வயல் விளக்கம் (எக்.) | 600 | 684 | 6.00 | 6.000 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்) | 40 | 40 | 2.40 | 1.260 |
| 3. | விவசாயிகள் பயிற்சி (எண்) | 40 | 40 | 2.00 | 2.000 |
| 4. | சான்று/வீரிய ஒட்டு இரக உபயோக மானியம் (மெடன்) | 80 | 0.4 | 3.20 | 0.016 |
| 5. | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் (2 மாவட்டங்கள்) | - | - | 2.00 | 2.000 |

[1999 ஏப்ரல் 5

| (1) (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|
| 6. விளம்பரம் (2 மாவட்டங்கள்) | - | - | 1.20 | 1.200 |
| 7. சில்லறைச் செலவினம் (2 மாவட்டங்கள்) | .. | .. | 1.08 | 0.619 |
| 8. விதை சிறுதளை செயல்விளக்கம் | | | | |
| அ. வீரிய ஒட்டு இரகம் | 960 | 1528 | 0.48 | 0.700 |
| ஆ. இரகம் | 568 | - | 0.22 | - |
| மொத்தம் | .. | .. | 18.58 | 13.796 |

1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்**

மாநிலத்தின் பருப்பு வகைகள் தேவைக்கும், கிடைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய சுமையைக் குறைக்கவும், தேவையான உற்பத்தி உயர்வை அடைய மாநில அரசு தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், விதை சிறுதளைப் பைகள் மற்றும் பெருவிளக்கப் பண்ணை மூலம் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, விவசாயப் பயிற்சி மற்றும் நீர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளைச் செயல்படுத்துகிறது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு மைய அரசு மானியம் வழங்கி இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கிறது. அதற்கான மொத்த செலவில் 75:25 என்ற விகிதத்தில் மைய அரசும் மாநில அரசும் பங்கேற்கின்றன.

இனவாரியாக 1998-99 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி இலக்குகள் மற்றும் பிப்ரவரி 1999 வரையிலான சாதனை பின்வருமாறு :

| வ. எண் (1) | இனம்/அலகு (2) | பொருள் இலக்கு 98-99 (3) | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை (4) | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 (5) | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | கருவிதை கொள்முதல் (குவி) | 100 | 86 | 4.00 | 3.427 |
| 2. | ஆதார விதை விநியோகம் (குவி) | 2500 | 1358 | 10.00 | 5.431 |



1999 ஏப்ரல் 5]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3. | விதை கிராமம் (குவி.) | 10800 | 10108 | 21.60 | 20.217 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி.) | 10800 | 10035 | 32.40 | 30.108 |
| 5. | சிறுதளை விநியோகம் (எண்) | 12784 | 8023 | 20.00 | 15.908 |
| 6. | பெருவிளக்க பண்ணை (எக்) | 3333 | 3269 | 30.00 | 29.425 |
| 7. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்) | 533 | 414 | 8.00 | 6.220 |
| 8. | பயிற்சிகள் (எண்) | 10 | 10 | 1.00 | 1.000 |
| 9. | நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (எக்) | 12000 | 14292 | 3.00 | 3.000 |
| 10. | நுண்ணூட்ட சத்துக்கள் விநியோகம் (எக்) | 2000 | 1887 | 2.00 | 1.887 |
| 11. | பயிர் பாதுகாப்பு கருவிகள் | 428 | 385 | 4.50 | 4.051 |
| 12. | விதைநேர்த்தி 50% மான்யம் (எக்) | 50000 | 35166 | 1.50 | 1.055 |
| 13. | தெளிப்பு நீர் பாசன கருவிகள் (எண்) | 295 | 285 | 59.00 | 58.000 |
| 14. | பணியாளர் சம்பளம் | .. | .. | 6.92 | 7.000 |
| | மொத்தம் | .. | .. | 203.92 | 186.729 |

1999-2000 ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. அதன் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனவாரியாக 1998-99 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரையிலான சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் (1) | இனம்/அலகு (2) | பொருள் இலக்கு 98-99 (3) | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை (4) | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 (5) | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | கருவிதை உற்பத்தி (குவி.) | 5.00 | 5.00 | 0.13 | 0.13 |
| 2. | சான்றுவிதை விநியோகம் (குவி.) | 3000 | 121 | 10.50 | 0.31 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிரூபணம் மற்றும் பயிற்சி (எண்) | 1200 | 1112 | 96.00 | 72.38 |
| 4. | தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் விநியோகம் (எண்) | 300 | 292 | 75.00 | 68.98 |
| 5. | உழவர் பயிற்சி (எண்) | 100 | 98 | 5.00 | 4.80 |
| 6. | என்.பி.வி.நச்சுயிரி நிரூபணம் (எண்) | 2000 | 1375 | 15.00 | 9.18 |
| 7. | இனக்கவர்ச்சிப் பொறி நிரூபணம் (எண்) | 1250 | 817 | 3.13 | 2.72 |
| 8. | பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம் (எக்.) | 6000 | 5838 | 90.00 | 83.07 |
| 9. | சில்லறைச் செலவினம் | .. | .. | 0.75 | 0.83 |
| | மொத்தம் | .. | .. | 295.61 | 242.20 |

1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சித் திட்டம்**

மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனைவிடக் குறைவான உற்பத்தித் திறன் உள்ள காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களில் தரமான விதைக் கரணைகள் விநியோகம் மற்றும் விதை மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுக்கக்கூடிய கரணைநேர்த்தி, திசுவளர்ப்பு, நுண்ணுயிர்ப் பாசனம், பண்ணைகளை இயந்திர மயமாக்குதல் ஆகிய நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. உற்பத்தித் திறன் விருதுகள், உயிரியல்கொல்லிகள் மையம் மற்றும் திசுவளர்ப்பு மையம் ஆகிய இனங்களுக்கு மைய அரசின் பங்கு 100% ஆகும்.



1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 98-99 | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | களசெயல் விளக்கம் (எண்) | 140 | 136 | 7.00 | 7.00 |
| 2. | மாநில பயிற்சி (எண்) | 6 | 6 | 0.75 | 0.75 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 100 | 100 | 5.00 | 5.00 |
| 4. | எருது இழுக்கும் கருவிகள் (எண்) | 3000 | 60 | 45.00 | 45.00 |
| 5. | டிராக்டர் இழுக்கும் கருவிகள் (எண்) | 350 | .. | 35.00 | 35.00 |
| 6. | விதைப் பெருக்கம் (எக்) | 600 | 600 | 12.00 | 12.00 |
| 7. | உற்பத்தித் திறன் விருதுகள் (எண்) | 48 | 6 | 12.00 | 3.45 |
| 8. | சொட்டுநீர்ப் பாசன உள்ளமைப்பு (எக்) | 60 | .. | 15.00 | .. |
| 9. | சொட்டுநீர்ப் பாசன நிரூபணம் (எண்) | 10 | .. | 2.25 | .. |
| 10. | உயிரியல் கொல்லிகள் மையம் (எண்) | 4 | 4 | 20.00 | 20.00 |
| 11. | திசுவளர்ப்பு மையம் (எண்) | 5 | 5 | 25.00 | 25.00 |
| 12. | வெப்ப நேர்த்தி நிலையம் (எண்) | 10 | 10 | 20.00 | 20.00 |
| 13. | சில்லறை செலவினம் | .. | .. | 2.40 | 1.986 |
| | மொத்தம் | .. | .. | 201.40 | 175.186 |

1999-2000 ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்**

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாகவும், முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதன் மூலமும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும் இம்மாநிலத்தில் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

[1999 ஏப்ரல் 5

1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை கீழ்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | விதை உற்பத்தி (குவி) | | | | |
| | வல்லுநர் விதை | 816.787 | 623 | 55.000 | 36.000 |
| | ஆதார விதை | 12000 | 4042 | | |
| 2. | விதை கிராமம் (குவி) | 40000 | 13676 | 80.000 | 32.000 |
| 3. | சான்று விதை விநியோகம் (குவி) | 37500 | 42969 | 105.000 | 115.750 |
| 4. | விதை சிறுதளை விநியோகம் (எண்) | 19048 | 19506 | 40.000 | 40.000 |
| 5. | பெருவிளக்கப் பண்ணை அமைத்தல் (எக்) | 2909 | 2471 | 48.000 | 41.864 |
| 6. | விதைநேர்த்தி (இலட்.எக்) | 1.389 | 0.587 | 25.000 | 25.000 |
| 7. | விதைநேர்த்தி மூலம் வேர் புழுவைக் கட்டுப்படுத்துதல் (எக்) | 2800 | 1850 | 14.00 | 14.000 |
| 8. | நுண்ணுயிர் விநியோகம் (எக்) | 80000 | 80500 | 20.00 | 20.054 |
| 9. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிருபணம் (எக்) | 3000 | 2500 | 46.00 | 34.072 |
| 10. | இனக்கவர்ச்சிப் பொறி நிருபணம் (எண்) | 4000 | 3625 | 20.00 | 14.000 |
| 11. | ஜிப்சம் விநியோகம் (எக்) | 92650 | 90345 | 185.30 | 185.300 |
| 12. | பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்) | 601 | 291 | 10.000 | 10.000 |
| 13. | நுண்ணூட்டச்சத்து விநியோகம் (எக்) | 34000 | 31582 | 34.00 | 31.523 |
| 14. | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 225 | - | 3.375 | 3.000 |
| 15. | உழவர் பயிற்சி (எண்) | 15000 | 12000 | 30.00 | 29.000 |
| 16. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 279 | 232 | 69.625 | 59.418 |
| 17. | சம்பளம் மற்றும் இதர செலவினம் | - | - | 49.00 | 42.000 |
| | மொத்தம் | - | - | 833.300 | 731.981 |



1999 ஏப்ரல் 5]

1999-2000 ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டம்**

எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்து செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 5 எக்டர் சாகுபடி செய்யும் வகையில் 900 கன்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் எண்ணெய் பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செய்யும் ஆலைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் எண்ணெய்ப்பனை சட்டமொன்றும் இயற்றப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் எண்ணெய்ப்பனை விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தவும் எண்ணெய்ப்பனை ஆலை நிறுவும் பொறுப்பும் காவேரி எண்ணெய்ப்பனை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சமயபுரம் அருகில் கண்ணாகுடி என்ற கிராமத்தில் எண்ணெய்ப்பனை ஆலை நிறுவ இடம் தேர்வு செய்துள்ளது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் எண்ணெய்ப்பனை திட்டத்தைச் செயல்படுத்தவும் எண்ணெய்ப்பனை ஆலை நிறுவும் பொறுப்பும் எஸ். அண்டு எஸ். இண்டஸ்ட்ரீஸ் என்ற தொழில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தொழில் நிறுவனம் தஞ்சாவூர் அருகிலுள்ள விளார் என்ற கிராமத்தில் எண்ணெய்ப்பனை ஆலை நிறுவ இடம் தேர்வு செய்துள்ளது.

1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி 1999 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | திட்டத்திற்கு முந்தைய நடவடிக்கைகள் (எக்டேரில்) | 2000 | 621 | 75.000 | 25.22 |
| 2. | பரப்பு விரிவாக்கம் (எக்) | 1230 | 447 | 37.072 | 11.61 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 3. | அலுவலர், விரிவாக்கப் பணியாளர் மற்றும் எண்ணெய்ப்பனை உற்பத்தியாளர் பயிற்சி | 600 | 512 | 5.110 | 4.16 |
| 4. | விளம்பரம் மற்றும் விரிவாக்கம் | - | - | 5.110 | 4.01 |
| 5. | இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்பு செலவு (ஏக்) | 3433 | 1967 | 91.884 | 53.92 |
| 6. | சொட்டுநீர்ப் பாசனம் (ஏக்) | 205 | 170 | 51.25 | 42.50 |
| 7. | சம்பளம் | - | - | 40.371 | - |
| | மொத்தம் | - | - | 306.797 | 141.42 |

*1999-2000* ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்**

வெளி மாநிலங்களில் வேளாண் திட்டங்களையும், கடைப்பிடிக்கப்படும் தொழில் நுட்பங்களையும் நேரில் கண்டு சாகுபடி முறைகளை அறிந்து கொள்ள 20 பேர் அடங்கிய குழுக்களாக நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று பார்வையிட போக்குவரத்துச் செலவினமாக ஒரு குழுவிற்கு ரூ. 20,750 மத்திய அரசால் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 20 பேர் அடங்கிய நான்கு குழுக்கள், உத்தரபிரதேசம், பஞ்சாப், மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு நெல், பயறுவகைகள், சோயாபீன்ஸ், சிறுதானியம் பயிர்களின் சாகுபடி முறை அறிய சென்று வந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் நான்கு குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்ல ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 83,000-மும் செலவிடப்பட்டுள்ளது.

**மத்திய அரசு முழு நிதி உதவி பெறும் திட்டங்கள்**

**நெல் மற்றும் சிறு தானிய சிறுதளைகள் திட்டம்**

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விரைவாக விவசாயிகளிடையே பரவச் செய்யவும் வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்புத் தன்மையைத் தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் சிறுதளைப்பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் முழு செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது.



இத்திட்டத்தின் கீழ் சிறுதளைப்பைகள் விவசாயிகளுக்கு 90% மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

*1998-99* ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி *1999* வரையிலான சாதனை பின்வருமாறு:

| இனம் | பொருள் (எண்களில்) | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை | இலக்கு 98-99 | பிப்ரவரி 1999 வரை சாதனை |
| நெல் | 60000 | 60000 | 15.00 | 15.000 |
| சிறுதானியங்கள் | 31010 | 31010 | 6.28 | 6.280 |

*1999-2000* ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் சிறுதானிய தீவிர சாகுபடி நிருபணம் அமைக்கும் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்து புதிய தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானிய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் நிருபணங்கள் அமைக்கப்படுகின்றன. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அரை முதல் ஒரு எக்டேர் பரப்பில் நிருபண தளைகள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் சோளம் மற்றும் கம்பு பயிர் நிருபணங்கள் அமைக்க ரூ. 600 மானியமும், கேழ்வரகு மற்றும் பிற சிறுதானியங்களின் நிருபணங்கள் அமைக்க ரூ. 400 மானியமும் பின்வரும் இனங்களுக்காக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 100 ஆதிதிராவிடர் விவசாயிகளும் 50 பழங்குடி விவசாயிகளும் பயனுற்றனர்.

| இனங்கள் | வழங்கப்படும் மானியம் (ரூபாயில்) | |
|---|---|---|
| | சோளம்/கம்பு நிருபணம் | ராகி/இதர சிறுதானியங்கள் நிருபணம் |
| விதை | 120 | 50 |
| உரம் | 350 | 300 |
| பயிர் பாதுகாப்பு மருந்துகள் | 130 | 50 |
| மொத்தம் | 600 | 400 |

1998-99 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட 150 எக்டேர் நிருபணங்களும் அமைக்கப்பட்டுவிட்டன. ஒப்பளிப்புத் தொகை ரூ. 0.78 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டுவிட்டது.

இத்திட்டம் 1999-2000 ஆண்டில் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணைமுறை**

தென்னை நெற்றுகள் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னை மரங்களை அகற்றி புதிய தென்னங்கன்றுகளை நடுதல், உரமிடுதல், பயிர் பாதுகாப்பு மற்றும் பல இரக பயிர்களைப் பயிரிடுதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். 10 சத ஒதுக்கீடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்திற்கான நிதியுதவி, தென்னை அபிவிருத்தி வாரியம் மூலமாக வழங்கப்படுகின்றது.

இனவாரியாக 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி 1999 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண் (1) | இனம்/அலகு (2) | பொருள் இலக்கு 98-99 (3) | பொருள் பிப்ரவரி 1999 வரை சாதனை (4) | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 98-99 (5) | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 1999 வரை சாதனை (6) |
|---|---|---|---|---|---|
| 1. | முதிர்ந்த, நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல் (எண்) | 12000 | 10720 | 24.00 | 21.44 |
| 2. | புதிய தென்னங்கன்றுகள் நடவு செய்தல் (எண்) | 12000 | 10720 | 0.60 | 0.54 |
| 3. | உரமிடுதல் மற்றும் பயிர் பாதுகாப்பு (எண்) | 767500 | 709349 | 61.40 | 58.75 |
| 4. | ஊடுபயிர் சாகுபடி (எக்) | 1500 | 1228 | 3.00 | 2.46 |
| | மொத்தம் | - | - | 89.00 | 81.19 |

1999-2000 ஆண்டில் இத்திட்டம் மத்திய அரசால் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அத்தியாயம் 3

## தோட்டக்கலை

தமிழ்நாட்டில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் போன்றவற்றை பயிரிடக்கூடிய தட்பவெப்ப நிலை நிலவுகிறது. தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி நிலையை உயர்த்திட, தரமான நடவுச்செடிகள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்குவதுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

1997-98-ல் பழங்களின் பரப்பு 2.06 இலட்சம் எக்டேர்களாகவும், காய்கறிகள் 1.76 இலட்சம் எக்டேர்களாகவும், நறுமணப் பயிர்கள் 1.67 இலட்சம் எக்டேர்களாகவும், மலைப் பயிர்கள் 1.86 இலட்சம் எக்டேர்களாகவும் மற்றும் மலர் வகைகள் 0.16 இலட்சம் எக்டேர்களாகவும் இருந்தது. 1997-98 ஆம் ஆண்டின் உத்தேச மதிப்பீட்டின்படி பழங்களின் உற்பத்தி 50.05 இலட்சம் டன்களாகவும், காய்கறிகள் 47.43 இலட்சம் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 2.66 இலட்சம் டன்களாகவும், மலைப் பயிர்கள் 6.45 இலட்சம் டன்களாகவும், மலர்கள் 1.08 இலட்சம் டன்களாகவும் இருந்தது. 1998-99-ல் பழங்களின் உற்பத்தி 51 இலட்சம் டன்களாகவும், காய்கறிகள் 54 இலட்சம் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.72 இலட்சம் டன்களாகவும், மலைப் பயிர்கள் 7.44 இலட்சம் டன்களாகவும் மற்றும் மலர்கள் 1.128 இலட்சம் டன்களாகவும் அதிகரிக்கும். 1999-2000 ஆண்டின் குறியீடு பழங்களின் உற்பத்தி 55.00 இலட்சம் டன்களும், காய்கறிகள் 56.00 இலட்சம் டன்களும், நறுமணப் பயிர்கள் 4.00 இலட்சம் டன்களும், மலைப் பயிர்கள் 7.50 இலட்சம் டன்களும், மலர்கள் 1.25 இலட்சம் டன்களும் ஆகும்.

1999-2000 ஆண்டிற்கான முக்கிய கொள்கைகள் —

கீழ்க்கண்டவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்:-

1. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி, மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்தல்.

2. தரமான நடவுச் செடிகள் மற்றும் விதைகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

3. பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தியில் இரசாயன உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்குப் பதிலாக உயிர் உரங்கள், தாவரக்கொல்லி மருந்துகள் மற்றும் உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவித்தல்.

4. உயர்நுட்ப தோட்டக்கலை தொழில்நுட்பங்களைப் (பசுமைக் குடில் அமைத்தல்) பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

5. பாரம்பரிய மலர்கள் மற்றும் கொய்த மலர்கள் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

6. ஏற்றுமதிக்கு உகந்த இதர தோட்டக்கலைப் பயிர்களில் தீவிர சாகுபடி மேற்கொள்ள முன்னுரிமை அளித்தல்.

7. அறுவடைக்கு முன் மற்றும் அறுவடைக்குப் பின் கையாள வேண்டிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் அடி:்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான தொழில்நுட்பங்களை வழங்குதல்.

மேற்கண்ட குறிக்கோள்களை அடைந்திட 1999-2000 ஆண்டில் கீழ்க்கண்டுள்ள மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### மாநிலத் திட்டங்கள்

**1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

*(1) பரப்பு விரிவாக்கம்*

இத்திட்டத்தின்கீழ் தரமான பழச்செடிகள், மலர் வகைகள், நறுமணப் பயிர்கள் மற்றும் ஏற்றுமதிக்கேற்ற பயிர்கள், வீரிய காய்கறி விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் தரமான நடவுச் செடிகள் மற்றும் விதைகள் வழங்க ரூ. 193.05 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய 17489 எக்டேர் பரப்பு தோட்டக்கலைப் பயிர்களின்கீழ் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு ரூ. 193.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயற்கை வேளாண்மையின்கீழ் உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக் கொல்விமருந்துகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ. 13.13 இலட்சம் 1998-99-ம் ஆண்டில்



இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பிப்ரவரி '99 முடிய ரூ. 13.05 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரப்பு விரிவாக்கம் மற்றும் இயற்கை வேளாண்மைத் திட்டங்கள் 1999-2000 ஆண்டிலும் ரூ. 396.69 இலட்ச மதிப்பீட்டில் தொடரப்பட்டு நடவுச்செடிகள், விதைகள், உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருள்கள் 50 சத மானியத்தில் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக 1460 எக்டேர் பரப்பில் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ள ரூ. 9.43 இலட்சம் 1998-99 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த விவசாயிகளுக்குத் தரமான நடவுச்செடிகள், காய்கறி விதைகள், தாவர பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் உயிர் உரங்கள் இதர விவசாயிகளுக்குத் தருவது போன்று அதே மானிய விலையில் வழங்கப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய இத்திட்டத்தின்கீழ் பழங்கள் மற்றும் காய்கறிப் பயிர்களின்கீழ் 1460 எக்டேர்கள் சாதனை அடையப்பட்டுள்ளது.

*(2) தோட்டக்கலைப் பயிற்சி*

ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்களுக்கு ஈராண்டு பட்டயப் படிப்பு மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. 1998-99-ல் இப்பயிற்சி மையத்தில் 23 மாணவர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இத்துறையில் பணியாற்றும் உதவி வேளாண் அலுவலர்கள்/வயல் விளக்க அலுவலர்களுக்கு தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியில் உயரிய தொழில்நுட்பங்கள் குறித்து பணியிடைப் பயிற்சி குடுமியான்மலையில் உள்ள பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 444 உதவி வேளாண்மை அலுவலர்/வயல் விளக்க அலுவலர்களுக்குப் பிப்ரவரி 1999 முடிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 1.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பிப்ரவரி 1999 வரை ரூ. 1.215 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

*(3) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்*

2598 எக்டேர் மொத்தப் பரப்புள்ள 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் செடிகளின் உற்பத்தி மற்றும்

பண்ணைகள் பராமரிப்புக்கென ரூ. 373.183 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிப்ரவரி 1999 முடிய இப்பண்ணைகளில் 93 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 362.84 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில், பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நடவுச்செடிகள் உற்பத்திக்காகவும் பண்ணைகள் பராமரிப்பிற்கெனவும் ரூ. 456.77 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் சேலம் மாவட்டத்திலுள்ள கல்ராயன்மலை, கொல்லிமலை, சேர்வராயன்மலை, அருநூற்றுமலை மற்றும் பச்சை மலையிலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சைமலைப் பகுதியிலும், தருமபுரி மாவட்டம் சித்தேரி மலையிலும், வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையிலும், விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையிலும் வசிக்கும் மலைவாழ் மக்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் அமைப்பதற்குத் தேவையான தரம் வாய்ந்த பழச்செடிகள் மற்றும் இடுபொருட்கள் ரூ. 1750 மதிப்புள்ள பல்லாண்டு பழப் பயிர்கள் மற்றும் இதர இடுபொருட்கள் 100 சதவிகித மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது. தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் பழங்குடி விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப் பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படாததால் திட்டப் பணியாளர்கள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். 1999-2000 ஆண்டில் இத்திட்டத்தை ரூ. 61.10 இலட்சம் செலவில் 3000 ஏக்கர் பரப்பில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மண் அரிப்பைத் தடுப்பதும், இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகள் உள்ளடங்கிய கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு



வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்காக விவசாயிகளுக்குத் தரமான நடவுப் பொருட்கள், காய்கறி விதைகள், வேளாண் கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் 50 சதவிகித மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 74.69 இலட்சம் செலவில் 1962 எக்டேர் பரப்பு, பழங்கள் மற்றும் காய்கறி பயிர்களின் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தை 1999-2000 ஆண்டு ரூ. 78.71 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கவும் மற்றும் இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட ஏதுவாக ஆண்டு பயிர்கள் சாகுபடியிலிருந்து பல்லாண்டுப் பயிர்களான தேயிலை, பழப் பயிர்கள் மற்றும் இதர பொருளாதார பயிர்கள் சாகுபடிக்கு மாற்றும் நோக்கத்துடன் செயலாக்கப்படுகின்றது. 10 சதவீதத்திற்கும் குறைவான சரிவுப் பகுதிகளில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் தரம் வாய்ந்த நடவுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. நடப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 244.50 இலட்சம் இத்திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1999 முடிய 111 எக்டேர் பரப்பு கூடுதலாக தேயிலை சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது மேலும் காய்கறி விதைகள், காப்பி, பழச்செடிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் இதரப் பொருளாதாரச் செடிகள் 16525 எண்கள் விவசாயிகளுக்கு ரூ. 235.00 இலட்சம் செலவில் பிப்ரவரி 1999 வரை வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் ரூ. 240.72 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. மாவில் உரமிடல் மற்றும் பயிர் பாதுகாப்புக்கென செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல்

மா சாகுபடியில் உற்பத்தித் திறனை அதிகரிக்க உரமிடுதலும், பயிர் பாதுகாப்பு முறைகளும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விவசாயிகளுக்குக் கற்பிக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உரமிடுதலிலும், உரிய தருணத்தில் பயிர்

[1999 ஏப்ரல் 5

பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வதிலும் உள்ள நன்மைகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கத்தில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செயல்விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு பாத்தி ஒன்றுக்கு ரூ. 2000 மதிப்புள்ள உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டில் 1000 ஏக்கர் பரப்பில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 99 முடிய ரூ. 20.00 இலட்சம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிலும் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**6. திண்டுக்கல் மாவட்டத்தில் மலைவாழை சாகுபடியினைப் புத்துயிர்ப்பு செய்யும் திட்டம்**

கீழ்பழனி மலைப்பகுதியில், 'முடிக்கொத்து' நச்சுயிரி நோயினால் அழிந்த மலைவாழைச் சாகுபடியினை மீண்டும் சாகுபடிக்கு கொணருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நச்சுயிரி நோய் தாக்காத தாய்க்கிழங்குகள் தேர்வு செய்யப்பட்டு திசு வளர்ப்பு முறையில் இனவிருத்தி செய்து விவசாயிகளுக்குக் கன்று ஒன்றிற்கு ரூ. 3 வீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்படும். 1999-2000 ஆண்டில் தொடங்கி இரண்டு ஆண்டுகளில் 700 எக்டேர் பரப்பில் நடவு செய்யத் தேவையான திசு வளர்ப்புச் செடிகளை உற்பத்தி செய்ய, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ரூ. 33.67 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7. நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கும் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில் தெளிப்பு நீர்ப்பாசனத்தின் மூலம் காய்கறிகள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைக்க ஒரு எக்டேருக்கு ரூ. 30,000-க்கு மிகாமல் 50 சதவிகித மானியத்தில் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் 200 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படுகின்றது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 50.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 5]

**8. கல்வி நிலையங்களில் மரக்கன்றுகள் நடவுசெய்தல்**

கல்வி நிலையங்களில் மரக்கன்றுகள் நடவு செய்வதன் மூலம் மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் மேம்பாட்டின் முக்கியத்துவத்தைக் கற்பிக்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கல்வி நிலையங்களில் நடவு செய்ய பூக்கும் மற்றும் நிழல் தரும் மர வகைகளின் கன்றுகள் கல்வி நிலையம் ஒன்றுக்கு ரூ. 500 மதிப்பில் வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 3.625 இலட்சம் செலவில் 725 கல்வி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய 663 கல்வி நிலையங்களில் மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டிலும் இத்திட்டம் ரூ. 3.625 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**9. பகுதி 2 திட்டம்**

இத்திட்டத்தில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் உற்பத்தித் திறனை முழு அளவில் பயன்படுத்தத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998-1999 ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த ரூ. 40.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

**மத்திய அரசு திட்டங்கள்**

1999-2000 ஆண்டில் மத்திய அரசின் [illegible] ஒப்புதலுக்கு ஏற்ப மத்திய அரசு திட்டங்கள் செயல்படுத்தப்படும். கீழ்க்காணும் திட்டங்கள் 1998-99 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுகின்றன.

**1. ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்**

முந்திரி பயிரின் பரப்பினை அதிகப்படுத்துவதின் மூலமும் நலிவடைந்துள்ள முந்திரி தோட்டங்களில் மறுநடவு செய்து புத்துயிர் ஊட்டுவதன் மூலமும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலமும் முந்திரி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்திட இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முந்திரி உற்பத்தியை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 170.205 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 99 முடிய ரூ. 158.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 400 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2. ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழகத்தில் நறுமணப் பயிர்களின் பரப்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. உயர் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டும், உரிய காலத்தில் எடுக்க வேண்டிய பயிர்பாதுகாப்பு முறைகள் குறித்தும் விளக்குவதற்காக செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 195.677 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 144.73 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**3. ஒருங்கிணைந்த வெப்ப, குளிர் மற்றும் வறட்சி மண்டல பழ அபிவிருத்தித் திட்டம்**

உயர் விளைச்சல் தரும் தரமான நடவுச் செடிகளைக் கிடைக்கச் செய்வதன் மூலமும், முதிர்ந்த பழத் தோட்டங்களின் உற்பத்தியை அதிகரிக்க மானிய விலையில் இடுபொருட்கள் வழங்குதலின் மூலமும் பழப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். விவசாயிகளுக்குச் செயல் விளக்க திடல்கள் மூலம் நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்படுவதுடன் தேவையான தொழில்நுட்பங்களும் வழங்கப்படுகின்றன. விவசாயிகளை இதர மாநிலங்களுக்கும் அழைத்துச் சென்று தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 133.03 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 97.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**4. வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்**

விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைத்து அதன்மூலம் மலர்கள் சாகுபடியில் உள்ள நவீன தொழில்நுட்பங்களை விளக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 0.10 எக்டேர் பரப்பு கொண்ட ஒரு பாத்திக்கு ரூ. 6000 மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் மலர்களின் சாகுபடிப் பரப்பு அதிகரிக்கப்படுகிறது. கொய்த மலர்கள் (Cut flowers) உற்பத்தி குறித்து செயல் விளக்கம் அளிப்பதற்காக மாதிரி மலர்



மையம் ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் திசுவளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட செடிகளும் விநியோகிக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 60.70 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 57.37 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5. கோகோ அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் உயர் விளைச்சல் இரக கோகோ நடவுச் செடிகளைக் கொண்டு செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு சாகுபடி நுணுக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் நடவுச் செடிகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 2.46 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 1.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**6. வேர் மற்றும் கிழங்கு பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

புதிய இரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு இத்திட்டத்தின்கீழ் நடவுப் பொருட்கள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உள்ளடங்கிய ரூ. 200 மதிப்புள்ள சிறுதளைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 1.00 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது.

**7. தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் உபயோகம்**

*பசுமைக் குடில்கள் அமைத்தல்*

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்த மதிப்பீட்டுப் பசுமைக்குடில் அமைப்பதற்கு ஒரு அலகிற்கு 50 சத மானியமாக ரூ. 31250 அதிகபட்சத் தொகையாகவும், நடுத்தர மதிப்பீட்டுப் பசுமைக்குடில் அமைப்பதற்கு 40 சதவீத மானியமாக உயர்ந்தபட்சமாக ரூ. 1.00 இலட்சமும் வழங்கப்படுகிறது. நறுமணப் பயிர்களின் விளைபொருட்களை உலர்த்த ஐந்து அடுக்கு பாலித்தீன் விரிப்புகள்

[1999 ஏப்ரல் 5

வழங்குதல் மற்றும் செடிகள் உற்பத்திக்காக தாழ்வான பசுமைக் குடில்கள் அமைத்தல் ஆகியனவும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 15.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**8. காளான் வளர்ப்புத் திட்டம்**

தமிழகத்தில் காளான் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சாகுபடியாளர்களுக்குக் காளான் சாகுபடி குறித்து பயிற்சி வழங்கப்படுகின்றது. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 11.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 7.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**9. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழகத்தில் மூலிகை பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், செயல் விளக்க மற்றும் விதை உற்பத்தித் திடல் 0.05 எக்டேர் பரப்பில் விவசாயிகளின் வயல்களில் அமைக்க பாத்தி ஒன்றுக்கு ரூ. 1500 மதிப்புள்ள இடுபொருட்கள் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 1999 முடிய ரூ. 6.00 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

**10. காய்கறி அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டம் தமிழகத்தில் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு ரக காய்கறிகளைப் பிரபலப்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறி சிறுதளைகள் 4000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 1999 முடிய இத்திட்டத்தில் ரூ. 5.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 5]

## அட்டவணை 1

### தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

பரப்பு - எக்டேரில்
உற்பத்தி - டன்களில்
உற்பத்தித் திறன் - டன்/எக்டேர்

| வ.எண் | விவரம் | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 (உத்தேசம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழங்கள் | | | | | |
| | பரப்பு | 179596 | 185587 | 194709 | 194987 | 206850 |
| | உற்பத்தி | 3620646 | 4818576 | 4615286 | 3855827 | 5005940 |
| | உற்பத்தித் திறன் | 20.16 | 25.96 | 23.69 | 19.77 | 24.20 |
| 2 | காய்கறிகள் | | | | | |
| | பரப்பு | 170922 | 174818 | 157665 | 166506 | 176540 |
| | உற்பத்தி | 4516001 | 4397932 | 3956661 | 3970393 | 4743610 |
| | உற்பத்தித் திறன் | 26.40 | 25.16 | 25.09 | 23.85 | 26.87 |
| 3 | நறுமணப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 177806 | 165522 | 142750 | 160001 | 167820 |
| | உற்பத்தி | 271735 | 272888 | 190958 | 223718 | 266502 |
| | உற்பத்தித் திறன் | 1.53 | 1.65 | 1.34 | 1.40 | 1.58 |
| 4 | மலைப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 177764 | 177098 | 178511 | 182707 | 186030 |
| | உற்பத்தி | 591066 | 582328 | 585155 | 602793 | 645085 |
| | உற்பத்தித் திறன் | 3.33 | 3.29 | 3.28 | 3.28 | 3.46 |
| 5 | மலர்கள் | | | | | |
| | பரப்பு | 12340 | 14194 | 14843 | 15856 | 16745 |
| | உற்பத்தி | 61704 | 70970 | 81642 | 95136 | 108333 |
| | உற்பத்தித் திறன் | 5.00 | 5.00 | 5.50 | 6.00 | 6.47 |

## அட்டவணை 2

மாநில தோட்டக்கலைப் பண்ணைகளின் இருப்பிடம்

| வரிசை எண் | மாவட்டம் | பண்ணையின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அ.தோ.ப | மாதவரம் |
| 2 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | ஆத்தூர் |
| 3 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | விச்சந்தாங்கல் |
| 4 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | மேல்கதிர்பூர் |
| 5 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | மேல் ஒட்டிவாக்கம் |
| 6 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | பிச்சிவாக்கம் |
| 7 | கடலூர் | அ.தோ.ப | நெய்வேலி |
| 8 | கடலூர் | அ.தோ.ப | விருத்தாசலம் |
| 9 | திருவண்ணாமலை | அ.தோ.ப | தகரக்குப்பம் |
| 10 | வேலூர் | அ.தோ.ப | கூடப்பட்டு |
| 11 | வேலூர் | அ.தோ.ப | நல்லாக் |
| 12 | சேலம் | அ.தோ.ப | ஏற்காடு |
| 13 | நாமக்கல் | அ.தோ.ப | செம்மேடு |
| 14 | நாமக்கல் | அ.தோ.ப | படசோலை |
| 15 | சேலம் | மா.ப.ப | கருமந்துறை |
| 16 | சேலம் | அ.தோ.ப | மணியார்குன்றம் |
| 17 | சேலம் | கா.வி.உ.மை | கருமந்துறை |
| 18 | சேலம் | அ.தோ.ப | கருமந்துறை |
| 19 | சேலம் | அ.தோ.ப | முள்ளுவாடி |
| 20 | சேலம் | அ.தோ.ப | சிறுமலை (அருநூற்றுமலை) |
| 21 | தருமபுரி | அ.தோ.ப | திம்மாபுரம் |
| 22 | தருமபுரி | அ.தோ.ப | ஜீனூர் |
| 23 | கோயம்புத்தூர் | அ.தோ.ப | ஆனைக்கட்டி |
| 24 | கோயம்புத்தூர் | அ.தோ.ப | கல்லார் |
| 25 | கரூர் | அ.தோ.ப | முதலைப்பட்டி |
| 26 | புதுக்கோட்டை | அ.தோ.ப | குடுமியான்மலை |
| 27 | புதுக்கோட்டை | அ.தோ.ப | வல்லத்திராக்கோட்டை |
| 28 | புதுக்கோட்டை | அ.தோ.ப | நாட்டுமங்கலம் |
| 29 | தஞ்சாவூர் | அ.தோ.ப | ஆடுதுறை |
| 30 | தஞ்சாவூர் | அ.தோ.ப | மருங்குளம் |
| 31 | தேனி | அ.தோ.ப | பெரியகுளம் |
| 32 | திண்டுக்கல் | அ.தோ.ப | கொடைக்கானல் |
| 33 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா | கொடைக்கானல் |
| 34 | திண்டுக்கல் | அ.தோ.ப | தாண்டிக்குடி |
| 35 | திண்டுக்கல் | அ.தோ.ப | ரெட்டியார்சத்திரம் |
| 36 | திண்டுக்கல் | அ.தோ.ப | சிறுமலை |
| 37 | விருதுநகர் | அ.தோ.ப | பூவாணி |
| 38 | விருதுநகர் | அ.தோ.ப | திருவில்லிபுத்தூர் |
| 39 | சிவகங்கை | அ.தோ.ப | தேவக்கோட்டை |
| 40 | சிவகங்கை | அ.தோ.ப | நேமம் |
| 41 | திருநெல்வேலி | அ.தோ.ப | குற்றாலம் |
| 42 | நீலகிரி | அ.தோ.ப | பர்லியார் |
| 43 | நீலகிரி | அ.தோ.ப | காட்டேரி |
| 44 | நீலகிரி | அ.தோ.ப | குன்னூர் |
| 45 | நீலகிரி | பழவியல் நிலையம் | குன்னூர் |
| 46 | நீலகிரி | சிம் பூங்கா | குன்னூர் |
| 47 | நீலகிரி | அ.தோ.ப | தொட்டபெட்டா |
| 48 | நீலகிரி | அ.தோ.ப | தும்மனட்டி |
| 49 | நீலகிரி | அ.தோ.ப | விஜயநகரம் |
| 50 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா | உதகை |
| 51 | நீலகிரி | அ.தோ.ப | நஞ்சநாடு |
| 52 | நீலகிரி | அ.தோ.ப | தேவாலா |
| 53 | கன்னியாகுமரி | அ.தோ.ப | கன்னியாகுமரி |
| 54 | கன்னியாகுமரி | அ.தோ.ப | பேச்சிப்பாறை |



அ.தோ.ப. - அரசு தோட்டக்கலைப் பண்ணை

மா.ப.ப. - மாபெரும் பழப்பண்ணை

கா.வி.உ.மை - காய்கறி விதை உற்பத்தி மையம்

[1999 ஏப்ரல் 5

## அத்தியாயம்—4

### வேளாண்மைப் பொறியியல் துறை

**1. முன்னுரை**

மாநிலத்தின் மண் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் போன்ற பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்க்கண்ட பணிகள் மூலம் உழவர்களுக்கு உதவி வருகிறது:

அ. மண் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாத்தல்.

ஆ வளம் குன்றிய நிலங்களை நிரந்தரமாகப் பயன்தரும் தகுந்த நிலமாக மேம்படுத்துதல்.

இ. நிலத்தடி நீர்வள ஆதாரத்தை மேம்படுத்தி பாசன வளங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

ஈ. நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை நிறுவித் தேவையான அளவு நீரை சிக்கன முறையில் உபயோகிக்க வழி வகுத்தல்.

உ. ஏரி மற்றும் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகம்.

ஊ. வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்வதற்குப் பண்ணைக் கருவிகளை வழங்குதல் மற்றும் நிலத்தைச் சீர்திருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், கோவில் குளங்களைப் புதுப்பித்தல், கிராம குளம், குட்டைகளைச் சீரமைத்தல் மற்றும் சிறுபாசனக் குளங்களை நிலைப்படுத்துதல் போன்ற பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொள்கிறது.

**2. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

**2.1.** மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)



1999 ஏப்ரல் 5]

தமிழ்நாட்டிலுள்ள நிலங்கள் மண் அரிப்பு, வளம் குன்றுதல் போன்ற இடர்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மானாவாரி நிலங்களில் மண்வளப் பாதுகாப்பு, அரசினுடைய முழுக் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் தவிர இதர மாவட்டத்தின் சமவெளிப் பகுதிகளிலும், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. சிறிய நீர்வடிப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்கவும், மண்ணின் ஈரப்பதம் காக்கவும், நீர் சேகரிப்பிற்கும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலத்தின் தன்மைக்கேற்ப காடு வளர்த்தல், பண்ணைக்காடு வளர்த்தல் போன்ற மாறுபட்ட நில உபயோகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 1552.49 இலட்சம் செலவில் 83,425 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதில் பிப்ரவரி 1999 முடிய ரூ. 1463.81 இலட்சம் செலவில் 82660 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிச் செலவினம் அரசினால் முன்னதாக ஏற்கப்படுகிறது. பிறகு இத்தொகை உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து, பணி முடிக்கப்பட்ட இரண்டாண்டுகட்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில், மீள வசூலிக்கப்படுகிறது. சமவெளிப் பகுதிகளில் பணிச் செலவினத்தில் 25 சதவீத மானியமும், மலைப் பகுதிகளில் 40 சதவீத மானியமும் அளிக்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் ரூ. 1754.30 இலட்சம் செலவில் 80,000 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)**

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும், வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதுமே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நிலத்தின் மண்ணைப் பாதுகாப்பதாலும், நிலங்களின் நீர்ப்பிடிப்புத் தன்மையை மேம்படுத்துவதாலும், நில உபயோகத்தை மேம்படுத்துவதாலும், உற்பத்தி பெருக்கப்பட வேண்டும். வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, நாமக்கல், சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள ஒன்பது பழங்குடியினர் வாழும் பகுதிகளில், பல துறைகள் இணைந்து வளர்ச்சிப் பணிகளை

மேற்கொள்கின்றன. நிலம் சமன் செய்தல், சம உயரக் சுற்சுவர் அமைத்தல் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 100 சதவீத மானியத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது நிலங்களைப் பண்படுத்தி விளைச்சல் நிலமாக மாற்றவும் வழிவகுக்கிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 80.00 இலட்சம் செலவில் 611 எக்டேர் நிலத்தில் பணிகள் செயலாக்கத் திட்டமிடப்பட்டதில் பிப்ரவரி 1999 முடிய ரூ. 74.69 இலட்சம் செலவில் 625 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் ரூ. 92.00 இலட்சம் செலவில் 550 எக்டேர் நிலத்தில் பணிகள் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

**2.3. மலைப் பகுதிகளில் சிறப்பு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்**

மலைப் பகுதிகளில் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப்பயன்பாட்டை முறைப்படுத்துதல், இயற்கை வளப்பைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக, மலைப் பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அ. நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் (மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

நீர்த் தேக்கங்களில் வேகமான வண்டல் படிவினால் கொள்ளளவு குறைந்து, நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிய பயன்படாது போகும் நிலையைக் கட்டுப்படுத்த நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் குந்தா மற்றும் கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நில உபயோக அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்திய நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டு அகில இந்திய மண் மற்றும் நில உபயோக அளவை நிறுவனம் குந்தா மற்றும் கீழ்பவானி நீர்வடிப் பகுதிகளில் உள்ள 176 நீர்வடிப் பகுதிகளில், 58 நீர்வடிப் பகுதிகளைப் பாதுகாப்புப் பணிகள் தேவை என கண்டறிந்து முன்னுரிமைப்படுத்தியுள்ளது. மழை அளவு, மண்ணரிப்பு நிலை, சரிவு, மண்ணின் கட்டமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 8 நீர்வடிப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 560.37 இலட்சம்



செலவில் 7425 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டு பிப்ரவரி 1999 முடிய ரூ. 574.33 இலட்சம் செலவில் 7425 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிச் செலவினத்தில் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டு மீதம் 50 விழுக்காடு கடனாகக் கருதப்படுகிறது. கடன்தொகை, பணி முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழித்து உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து 10 ஆண்டு சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் ரூ. 600.00 இலட்சம் செலவில் 8000 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வைகை- பெரியார், தென்பெண்ணை போன்ற புதிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான கருத்துரு மத்திய அரசின் பரிசிலனையில் உள்ளது.

ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

பல துறைகளால் இணைந்து செயல்படுத்தப்படும் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு ஒரு அங்கம் வகிக்கிறது. விஞ்ஞான முறையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 363.00 இலட்சம் செலவில் 7595 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு 1999 பிப்ரவரி முடிய ரூ. 327.23 இலட்சம் செலவில் 7338 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிச் செலவினத்தில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மீதம் 50 சதவீதம் கடனாகக் கருதப்பட்டு கடன்தொகை உரிய வட்டியுடன் பணி முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயிகளிடமிருந்து பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் ரூ. 406.00 இலட்சம் செலவில் 6865 எக்டேர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் பல வளர்ச்சிப் பணிகளை அங்கமாகக் கொண்ட திட்டமாகும். இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மிக முக்கியமானதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில்

மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நிலுவைத் தொகை கடனாகக் கருதப்பட்டு, அத்தொகை பணி முடிக்கப்பட்ட இரண்டாண்டுகட்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில் உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. நிலச் சரிவுகளைத் தடுப்பது மிக முக்கிய பணியாக இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. புவியியல் தொழில் நுட்பக் குழுவால் கண்டறியப்படும் நிலச்சரிவுப் பகுதிகளில் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 390.00 இலட்சம் செலவில் 2283 எக்டேர் நிலத்தில் நிலச்சரிவினைத் தடுக்கும் பணியுடன் திட்டம் செயல்படுத்தப்படும் வகையில் திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 1999 முடிய 2237 எக்டேர் நிலத்தில் ரூ. 240.38 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நிலச்சரிவுத் தடுப்புப் பணிகள் 100 சதவீத மானியத்தோடு செயல்படுத்தப்படுகின்றன.

**3. தொலை உணர்வுப் பிரிவு**

1985-ல் தொடங்கப்பட்ட தொலை உணர்வுப் பிரிவு தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தகுதி நிலை அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 1000 சதுர கிலோ மீட்டருக்குத் தகுதி நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. அதன்பிறகு வருடத்திற்கு 1500 சதுர கிலோ மீட்டருக்குத் தகுதி நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விண்வெளிக் கலம் மூலம் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மண் அரிமானம், நில உபயோகம், புவியியல் மற்றும் வடிகால் வசதி போன்ற தகவல்கள் அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. தகுதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை நீர்வடிமப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பகுதியின் பரப்பளவான 24,000 சதுர கிலோ மீட்டரில் இதுவரை 19,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்குத் தகுதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலுவையில் உள்ள பரப்பளவிற்குத் தகுதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும்.



*அ. நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு*

மாநில நில உபயோக வாரியம், நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கியுள்ளது. 20 மாவட்டங்களுக்கு நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் மீதமுள்ள மாவட்டங்களுக்கான வரைபடத் தொகுப்பு தயாரிக்கப்படும்.

*ஆ. மண்ணின் வரைபடத் தொகுப்பு*

மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை மாநில நில உபயோக வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இந்த வரைபடத் தொகுப்பில் நீர்வடிப் பகுதிவாரியாக மண்வள விவரம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்திற்கு நீர்வடிப் பகுதி மண்ணின் வரைபடத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. மீதியுள்ள மாவட்டங்களுக்கு வரைபடத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பணி, 1999-2000 ஆண்டில் முடிக்கப்படும்.

**4. சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் (மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)**

சொட்டு நீர்ப்பாசனம் நீர்சேமிப்புக்கு உறுதுணையாக உள்ளது. கிடைக்கும் நீரைக் கொண்டு உயரிய தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிட சொட்டு நீர்ப்பாசனம் வழி வகுக்கிறது. கூடுதல் உற்பத்தி, உற்பத்தியின் தரம், சாகுபடிச் செலவில் சிக்கனம் ஆகியவை இத்திட்டத்தினால் பெறும் கூடுதல் பயன்களாகும். பழங்கள், பூக்கள், காய்கறிகள் மற்றும் தென்னை ஆகிய பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 4500 எக்டேர் நிலப்பரப்பில் விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன்பெற ரூ. 1125 இலட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1999 முடிய சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பணிக்கு ரூ. 904.12 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு, ஒரு எக்டேர் நிலத்திற்கு பணிச் செலவில் 90 விழுக்காடு அல்லது எக்டேர் நிலத்திற்கு ரூ. 25,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு ஒரு எக்டேர் நிலத்திற்குப் பணிச் செலவில் 70

விழுக்காடு அல்லது எக்டேர் நிலத்திற்கு ரூ. 25,000, இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் பணிக்கு ரூ. 1,500 இலட்சம் மானியமாக வழங்கப்பட உள்ளது.

### 5. நில மேம்பாடு (மாநிலத் திட்டம்):

வேளாண்மைக்குப் பண்ணைத் திறன் முக்கிய இடுபொருள் ஆகும். நிலச் சீர்திருத்தம், சாகுபடிப் பணிகள் செய்திட பண்ணைத் திறன் தேவைப்படுகிறது. பாசனம் மற்றும் பிற பண்ணைப் பணிகளைச் செவ்வனே சுலபமாகச் செய்திட, விவசாய நிலங்களில் நிலம் சமன் செய்தல், நிலம் சீராக்குதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. பயிரிடப்படாத நிலங்களைச் சீராக்குதல், நிலம் சமன்படுத்துதல், சாகுபடி நிலங்களைச் சீராக்குதல் ஆகியவற்றைச் செயலாக்குவதன் மூலம் அவற்றிற்குப் பாசனம் பெற வழி வகுப்பதுடன் அதிக பரப்பளவில் சாகுபடி செய்வதும் நில மேம்பாட்டுப் பணியில் அடங்கியவையாகும். இப்பணிகள் துறைவசம் உள்ள மண் தள்ளும் இயந்திரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. இத்துறையில் 130 மண்தள்ளும் இயந்திரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளன. சாகுபடிப் பணிகளை உரிய காலத்தில் செய்திட இத்துறை விவசாயிகளுக்குப் புழுதி உழவு, சேடை உழவு, விளைபொருட்களை எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளில் உதவிட உழுவை இயந்திரங்களை (டிராக்டர்) அதன் இணைப்புக் கருவிகளுடன் வாடகைக்கு வழங்குகிறது. சாகுபடிப் பணியில் உபயோகித்திட, விவசாயிகளுக்கு வழங்க இத்துறைவசம் 126 டிராக்டர்கள் உள்ளன.

1998-99 ஆம் ஆண்டில் மண்தள்ளும் இயந்திரங்கள் 2,20,000 மணிகள் பணி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பிப்ரவரி 1999 முடிய 2,09,125 மணிகள் பணி செய்துள்ளன. டிராக்டர்கள் 1998-99 ஆம் ஆண்டில் 75,000 மணிகள் பணி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பிப்ரவரி 1999 முடிய 72,300 மணிகள் வேலை செய்துள்ளன. 1999-2000 ஆண்டில் புல்டோசர்கள் மற்றும் டிராக்டர்கள் முறையே 2,06,000 மணிகள் மற்றும் 65,000 மணிகள் பணிபுரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆகியவற்றில் பாசன வாய்க்கால்களில் தூர் எடுக்கும்



பணியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மண்தள்ளும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 45 மண்தள்ளும் இயந்திரங்கள் தூர் எடுக்கும் பணியில் 29,686 மணிகள் வேலை செய்துள்ளன.

### 6. நீர்வள நிர்வாகம் - நிலத்தடி நீர்வள மேம்பாடு (மாநிலத் திட்டம்):

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப்படுத்துதல் போன்றவை சிறுபாசனத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டின் பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்ட நிலையில், விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டு போன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடுதல், ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறைக்குச் சொந்தமான ரெஸிஸ்டிவிடி மீட்டர் மற்றும் மின்சார லாக்கிங் கருவி ஆகியவை உழவர்களுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நீர் ஆதாரம், அமைக்கப்படும் கிணறு விவரம் போன்றவை விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இத்துறையில் இப்பணிக்காக 3 மின்சார லாக்கிங் கருவிகளும், 22 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும் உள்ளன.

விசைத்துளைக் கருவி, சிறுவிசைத் துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை வெடிக்கருவி, நீள்துளைக் கருவி மற்றும் காற்றழுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டுபோன கிணறுகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையினால் கீழ்க்காணும் இயந்திரங்கள் பராமரிக்கப்படுகின்றன:—

| | |
|---|---|
| பெர்குஷன் துளைக்கருவிகள் | 30 |
| ரோட்டரி துளைக்கருவிகள் | 49 |
| ஹேமர் துளைக்கருவி | 1 |
| இன்வெல்/வாகன் துளைக்கருவி | 37 |
| பாறை வெடிக்கருவிகள் | 77 |
| நீள்துளைக் கருவிகள் | 39 |

| | |
|---|---|
| காற்றழுத்தக் கருவிகள் | 5 |
| கைத்துளைக் கருவிகள் | 263 |
| சிறுவிசைத்துளைக் கருவி | 20 |

1998-99 ஆம் ஆண்டில் 6700 குழாய்க் கிணறு/வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டதில் பிப்ரவரி 1999 முடிய 6874 குழாய்க் கிணறுகள்/வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் 6700 குழாய்க்கிணறுகள்/வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. பாசனப் பகுதியில் நீர் மேலாண்மை (மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)**

*7.1. பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்*

தோற்றுவிக்கப்பட்ட. பாசனப் பரப்பிற்கும், பாசனம் பெறும் பரப்பிற்கும் உள்ள இடைவெளியை நீக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தினால் உரிய உள் அமைப்புகள் அமைப்பதன் மூலம் சமநீர்ப் பங்கீடு உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டச் செயல்பாடு பாசன வசதியையும், அவற்றைத் திறம்பட உபயோகிப்பதையும் சார்ந்ததாகும். இப்பணிகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படுகின்றன:—

அ. பண்ணை மேன்மைப் பணிகள்

ஆ. சுழற்சி முறை நீர்ப்பாசனம் (வாரபந்தி)

இ. விவசாயிகளுக்குக் குழு செயல்பாட்டிற்காகச் செயல் ஊக்கமளித்தல்

ஈ. விவசாயிகளுக்குச் சங்கங்கள் அமைத்தல்

மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் காவேரி, கீழ்பவானி, பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கோதையாறு, சித்தாறு பட்டணம்கால் திட்டம் ஆகிய ஆறு பாசனப் பகுதிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பண்ணை மேன்மைப் பணிகள் என்பது நீரை எடுத்துச் செல்லுதல், பங்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்குத் தேவைப்படும் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகும். புதிய மண் வாய்க்கால்



அமைத்தல், இருக்கும் மண் வாய்க்காலுக்குக் காரை இடுதல், பங்கீடு அல்லது நீர்பிரிப்புத் தொட்டிகள் கட்டுதல் போன்றவை இப்பண்ணை மேம்பாட்டு பணிகளில் அடங்கும். வாரபந்தி (சுழற்சி முறை நீர்ப்பாசனம்) திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான நீர் சரியான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, விவசாயிகளின் பங்கேற்புடன் சமவிகித அளவில் பாசன நீர்ப்பங்கீடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 4141.32 இலட்சம் செலவில் 52,900 எக்டேர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 73,400 எக்டேர் நிலப்பரப்பில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 1999 முடிய ரூ. 3583.82 இலட்சம் செலவில் 49,743 எக்டேர் நிலப்பரப்பில் பண்ணை மேன்மைப் பணிகளும், 73,823 எக்டேர் நிலப்பரப்பில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1999-2000 ஆண்டில் தாமிரபரணி பாசனப் பரப்புப் பகுதியிலும் தற்போது நடைபெற்று வரும் பண்ணை மேன்மைப் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. 1999-2000 ஆண்டில் ரூ. 3408.41 இலட்சம் செலவில் 64,000 எக்டேர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும், 75,600 எக்டேர் நிலத்தில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட உள்ளன.

*7.2. விவசாயிகளின் பங்கேற்பு அணுகுமுறை*

*அ. விவசாயிகளின் சங்கங்கள்*

பாசனப் பகுதி மேன்மைத் திட்டப் பணிகளின் வெற்றி என்பது விவசாயிகளின் பங்கேற்பைச் சார்ந்தே உள்ளது. விவசாயிகள் தாங்களாகவே தங்கள் பண்ணைகளில் நீர் மேலாண்மையை அமல்படுத்தவும், அதனை நீண்ட காலத்துக்குச் செவ்வனே நிறைவேற்றும் வண்ணமாக ஒருமுகமாகச் செயல்படவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த விவசாயச் சங்கங்கள் 'சமுதாய ஈடுபாட்டுக் கோட்பாட்டை' அடிப்படையாகக் கொண்டு மூன்றடுக்கு முறையில் ஒவ்வொரு திட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அவை,

1. விவசாயிகள் சங்கம் - மதகளவில்

2. விவசாய சபைகள் - கிளை வாய்க்கால் அளவில் (1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது)

3. விவசாயிகள் பாசன இணையம்/உச்சநிலைக் குழு - பாசனப் பகுதி முழுமைக்கும்.

பிப்ரவரி 1999 வரை 448 விவசாயச் சபைகளும், 8216 விவசாயச் சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

### ஆ. விவசாயச் சபைகளுக்கான மேலாண்மை மானியம்

அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள், சபைகள் நீண்டகாலம் நிலைபெற்றிருப்பதற்காகவும், சமமான நீர் பங்கீட்டிற்கான சுழற்சி முறை பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும், பதிவு செய்யப்பட்ட விவசாயச் சபைகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ. 450.00 என்ற அளவில் ஒரே தவணையில் மேலாண்மை மானியமாக நிதி உதவி அளித்து வருகிறது. இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசால் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகளும் எக்டேருக்கு ரூ. 50 வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 170.00 இலட்சம் மேலாண்மை மானியத் தொகை வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாயச் சபைகளுக்கு ரூ. 170.00 இலட்சம் மேலாண்மை மானியமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# அத்தியாயம் 5

## நீர்வடிப் பகுதி மேம்பாடு

பசுமைப் புரட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே பாசனப் பகுதி நிலங்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ள அதேநேரத்தில் சாகுபடிக்குரிய நிலங்களில் பெரும்பங்கு வகிக்கும் மானாவாரி நிலங்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. மானாவாரி நிலங்களை நம்பி வாழும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், மானாவாரி நிலங்களில் வேளாண்மை விளைச்சலைப் பெருக்க வேண்டிய அவசியம் எழுகிறது. மேலும், நிலத்தின் மேற்பரப்பு நீரில் 95 விழுக்காடும், நிலத்தடி நீரில் 75 விழுக்காடும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த அணுகுமுறை முக்கியத்துவம் பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ், மண் அரிப்பைத் தடுத்தல், மழை நீரை விரையமாக்காமல் பயன்படுத்துதல், நிலத்தின் பயன்களைப் பரவலாக்குதல், பயிர் வகைகளை மாற்றுதல் மற்றும் பயிர் பாதுகாப்பு ஆகியவைகளை ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி (watershed) முறையை அனுசரித்து, அதனால் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், மத்திய அரசின் உதவியுடன் செயல்படும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணுகுமுறையைப் பின்பற்றிச் செயற்படுத்தப்படுகின்றன.

### 1. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் ஒருங்கிணைந்த பகுதி திட்டமாகும். இத்திட்டத்தின் தலையாய நோக்கம், நீர்வடிப் பகுதியில் இருக்கும் வறட்சியின் கொடுமையைத் தணிக்கும் நிலம், நீர் போன்ற இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்தி, சுற்றுப்புற சூழல் பாதிக்காமல், வேளாண்மை சாராத பணிகளை மேற்கொண்டு, வேலை வாய்ப்புக்களை அதிகரித்து, பொதுவாக அப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதேயாகும். இத்திட்டம் 80 ஊராட்சி ஒன்றியங்களில் தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவு

மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50:50 என்ற விகிதத்தில் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

1995-96 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு இத்திட்டத்திற்கான வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றியது. அதன்படி இத்திட்டம், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணுகுமுறையைப் பின்பற்றி மக்களின் ஒத்துழைப்புடன், 297 நீர்வடிப் பகுதிகளில் 30 திட்ட அமலாக்க முகமைகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதற்கு நீர்வடிப் பகுதி குழுக்கள், நீர்வடிப் பகுதி சங்கங்கள், பயனாளிகள் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 1995-96 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை நான்காண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். 1995-96 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கி, முதல் கட்ட நீர்வடிப் பகுதித் திட்டங்கள் 31-3-1999 அன்று முடிவடைய உள்ளன.

1997-98 ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய அரசு, மேலும் 103 நீர்வடிப் பகுதிகளுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது. தற்போது, இம்மாநிலத்தில் மொத்தம் 400 நீர்வடிப் பகுதிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. கூடுதலாக விரிவுபடுத்தப்பட்டுள்ள நீர்வடிப பகுதிகளில் நிறுவன அமைப்புகள மற்றும் முன்பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| 1995-96 | 1485.00 | 761.06 |
| 1996-97 | 1485.00 | 1210.78 |
| 1997-98 | 1485.00 | 1549.82* |
| 1998-99 | 1285.40 | 2240.00* (பிப்ரவரி 1999 வரை) |

*ஒதுக்கீடுபோக, கூடுதல் செலவினம் கடந்த ஆண்டு செலவழிக்கப்படாத தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

1999-2000 ஆண்டில் ரூ. 206.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 1999-2000 ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குப் புதிதாக 401 நீர்வடிப்



பகுதிகளில் ரூ. 8,020 இலட்சத்தில் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டம்

தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டம் (NWDPRA) மத்திய அரசின் ஆதரவோடு 1990-91 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தின் இரு முக்கிய நோக்கங்களாவது, ஒன்று உற்பத்தியை நிலைப்படுத்துதல், பிறிதொன்று சுற்றுப்புறச் சூழ்நிலையை சமநிலைப்படுத்துவதாகும். இத்திட்டம் 84 நீர்வடிப் பகுதிகளில் கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களில் பரவலாகச் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு இத்திட்டத்தின் முதலீட்டில் 75 விழுக்காட்டினை மானியமாகவும், மீதமுள்ள 25 விழுக்காட்டினைக் கடனாகவும் வழங்குகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ. 1650 இலட்சங்களாகும். மேலும், கடந்த ஆண்டு செலவழிக்கப்படாத தொகையான ரூ. 187.307 இலட்சத்துக்கு மீண்டும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆக 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 1837.307 இலட்சம் செலவழிக்கப்படவுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 100 கோடி ஒதுக்கீட்டில் 2,62,526 எக்டேர் நிலப்பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் நோக்கங்கள்:

1. ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலையை மீளப் பெறுதல்.
2. மண்வளம் பாதுகாத்தல் மற்றும் நிலத்தின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல்.
3. வேலை வாய்ப்பு மற்றும் தனிநபர் வருமான வழிகளை உருவாக்குதல்.

4. நீர்வடிப் பகுதி மேலாண்மை கொள்கைகளின் அடிப்படையில் பண்ணைத் தொழிலை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்தல்.

5. கிராம மக்கள் நகர்ப்புறத்தை நோக்கி இடம் பெயர்வதைத் தவிர்த்தல்.

6. அப்பகுதிகளில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி, உணவு உற்பத்தி மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு, பிப்ரவரி 1999 வரையிலான சாதனை மற்றும் 1999-2000 ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டம் ஆகியவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணிகள் | 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு | பிப்ரவரி 1999 வரை செலவினம் | 1999-2000 ஆண்டிற்கான இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | அடிப்படைச் செயல்பாடுகள் | 643.058 | 485.073 | 577.500 |
| 2 | சாகுபடிக்குகந்த நிலச் செயல்பாடுகள் | 496.073 | 420.187 | 445.500 |
| 3 | கால்நடைப் பராமரிப்புப் பணி | 587.938 | 106.233 | 99.000 |
| 4 | சாகுபடிக்கு ஒவ்வாத நிலச் செயல்பாடுகள் | 110.238 | 394.631 | 528.000 |
| | மொத்தம் | 1837.307 | 1406.124 | 1650.000 |

## 3. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்:

நிலைப்படுத்துதல், சமபங்கு மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாத்தல் போன்ற பரந்த குறிக்கோள்களைக் கடைப்பிடிக்கும் வாயிலாக, கிராமங்களில் வாழும் மக்களில் குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் நலிந்தோர்களின் தேவைக்கேற்றவாறு, விறகு, தீவனப் பயிர் கட்டுமானம் மற்றும் எரிபொருளுக்கான மரத் தேவை மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு, இத்திட்டம் செயல்படுகிறது.

இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது:



| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மொத்தப் பரப்பு (எக்டரில்) | மொத்தத் தொகை (இல.ரூ.) | திட்டக் காலம் (வருடங்கள்) | 28-2-99 வரை நிதி சாதனை (இல.ரூ.) | வட்டாரம்/ நீர்வடிப்பகுதிகளின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதுக்கோட்டை | 2155 | 126.45 | 5 | 26.894 | கந்தர்வகோட்டை |
| 2 | ஈரோடு | 4000 | 343.93 | 4 | 170.489 | குதியாலத்தூர் |
| 3 | சிவகங்கை | 3072 | 284.73 | 5 | 134.45 | காளையார் கோயில் |
| 4 | கடலூர் | 3010 | 249.00 | 5 | 12..000 | கெடிலம் |
| 5 | வேலூர் | 5000 | 296.04 | 3 | 192.050 | பொன்னையார் |
| 6 | திருவண்ணாமலை | 3900 | 255.94 | 4 | 147.910 | செங்கம் |
| 7 | திண்டுக்கல் | 5507 | 200.00 | 4 | 38.27 | சாணார்பட்டி |
| 8 | கோயம்புத்தூர் | 9058 | 362.32 | 4 | 0.47 | வட்டமலைக் கரை |

## 4. முதலீடு முன்னேற்றத் திட்டம்:

1998-99 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் காடுகள் நீங்கலாக தரிசு நிலங்களில் செயல்படுத்தப்படுகின்றது. மத்திய அரசின் புதிய வழிகாட்டிக் கோட்பாடுகளின்படி, திட்ட முதலீட்டில் 25 விழுக்காடுகள் முதல் 50 விழுக்காடு அல்லது ரூ. 25 இலட்சத்திற்குட்பட்ட அளவில் மானியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, பல்வகையான தொழில் முனைவோரின் பங்களிப்பு 10 விழுக்காடு முதல் 25 விழுக்காடு வரை பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்குப் பொருந்தாது.

மத்திய மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள், கூட்டாண்மை

பம்பு செட்டுகள் அமைத்தல், வரப்புகள் மற்றும் தோட்டங்கள் அமைத்தல் ஊடுபயிர் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

**5. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 68 செயற்குறிப்புகளை இவ்வரசு மத்திய அரசின் ஒப்புதலுக்காக இதுவரை அனுப்பிவைத்துள்ளது. அவற்றில் மத்திய அரசு கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு மட்டும் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளது:

| வ. எண் | தன்னார்வத் தொண்டு நிறுவன பெயர் | மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) | இதுவரை வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) | சாகுபடிக்கான மொத்த பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | பளீஸ் நிறுவனம், மதுரை மாவட்டம் | 6.69 | 1.33 | 150 |
| 2 | தமிழ்நாடு ஏழை உழவர் சங்கம், சேலம் மாவட்டம் | 6.69 | 1.33 | 150 |
| 3 | சமூக சேவை, விஞ்ஞானம் மற்றும் கிராம முன்னேற்றத்திற்கான சங்கம், திண்டுக்கல் மாவட்டம் | 6.97 | 1.39 | 150 |

**6. தொழில்நுட்ப முன்னேற்றம் - விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம் :**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவாழ் மலையில் 25 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 25.44 இலட்சம் மூலதனத்தில் 5 ஆண்டு திட்ட காலத்திற்குள் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் திட்ட அமலாக்க முகமையாகச் செயல்படுகின்றார். இதுவரை ரூ. 6.22 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

**7. தரிசு நில மேம்பாடு, நீர்வடிப் பகுதி மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான உயர்நிலைக் குழு :**

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு, தரிசு நில மேம்பாடு, நீர்வடிப் பகுதி மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக



25 பரிந்துரைகளைத் தந்துள்ளது. இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக துறைத் தலைவர்கள் அனுப்பிய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஒரு முன்னோடித் திட்டத்திற்கு 6 செயற்குறிப்புகள் துறைத் தலைவர்களால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன. மேலும் தரிசு நிலங்கள் 4,000 எக்டேரிலிருந்து 40,000 எக்டேர் நிலப்பரப்பு கொண்ட 7 செயற்குறிப்புகள் துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்தச் செயற்குறிப்புகளின் மூலம் 1,11,756 எக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 7,224 இலட்சத்தில் தரிசு நில மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1999-2000 ஆண்டில் மத்திய அரசுக்கு இத்தகைய பல செயற்குறிப்புகளை அனுப்பி, பெருமளவில் நிதி உதவி பெற்று, தரிசு நிலங்களை மேம்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 5

# அத்தியாயம் 6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மை முன்னேற்றத்திற்கும், வேளாண் வளர்ச்சி, வேளாண்மைக் கல்வி மற்றும் வேளாண் சார்புத் தொழில்கள் பற்றி ஆராயவும் 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்புத் தொழில்களை அரசுத் துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கிராமப்புற மக்களுக்கு விரிவாக்கத் துறையின் மூலம் செயல்படுத்துதல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், தட்பவெப்ப நிலைக்கேற்ப திருத்திய உயர் விளைச்சல் பயிர் இரகங்களை உருவாக்குதல், மண் மற்றும் பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு மற்றும் சீரிய தொழில் நுணுக்கங்களைக் கண்டறிதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகம் அரும்பாடுபட்டு வருகிறது.

### 1. கல்வி :

கல்வித் திட்டங்கள் :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வித் திட்டங்கள் கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம், திருச்சிராப்பள்ளி, குமுளுர், பெரியகுளம், மேட்டுப்பாளையம் ஆகிய ஏழு வளாகங்களில் உள்ள 10 கல்லூரிகளில் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், பொறியியல், மனையியல் மற்றும் உணவுப் பதனம் செய்தல் (பொறியியல்) ஆகிய 6 கலைப்புலங்களில் இளமறிவியல் கல்வித் திட்டங்களும், 26 துறைகளில் மூதறிவியல் கல்வியும் 20 துறைகளில் முனைவர் பட்டப் படிப்பும், பட்டு வளர்ப்பில் ஒரு முதுநிலைப் பட்டயப் படிப்பும் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் இளமறிவியலில் 533 மாணவர்களும், மூதறிவியல் பட்டப் படிப்பில் 266 மாணவர்களும், முனைவர் பட்டப் படிப்பில் 125 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். இதில் பெண்கள் 45.7 விழுக்காடு ஆவர்.

அகில இந்தியப் போட்டித் தேர்வின் அடிப்படையில் தேர்வுபெறும் மாணவர்களுக்கு 10 விழுக்காடு இடம் இளமறிவியல் பட்டப் படிப்புகளிலும், 15 விழுக்காடு இடம் மூதறிவியல் பட்டப் படிப்புகளிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உணவுப் பதனம் செய்தல் பொறியியல் இளங்கலை பாடத்



1999 ஏப்ரல் 5]

திட்டங்கள் 1998-99 முதல் தொடங்கப்பட்டு உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 27 மாணவர்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கல்வி உதவித் தொகை கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் 8 மாணவர்கள் அகில இந்திய அடிப்படையிலான விருதுகளைப் பெற்றுள்ளனர்.

### 2. ஆராய்ச்சி :

தமிழ்நாடு அரசு 1998-99 ஆம் ஆண்டில் 10 புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ. 30.67 இலட்சம் நிதியளவில் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களில் உயிர் நுட்பவியல் மற்றும் இத்துறை மூலம் உருவாக்கப்படும் செடிகளைப் பேணும் பசுமை இல்லம், பூ விதை நுட்பம், சூரியகாந்தியில் வீரிய ஒட்டு, பாசனத்தில் பயறு வளர்ப்பு நச்சுயிரிகளுக்கான எதிர்ப்பு மருந்து வங்கி, வேளாண்மையில் மூலதனம் உருவாக்குதல், மூலதன உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், வேம்புப் பொருட்களின் தன்மைதனை நீட்டித்தல் மற்றும் வடகிழக்கு மழையைச் சீரிய முறையில் பயன்படுத்துதல் போன்றனவாகும். மேலே கூறிய 10 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. மேலும், ரூ. 26.75 இலட்சங்களில் ஒரு புதிய ஆராய்ச்சி நிலையம், அதாவது மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் சேலம் மாவட்டத்திலுள்ள ஏத்தாபூரில் ஆகஸ்டு திங்கள், 1998-ல் செயல்படத் தொடங்கியது.

பல்வேறு உள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்களில் ஆராய்ச்சிப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. நிதியுதவி அளிக்கும் நிறுவனம் மற்றும் அளிக்கப்படும் நிதி பற்றிய விவரங்கள் அட்டவணை 1-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 1998-99 ஆம் ஆண்டில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள்.*

| வஎண் (1) | நிறுவனங்கள் (2) | நிதி (ரூபாய் இலட்சம்) (3) |
|---|---|---|
| 1 | திட்டம் (மனித வள மேம்பாடு மற்றும் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் சேர்த்து - தமிழக அரசு) | 2,232.11 |
| 2 | திட்டமல்லாதது - தமிழக அரசு | 2,037.65 |
| 3 | இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | 872.24 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4 | மத்திய அரசு | 176.87 |
| 5 | வெளிநாட்டு நிறுவனங்கள் | 68.12 |
| 6 | தனியார் நிறுவனங்கள் | 123.23 |
| | மொத்தம் | 5510.22 |

இத்திட்டங்களில் புதிய பயிர் இரகங்களை உருவாக்குதல், நெல, தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், நார்ப் பயிர்கள், கரும்பு, எண்ணெய், நெல் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல், தழை உரம். பாசன முதலீடுகள் மாதிரி, கழிவு பயன்படுத்துதல, விதை உற்பத்தி, பூச்சி மருந்துகள், உயிரியல உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள், பண்ணை அமைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டக மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல் மாசுபடுதல், தொலை உணர்வு, மூலிகைப் பயிர்கள், மஞ்சள், மிளகாய், அலங்கார மலர்கள் மற்றும் தொழில் நுட்பப் பரிமாற்றம் போன்றன செயலாககப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பலவேறு வளாகங்கள மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகளின் சீரிய முயற்சிகளினால் 9 புதிய வேளாண் பயிர் இரகங்களும், 3 தோட்டக்கலைப் பயிர்களும் மற்றும் ஒரு வேளாண் உயிர் பொருளும் (மொட்டுக்காளான்) வெளியிடப்பட்டன. நெல், பாசிப்பயறு, பருத்தி, கரும்பு, புதிய சவுண்டல், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பிரெஞ்சு அவரை, வெந்தயம் மறறும் மொட்டுக்காளான் ஆகியவற்றில ஒவ்வொன்றும், துவரையில் இரண்டும் மற்றும் நிலக்கடலையில இரண்டும் உருவாக்கப்பட்டன. மேலும் வேளாண் பணிகளில் வேலைப் பளுவைக் குறைத்து, பணியை எளிதில் செய்ய ஒன்பது புதிய வேளாண் கருவிகளான உழுதுசால அமைத்து விதைக்கும் கருவி, வாய்க்கால்/ வடிகால் தோண்டும் கருவி, பவர் டில்லருடன் இணைத்து அதிக நீர் இறைக்கும் குழாய் பம்பு மாதிரி-2, தீவனச் சோளம் அறுவடை இயந்திரம், நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் இயந்திரம், நிலக்கடலை அறுவடை செய்யும் கருவி, மரவள்ளிக் கிழங்கு மாவு படியவைக்கும் அடுப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மதிய உணவு மைய எரிவாயுக் கலன் ஆகியவை உருவாக்கப்பட்டன. இப்பயிர் இரகங்களும்



வேளாண் கருவிகளும் பொங்கல் பரிசாக சனவரி 7, 1999 அன்று வேளாண் மக்களின் நலனுக்காக வெளியிடப்பட்டன.

### 3. வல்லுநர் விதைக் குறியீடும் விநியோகமும் :

வேளாண் மக்கள் நல்ல விதைகளைப் பெற்று பயன் பெற உதவும் நோக்கத்துடன் மாநில மற்றும் விதை உற்பத்தியாளர்களின் விரிவாக்கத் துறையினருக்கு வல்லுநர் விதையைப் பெருக்க மொத்த குறியீட்டு விதை அளவான 1,38,932 கிலோவுக்கும் மேலாக 1,39,746 கிலோ விநியோகிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரம் அட்டவணை-2-இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

**வல்லுநர் விதை விநியோகம்**

| பயிர் | 1998-99க்கான குறியீடு (கிலோவில்) | | | விதை விநியோகம் (கிலோவில்) (28-2-99 வரை) | | |
|---|---|---|---|---|---|---|
| | வேளாண் துறை மற்றும் மத்திய அரசு | தனியார் | மொத்தம் | வேளாண் துறை மற்றும் மத்திய அரசு | தனியார் | மொத்தம் |
| நெல் | 22715 | 9300 | 32015 | 22794 | 19323 | 42117 |
| சிறு தானியங்கள் | 174 | 60 | 234 | 707 | 145 | 852 |
| பயறு வகைகள் | 9403 | - | 9403 | 7284 | 22 | 7306 |
| எண்ணெய் வித்துக்கள் | 96487 | - | 96487 | 75096 | 13067 | 88163 |
| பருத்தி | 180 | 200 | 380 | 260 | 408 | 668 |
| தீவனப் பயிர்கள் | 236 | - | 236 | 308 | 24 | 332 |
| காய்கறிப் பயிர்கள் | 27 | 150 | 177 | 30 | 280 | 310 |
| மொத்தம் | 129222 | 9710 | 138932 | 106479 | 33267 | 139746 |

### 4. தொழில்நுட்பப் பரிமாற்றம் :

பல்கலைக்கழகத்தின் பல்வேறு விரிவாக்க மையங்களின் வாயிலாக ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் தொழில்நுட்பங்களை உழவர்களிடம் பரப்பும் பணியில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் ஈடுபட்டுள்ளது. தகவல் தொடர்பு நிலையத்தின் வாயிலாக வீடியோ

நிகழ்ச்சிகள் (50) வானொலி வேளாண்மைப் பள்ளி (7) மற்றும் அஞ்சல் வழிப் பாடத் திட்டம் (11) முதலான முக்கியப் பணிகள் வாயிலாக வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளின் தொழில் நுட்பங்கள் உழவர்களிடம் பரப்பப்பட்டு வருகின்றன. இது தவிர வீடியோ நூலகப் பிரிவு வளர்ச்சித் துறைகளுக்குத் தேவையான வீடியோ நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகின்றது. அறிக்கை காலத்தில் பத்து வீடியோ நிகழ்ச்சிகள் வளர்ச்சித் துறைகளுக்காக இப்பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டன.

**5. வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள் :**

பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் செயல்படும் 5 வேளாண்மை அறிவியல் நிலையங்கள மற்றும் 5 பயிர் மருத்துவ மையங்கள் வேளாண்மை மற்றும இதர வளர்ச்சித் துறைகளின் ஈடுபாட்டுடன் பல்வேறு விரிவாக்கப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12,000 உழவர்களும் இடைநிலை விரிவாக்கப் பணியாளர்களும இந்த விரிவாக்கப் பணிகள் வாயிலாகப் பயன்பெறுகின்றனர். அறிக்கை காலத்தில் 1892 பயிற்சிகள், 1036 செயல் விளக்கங்கள, 198 கிராமக் கூட்டங்கள், 1382 பண்ணை ஆலோசனைப் பணிகள், 78 கருத்துக்காட்சிகள் மற்றும் 43 முகாம்களையும் இம்மையங்கள் செயல்படுத்தின. இது தவிர பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் வாயிலாக 197 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. வானொலி/தொலைக்காட்சியின் மூலம் 108 நிகழ்ச்சிகளும், 197 சிறு புததகங்கள் வெளியீடும் செயல்படுத்தப்பட்டன.

**6. வேளாண்மைத் தகவல் பணி :**

பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களைப் பரப்பும் பணியை வேளாணமைத தகவல் பணி மையம் செவ்வனே செய்து வருகின்றது. தொழில்நுட்பச் செய்திகள் அவ்வப்பொழுது தயாரிக்கப்பட்டு, உழவர்கள் மற்றும் விரிவாககப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அறிக்கை காலத்தில் 130 தொழில்நுட்பச் செய்திகள் பரப்பப்பட்டன.

**7. பயிற்சி :**

வேளாணமை மற்றும் இதர பிரிவுகளின் வளர்ச்சித் துறைகளின் விரிவாக்கப் பணியாளர்கள், இடுபொருள் நிறுவனத்தின், அரசு சாரா



நிறுவனங்கள், தேசிய வங்கிகள், தேசிய பால்வள வளர்ச்சி வாரியம் போன்ற பிரிவினருக்குப் பல்கலைக்கழகம் பயிற்சிப் பிரிவின் வாயிலாகத் தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்து வருகிறது. அறிக்கை காலத்தில் 963 நபர்கள் பயன்பெறும்வண்ணம் 44 பயிற்சிகளைப் பயிற்சிப் பிரிவு நடத்தியது.

**8. வெளியீடுகள் :**

விரிவாக்கக் கல்வி இயக்ககத்தினால் மாதாந்திர செய்திமடல் தமிழில் ஒன்றும், ஆங்கிலத்தில் ஒன்றுமாக வெளியிடப்படுகின்றன. வளர்ச்சித் துறைகளின் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் உழவர்களுக்கு அந்தந்த இடங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள் செய்தி மடல்கள் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றன. ஆராய்ச்சித் திட்டங்களின் முடிவுகளும் அவ்வப்பொழுது விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. காளான் சாகுபடியில் ஈடுபட்டுள்ள உழவர்கள் பயன்பெறும்வண்ணம் காலாண்டு செய்திமடல் ஒன்று தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றது. இது தவிர 10,500 சந்தாதாரர்களைக் கொண்ட மாதாந்திர தமிழ் வெளியீடான 'வளரும் வேளாண்மை' என்ற சிறு புத்தகமும் தொழில்நுட்பங்களைப் பரப்பிட வெளியிடப்படுகின்றது.

**9. சிறப்புப் பணிகள் :**

*முன்னோடி கிராமங்களின் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றம் :*

உழவர்கள் பயன்பெறும்வண்ணம் பல்கலைக்கழகத்தின் புதிய தொழில்நுட்பங்களைச் செயல் விளக்கமாகச் செயல்படுத்தி குறிபபிட்ட கிராமத்தினை ஒரு மாதிரி முன்னோடி கிராமமாக மாற்றிட ஏதுவாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள் பணிக்கப்பட்டுள்ளன இறவை மற்றும் மானாவாரி நில அமைப்பின் அடிப்படையில் ஒவ்வொரு கிராமமாக மொத்தம் இரண்டு கிராமங்கள் தெரிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் கிராமங்களில் சுமார் 200 பண்ணைக் குடும்பங்கள் இருக்கும்வண்ணம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு 20 முன்னோடி கிராமங்களைத தெரிவு செய்ய ஏற்றவாறு அனைத்து வழிமுறைகளும் தெரிவிக்கப்பட்டன. அறிக்கை காலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள் வாயிலாக

20 முன்னோடி கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு, விரிவாக்கப் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

**10. முனைப்பு ஆய்வுகள் :**

(1) குறைந்த விளைச்சல் தரும் பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல்.

அ. மானாவாரிப் பயிர்களில் விளைச்சலை மேம்படுத்துதல்.

ஆ. நில வள உபயோகத்தைத் திட்டமிடல் மற்றும் ஆதார வளங்களைக் கண்காணித்தல்.

இ. நீர் உபயோகத்தை அதிகபட்சமாக்குதல்.

(2) நீடித்த நிலையான வேளாண்மைக்குச் செலவு மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காத உத்திகள்.

அ. பயிர் மேலாண்மையில் இயற்கை உயிரியல் கொல்லிகளின் உபயோகத்தைத் தீவிரப்படுத்துதல்.

ஆ. ஏற்றுமதிக்குகந்த தோட்டக்கலை பயிர் மேலாண்மையில் இயற்கை பயிர் பொருட்களைக் குறிப்பீடு செய்தல்.

(3) பயிர்களில் விளைச்சலைப் பெருக்க வீரிய ஒட்டு தொழில் நுட்பத்தைச் செயல்படுத்துதல்.

அ. நெல் மற்றும் சிறுதானியங்கள், பயறு, எண்ணெய்வித்து மற்றும் பருத்தி போன்ற பயிர்களில் வீரிய ஒட்டு தொழில்நுட்பத்தை வலுவூட்டுதல்.

ஆ. தீவனப் பயிர்களின் ஆராய்ச்சியை வலுப்படுத்தல்.

(4) பின்தங்கிய பகுதி மற்றும் பிற்படுத்தப்பட்ட பயிர்வகைகளை மேம்படுத்துதல்.

அ. தரிசுநில மேம்பாடு.

ஆ. மூலிகைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

இ. குறைவான உபயோகத்தில் உள்ள மர வகைகளின் செயல்பாட்டினை அதிகரித்தல்.

(5) வேளாண் கருவிகள் மற்றும் சக்தியால் இயங்கும் கருவிகளை உருவாக்குதல்.



அ. வேளாண் தொழில்கள் நிறுவுவதை நடைமுறைப்படுத்துவது பற்றிய ஆய்வு.

ஆ. அறுவடைக்குப் பின் பதனப்படுத்துவதை வலுப்படுத்துதல்.

(6) ஏற்றுமதிக்குகந்த தோட்டக்கலை

தோட்டக்கலைப் பயிர்களில் அறுவடைக்குப்பின் நேர்த்தி, வலுப்படுத்துதல்.

(7) தகவல் மற்றும் தொடர்பு அமைப்பை வலுப்படுத்துதல், உள்ளூர் தொழில்நுட்பங்களை வகைப்படுத்துதல்.

[1999 ஏப்ரல் 5

# அத்தியாயம் 7

## விதைச் சான்றளிப்பு

விவசாயிகள் தரமான விதைகள் பெற்று பயிர் மகசூலை அதிகரிக்கும்பொருட்டு விதைச் சான்று துறை கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. விதைச் சான்றுத் திட்டம்
2. விதை ஆய்வுத் திட்டம்.
3. விதைப் பரிசோதனை மற்றும்
4. விதைச்சான்று பயிற்சி

### 1. விதைச் சான்றளிப்பு :

விதைச் சான்று துறை விதைச்சட்டம் 1966 மற்றும் விதைகள் விதிகள் 1968-ல் தெரிவித்துள்ள விதைச் சான்று நடைமுறைகளைப் பின்பற்றி மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் தரமான விதைகளுக்குச் சான்று செய்து வருகிறது. விதைச் சான்று என்பது உயர்ரக பயிர் ரகங்களின் விதைகளில் வரையறுக்கப்பட்ட முளைப்புத் திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, விதை ஆரோக்கியம் ஆகியவற்றைப் பேண நடைமுறைகளை வகுத்து பின்பற்றி சான்று வழங்குவதாகும். வருடாந்திர சராசரி சான்று விதை உற்பத்தி 25000 மெட்ரிக் டன்களாக இருந்தது. 1997-98-ல் 32,326 மெட்ரிக் டன்களாக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டு இச்சாதனையை மிஞ்சும வகையில் சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் 33,000 மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (அட்டவணை 1)

### 2. விதை ஆய்வு

விதைச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதே ஆகும். இத்துறையின் விதை ஆய்வுப் பிரிவு விதைகள் சட்ட அமலாக்கப் பணியை விதைகள் சட்டம் 1966, விதைகள் விதிகள் 1968 மற்றும் விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983 ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது. தரமான விதைகள் விவசாயிகள் பெறுவதை உறுதி செய்ய விதை ஆய்வுப் பிரிவின் விதை ஆய்வாளர்களால் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்து



1999 ஏப்ரல் 5]

விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின்படி, தரக் குறைவான விதை விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983-ன்படி விதை விற்பனை உரிமம் வழங்கப்படுகிறது.

தனியார் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுகள் விநியோகத்தை நெறிப்படுத்தும் நோக்கில் அவற்றின் செயல் திறன் அறிய அமைக்கப்பட்டுள்ள சோதனைத் திடல்கள் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பதிவு செய்து வினியோகத்திற்கு அனுமதிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 1120 தரக் குறைவான விதைக் குவியல்கள் விற்பனை தடை செய்யப்பட்டன. தரக் குறைவான விதைக் குவியல்களின் அளவு 20 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாகக் குறைந்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 முடிய 25,125 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு 19,463 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் 24,000 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு 18,000 விதை மாதிரிகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன (அட்டவணை 2)

### 3. விதைப் பரிசோதனை :

விதைகளின் இனத்தூய்மை, புறத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றைச் சோதனை செய்வதும், அவ்வகையில் சோதனை செய்யப்பட்ட விதைகள் எப்பகுதியில் சோதனை செய்தாலும் ஒரேமாதிரியான முடிவுகளைப் பெறக்கூடிய வகையில் இருப்பதும் இதன் நோக்கமாகும். விதைச் சான்று மற்றும் விதை ஆய்வுத் திட்டங்கள் செவ்வனே நடைபெற விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஆண்டுதோறும் 42,000 விதை மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் திறனுக்கு, 1997-98-ல் 52,863 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இப்பரிசோதனை நிலையங்களில் சான்று விதை, ஆய்வு விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுவதுடன் விதை உற்பத்தியாளர்களிடம் இருந்தும் விதை விற்பனையாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 முடிய 50,417 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் 7 விதைப் பரிசோதனை நிலையங்களின் சோதனைத் திறனை

முழுமையாகப் பயன்படுத்தி 46,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (அட்டவணை 3)

இனத்தூய்மைப் பரிசோதனைகள் கண்ணம்பாளையம் பண்ணையிலும் விதைச் சான்று இயக்ககத்தின் கண்ணாடிக் குடிலிலும் நடத்தப்படுகின்றன. விதைச் சான்று திட்டத்தில் பருத்தி ஒட்டு இரகங்கள், பருத்தி மற்றும் தக்காளி ஆதார நிலை விதைகள் மட்டுமின்றி விதை ஆய்வுப் பிரிவின் சந்தேகத்திற்குரிய விதை மாதிரிகளும் இனத்தூய்மை பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1999 முடிய 612 விதை மாதிரிகள் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது 1999-2000 ஆண்டில் 1800 விதை மாதிரிகள் இனத்தூய்மை பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. பயிற்சி**

சான்று விதை உற்பத்தி முறைகள் குறித்தும் விதைத் தரம் பேணுதல் குறித்தும் விதைப் பரிசோதனை பற்றியும் விதை உற்பத்தியாளர்கள், சாகுபடியாளாகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதைச் சான்றுத் துறையில் பணியாற்றும் அலுவலாகள் பயன்பெறும் பொருட்டு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:

*அ. ஆற்றுப்படுத்தும் பயிற்சி*

விதைச் சான்று துறையில் புதிதாக பணியில் அமர்த்தப்படும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு விதைச் சான்றளிப்பு நடைமுறைகள், வயல் ஆய்வுப் பணிகள், விதை சுத்திகரிப்புப் பணிகள், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல் மற்றும் பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள், விதைச் சட்டம் மற்றும் விதை பரிசோதனை நடைமுறைகள் தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

*ஆ. புத்தூட்டப்பயிற்சி*

இத்துறையில் பணிபுரியும் விதைச் சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர்கள் மற்றும் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஆகியவர்களுக்குத் திருத்திய விதைச் சான்று நடைமுறைகள், விதை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் குணாதிசயங்கள் பற்றியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



*இ. விதை உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்கள் பயிற்சி*

இப்பயிற்சியில் அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்களுக்குச் சான்று விதை உற்பத்தி பற்றிய தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடி முறைகளைத் தெளிவாக விளக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

*ஈ. விதை விற்பனையாளர் தரக் கட்டுப்பாடு பயிற்சி*

விதை விற்பனையாளர்களுக்கு விதைகள் சேமித்தல், விதைத் தரம் பேணுதல், சேமிப்பில் விதைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், விதைகள் சட்டம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் பிபாரவரி 1999 முடிய 24,780 நபர்களுக்கு வெவ்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 1999-2000 ஆண்டில் 22,000 நபர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (அட்டவணை 4)

5. 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 795.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பிப்ரவரி 1999 முடிய ரூ. 723.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை மார்ச் 1999 க்குள் செலவிடப்படும்.

1997-98 ஆம் ஆண்டில் வயல் ஆய்வுக் கட்டணம் விதைப் பரிசோதனைக் கட்டணம் மற்றும் சான்றட்டை கட்டணமாக ரூ. 94.99 இலட்சம் துறைக்கு வருவாயாக பெறப்பட்டது. 1998-99 ஆம ஆண்டு பிப்ரவரி 1999 முடிய ரூ. 87.94 இலட்சம் வரவினமாக பெறப்பட்டுள்ளது. மார்ச் 1999க்குள ரூ. 100 இலட்சம் துறைக்கு வருவாயாக எதிர்பார்க்கப்படுகிறது 1999-2000 ஆண்டில் ரூ. 105.00 இலட்சத்திற்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை-1**

**சான்று செய்த விதையளவு (மெட்ரிக் டன்)**

| வ.எண் | பயிர் | 1997-98 சாதனை | 1998-99 இலக்கு | 1998-99 (பிப்ரவரி'99 வரை) சாதனை | 1999-2000 திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | நெல் | 25346 | 23500 | 18706 | 24000 |
| 2 | இரக சிறுதானியங்கள் | 355 | 400 | 302 | 400 |
| 3 | வீரிய சிறுதானியங்கள் | 36 | 50 | 44 | 50 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4 | இரக பருத்தி | 1332 | 2500 | 729 | 2700 |
| 5 | வீரிய பருத்தி | 119 | 200 | 97 | 250 |
| 6 | பயறு வகைகள் | 1511 | 2250 | 1431 | 2500 |
| 7 | எண்ணெய்வித்துப் பயிர்கள் | 3584 | 3000 | 3139 | 3000 |
| 8 | காய்கறிகள் | 63 | 100 | 64 | 100 |
| | மொத்தம் | 32326 | 32000 | 24512 | 33000 |

**அட்டவணை-2**

**விதை ஆய்வு**

| வ.எண் | விவரம் | 1997-98 சாதனை | 1998-99 இலக்கு | 1998-99 பிப்ரவரி'99 வரை சாதனை | 1999-2000 திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு | 23927 | 22250 | 25125 | 24000 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது (எண்கள்) | 17294 | 18000 | 19463 | 18000 |
| 3 | வழக்கு தொடர்ந்தது (எண்கள்) | 235 | - | 342 | - |

**அட்டவணை-3**

**விதைப் பரிசோதனை**

| வ.எண் | விவரம் | 1997-98 சாதனை | 1998-99 இலக்கு | 1998-99 பிப்ரவரி'99 வரை சாதனை | 1999-2000 திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | விதைப் பகுப்பாய்வு பரிசோதனை செய்தது | 52863 | 42000 | 50417 | 46000 |
| 2 | இனத்தூய்மை பரிசோதனை செய்த மாதிரிகள் | 1191 | - | 612 | 1800 |

**அட்டவணை-4**

**பயிற்சி**

| வ.எண் | விவரம் | 1997-98 சாதனை | 1998-99 இலக்கு | 1998-99 பிப்ரவரி'99 வரை சாதனை | 1999-2000 திட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பயனாளிகள் | 21625 | 20000 | 24780 | 22000 |



# அத்தியாயம்-8

## வேளாண் விளைபொருள் விற்பனை

ஊரக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, விளைபொருள் விற்பனையும் அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் ஆதாரமாகவும் ஊக்குவிக்கிகளாகவும் விளங்குகின்றன. வேளாண் விளைபொருள் விற்பனை என்பது, என்ன விளைபொருளை விளைவிக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்குவதில் ஆரம்பித்து அனைத்து விற்பனை செயல்களான அறுவடைக்கு முன் மற்றும் பின்செய்நேர்த்தியில் தொடங்கி ஒன்றுபடுத்துதல், தரம் பிரித்தல், சேர்த்தல், போக்குவரத்து மற்றும் விநியோகம் ஆகிய அனைத்துச் செயல்களையும் உள்ளடக்கியதாகும். இதனடிப்படையில் விளைபொருளின் மதிப்பு, விற்பனைக்குரிய காலம், விற்பனைத் தேவை ஆகியவை காலத்திற்குக் காலம் வேறுபடும். எனவே, விற்பனைச் செயல்கள் நேர்த்தியாக இல்லாவிடில் விரைவான பொருளாதார முன்னேற்றம், சீரான விலை, சேவை மற்றும் பொருள் விநியோகத்தில் சீரான போக்கு போன்ற இலக்குகளை அடைவது இயலாததாகிவிடும். வேளாண் விளைபொருள் விற்பனை என்பது நுகர்வோர் விளைபொருளுக்கு வழங்குகின்ற பணத்தின் மதிப்பில் உரிய பங்கு, அதனை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குச் சேர்வதிலும், திட்டமிட்ட முன்னேற்றம் என்பதிலும் அடங்கியுள்ளது. வேளாண்மை விற்பனை என்பது விளைபொருள் உற்பத்தி நுட்பத்துக்கு ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. இந்தியாவில் சிறு விவசாயிகள் பிழைப்புக்காக விவசாயம் செய்யும் நிலையை மாற்றி வர்த்தக ரீதியான வேளாண்மை மேற்கொள்ள வேண்டும்.

1928 ஆம் ஆண்டில் அமைத்த இராயல் கமிஷன் அளித்த பரிந்துரையின்படி 1933 ஆம் ஆண்டு சென்னை மாகாண வர்த்தக விளைபொருள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூரில் பருத்திக்காக முதல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், பிறகு மணிலாவிற்காக விழுப்புரத்தில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் நிறுவப்பட்டன. பிறகு இச்சட்டம் 1959 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டம்' என்று மாற்றப்பட்டது. அதனடிப்படையில் மாவட்டத் தலைநகரங்களில் விற்பனைக் குழுக்கள் நிறுவவும் வேளாண் விளைபொருள்களை அட்டவணைப்படுத்தவும்

விற்பனையைச் சீராக மேற்கொள்ளவும் தேவையான விளைபொருள் விற்பனை மையங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் நிறுவவும் வழிவகை செய்யப்பட்டது. 1959 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட சட்டத்தினை நீக்கி தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991 ஆகியவை 1-2-1991 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## வேளாண்மை விற்பனை இயக்ககம்

விவசாயிகளுக்கு அவர்கள் விளைபொருளுக்கு அதிகபட்ச விலை கிடைக்கச் செய்யவும், வேளாண் விளைபொருள் விற்பனையை சிறந்த முறையில் செயல்படுத்திடவும் வேளாண்மை விற்பனைத் துறை 1977-ஆம் ஆண்டு முதல் தனித் துறையாக செயல்பட ஆரம்பித்தது. தற்போது இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறையின் முக்கிய நோக்கமே விவசாயிகளுக்குத் தரத்திற்கேற்ற அதிகபட்ச விலை சரியான எடை, உடனடி பணப் பட்டுவாடா ஆகியவற்றை உறுதி செய்வதேயாகும்.

## வேளாண் விற்பனைத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

1. விவசாயிகள் நலன் கருதி, வேளாண் விளைபொருள் வாங்குவது, விற்பது ஆகிய செயல்களை ஒழுங்குபடுத்துதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி நிர்வகித்தல்.
2. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவில் தரம் பிரித்து நல்ல விலை கிடைத்திட உதவுதல்.
3. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வரத்தினை அதிகரிக்கவும் அவ்விற்பனைக்கூடத்தில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் வாய்ப்புகள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவும் விளம்பரப் பணி, புள்ளியியல் கணக்கெடுப்பு, விற்பனைக்கூடங்களை மேமபடுததுதல் போன்ற பணிகள் மூலம் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் செயல்படுத்துதல்.
4. வேளாண பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள், வனப்பொருட்கள் போன்றவற்றைப் பெற்று நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டததினை அமலாக்குதல்.





## விற்பனைக் குழுக்கள்

தற்போது நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக 16 விற்பனைக் குழுக்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நிர்வாக வசதிக்ாகவும், அதிக முனைப்புடன் செயலாற்றிடவும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கென மேலும் 12 புதிய விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்துவதற்காக அரசு ஆணையிட்டுள்ளது.

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

16 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், 15 துணை விற்பனைக்கூடங்கள், 44 சோதனைச் சாவடிகள், 108 ஊரக கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை விற்பனைக்கூட வளாகத்தில் ஒன்றுகூட்டி விளைபொருள் வாங்குவது, விற்பது போன்ற பல செயல்களில் ஈடுபடச் செய்வது, மறைமுக ஏல முறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விற்பனைக் குழுக்கள் விளைபொருள் மதிப்பில் 1 சதவீதத்தினை விற்பனைக் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிக்கின்றன. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. உற்பத்தியாளர், விற்பனை செய்வோரிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இடைத்தரகர்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. விற்பனைக் குழுவாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தினால் கிடைக்கும் பயன்கள்

1. ஒரே சீராக சரியான எடைக்கான விற்பனை
2. வணிக முறை தரம் பிரிப்பு
3. கிட்டங்கி வசதி

[1999 ஏப்ரல் 5

4. உரிமம்பெற்ற வியாபாரிகளிடையே போட்டி விற்பனையில் அதிகபட்ச விலை
5. மறைமுக ஏல முறை
6. வங்கி வசதிகள்
7. உடனடி பணப் [illegible]
8. அங்காடி விலை [illegible]வரம் அறிய வாய்ப்பு
9. இடைத்தரகர்கள், கமிஷன், ஏஜெண்டுகள் ஆகியோர்களைத் தவிர்த்தல்.
10. பொருளீட்டுக் கடன் வசதி
11. விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, சுகாதார கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்
12. வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி
13. இலவச மருத்துவ வசதி
14. தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்
15. தேவையான அளவு விளைபொருட்களை ஒரே இடத்தில் வாங்க வசதி
16. பணப் பட்டுவாடா செய்திட வசதி
17. தொலைபேசி மற்றும் பேக்ஸ் வசதி

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1998-99 ஆம் ஆண்டு முடிய அமைக்கப்பட்ட விற்பனைக் குழு வாரியான அடிப்படை வசதிகள் விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்**

முக்கிய விளைபொருட்களின் வாணிபத்தை ஒழுங்குபடுத்திட இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 39 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**பொருளீட்டுக் கடன்**

சிறு/மிகச் சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, 137 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருளீட்டுக் கடன்



1999 ஏப்ரல் 5]

வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் 4 மாதம் வரை இருப்புவைத்து, விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 75% வரை பொருளீட்டுக் கடனாக ரூ.25,000 அதிகபட்சமாகப் பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை, மீதமுள்ள நாட்களுக்கு 12% முதல் 14.5% வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்**

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் விளைபொருளை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.25,000 மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்படி உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு மானியத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், நபரொன்றுக்கு வருடமொன்றுக்கு தவணைக் கட்டணமான ரூ.10-ஐ உரிய விற்பனைக் குழுவும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியமும் சம பங்காக செலுத்துகிறது.

**வணிக முறை தரம் பிரிப்பு**

விவசாயிகளின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக 96 வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் ஒரு புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பணி கிராமங்களில் விவசாயிகளின் பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. இம்மையங்கள் அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி தொழில்நுட்ப மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பப் பணி வசதிகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

**அக்மார்க் தரம் பிரிப்பு**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும்.

தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகமும் 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம் பிரிப்பின் கீழ் மையத்தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களும், பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் தரம் பிரிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு (Packer) அக்மார்க் முத்திரைச் சீட்டுகள் உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் நிதியாண்டில் சென்னை (மைக்கு), திருச்சி மற்றும் ஈரோடு-2 ஆகிய மூன்று அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த அரசு ரூ.24.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. நவீன உபகரணங்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளன. இதுதவிர ரூ.7 இலட்சம் செலவில் திருச்சி, மார்த்தாண்டம் மற்றும் ஈரோடு மாநில அக்மார்க் ஆய்வகங்களுக்குச் சொந்த கட்டடங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம்:**

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் முக்கிய பணிகள் வருமாறு:

*1. விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள்*

1. தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்வதில் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

*2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்*

திருச்சியை மையமாகக் கொண்டு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறை மற்றும் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தூட்ட பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



*3. கட்டுமானப் பணிகள்*

வாரியத்தின் பொறியியல் பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், உரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணப் பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்திற்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15% தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50% சந்தை அபிவிருத்தி நிதிக்காக ஒதுக்கீடு செய்து விற்பனைக் குழுக்காக செலவிடப்படுகிறது. மீதமுள்ள 50% தொகை வாரிய நிர்வாகத்திற்கும் விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி உள்ளிட்ட வாரியத்தின் இதர பணிகளுக்காக செலவிடப்படுகிறது.

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

*1. பன்னாட்டு மலர் ஏல மையம், சென்னை*

சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.02 கோடி மதிப்பில், பன்னாட்டு மலர் ஏல மையம் ஒன்று மலர் உற்பத்தியாளர்கள், உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்கத் தேவையான நிதியை மத்திய அரசு நிறுவனமான அபீடா, புதுடெல்லி மற்றும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் ஆகியவை சமமாக ஏற்றுக்கொள்ளும். இம்மையம் அமைப்பதற்காக பள்ளிக்கரணை கிராமத்தில் 30 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப்படும்.

*2. நெல் வணிக வளாகம், மதுரை*

மதுரை மாநகரின் புறநகர் பகுதியான மாட்டுத்தாவணி என்ற இடத்தில் 9.03 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் வணிக வளாகம் அமைக்கப்படுகிறது. இதற்காக ரூ.4.464 கோடியை மதுரை

மாநகராட்சிக்குச் செலுத்தி நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 13.57 கோடியாகும். இதற்கான விரிவான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. 1-3-1999 அன்று மதுரையில் நடைபெற்ற விழாவில் வளாகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

**3. வெல்ல வணிக வளாகம், திருச்சி**

திருச்சி மாநகரத்தின் மத்தியில் உள்ள திருச்சி கிளைச் சிறைச்சாலைக்குச் சொந்தமான 7.52 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.13.30 கோடி மதிப்பில் வெல்ல வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. முடிவான அறிக்கை பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

**4. மஞ்சள் வணிக வளாகம், ஈரோடு**

மஞ்சள் விற்பனைக்கென அனைத்து வசதிகளுடன் நவீன மஞ்சள் வளாகம் ஈரோடு மாவட்டத்தில், ஈரோட்டில் ரூ.30.89 கோடி உத்தேச மதிப்பில் அமைக்கப்பட உள்ளது. வளாகத்திற்கான இடம் தேர்வு செய்யும் பணி உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் தாமதப்பட்டது. தற்போது உயர்நீதிமன்றம் இறுதி ஆணை பிறப்பித்து விட்டதால் இடம் தேர்வு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**5. கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்**

அறுவடைக்குப்பின் ஏற்படும் மொத்தத் தானிய இழப்பான 9.33%-ல் சரியான உலர்கள் வசதியின்மையால் ஏற்படும் 1.08% இழப்பினைக் குறைப்பதற்காக 1997-98 ஆம் ஆண்டு அனைத்து மாவட்டங்களில் 60 கிராமங்களில் 20 x 20 மீட்டர் பரப்பளவில் உலர் களம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பில் விற்பனைக் குழு உபரி நிதியிலிருந்து ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் 60 உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது போல 1998-99 ஆம் ஆண்டு 100 கிராமங்களில் உலர் களம் ஒன்றுக்கு ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் உலர் களங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.175 இலட்சமாகும்.

**6. வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதி**

தற்போது விவசாயிகளுக்கு மட்டும் பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. வியாபாரிகளுக்கு ஊக்கம் அளிக்கும்



பொருட்டும் விவசாயிகளுக்கு உடனடி பணப் பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்ற நோக்கிலும் 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் என்ற அளவில் ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

**7. முப்பது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கருகில் பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடை அமைக்கும் பணி**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு வந்து போகின்ற விவசாயிகளின் வசதிக்காக அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை இல்லாத நிலை உள்ளது. அத்தகைய இடங்களில் அதிக வரத்து வரக்கூடிய 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தெரிவு செய்து ரூ.22.25 இலட்சம் மதிப்பில் நிழற்குடை ஒன்றிற்கு ரூ.75,000 செலவில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**8. சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு பரிசளிக்கும் திட்டம்**

வருடமொன்றுக்குக் குறைந்தது 1 மெட்ரிக் டன் விளைபொருளை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குக் கொண்டு வரும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குப் பரிசளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. அதன்படி. ரூ.2000/- மதிப்பிற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படும். இதற்காக ரூ.15.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மார்ச் 1999-க்குள் விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

**9. கிராமப்புற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதி உதவி திட்டம்**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு விளைபொருட்கள் எடுத்து வந்து விற்பனை செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு கிராமப்புற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த 6-வது, பிளஸ் 1 மற்றும் முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்பு பயிலுகின்ற 1620 மாணவ, மாணவிகளுக்கு நிதி உதவி செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி உதவி பெற ஆண்டொன்றுக்குக்

குறைந்தது 1 மெட்ரிக் டன் விளைபொருளை ஒரு விவசாயி ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்திருக்க வேண்டும். இத்திட்டத்திற்காக ரூ.11.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. மாவட்டங்களில் பசுமைக் கூடங்கள் நிறுவுதல்**

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தகுதிவாய்ந்த பூக்கள், காம்புடன் கூடிய நவீன பூக்கள் உற்பத்தி பற்றி விவசாயிகள் கற்றறிந்து செயலாக்கிட உதவிடும் வகையில் 8 மாவட்டங்களில் ரூ.48 இலட்சம் செலவினத்தில் விளக்கத் திடல்களாக பசுமைக் கூடங்கள் நிறுவுகின்ற திட்டம் அமலாக்கப்படவுள்ளது.

**11. விவசாயிகள், வியாபாரிகள் ஒருங்கிணைந்த தமிழக மற்றும் வெளி மாநில சுற்றுலாத் திட்டம்**

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் விற்பனை முறைகள் பற்றியும் பிற மாநிலங்களில் நடைபெறும் விற்பனை முறைகள் பற்றியும் நேரில் சென்று பார்த்து புரிந்துகொள்ளவும் தங்கள் மாவட்டம்/மாநிலத்தில் நடைமுறையிலுள்ள விற்பனை முறைகளையும் பிற மாவட்ட/மாநிலத்தில் நடைமுறைப்படுத்தியுள்ள விற்பனை முறைகளையும் ஒப்புநோக்கி குறைநிறைகளைச் சீர்தூக்கி பார்த்திட உதவிடும் வகையில் 70 விவசாயிகள், 30 வியாபாரிகள், 10 அரசு அதிகாரிகள் ஆகியோரடங்கிய குழுவினைத் தமிழக அளவிலும் வெளி மாநில அளவிலும் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 1999க்குள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இச்சுற்றுலா திட்டத்திற்காக ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12. கணிப்பொறி, நகல்பெருக்கி, பேக்ஸ் கருவிகள் மற்றும் கம்பியில்லாத தொடர்பு சாதனங்கள் வாங்குதல்**

தற்போது நடைமுறையிலுள்ள தொலைதொடர்பு சாதனங்களை நவீனமயமாக்குகின்ற நோக்கத்திலும், தொலை தொடர்பு விரைந்து செயல்படுத்திட வேண்டியும் வேளாண்மை விற்பனை இயக்ககம், தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் மற்றும் அனைத்து விற்பனைக் குழுக்களுக்கும் கணிப்பொறி, நகல்பெருக்கி, பேக்ஸ் கருவிகள் மற்றும் கம்பியில்லாத் தொடர்பு சாதனங்கள் வாங்கிட ரூ.45.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வணிக வளாகங்கள்**

விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களுக்கு அதிகபட்ச விலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கிலும் வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்புக்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கீழ்க்கண்ட வணிக வளாகங்கள் அமைத்திட தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1. பருத்தி வணிக வளாகம், தேனி.
2. தேங்காய் வணிக வளாகம், பட்டுக்கோட்டை.
3. காய்கறிகள் வணிக வளாகம், மேட்டுப்பாளையம்.
4. காய்கறிகள் வணிக வளாகம், உடுமலைப்பேட்டை.

**அட்டவணை-1**

**மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச்சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மைய விவரங்கள்**

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | துணை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங் கிகள் | வணிக முறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | காஞ்சிபுரம் | 14 | 1 | 3 | 5 | 7 | - | - |
| 2. | வேலூர் | 12 | - | - | 4 | 5 | - | - |
| 3. | திருவண்ணாமலை | 16 | - | - | 7 | 10 | - | - |
| 4. | கடலூர் | 10 | 1 | 3 | 5 | 6 | - | - |
| 5. | விழுப்புரம் | 18 | - | - | 7 | 13 | 1 | - |
| 6. | சேலம் | 19 | - | 5 | 2 | 6 | - | - |
| 7. | தருமபுரி | 16 | - | 2 | 4 | 5 | - | - |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 5 | 5 | 12 | 2 | 3 | - |
| 9. | ஈரோடு | 23 | 6 | 5 | 7 | 10 | 2 | 1 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 19 | 2 | 4 | 10 | 4 | - | - |
| 11. | தஞ்சாவூர் | 29 | - | 7 | 7 | 5 | - | - |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | புதுக்கோட்டை | 10 | - | 3 | 2 | 2 | - | - |
| 13. | மதுரை | 21 | - | 1 | 8 | 7 | 1 | - |
| 14. | இராமநாதபுரம் | 20 | - | 1 | 10 | 8 | 1 | - |
| 15. | திருநெல்வேலி | 19 | - | 1 | 13 | 8 | 3 | - |
| 16. | கன்னியாகுமரி | 6 | - | 4 | 5 | 2 | - | - |
| | மொத்தம் .. | 270 | 15 | 44 | 108 | 98 | 11 | 1 |

## அட்டவணை -2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்.

| வ. எண் (1) | விற்பனைக் குழுக்கள். (2) | சொந்த நிலம். (3) | கிட்டங்கி (4) | ஊரக கிட்டங்கி (5) | பரிவர்த்தனைக் கூடம். (6) | உலர் களம். (7) | விவசாயிகள் ஓய்வறை. (8) | சுகாதார வசதி (9) | குடிநீர் வசதி (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 7 | - | 5 | 4 | 7 | 2 | 8 | 5 |
| 2. | வேலூர் | 9 | 6 | 4 | 8 | 4 | 2 | 7 | 7 |
| 3. | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 8 | 10 | 9 |
| 4. | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5. | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6. | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | - | 4 | 3 |
| 7. | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 58 | 12 | 19 | 21 | 8 | 14 | 12 |
| 9. | ஈரோடு | 14 | 12 | 7 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11. | தஞ்சாவூர் | 12 | 12 | 7 | 20 | 9 | 8 | 11 | 11 |
| 12. | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13. | மதுரை | 14 | 1 | 8 | 10 | 16 | 4 | 10 | 12 |
| 14. | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15. | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16. | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| | மொத்தம் .. | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |



## அட்டவணை-3

### விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வானாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிரப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர் |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் | 10. திருவெண்ணெய்நல்லூர் |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 11. மணலூர்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை | 12. அவலூர்பேட்டை |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 13. மரக்காணம் |
| 5. காட்டுமன்னார்கோவில் | 5. சின்னசேலம் | 14. விக்ரவாண்டி |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 15. அனந்தபுரம் |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 16. வளத்தி |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 17. மூங்கில்துரைப்பட்டு |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | 18. கிளியனூர் |
| 10. புவனகிரி | | |

| 6. சேலம் | 7. தருமபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தருமபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவினாசி |
| 3. நாமக்கல் | 3. ஒசூர் | 3. சேவூர் |
| 4. ராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருசெங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பெண்ணாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கணாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டினம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிபட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. ராயக்கோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. கங்கவல்லி | | 17. தெப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராமப்பட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. லால்குடி | 8. பாபநாசம் |
| 9. மைலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தப்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |



தொடர்ச்சி....

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. வலங்கைமான் |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிபட்டி | 14. பாப்பாநாடு |
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | 15. கீவலூர் |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | 16. கொரடாச்சேரி |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார்பேட்டை | 17. குத்தாலம் |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | 18. மன்னார்குடி |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | 19. மயிலாடுதுறை |
| 20. வெள்ளாங்கோயில் | | 20. நாகப்பட்டினம் |
| 21. தாராபுரம் | | 21. பூந்தோட்டம் |
| 22. மூலனூர் | | 22. செம்பனார்கோவில் |
| 23. அலங்கியம் | | 23. சீர்காழி |
| | | 24. வேதாரண்யம் |
| | | 25. வடுவூர் |
| | | 26. குடவாசல் |
| | | 27. திருப்பூண்டி |
| | | 28. திருவாரூர் |
| | | 29. திருத்துறைப்பூண்டி |

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. தேனி | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. திண்டுக்கல் | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. திருமங்கலம் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வக்கோட்டை | 4. ஒட்டன்சத்திரம் | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. உசிலம்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கீரனூர் | 6. பழனி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | 7. நத்தம் | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | 8. கம்பம் | 8. சிவகெங்கை |
| 9. இலுப்பூர் | 9. வத்தலகுண்டு | 9. திருபுவனம் |
| 10. கரம்டக்குடி | 10. வேலூர் | 10. மானாமதுரை |
| | 11. போடிநாயக்கனூர் | 11. சிங்கம்புணரி |

தொடர்ச்சி....

| 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|
| 12. சின்னமனூர் | 12. காரைக்குடி |
| 13. மதுரை | 13. இளையான்குடி |
| 14. கோபால்பட்டி | 14. தேவகோட்டை |
| 15. டி. கல்லுப்பட்டி | 15. இராமநாதபுரம் |
| 16. வாடிப்பட்டி | 16. பரமக்குடி |
| 17. வடமதுரை | 17. கமுதி |
| 18. ஆண்டிப்பட்டி | 18. திருவாடனை |
| 19. வேடசந்தூர் | 19. இராசசிங்கமங்கலம் |
| 20. உத்தமபாளையம் | 20. முதுகுளத்தூர் |
| 21. பெரியகுளம் | |

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி |
|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி |
| 3. தூத்துக்குடி | 3. களியக்காவிளை |
| 4. புதூர் | 4. திங்கள் சந்தை |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி |
| 7. தென்காசி | |
| 8. அம்பாசமுத்திரம் | |
| 9. வள்ளியூர் | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | |
| 11. திருநெல்வேலி | |
| 12. விளாத்திகுளம் | |
| 13. கடையநல்லூர் | |
| 14. திசையன்விளை | |
| 15. பாவூர் சத்திரம் | |
| 16. திருவேங்கடம் | |
| 17. எட்டையபுரம் | |
| 18. சிவகிரி | |
| 19. ஆலங்குளம் | |



## அட்டவணை 4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|
| 1. சென்னை | சென்னை (வடக்கு), (தெற்கு) மற்றும் முதன்மை ஆய்வகம் |
| 2. வேலூர் | வேலூர் |
| 3. கடலூர் | பண்ருட்டி |
| 4. தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1, திருச்சிராப்பள்ளி-2 |
| 6. கரூர் | கரூர் |
| 7. மதுரை | மதுரை-1, மதுரை-2 |
| 8. தேனி | தேனி |
| 9. திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10. விருதுநகர் | விருதுநகர் |
| 11. திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12. தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13. கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14. சேலம் | சேலம் |
| 15. தருமபுரி | தருமபுரி |
| 16. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17. ஈரோடு | பெருந்துறை, ஈரோடு 1, 2, காங்கேயம் 1, 2, வெள்ளக்கோவில், சித்தோடு |

[1999 ஏப்ரல் 5

## அத்தியாயம் 9

## வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்

### 1. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டமானது உலக வங்கி நிதி உதவியுடன் 1991-92 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட ஓர் ஏழாண்டு கால பலதுறைத் திட்டமாகும். உலக வங்கி மேற்சொன்ன திட்டத்தினை இடைக்கால ஆய்வு செய்து திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை ரூ.309.29 கோடியிலிருந்து ரூ.409.52 கோடியாக உயர்த்தி ஒப்புஅளிப்பு அளித்தது. 1998-99 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் இறுதி ஆண்டாகும். இத்திட்டம் 30-9-1998 அன்று முடிவுபெற்றது. இருப்பினும் முடிவு பெறாத நிலையில் இருந்த கட்டுமானப் பணிகளை முடிப்பதற்காக உலக வங்கி மூன்றுமாத காலத்திற்கு 31-12-1998 வரை நீட்டிப்பு வழங்கியது.

இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.409.52 கோடிக்கு ரூ.414.09 கோடி கீழே குறிப்பிட்டுள்ள திட்டப் பணிகளுக்கு ஜனவரி '99 முடிய செலவிடப்பட்டுள்ளது.

| திட்டப்பணி | திட்ட ஒதுக்கீடு | செலவினம் (ரூபாய் கோடியில்) 31-1-1999 வரை |
|---|---|---|
| வேளாண்மை திட்டமிடல் | 13.07 | 8.50 |
| வேளாண்மை விரிவாக்கம் | 78.24 | 85.02 |
| விதை உற்பத்தி | 12.82 | 16.98 |
| நீர்வடிப்பகுதி மேம்பாடு | 25.98 | 25.98 |
| கால்நடை மேம்பாடு | 48.84 | 45.60 |
| காடு வளர்ப்பு | 57.62 | 56.92 |
| கிராமப்புற சாலைகள் | 123.35 | 126.48 |
| கிராமப்புற குடிநீர் வசதி | 49.60 | 48.61 |
| மொத்தம் | 409.52 | 414.09 |

தமிழ்நாடு வேளாண வளர்ச்சி திட்டம் குறித்த குறிக்கோள்கள் பின்வருமாறு: —

அ. உயர் உற்பத்தி மற்றும் வருவாய் மூலம் ஊரக ஏழ்மையைப் போக்குதல.

ஆ. இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் மானாவாரி நிலங்களைப் பாதுகாத்தல்



1999 ஏப்ரல் 5]

இக்குறிக்கோள்களை அடைய, கீழ்க்காணும் இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

1. வேளாண்மை திட்டமிடுதல்
2. வேளாண்மை விரிவாக்கம்
3. விதை உற்பத்தி

#### வேளாண்மை திட்டமிடல்

மாநில மற்றும் மாவட்ட அளவில் திட்ட செயல்திறனைச் செம்மைப்படுத்துவது இதன் நோக்கமாகும். இவ்வினத்தின் முதல் நடவடிக்கையாக துணை வேளாண்மை இயக்குநர் (கொள்கை, திட்டம், மேலாண்மை) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வலுவலர்கள் மாவட்ட அளவில் வேளாண் துறை நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வரன்முறை செய்து செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவி வருகிறார்கள். இதுபோல் மாநில அளவில் திட்டப் பிரிவும் செம்மைப்படுத்தப்பட்டு வரன்முறை மற்றும் மதிப்பீடு பிரிவு, கொள்கை, திட்டம் மற்றும் மேலாண்மைப் பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. இத்துறையின் மேலாண்மை தகவல் முறையை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத் தலைமையிடமும், மாவட்டத் தலைமையிடமும் 'ஈ மெயில்' மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மாநில அளவு முதல் வட்டார அளவு வரை உள்ள துறை அலுவலர்களுக்குக் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலகப் பணியைத் துரிதப்படுத்தும் பலவிதமான சாதனங்களான மின்னணு தட்டச்சு, பேக்ஸ் சாதனம், நகலெடுக்கும் சாதனம் ஆகியவை மாநில தலைமையலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் திட்டமிடும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

#### வேளாண்மை விரிவாக்கம்

வேளாண்மை விரிவாக்கத்தைப் பல முனைப்படுத்தும் நோக்கத்துடன் விவசாயிகளை ஈடுபடுத்தும் வகையில் ஒரு வட்டாரத்திற்கு 10 மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்துறையைச் சேர்ந்த முதுநிலை மற்றும் நடுநிலை அலுவலர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் விரிவாக்கத் திறமைகளை வலுப்படுத்தும் வகையில் குடுமியான்மலையின் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வேளாண் இயக்குநர்

அலுவலகத்திற்குக் கூடுதல் இடவசதி அளிக்க, நான்கு தளங்கள் கொண்ட கட்டடம், 56 வேளாண் உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள், மற்றும் 14 வேளாண் இணை இயக்குநர்கள் அலுவலகக் கட்டடங்கள் கட்ட ரூ.2900 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**விதை உற்பத்தி**

விவசாயிகளுக்குத் தரமான விதைகளை விநியோகம் செய்யும் நோக்கத்துடன், கிடங்குகள், கதிரடிக்கும் களங்கள், பண்ணை மேம்பாட்டுப் பணிகள், முள்வேலி அமைத்தல், கிணறுகள் தோண்டுதல், பம்புசெட்கள் அமைத்தல் ஆகிய உள்ளிருப்பு வசதிகள் மூலம் ஆதார விதை உற்பத்தி மாநில விதைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. திட்டத்தில் ஏழு ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.274.34 இலட்சம் முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது.

**ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாடு**

பாலாறு மற்றும் வெள்ளாறு நீர்பிடிப்புப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மானாவாரி பகுதிகளில் சாகுபடிக்கு உகந்த மற்றும் சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், மண்ணின் ஈரத்தன்மையை முடிந்த வரை உபயோகித்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, ஆகியவற்றில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்தி விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது போன்ற நோக்கங்களுடன் 18 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1998-99-ல் இத்திட்டம் ஏப்ரல் 1998 வரை செயல்படுத்தப்பட்டது. ஏழு ஆண்டுகளுடன் முடிவுற்ற இத்திட்டத்தில் பின்வருமாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | 7 வருட மொத்தம் | சாதனை |
|---|---|---|---|
| 1. | வேளாண்மை திட்டமிடல் | 984.80 | 732.84 |
| 2. | வேளாண் விரிவாக்கம் | 7749.36 | 8502.918 |
| 3. | விதை உற்பத்தி | 274.34 | 274.34 |
| 4. | ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாடு | 2943.00 | 2598.944 |
| | மொத்தம் | 11951.50 | 12108.842 |



**தோட்டக்கலை**

இத்திட்டமும் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 374 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 21 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடவு செடிகளின் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, அடிப்படை ஆதார வசதிகள் செய்து தரப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட 125 இலட்சம் ரூபாயில் 7 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு அடிப்படை ஆதார வசதிகள் அமைத்துத் தருவதற்காக 1998-99 ஆம் ஆண்டில் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 499 இலட்சத்தில் கட்டடப் பணிகள் ரூபாய் 435.44 இலட்சத்திற்குப் பொதுப்பணித் துறையினரால் 28 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டன. மூன்று அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நாற்றங்கால் விரிவாக்கம், டிராக்டர் மற்றும் பயிர் பாதுகாப்புக் கருவிகள் வாங்குதல், முந்திரி தாய்மரங்களைப் புதுப்பித்தல், முந்திரி செயல்விளக்க வயல்கள் நிறுவுதல், வாகனங்கள் வாங்குதல், சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.63.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைந்த விதை அங்கம் வல்லுநர் விதைப் பெருக்கத்திற்குத் தேவையான அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த 1-9-1991 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது. ரூ. 731.857 இலட்சங்களில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படித் திட்டம் சென்ற 30-9-1998 உடன் முடிவடைந்தது. அனுமதிக்கப்பட்ட தொகை அனைத்தும் கட்டடங்கள் மற்றும் ஆராய்ச்சிக்குத் தேவையான உபகரணங்கள் பெறுவதில் முழுமையாக செலவிடப்பட்டது.

**விதைப் பெருக்கம்**

வல்லுநர் விதைகளின் தரமும், தேவையும், வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் 924.539 குவிண்டாலாக இருந்த வல்லுநர் விதைப் பெருக்கம் 1997-98 ஆம் ஆண்டில் 1651.19 குவிண்டாலாக அதிகரிக்கப்பட்டது. இது 78.6 சதவீதம் அதிகமாகும்.

தனியார் மூலம் வல்லுநர் விதை உற்பத்தித் திட்டம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

**ஒட்டுநெல் பெருக்கம்**

மேற்படி திட்டம் கோவை மற்றும் கடலூர் ஆராய்ச்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டு புதிய ஒட்டு ரக நெல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 30-9-1998க்குப் பின்னரும் மேற்படி திட்டம் வேளாண் பல்கலைக்கழகம் மூலம் தொடரப்பட்டு வருகிறது. இவ்வகை ஆய்வில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்தான் இந்தியாவிலேயே முன்னோடியாக திகழ்கிறது.

**மானாவாரி தீவனப்பயிர் திட்டம்**

தேசிய பயறு வகைகள் ஆராய்ச்சி நிலையம், வம்பன் பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் மூலம் அதிக மகசூல் தரக் கூடிய பயறு, புல் மற்றும் மர வகைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறிய திட்டங்களுடன் மூலம் கூறு வழி வகைப்பாடு மற்றும் மூலக்கூறு வழித் தேர்வு ஆகிய திட்டங்கள் மூலம் இரகங்கள் வகைப்பாடு செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய திட்டங்களின் மூலம் வல்லுநர் விதைகளின் தரம் வெகுவாக உயரும்.

**வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம்**

வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம் உலகவங்கி நிதி உதவியுடன் 1995-96ஆம் ஆண்டு முதல் 2000 வரை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஐந்தாண்டு கால திட்டமாகும்.

இத்திட்டத்திற்காக உலக வங்கி ரூ.98.29 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1999-2000 ஆண்டு இத்திட்டத்தின் ஐந்தாவது ஆண்டாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணியாளர்கள் அடிக்கடி புதிய மற்றும் சிக்கலான பணிகளைச் செய்வதற்கும், பணியிடைப் பயிற்சி மற்றும் துறை மேம்பாட்டைப் பேண வேளாண்மைப் பிரிவு மனித சக்தி மேலாண்மை ஆகியவை ஆகும்.

இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 98.29 கோடி ரூபாயில் பிப்ரவரி 1999 முடிய ரூ.47.12 கோடி கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது:



(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | பணிகள் | திட்ட ஒதுக்கீடு | செலவினம் (28-2-1999) முடிய | 1999-2000ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் | 3872.21 | 2266.28 | 1235.09 |
| 2. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் | 2389.16 | 1786.19 | 1681.10 |
| 3. | வேளாண்மை | 165.70 | 46.05 | 64.63 |
| 4. | தோட்டக்கலை | 306.02 | 122.15 | 111.84 |
| 5. | வேளாண் பொறியியல் | 207.60 | 89.44 | 195.04 |
| 6. | வனத் துறை | 243.79 | 146.98 | 100.82 |
| 7. | கால்நடைப் பராமரிப்பு | 366.29 | 137.88 | 114.11 |
| 8. | மீன்வளம் | 197.89 | 53.52 | 66.12 |
| 9. | மனித சக்தி தேவை மதிப்பீடு | 35.25 | 7.08 | 8.55 |
| 10. | திட்ட மேற்பார்வை மற்றும் செயலாக்கப் பிரிவு | 79.00 | 56.37 | 11.40 |
| 11. | பொருட்களின் எதிர்பாரா செலவினம் | | | |
| 12. | விலையில் எதிர்பாரா செலவினம் | 1966.67 | — | |
| 13. | பணியிடை மற்றும் நிர்வாகம் மனித சக்தி மேம்பாடு/மனித சக்தி மேலாண்மை | | | |
| | மொத்தம் .. | 9829.58 | 4711.94 | 3588.70 |

1999-2000 ஆண்டுக்காக ரூ.3588.70 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அ. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் ஏப்ரல் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 5 வருடங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.38.72 கோடியாகும். 1998-99 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.2.43 கோடி ஆகும். 1999-2000 ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.2.58 கோடியாகும்.

இத்திட்டத்தில் வேளாண்மைக் கல்வி அபிவிருத்தி, கணிப்பொறிகள், நூல்கள் அபிவிருத்தி மற்றும் மாணவர்களுக்கான புதிய ஆலோசனை மையம், குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும்

பரிசோதனைக்கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்குதல் போன்றவை முக்கிய அங்கங்களாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மைக் கல்வி மற்றும் பாடத்திட்டங்களைப் புதுப்பித்தல், ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் தரத்தை மேம்படுத்துதல், நவீன கல்வி கற்பிக்கும் உத்திகளை ஊக்குவித்தல், இந்திய மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஆசிரியர்களைப் பரிமாறிக் கொள்ளுதல், பல்கலைக்கழக நிர்வாகத்தையும்/மேலாண்மையையும் நவீனப்படுத்துதல், வகுப்பறைகள், ஆய்வுக்கூடக் கருவிகள், கணிப்பொறிகள், கல்வித் தொடர்பு சாதனங்கள், பல்கலைக்கழக பண்ணைகளில் செயல்முறைப் பயிற்சிக்கான வசதிகள், நூலகங்கள், மாணவ மாணவியருக்கான விடுதிகள் ஆகியவற்றை நவீனப்படுத்துதல், மாணவர்களுக்கு வழிகாட்டி வேலை வாய்ப்புகளுக்குத் துணை நிற்றல், மாணவர்கள் தொழிற் கூடங்கள் அமைக்க மற்றும் நிர்வகிக்கத் தேவையான அனுபவங்களைப் பெற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகள் பல்கலைக் கழகத்தின் மூலம் செயல்படுத்தபட்டு வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் தொழிற்கல்வி செயல்திறனை அதிகரிக்க வணிக வேளாண்மைக்குரிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமாக வேளாண்மையில் ஏழு, தோட்டக்கலையில் இரண்டு, வேளாண் பொறியியலில் நான்கு மறும் வனத் துறையில் இரண்டு பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுப் பயிற்சிக்காக தமிழ்நாடு அரசு 39 விஞ்ஞானிகளுக்கு அனுமதி அளித்துள்ளது. இதுகாறும் 38 விஞ்ஞானிகள் இப்பல்கலைக் கழகத்திலிருந்து வெளிநாட்டுப் பயிற்சிக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர். மூன்று விஞ்ஞானிகள் வீரிய ஒட்டு இரக நெல் உற்பத்திக்கான தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ள சீனாவுக்குச் சென்று வந்தனர். மேலும் 49 விஞ்ஞானிகளை அயல்நாட்டுப் பயிற்சிக்கு அனுப்புவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

உள்நாட்டுப் பயிற்சியில் இதுகாறும் 176 விஞ்ஞானிகள் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தில் (நாரம்) கல்வித் தொழில் நுட்பத்தில் பயிற்சியை



முடித்துள்ளனர். இதே பயிற்சியில் மேலும் 54 பேர் ஹரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஹிசாரில் பயிற்சி பெற்றுள்ளனர். பாடத்திட்டத்தில் 17 விஞ்ஞானிகளுக்குக் குறுகிய காலப் பயிற்சி மற்றும் முதுகலை சிறப்புப் பயிற்சிகள் இந்தியாவிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் அளிக்கப்பட்டன. மேலும் 39 விஞ்ஞானிகள் பல்வேறு வகையான பயிற்சிக்குச் சென்று வந்துள்ளனர். மேலும் 245 விஞ்ஞானிகள் இந்த ஆண்டு பிப்ரவரி - ஏப்ரல் மாதங்களில் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டுக்கழகத்துக்கு கல்வி உளவியல் நுட்பம் (185) மற்றும் கணிப்பொறி இயக்கம் (60) ஆகியவற்றில் பயிற்சி பெற அனுப்பப்பட உள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் ரூ.6.86 கோடி செலவில் பேராசிரியர்களுக்கான 29 குடியிருப்புகள், உதவிப் பேராசிரியர்களுக்கான 18 குடியிருப்புகள், இணைப் பேராசிரியர்களுக்கான 18 குடியிருப்புகள், பணிமுறை மேற்பார்வையிடும் பேராசிரியர்களுக்கான ஆறு குடியிருப்புகள், 500 கிலோ வாட் சக்தி கொண்ட துணை மின்நிலையம், தேர்வு மையம், மருந்தகம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாணவர் ஆக்க நல மையம் மற்றும் கணிப்பொறி மையம் ஆகியவை கட்டப்பட்டுள்ளதோடு சமையலறைக் கருவிகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

## ஆ. வேளாண்மை

வேளாண் துறையில் மனிதவள மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தப்பட்ட 1998-99 ஆம் ஆண்டின் இலக்கு பிப்ரவரி 1999 வரையிலான சாதனை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| இனங்கள் | இலக்கு | பிப்ரவரி 1999 வரை சாதனை |
|---|---|---|
| 1. வெளிநாட்டுப் பயிற்சி (எண்கள்) | 6 | .. |
| 2. உள்நாட்டுப் பயிற்சி (எண்கள்) | 20 | 309 |
| 3. கணிப்பொறிப் பயிற்சி (எண்கள்) | 50 | 84 |

வேளாண்மைத் துறையிலிருந்து 40 அலுவலர்களை வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 இல் இத்திட்டம் தொடரப்படும்.

[1999 ஏப்ரல் 5

## இ. தோட்டக்கலை

இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்களின் உயர்தொழில் நுட்பங்களில் பயிற்சி பெறும் பொருட்டு இத்துறை அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். மேலும் தோட்டக்கலையில் தங்களின் திறமையை மேம்படுத்திக்கொள்ள இந்தியாவில் உள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களுக்கும் உள்நாட்டுப் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். தோட்டக்கலைத் துறையிலிருந்து 16 அலுவலர்களை வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 1998-99 ஆம் ஆண்டு ரூ.54.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 1999 முடிய பணியாளர் சம்பளம், புத்தகங்கள் வாங்குதல், கருவிகள் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.13.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிலும் இத்திட்டத்தை செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது.

## ஈ. வேளாண்மைப் பொறியியல்

1995-96 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.207.60 இலட்சம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தலைமையிடத்தில் ஒரு மனிதவள மேம்பாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :–

1. பயிற்சியாளர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி அளித்தல்,

2. தேசிய பயிற்சி மையங்களில் சிறப்புப் பயிற்சி அளித்தல்,

3. திருச்சியில் இயங்கும் வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தை நவீனப்படுத்தி உயர்த்துதல் (பலப்படுத்துதல்).

1998-99ஆம் ஆண்டில் நீர்வடிப்பகுதி மேம்பாடு, நில மேம்பாடு, வடிகால், நீர்ப்பாசன மேம்பாடு, நுண்ணிய நீர்ப்பாசன நுணுக்கங்கள் போன்றவற்றில் வெளிநாட்டில் சிறப்புப் பயிற்சி பெற 20 அலுவலர்களை அனுப்புவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1999 ஏப்ரல் 5]

### 3. தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயப் பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் உணவுத் தன்னிறைவை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் இராமநாதபுரம் மற்றும் சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் ரூ.28.73 கோடி ஒதுக்கீட்டுடன் 74,400 பண்ணை மகளிரை ஏழாண்டுகளில் பயிற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தை மார்ச் 2002 வரை நீட்டிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.507.75 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பிப்ரவரி 1999 ரூ.463.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பொருள் மற்றும் நிதி இலக்கு பிப்ரவரி 1999 முடிய சாதனை மற்றும் 1999-2000 ஆண்டிற்கான திட்டம் ஆகியன வருமாறு :-

| வ. எண் | இனம் | 1998-99 இலக்கு | பிப்ரவரி '99 வரை சாதனை |
|---|---|---|---|
| பொருள் (எண்களில்) | | | |
| 1. | கிராமப்புறப் பயிற்சி | 216 | 214 |
| 2. | சிறப்புப் பயிற்சி | 336 | 197 |
| 3. | பண்ணை மகளிர் கருத்தரங்கு | 243 | 236 |
| 4. | தொடர் நடவடிக்கை | 2670 | 2549 |
| 5. | பண்ணை மகளிர் குழு | 336 | 336 |
| | நிதி (ரூ. இலட்சத்தில்) | 507.75 | 463.85 |

1999-2000 ஆண்டிற்கான இலக்கு:–

| வ. எண் (1) | இனம் (2) | இலக்கு (எண்களில்) (3) |
|---|---|---|
| பொருள் (எண்களில்) | | |
| 1. | கிராமப்புறப் பயிற்சி | 330 |
| 2. | பண்ணை மகளிர் கருத்தரங்கு | 110 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்புக் கருத்தரங்கம் | 27 |
| 4. | பன்மடங்கு பெருக்கு பயிற்சி | 330 |
| 5. | குழு அமைப்புப் பயிற்சி | 210 |
| 6. | பண்ணை மகளிர் குழு | 291 |
| 7. | பருவகால பயிற்சி | 84 |
| 8. | சிறப்புப் பயிற்சி | 165 |
| | நிதி (ரூ. இலட்சத்தில்) | 630.72 |

### 4. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (கட்டம் 2)

திருநெல்வேலி விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி, திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சங்கரன்கோவில், இராதாபுரம் மற்றும் நாங்குநேரி வட்டங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தாங்குளம், திருச்செந்தூர் வட்டங்களிலும் மொத்தம் 120 கிராமங்கள் பயன்பெற செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில பங்காகிய ரூ.995.44 இலட்சம் சேர்த்து ரூ. 41,72.44 இலட்சம் செலவில் 42,500 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெற ஏழு ஆண்டுகளில் செயல்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 5-8-1994-ல் தொடங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டு, இத்திட்டகாலத்தின் ஐந்தாவது ஆண்டு ஆகும்.

இத்திட்டத்தில் தாவர அரண் அமைத்தல், வேளாண் காடுகள் மேம்பாடு, குழாய்க் கிணறுகள் அமைத்தல், தாவர அரண்கள், வேளாண் காடுகள், மேய்ச்சல் நிலங்கள் போன்றவற்றைப் பராமரித்தல், இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர், சிக்கனமான செலவின மரங்கள் மற்றும் வருடாந்தர பலன்தரும் மரங்கள் வளர்த்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு போன்ற பணிகள் முக்கிய பணிகளாகும். 31-3-1998 முடிய உள்ள காலத்தில் 15,022 எக்டேர் நிலத்தில் ரூ. 1446.76 செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 6,495 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.495.99 இலட்சம் செலவில் பணிகள் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. டானிடா ஆய்வுக் குழு திட்டம் செயல்படுத்தும் பகுதியை 1999 ஜனவரி மாதம் பார்வையிட்டது. மேற்படிக் குழு துறையினால் செயல்படுத்தப்படும் பணியின் தரத்தினையும், திட்ட செயல்பாட்டையும் பாராட்டியுள்ளது.



இத்திட்டத்தில் விவசாயிகளின் ஈடுபாடு, கிராமவளர்ச்சிச் சங்கங்களின் செயல்பாடு ஆகியவைகளும் ஆய்வுக் குழுவினால் பாராட்டப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தை மார்ச் 2003 வரை நீட்டிக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது. 1999-2000 ஆண்டில் ரூ.538.26 இலட்சம் செலவில் 6,500 எக்டேர் நிலத்தில் பணிகள் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. டானிடா நிதி உதவியுடன் விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை வட்டங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், முதுகுளத்தூர் வட்டங்களிலும், மொத்தமாக 83 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநில அரசின் பங்காக ரூ.71.39 இலட்சத்துடன் சேர்த்து ரூ. 1,300.30 இலட்சம் செலவில் 11,000 எக்டேர் நிலம் பயன்பெறும் வகையில், திட்ட முன்னோடி காலமாக 6 மாதம் சேர்த்து 5½ ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டதாகும். இத்திட்டம் 8-11-1994 அன்று தொடங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டு நான்காவது செயலாண்டு ஆகும்.

இத்திட்டத்தில் வேளாண்காடு மேம்பாடு, தாவர அரண் அமைத்தல், மேய்ச்சல் நில மேம்பாடு, தாவர அரண்களுக்கு இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர் மற்றும் மரங்கள் வளர்த்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்ட தொடக்க நாளிலிருந்து 31-3-1998 முடிய ரூ.522.75 இலட்சம் செலவில் 3,736 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.208.96 இலட்சம் செலவில் 1,200 எக்டேர் நிலப்பரப்பில் பயன்பெறும் வகையில் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. 1999-2000 ஆண்டில் ரூ.239.33 இலட்சம் செலவில் 1,200 எக்டேர் நிலத்தில் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. டானிடா ஆய்வுக் குழு இத்திட்டத்தை மார்ச் 2001 ஆம் ஆண்டு வரை நீட்டிக்க பரிந்துரைத்துள்ளது.

# அத்தியாயம் 10

## மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

### அ. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோ:பெட்)

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்) மற்றும் அதன் சார்புடைய வட்டார மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்கள் வேளாண் நடைமுறைகளை இயந்திரமயமாக்கி, வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு 1972-ல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவ்விணையம் மற்றும் அதன் சார்புச் சங்கங்களின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. புல்டோசர்கள், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றை வாடகைக்கு அளித்தல்.
2. வேளாண் மக்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளைச் செய்தல்.
3. வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக் கருவிகள் ஆகியவற்றைத் தயாரித்து வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்தல்.
4. இரசாயன உரம், இயற்கை உரம் போன்ற வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்.
5. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள் தயாரித்து விநியோகம் செய்தல் போன்ற பிற அரசு வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குதல்

## 1. வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்

### அ. அக்ரோஃபெட்டின் வாடகைக்கு விடும் பணிகள்

1. 5 டிராக்டர் டோசர்களையும் 10 புல்டோசர்களையும் வாடகைக்கு விடும் பணியை அக்ரோஃபெட் செய்து வருகின்றது.
2. 4 ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டு பணியாற்றி வருகின்றது.



3. ஓர் ஆழ்துளையிடும் கருவியை விவசாயத்திற்காகவும் குடிநீர் வசதிக்காகவும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட வாடகைக்கு விட்டு வருகின்றது.
4. 5 சாலை உருளைகளை ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிராமப்புறச் சாலைகள் அமைப்பதன் பொருட்டு வாடகைக்கு விட்டு வருகின்றது.

### ஆ. சார்புச் சங்கங்களின் வாடகைக்கு விடும் பணிகள்

அக்ரோஃபெட் சார்பு மையங்கள் 10 டிராக்டர் டோசர்கள், 190 டிராக்டர்கள் மற்றும் டிரைலர்கள், 81 பவர்டில்லர்கள் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் கருவி, 4 பாறை உடைக்கும் கருவிகள் மற்றும் 50 ஆயில் இன்ஜின் பம்பு செட்களை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தந்து சேவை செய்து வருகின்றன.

## 2. வேளாண் மக்களின் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சீர்படுத்தவும் மற்றும் பராமரிப்பதற்கும் இணையத்தைச் சார்ந்த 118 சங்கங்களில் பட்டறை இயந்திரங்களான பற்றவைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், கிரைண்டர்கள், கம்ப்ரசர்கள் ஆகிய வசதிகள் அமைக்கப் பெற்றுள்ளன 12 மாவட்ட மையங்களிலும் வாகனங்களை விசைநீர் மூலம் சுத்தம் செய்யும் கருவி, ஹைட்ராலிக் ராம்ப், ஏர் கம்ப்ரசர்கள் முதலியன கொண்டு வேளாண் கருவிகளைப் பழுதுபார்க்கும் மற்றும் சீராக்கம் செய்யும் பணிகளையும் ஆற்றி வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் மாதனூர், கடலூர் மாவட்டத்தில் கடலூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி ஆகிய 4 இடங்களில் டீசல் விநியோக மையங்கள் அமைக்கப்பெற்று டீசல் விநியோகம் செய்து வருகின்றன.

## 3. மேம்படுத்தப்பட்ட வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக் கருவிகள் தயாரித்தல்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட வேளாண் கருவிகளை அக்ரோஃபெட் மற்றும் அதன் சார்பு மையங்களின் மூலம் உள்ளூர் தேவைக்கேற்ப தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

**4. வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல் :**

அக்ரோஃபெட் சார்பு மையங்களின் மூலம் இரசாயன உரங்கள், இயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் ஜிப்சம் போன்ற இடு பொருட்களை வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

**5 அரசு சார்புத் திட்டங்கள் :**

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவற்றின் பல்வேறு திட்டங்களை அக்ரோஃபெட் அதன் 210 சார்பு மையங்களின் மூலம் நல்ல முறையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு செயலாக்கம் செய்து வருகின்றது:

**அ. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக கடன் உதவி :**

அக்ரோஃபெட்டின் வாடகைப் பணியை உயர்த்தும் வகையில் அக்ரோஃபெட் இணையம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அரசு மூலமாக ரூபாய் 118.40 இலட்சம் கடன் உதவி பெற்று 4 எண்கள் புல்டோசர்களைக் கொள்முதல் செய்துள்ளது. அக்ரோஃபெட்டின் 48 சார்பு மையங்களுக்கு டிராக்டர் மற்றும் டிரைலர்கள் கொள்முதல் செய்வதற்கு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் ரூபாய் 154.91 இலட்சம் அரசு கடன் உதவி பெறப்பட்டுள்ளது. மேலும் வியாபார நடவடிக்கையைப் பெருக்குவதற்காக விளிம்புத் தொகையாக ரூ.50.00 இலட்சம் அக்ரோஃபெட்டிற்கும், ரூ.51.00 இலட்சம் 49 சார்பு மையங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டு நிதி வழங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஆ. மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம் :**

வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்களை இணையமும் அதன் சார்பு மையங்களும் தயாரித்து வழங்கிட அரசு அனுமதித்துள்ளது. அதன்படி மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளான தழை மிதிக்கும் கருவிகள், கடலை உடைக்கும் கருவிகள், சமன்படுத்தும் தகடுகள், சேறு கலக்கும் கருவிகள், ஒரு வழிக் கலப்பைகள், இருவழிக் கலப்பைகள் மற்றும் கரை அமைக்கும் கலப்பைகள் போன்றவற்றை அக்ரோஃபெட் சார்பு மையங்கள் தயாரித்து வருகின்றன. இந்த விவசாயக் கருவிகள் வேளாண் விரிவாக்க மையங்களுக்கு வழங்கப்பட்டு, வேளாண் மக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 1998-99ஆம் ஆண்டில் ரூ.248.74 இலட்சம் மதிப்பிற்கான 91,904 வேளாண் கருவிகள் இதுவரை விநியோகம் செய்யப்பட்டுள்ளன.



**இ. வறட்சி நிவாரணத் திட்டத்திலும், இதர திட்டங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் :**

வறட்சி நிவாரணத் திட்டத்திலும் இதர திட்டங்களிலும் ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளித்ததுபோல இவ்விணையத்திற்கும் அரசால் ஒப்படைக்கப்பட்டன. 1998-99ஆம் ஆண்டில் ரூ.155.99 இலட்சம் மதிப்பில் 520 ஆழ்துளைக் கிணறுகள் அக்ரோஃபெட்டின்மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

**ஈ. இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் தயாரித்து விநியோகம் செய்தல் :**

மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்திலும் இதர திட்டங்களிலும் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் மற்றும் பள்ளிகளுக்கு ரூ.292.52 இலட்சம் மதிப்பிற்கான 31,463 இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்களை அக்ரோஃபெட் தயாரித்து விநியோகித்துள்ளது.

**உ. 1998-99ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 5 மையங்களுக்கு டிராக்டர்கள் மற்றும் இணையத்திற்கு இரண்டு புல்டோசர்கள் வழங்குதல் :**

1998-99ஆம் ஆண்டில் ஒரு மையத்திற்கு ரூபாய் 2 இலட்சம் வீதம் 5 மையங்களுக்கு ரூ.10 இலட்சம் அளவில் 5 டிராக்டர் டிரைலர்கள் வழங்க அரசிடமிருந்து மானியம் பெற்று அதனைப் பயன்படுத்தி இணையம் 5 எண்கள் டிராக்டர் மற்றும் டிரைலர்களை 1. போளூர், திருவண்ணாமலை மாவட்டம், 2. வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம், 3. பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம், 4. சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் மற்றும் 5. காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம் ஆகிய மையங்களுக்குக் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது. மேலும் அக்ரோஃபெட்டிற்காக இரண்டு எண்கள் புல்டோசர்கள், அரசு மானியமாக ரூ.16.00 இலட்சம் பெற்று கொள்முதல் செய்யப்பட்டன.

**ஊ. அக்ரோஃபெட்டின் கிடங்கு மற்றும் விற்பனை நிலையம் :**

அக்ரோஃபெட் கீழ்க்காணும் உபகரணங்களை விழுப்புரத்தில் உள்ள விற்பனை மையத்தின் மூலம் விற்பனை செய்து வருகிறது:

1. பல்வேறு அளவுகளில் இரும்புப் பைப்புகள்.
2. பல்வேறு அளவுகளில் பி.வி.சி. பைப்புகள்.

3. மின் மோட்டார் பம்புசெட்டுகள் மற்றும் ஸ்டார்ட்டர் போன்ற உபகரணங்கள்
4. கைத் தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள்
5. இந்தியா மார்க்-2 கைப்பம்புகள்
6. வேளாண் கைக் கருவிகளான மண்வெட்டிகள், கடப்பாரைகள், கோடாரி முதலியன.
7. தார்ப்பாய்கள் முதலியன.

## 6. அக்ரோஃபெட்டின் செயலாக்கம் :

1994-95 முதல் 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) அக்ரோஃபெட்டின் நிதி செயலாக்கம் பின்வருமாறு:

| வரிசை எண் | ஆண்டு | செயலாக்கம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1994-95 | 543.00 |
| 2. | 1995-96 | 1689.00 |
| 3. | 1996-97 | 1550.00 |
| 4. | 1997-98 | 2286.22 |
| 5. | 1998-99 (பிப்ரவரி 1999 வரை) | 1420.91 |

## 7. எதிர்காலத் திட்டங்கள் :

1999-2000 ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றிட அக்ரோஃபெட் திட்டமிட்டுள்ளது:—

1. அக்ரோஃபெட் இணையம் 5 சார்புச் சங்கங்களுக்கு 5 டிராக்டர், டிரைலர் மற்றும் உபகரணங்களை ரூ.20.00 இலட்சத்தில் கொள்முதல் செய்து அதன் வாடகைப் பணித் திட்டத்தினை உயர்த்திட திட்டமிட்டுள்ளது.

2. சென்னையில் ஒரு சர்வீஸ் ஸ்டேசனை ரூ. 8 இலட்சம் அளவில் நிறுவிட திட்டமிட்டுள்ளது.

## ஆ. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்)

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) 1981-ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க



(உட்பிரிவு எண் 9) பதிவு செய்யப்பட்டது. சட்டம் 1961-ன்படி பால்வளத்தில் இவ்விணையம் மத்திய அரசின் கொள்கையின்படி, அமைக்கப் கூட்டுறவு முறையில் வெற்றி அடைந்ததின் அடிப்படையில் கூட்டுறவுகளை பட்டது. பாரதம் முழுவதும் இந்த அடிப்படையில் வாரியத்திடம் அமைக்கும் பணியானது தேசிய பால்வள எண்ணெய்வித்துக்கள் ஒப்படைக்கப்பட்டது. தமிழகத்தில் 335 மாவட்டங்களில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 6 காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், பதிவு செய்யப்பட்டது. திருவள்ளூர் 1492 கிராமங்களை உள்ளடக்கி உறுப்பினர்களாக தற்சமயம் இந்த அமைப்பில் 84,920 விவசாயிகள் எண்ணெய்வித்து உள்ளனர். மொத்தம் 1.31 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பு சாகுபடியில் இவ்வமைப்பின்கீழ் உள்ளது.

எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை (எண்ணெய் மற்றும் அதன் உப பொருட்கள்) ஆகியவற்றினை ஒருங்கிணைப்பதே இவ்விணையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டின் தாவர எண்ணெய்வித்துத் திட்டத்தில் தேசிய பால்வள வாரியத்தின் மொத்த முதலீடு ரூ.15.61 கோடி ஆகும். இதில் ரூ.7.19 கோடி மானியமும், ரூ.8.42 கோடி கடனும் ஆகும். 1991-92 வரை தேசிய பால்வள வாரியம் இணையத்தின் வியாபார நடவடிக்கைகளுக்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை அளித்து வந்தது. 1985-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடமிருந்து திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலத்தில் உள்ள இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளை, அதில் பணிபுரிந்த 89 பணியாளர்களுடன் டான்காப் கையகப்படுத்தியது. இவ்வாலைகளைப் புதுப்பிக்கும் பணிக்காக தேசிய பால்வள வாரியம் மேலும் ரூ.8.00 கோடியைக் கடனாக அளித்தது.

விஞ்ஞான அடிப்படையில் மணிலா வல்லுநர் விதை உற்பத்தி செய்வதற்காக 1985-ஆம் ஆண்டு நெய்வேலியில், 120.4 எக்டேர் பரப்பளவில் வட்டார உழவியல் மையம் அமைக்கப்பட்டது. இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் வல்லுநர் விதைகள் ஆதாரம் மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகள் பெருக்கத்திற்காக விநியோகம் செய்யப்படுகிறது. மாநிலத்தின் வல்லுநர் விதையின் தேவையில் 50% வல்லுநர் விதைகளை டான்காப் உற்பத்தி செய்கிறது. இப்பண்ணையில் உள்ள பயிற்சி மையம் விவசாயிகளுக்கும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விரிவாக்கப் பயிற்சி அளிக்கிறது.

டான்காப்பில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 5.0 கோடி ரூபாயாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 160.05 இலட்சம் ஆகும். இதில் தேசிய பால்வள வாரியம் வழங்கிய ரூ.98.88 இலட்சமும் எண்ணெய்வித்து உற்பத்தியாளர் சங்கங்கள் வழங்கிய ரூ.61.17 இலட்சமும் அடங்கும்.

தற்சமயம் டான்காப்பில், எண்ணெய்வித்துக்களைப் பதப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் சிப்பம் இடுவதற்குக் கீழ்க்கண்ட வசதிகள் உள்ளன:

| வ.எண். | விவரம் | அலகு | தி.மலை | விருத்தாசலம் | கிண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மணிலா உடைத்தல் | நாளுக்குடன் | 150 | 150 | - | 300 |
| 2. | எண்ணெய் பிழிதல் | " | 125 | 100 | - | 225 |
| 3. | எண்ணெய் சுத்திகரித்தல் | " | 10 | - | - | 10 |
| 4. | பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் | " | 40 | 40 | - | 80 |
| 5. | கிடங்கு வசதி | டன் | 7,000 | 5,000 | - | 12,000 |
| 6. | எண்ணெய் சேமிப்பு கலன் | " | 1000 | 1,700 | 5,020 | 7,720 |
| 7. | சிப்பமிடுதல் | நாளுக்குடன் | 30 | 30 | 45 | 105 |

மேலும் 1997ஆம் ஆண்டு திருவண்ணாமலை, செய்யார், விருத்தாசலம் மற்றும் நெய்வேலி ஆகிய 4 இடங்களில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் கிடங்கு வசதியுடன் ஏற்படுத்தப்பட்டது.

1991-92ஆம் ஆண்டு வரை தாவர எண்ணெய்வித்து திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, விரிவாக்கப் பணி எண்ணெய் வித்துக்கள் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை (முக்கியமாக தேசிய பால்வள வாரியத்தின் சந்தை குறுக்கீட்டுத் திட்டத்திற்காக) ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், பதப்படுத்துதல் மற்றும் சந்தை குறுக்கீட்டுத் திட்ட நடவடிக்கைகள் இணையத்திற்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தின. இதன் விளைவாக 1992-93 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் மற்றும் உற்பத்தி நிறுத்தப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டிலிருந்து வணிக நடவடிக்கைகள் மட்டுமே, அதிலும் குறிப்பாக நுகர்வோர் விற்பனைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாமாயில் விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

இணையத்தின் புனரமைப்பிற்காக தமிழக அரசு 1993 ஆம் ஆண்டில் முன்பணமாக ஒரு கோடி ரூபாயும், வியாபார நடவடிக்கைகளுக்காக ரூ.80 இலட்சமும் அளித்தது. மேலும், மதிய உணவுத் திட்டத்திற்காகத்



தேவைப்படும் சமையல் எண்ணெய் டான்காப்பிலிருந்து வாங்க, தமிழ்நாடு வாணிபக் கழகத்திற்கு உத்தரவிட்டது. இது டான்காப்பிற்கு பேருதவியாக இருந்தது.

ஐந்து ஆண்டுகளாக இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளும் இயங்கவில்லை. எனினும் அரசு தேசிய பால்வள வாரிய உதவியுடன் புதுப்பிக்கப்பட்ட விருத்தாசலம் எண்ணெய் பிழியும் ஆலையின் சோதனை ஓட்டத்திற்குத் தேவையான வழிமுறைகளை அளித்தது. தமிழ்நாடு மின் நிதி மற்றும் கட்டுமான மேம்பாட்டு வாரியத்திடமிருந்து தமிழக அரசின் ஈட்டுறுதி அடிப்படையில் ரூ.3.0 கோடியை குறுகிய காலக் கடனாகப் பெற்று, 1500 மெ.டன் மணிலா பயறு பதப்படுத்தலுக்காக கொள்முதல் செய்யப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட ஆலையானது 8-4-1998 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

சோதனை ஓட்டத்திற்காக 1998 ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை எண்ணெய்வித்து கொள்முதல் செய்யப்பட்ட விவரங்களும் மற்றும் பதப்படுத்துதல் பற்றிய விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

*கொள்முதல்*

| | |
|---|---|
| மணிலா பயறு கொள்முதல் | 1310.890 டன்கள் |
| மதிப்பு | ரூ.266.71 இலட்சம் |
| மணிலா காய் கொள்முதல் | 342.291 டன்கள் |
| மதிப்பு | ரூ.43.75 இலட்சம் |
| மொத்த பயறு கொள்முதல் | 1561.837 டன்கள் |
| உலர்த்திய பயறு | 1537.096 டன்கள் |

*பதப்படுத்துதல்*

| | |
|---|---|
| அ. எண்ணெய் பிழியும் பிரிவு | |
| 1. மணிலா பயறு அரவை | 1537.096 டன்கள் |
| 2. மணிலா எண்ணெய் உற்பத்தி | 587.701 டன்கள் |
| 3. மணிலா பிண்ணாக்கு உற்பத்தி | 895.654 டன்கள் |
| ஆ. எண்ணெய் சுத்திகரிக்கும் பிரிவு | 38.014 டன்கள் |
| 1. சுத்திகரிக்கக் கொடுக்கப்பட்ட மணிலா எண்ணெய் | 38.014 டன்கள் |
| 2. சுத்திகரிக்கப்பட்ட மணிலா எண்ணெய் உற்பத்தி | 36.178 டன்கள் |
| இ. ஒப்பந்தமுறை கரைசல் பிரிப்பு | |
| 1. மணிலா பிண்ணாக்கு கொடுக்கப்பட்டது | 890.98 டன்கள் |
| 2. எண்ணெய் நீக்கிய மணிலா பிண்ணாக்கு வரவு | 832.04 டன்கள் |
| 3. கரைசல் பிரிப்பு மணிலா எண்ணெய் உற்பத்தி | 57.50 டன்கள் |

[1999 ஏப்ரல் 5

அனுகூலமான சந்தை நிலவரத்தினால், சோதனை ஓட்டத்தில் பெறப்பட்ட எண்ணெய் மற்றும் பிண்ணாக்கு ஓரளவு இலாபத்தில் விற்பனை செய்யப்பட்டது.

1998-99 ஆம் ஆண்டில் டான்காப், நுகர்வோர் சந்தையில் மணிலா எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெயை (1 லிட்டர் மற்றும் 15 கிலோ டின்கள்) புதிய வணிகப் பெயர்களுடன் தற்போது வின்னர் பாமாயிலுடன் மணிலா எண்ணெய் ( இருமுறை வடிகட்டப்பட்டது மற்றும் இருமுறை சுத்திகரிக்கப்பட்டது) சுவை என்ற வணிகப் பெயரிலும், சூரியகாந்தி எண்ணெய் (சுத்திகரிக்கப்பட்டது) சந்தோஷ் என்ற பெயரிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து எண்ணெய் வகைகளும் (பாமாயில் தவிர) அக்மார்க் தரத்துடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து விற்பனை மேற்கொள்வதற்காக டான்காப் மணிலா பயறு கொள்முதலை செப்டம்பர் 1998 (சித்திரை சிறப்புப் பருவம்), மானாவாரி 1998லும் மேற்கொண்டு பதப்படுத்துதலையும் மேற்கொண்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| (1) | சித்திரை சிறப்புப் பருவம் 1998 (2) | மானாவாரி 1998 (3) |
|---|---|---|
| மணிலா பயறு கொள்முதல் டன்கள் | 46.87 | 202.810 |
| மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | 10.70 | 28.74 |
| உளர்ந்த பயறு | 45.312 | 196.667 |
| பதப்படுத்துதல் (டன்கள்) | | |
| அ. எண்ணெய் பிழியும் பிரிவு | | |
| 1. மணிலா பயறு அரவை | 45.31 | 196.66 |
| 2. மணிலா எண்ணெய் உற்பத்தி | 16.44 | 73.68 |
| 3. மணிலா பிண்ணாக்கு உற்பத்தி | 27.92 | 118.34 |
| ஆ. சுத்திகரிப்புப் பிரிவு | | |
| 1. சுத்திகரிக்கக் கொடுக்கப்பட்ட மணிலா எண்ணெய் | | 38.61 |
| 2. சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி | | 38.15 |

1998-99 ஆம் ஆண்டில், மதிய உணவுத் திட்டத்திற்குச் சமையல் எண்ணெய் விநியோகம் செய்ததுடன், பொது விநியோகத் திட்டத்தில் பாமாயிலைச் சிப்பமிட்டு விநியோகிக்கவும் வாய்ப்பு கிடைத்து,



1999 ஏப்ரல் 5]

இத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 டன் பாமாயிலை முறைப்படி சிப்பமிட்டு வழங்கியது.

கிண்டியில் உள்ள 5000 டன் கொள்ளளவு கொண்ட மூன்று எண்ணெய் சேமிப்புக் கலன்களைத் தேசிய பால்வள வாரியத்திற்கு வாடகைக்கு அளித்துள்ளது.

1998-99 ஆம் ஆண்டிற்கான பலதரப்பட்ட உணவு எண்ணெய் மொத்தம் மற்றும் நுகர்வோர் வணிகத்திற்கான சாதனைகள் வருமாறு (பிப்ரவரி 1999 முடிய)

| விவரம் (1) | சாதனை அளவு டன் (2) | சாதனை மதிப்பு ரூ. இலட்சம் (3) |
|---|---|---|
| அ. நுகர்வோர் விற்பனை | | |
| 1. வின்னர் பாமாயில் | 1179.388 | 497.12 |
| 2. சுவை மணிலா எண்ணெய் (வடிக்கப்பட்டது, சுத்திகரிக்கப்பட்டது) | 198.485 | 103.018 |
| 3. சூரியகாந்தி எண்ணெய் (சந்தோஷ்) | 206.323 | 104.15 |
| 4. தேங்காய் எண்ணெய் | - | - |
| ஆ. மொத்த விற்பனை | | |
| 1. தமிழ்நாடு வாணிபக் கழகத்திற்கு பாமாயில் | 1154.000 | 451.130 |
| 2. மணிலா எண்ணெய் | 492.000 | 223.870 |
| 3. பிண்ணாக்கிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் | 57.500 | 23.000 |
| 4. எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு | 833.000 | 56.32 |
| 5. மணிலா பிண்ணாக்கு | 98.926 | 7.000 |
| 6. பிண்ணாக்கு சூரியகாந்தி மற்றும் பருத்தி | - | - |
| 7. எள் எண்ணெய் (பிண்ணாக்கில் இருந்து எடுத்து சுத்திகரிக்கப்பட்டது) | 12.450 | 4.480 |
| 8. எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு (எள்) | 235.290 | 13.944 |
| 9. தேர்வு செய்யப்பட்ட மணிலா பயறு | 0.500 | 0.120 |
| இ. கொள்கலன் வாடகை | - | 22.05 |
| ஈ. பொது விநியோகத் திட்டம் (பாமாயில்) | 1000.000 (*) | 14.000 |

(*) ஒப்பந்த அடிப்படையில் சிப்பமிடப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 5

மத்திய அரசின் எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின் ஒரு பகுதியை 1994-95 லிருந்து இவ்விணையம் செயல்படுத்தி வருகின்றது. 1998-99ஆம் ஆண்டில் பல்வேறு இடுபொருட்களை திட்டப்பகுதிக்கும் (சங்கங்கள் மூலமாக) மற்றும் பிற மாவட்டங்களுக்கும் வழங்குவதற்காக அரசு ரூ.331.500 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் குறியீடு மற்றும் சாதனை (28-2-1999ன்படி) அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

இணையத்தில் நிதி நிலை அறிவிக்கை (ஏப்ரல் 1998 முதல் பிப்ரவரி 1999 வரை) கீழே முந்தைய ஆண்டின் விவரத்துடன் தரப்பட்டுள்ளது.

**நிதி நிலை அறிக்கை (தற்காலிகமானது)**

**(1-4-1998 முதல் 28-2-1999 வரை)**

**வருமானம் மற்றும் செலவினப் பட்டியல்**

| விவரம் (1) | ஏப் 1998-பிப் 1999 (2) | ஏப் 1997-மார்ச் 1998 (3) |
|---|---|---|
| வருமானம் | | |
| விற்பனை | | |
| பிறவருமானம் | 1844.55 | 1719.24 |
| முடிவு இருப்பு | 150.54 | 108.97 |
| மொத்த வருமானம் | 81.97 | 110.93 |
| செலவு | 2077.06 | 1939.14 |
| ஆரம்ப இருப்பு | | |
| கொள்முதல் | 110.93 | 48.04 |
| உற்பத்தி மற்றும் விற்பனைச் செலவு | 1551.43 | 1556.97 |
| நிர்வாகச் செலவு | 136.06 | 91.48 |
| வட்டி செலுத்தியது | 299.41 | 301.75 |
| மொத்தச் செலவு | 20.56 | 38.00 |
| வட்டி மற்றும் தேய்மானத்திற்கு முன் லாபம் | 2118.39 | 2034.24 |
| வட்டிக்குப்பின் தேய்மானத்திற்கு முன் லாபம் | (-)41.33 | (-)98.10 |
| வட்டி மற்றும் தேய்மானத்திற்குப் பின் லாபம் | (-)105.49 | (-)130.10 |
| ஒட்டுமொத்த நிகர லாபம்/நட்டம் | (-)149.6 | (-)178.22 |
| | (-)2292.33 | (-)2142.73 |



1999 ஏப்ரல் 5]

கடந்த ஆண்டைக் காட்டிலும் விற்பனை அதிகரித்திருந்த போதிலும், அதிகமான நிர்வாகச் செலவினங்களால் (விற்பனையில் 15 சதம்) இணையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. 1998-99-ல் மேற்கொள்ளப்பட்ட வியாபார நடவடிக்கைகள் 1999-2000-லும் தொடரும். எதிர் வரும் இறவை பட்டத்தில் மணிலா கொள்முதல் மற்றும் பதப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1999-2000-க்கான வியாபாரத் திட்டம் ரூ.32 கோடிக்கான விற்பனை அளவில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் இடுபொருள் விநியோகம் செய்தல் ரூ.7 கோடி விற்பனை, நுகர்வோர் எண்ணெய் விற்பனை பிண்ணாக்கு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மணிலா பயறு ஆகியவை (ரூ. 23.80 கோடி) மற்றும் கொள்கலன், கிடங்கு வசதி வாடகைக்கு விடுதல், பொது விநியோகத் திட்டத்திற்காக சிப்பமிடல் (ரூ.83 இலட்சம்) ஆகியவை அடங்கும். தேசிய பால்வள வாரியத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்து, பதப்படுத்தி மணிலா எண்ணெய் விற்பனை செய்யும் நடவடிக்கை 1999-2000க்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய நடவடிக்கை ஆகும் (மொத்த விற்பனை ரூ. 2.60 கோடி, இது விற்பனையில் சேர்க்கப்பட்டுள்ளது)

**1999-2000 ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

| விவரம் (1) | மொத்த விற்பனை அளவு (டன்) (2) | மதிப்பு (ரூ. இலட்சம்) (3) |
|---|---|---|
| அ. விற்பனை-ஒட்டு மொத்த விற்பனை | | |
| 1. மதிய உணவுத் திட்டத்திற்கு உணவு எண்ணெய் | 2200 | 755.00 |
| 2. மணிலா எண்ணெய் | 820 | 380.00 |
| 3. பிண்ணாக்கு, எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு | 1375 | 100.00 |
| 4. தேர்ந்தெடுக்கப்பட்ட மணிலா பயறு | 200 | 60.00 |
| ஆ. நுகர்வோர் விற்பனை | | |
| 1. பாமாயில் | 1800 | 630.00 |
| 2. சூரியகாந்தி எண்ணெய் | 600 | 252.00 |
| 3. மணிலா எண்ணெய் | 150 | 75.00 |
| 4. மணிலா எண்ணெய் (சுத்திகரிக்கப்பட்டது) | 150 | 75.00 |

[1999 ஏப்ரல் 5

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 6. தேங்காய் எண்ணெய் | | |
| இ. பொது விநியோகத் திட்டத்திற்கு சிப்பமிடல் | 50 | 25.00 |
| ஈ. கொள்கலன் வாடகைக்கு விடுதல் | 1000 | 35.00 |
| உ. எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம் | 4000 | 48.00 |
| ஊ. விதை மற்றும் எண்ணெய்வித்து பெருக்கத் திட்டமில்லாத இடுபொருள் | | 630.00 |
| மொத்தம் | | 70.00 |
| தோராயமாக | | 3163.00 |
| | | 3200.00 |

1999-2000 க்கு திட்டமிடப்பட்டுள்ள மொத்த விற்பனை ரூ.12.00 கோடி ஆகும். 1998-99-ல் அநேகமாக ரூ.24.00 கோடி விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய பால்வள வாரியம் மற்றும் தமிழக அரசிடம் கலந்தாலோசித்து டான்காப்பிற்கு ஒரு புனரமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 1999-2000 ஆண்டில் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அட்டவணை

### தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்தின் எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் (1) | பொருள் (2) | இலக்கு 1998-99 அளவு (3) | நிதி (4) | சாதனை 1998-99 பிப்.1999 வரை அளவு (5) | நிதி (6) | 1999 2000 ஆண்டுக் குறியீடு (7) |
|---|---|---|---|---|---|---|
| அ. | வேளாண் துறைக்கு இடுபொருள் விநியோகம் | | | | | |
| 1. | ஜிப்சம் (மெ.டன்) | 14530 | 145.300 | 14530 | 145.30 | 140.000 |
| 2. | வேர்ப்புழு கட்டுப்படுத்தல் (எக்டேர்) | 2100 | 10.500 | 2100 | 10.5 | 34.000 |
| 3. | விதை நேர்த்தி மருந்து (எக்டேர் இலட்சத்தில்) | 1.264 | 22.750 | 1.210 | 22.55 | [illegible] |
| 4. | சிறுகளை (எண்ணிக்கை) | | | | | |



1999 ஏப்ரல் 5]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு | - | - | - | - | 50.000 |
| 6. | இனக்கவர்ச்சிப் பொறி | - | - | - | - | 25.000 |
| 7. | பயிர் பாதுகாப்புக் கருவிகள் | - | - | - | - | 12..000 |
| 8. | நுண்ணுயிர்கலவை (ரைசோபியம் கரைசல்) | - | - | - | | 31.000 |
| 9. | பண்ணைக் கருவிகள் | - | - | - | - | 40.000 |
| | உபமொத்தம் | | 208.550 | | 207.98 | 462.000 |
| ஆ. | டான்காப் விவசாயிகளின் இடுபொருள் விநியோகம் விதைபொருட்கள் (குவிண்டால்) | | | | | |
| 1. | வல்லுநர் விதை உற்பத்தி | 421 | 16.000 | 254.3 | 9.835 | 19.000 |
| 2. | ஆதார விதை உற்பத்தி | 1500 | 3.000 | 329.34 | 0.660 | 3.000 |
| 3. | விதை கிராமம் | 5000 | 10.000 | 1098.25 | 2.190 | 12.000 |
| 4. | சான்று விதை, உண்மைநிலை விநியோகம் | 5000 | 15.000 | 4057 | 11.084 | 21.000 |
| 5. | சிறுதளை | - | 10.000 | - | 10.C | 15.000 |
| 6. | பெருவிளக்கப் பண்ணை (எக்டேர்) | 485 | 8.000 | - | 8.194 | 8.000 |
| 7. | விதை நேர்த்தி மருந்து (எக்டேர் இலட்சத்தில்) | 0.125 | 2.250 | - | 2.250 | 2.250 |
| 8. | வேர்ப்புழு கட்டுப்படுத்தல் (எக்டேரில்) | 700 | 3.500 | 699 | 3.495 | 3.500 |
| 9. | ஜிப்சம் (மெ.டன்) | 4000 | 40.000 | 4000 | 40.00 | 60.000 |
| 10. | விவசாயிகளின் பயிற்சி எண்ணிக்கை | 5000 | 10.000 | 4169 | 8.338 | 10.000 |
| 11. | பண்ணைக் கருவிகள் (எண்ணிக்கை) | - | 3.000 | - | - | 3.000 |
| 12. | பயிர் பாதுகாப்புக் கருவி (எண்ணிக்கை) | - | 2.000 | - | 2.444 | 3.000 |
| 13. | பணியாளர்களின் எதிர்பாரா செலவினம் | | | | | 10.000 |
| | உபமொத்தம் | | 122.750 | | 98.495 | 169.750 |
| | கூடுதல் | | 331.300 | | 306.475 | 631.750 |

[1999 ஏப்ரல் 5

### இ. தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம் (டி.என்.ஏ.ஐ.)

தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்வருமாறு:

அ. வேளாண்மை வளர்ச்சி பெறச் செய்யவும், நவீனமயமாக்க உதவும் பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

ஆ. வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்.

இ. மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளை விரைவில் வளர்ச்சிபெற ஊக்குவித்தல்.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.455.90 இலட்சம் ஆகும். இதில் தமிழ்நாடு அரசு ரூ.290.90 இலட்சமும் இந்திய அரசு ரூ.165.00 இலட்சமும் தங்களின் பங்கு மூலதனமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு டிஎன்ஏஐ. நிறுவனம் கீழ்க்கண்ட இரண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

அ. சூரியகாந்தி எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மீன்பிடி வலைகள் ஆகிய மூன்று பொருட்களை உற்பத்தி செய்து பெருமளவில் விற்பனை செய்வது.

ஆ. உரம் மற்றும் விவசாயக் கருவிகளை பெருமளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வது.

**1. உற்பத்தி நடவடிக்கைகள்:**

பூச்சிக் கொல்லி மருந்து ஆலை, அம்பத்தூர்

இக்கழகம் 1976 ஆம் ஆண்டு அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பு ஆலை உதவியுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்த ஆலை நாளொன்றுக்கு 1000 லிட்டர் திரவ மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது. தற்போது கீழே குறிப்பிட்டுள்ள திரவ பூச்சிக்கொல்லி மருந்துகளை இந்த ஆலை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.



1999 ஏப்ரல் 5]

**திரவ மருந்து:**

அ. பாஸ்போமிடான் 86% எஸ்.எல்.

ஆ. என்டோசல்பான் 35% இ.சி.

இ. மானோ குரோட்டாபாஸ் 36% எஸ்.எல்.

ஈ. குயினால்பாஸ். 25% இ.சி.

உ. சைபர்மெத்ரின் 10% இ.சி.

ஊ. பென்வலரேட் 20% இ.சி.

எ. குளோரோபைரிபாஸ் 20% இ.சி.

ஏ. அசாடிரக்டிடன் 0.03% இ.சி.

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனையின் அளவும் 1999-2000 ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (பிப்.1999 வரை) | 1999-2000 இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு திரவம் (லிட்டரில்) | 17984 | 97404 | 148290 | 197800 | 202000 | 220000 |
| விற்பனை அளவு திரவம் (லிட்டரில்) | 9913 | 96941 | 152925 | 196948 | 202000 | 220000 |
| விற்பனைத் தொகை ரூ. இலட்சத்தில் | 83.53 | 230.41 | 334.31 | 382.44 | 399.03 | 437.73 |

**மீன்பிடி வலை ஆலை, கிண்டி**

மீனவர்களுக்கு இயந்திரங்களினால் பின்னப்பட்ட மீன்பிடி வலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த ஆலை ஆண்டிற்கு 60 டன்கள் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது. இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டுகால உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும் 1999-2000 ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (பிப்.1999 இலக்கு வரை) | 1999-2000 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (டன்களில்) | 67 | 53 | 21 | 22 | 37 | 50 |
| விற்பனை அளவு (டன்களில்) | 59 | 58 | 25 | 26 | 37 | 60 |
| விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 89.79 | 104.15 | 43.02 | 46.12 | 58.86 | 78.49 |

## சூரியகாந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை, போச்சம்பள்ளி

இக்கழகம் 1978 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தருமபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு முழுமையான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியுள்ளது. இந்த ஆலையின் மூலதனம் ரூ.109.50 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 40 டன்கள் சூரியகாந்தி விதையைப் பிழிந்து எண்ணெய் எடுக்கவும், 30 டன்கள் சூரியகாந்தி பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கவும், 20 டன்கள் கச்சா சூரியகாந்தி எண்ணெயைச் சுத்திகரிக்கவும் திறன் கொண்டது. இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் 'சனோலா' என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் துணை உற்பத்திப் பொருளாகிய எண்ணெய் பிழிந்து எடுக்கப்பட்ட சூரியகாந்தி பிண்ணாக்கு, கோழி மற்றும் கால்நடை உணவுப்பொருள்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க டி.என்.ஏ.ஐ. நிறுவனம் சூரியகாந்தி விதையை முறையாக விவசாயிகளிடமிருந்து நேரிடையாக நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்து வருகிறது.

இந்த ஆலையில் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும் 1999-2000 ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| (1) | 1994-95 (2) | 1995-96 (3) | 1996-97 (4) | 1997-98 (5) | 1998-99 (பிப்.1999 வரை) (6) | 1999-2000 இலக்கு (7) |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (மெட்ன்களில்) | | | | | | |
| பிழிதல் | 7604 | 8433 | 5731 | 6573 | 9662 | 13420 |
| சுத்திகரித்தல் | 3276 | 2785 | 3033 | 4796 | 3600 | 5000 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| கரைத்து எண்ணெய் எடுத்தல் | 4623 | 4918 | 4880 | 3275 | 5700 | 7917 |
| விற்பனை அளவு எண்ணெய் | 3294 | 3035 | 3204 | 3387 | 3600 | 5000 |
| இதர எண்ணெய் துணைப் பொருட்கள் | 3577 | 4984 | 2377 | 4101 | 5700 | 7900 |
| விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 1802.63 | 1853.00 | 1590.71 | 1767.06 | 2362.49 | 3252.10 |

### 2. வர்த்தக நடவடிக்கைகள் :

**(i) விவசாயக் கருவிகள் விற்பனை :**

இக்கழகம் பிரசித்தி பெற்ற அனைத்து வகை உற்பத்தியாளர்களின் டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்களை விற்பனை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. இப்பண்ணை இயந்திரங்கள் இதற்குப் பொருத்தமான கேஜ்வீல், கலடிவேட்டர், தரமான உதிரி பாகங்கள், டயர், டியூப் மற்றும் மின்கலன்கள் (பேட்டரி) உடன் அனைத்து கிளை மையங்கள் மூலமும் விற்பனை செய்து வருகிறது. இக்கழகத்திற்குத் தமிழகம் முழுவதும் 9 கிளை மையங்களும் 16 விற்பனைக்கூடங்களும் உள்ளன.

இந்த வணிக நடவடிக்கைகளின் கடந்த ஐந்து ஆண்டு கால விற்பனை அளவும் 1999-2000 ஆண்டுக்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| (1) | 1994-95 (2) | 1995-96 (3) | 1996-97 (4) | 1997-98 (5) | 1998-99 (பிப்.1999 வரை) (6) | 1999-2000 இலக்கு (7) |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை அளவு டிராக்டர், பவர் டில்லர் (எண்களில்) | 1231 | 1203 | 952 | 1664 | 1572 | 1690 |
| மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | 1286.75 | 1287.27 | 1091.84 | 1930.19 | 1923.42 | 2153.60 |
| உதிரி பாகங்கள் (ரூ. இலட்சத்தில்) | 464.13 | 1144.18 | 729.14 | 673.07 | 960.75 | 959.70 |

**(ii) விவசாயம் இயந்திரமயமாக்குவதை ஊக்குவித்து விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திர கலப்பைகளையும் உபகரணங்களையும் வழங்கும் திட்டம் (மத்திய அரசின் ஆதரவுடன்) :**

அ. தமிழக அரசு சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு மானிய விலையில் 714 பவர் டில்லர்களை ரூபாய் 214.20 இலட்சம் மதிப்பில்

[1999 ஏப்ரல் 5

வழங்கிடும் பொறுப்பை இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. இது மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும் (ICDP). இத்திட்டத்தின்கீழ் பவர் டில்லர் ஒன்றுக்கு ரூ.30,000 மானியம் என்று 1997-98 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டது. அரசினால் அளிக்கப்பட்ட மானியம் முழுமையும் செலவிடப்பட்டு 714 பவர் டில்லர்களையும் வேளாண்மைத் துறையினரால் பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கி இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. 1997-98-ம் ஆண்டுக்கு சிறு விவசாயிகளுக்கு 250 எண்கள் டிராக்டர் இழுவை இயந்திரம், இயந்திரம் ஒன்றுக்கு 25 சதவீதம் மானியம் அல்லது ரூ.10,000 மானியம் இவற்றில் எது குறைந்தது என்ற அடிப்படையில் வழங்கிடும் பொறுப்பினை இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. ரூ.25.00 இலட்சம் மானியத் தொகை வழங்கப்பட்டது. பிப்ரவரி 1999 வரை 232 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 இயந்திரங்களும் மார்ச் 1999-க்குள் வழங்கப்பட்டு இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

இ. தமிழக அரசு இக்கழகத்திடம் ரூ.30,000 மானியம் என்ற அடிப்படையில் 233 சிறிய டிராக்டர்களை (30 எச்.பி. வரையிலான) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கிட ரூ.69.90 இலட்சம் இக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. பிப்ரவரி 1999 வரை இத்திட்டத்தின் கீழ் 200 சிறிய டிராக்டர்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 33 டிராக்டர்களும் மார்ச் 1999-க்குள் வழங்கப்பட்டுவிடும்.

ஈ. தமிழக அரசு மானியத் தொகை ரூ.153.90 இலட்சம் இக்கழகத்திடம் வழங்கியுள்ளது. இதன்படி 513 பவர் டில்லர்களை விவசாயிகளுக்கு டில்லர் ஒன்றுக்கு மானியத் தொகை ரூ.30,000 என்ற அடிப்படையில் வழங்கப்படவேண்டும். இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1999 முடிய 222 பவர் டில்லர்களை இக்கழகம் வழங்கியுள்ளது. மீதமுள்ள 291 பவர் டில்லர்களும் இந்த நிதியாண்டு முடிவதற்குள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிடும்.

உ. தமிழக அரசு இக்கழகத்திடம் ரூ.35.00 இலட்சம் மானியத் தொகை வழங்கியுள்ளது. இதன்படி 350 டிராக்டர் இழுவை இயந்திரங்கள் ரூ.10,000 மானியம் என்ற அடிப்படையில் சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும். இம்மானியத் தொகையை வழங்கிட விவசாயத் துறையினரால் விவசாயிகள் பரிசீலனை



1999 ஏப்ரல் 5]

செய்யப்பட்டு வருகிறார்கள். விவசாயத் துறையினரால் பரிந்துரை செய்யப்பட்டவுடன் 350 இழுவை இயந்திரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிடும்.

**(iii) உர விற்பனை :**

அநேக தலை சிறந்த உர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உரங்களைப் பெருமளவில் இக்கழகம் விற்பனை செய்து வருகிறது.

இப்பிரிவின் கடந்த ஐந்து ஆண்டு கால விற்பனை அளவும் 1999-2000 ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 (பிப்.1999 வரை) | 1999-2000 இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| விற்பனை அளவு: (டன்களில்) | 6559 | 5065 | 8182 | 9112 | 15010 | 25000 |
| விற்பனைத் தொகை: (ரூ. இலட்சத்தில்) | 239.62 | 308.40 | 326.99 | 384.49 | 664.80 | 1120.49 |

டி.என்.ஏ.ஐ. நிறுவனம் 1998-99 ஆம் ஆண்டு டிரைக்கோடெர்மா விருடி என்னும் இயற்கை உரத்தின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இதுவரை சுமார் 1000 கிலோ உரம் விவசாயத் துறை இயக்குநர் மூலமாக விவாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1.4 டன்னிலிருந்து 5 டன்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் 5 டன் டிரைக்கோடெர்மா விருடியை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட உள்ளது.

**3. உணவு பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் நிறுவனமாகச் செயல்படுதல் :**

தமிழநாடு அரசு, தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்தை மாநில அளவிலான பதப்படுத்தப்பட்ட உணவு வகை தொழில் வளாகத்தை மேம்படுத்துவதற்கான செயல்முறைத் திட்டங்களை எடுத்துரைத்து, ஊக்குவிக்கும் நிறுவனமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்நிறுவனம் தொழில்முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உணவு பதப்படுத்துபவர்களுக்கும் மற்றும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக அமைந்து, ஒருங்கிணைத்து ஒரு முழுமையான வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகின்றது.

இது சம்பந்தமாக இக்கழகத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. தொழில் வளர்ச்சிக்கு முறையான திட்டமிடுதல்.
2. தொழில் முனைவோர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுத்தல்.
3. முதலாவதாக தொழில் ஆரம்பிப்பவர்களுக்குத் தேவையான பங்கு மூலதனம் அளித்து உதவி செய்வது.
4. நவீன தொழில்நுட்பங்களை பதப்படுத்துவோர் விழிப்பு உணர்ச்சியுடன் அறிவதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும், அதனைப் பின்பற்றுவதற்கும், தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
5. தொழில்முனைவோர்களுக்கு அத்தியாவசியமான பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்துதல்.
6. உணவு பதப்படுத்தும் மையங்களுக்கு இன்றியமையாத நுட்பமான விவரங்களைத் தெரிவிப்பதற்கு ஒரு புள்ளி விவர வங்கியை நிறுவி நடத்துதல்.
7. தொழிற்சாலைகளுக்கு ஒரு சாளர (Single window) நிறுவனமாகவும் பலதரப்பட்ட தொழில் முனைவோரின் சார்பாக பல்வேறு அமைப்புகளுடன் தொடர்பாளராகவும் செயல்படுதல்.
8. உணவு பதப்படுத்தும் தொழில்களில் ஏற்படும் இடையூறுகளை அறிய தொழில் முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் நேருக்குநேர் சந்திப்பை ஏற்படுத்தி, விவாதங்கள் நடத்தி அவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண செயல்படுதல்.
9. மத்திய அரசு வழங்கும் உதவிகளை இந்நிறுவனம் ஒரு முன்னோடி நிறுவனமாகச் செயல்பட்டு உற்பத்தியாளர்களுக்குச் சரியான முறையில் போய் சேர்வதற்கும் மற்றும் ஏற்றுமதி உணவுப் பொருட்களைக் குளிர்சாதனம் மூலம் பதப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவிபுரிந்திடல் ஆகியவற்றையும் குறிக்கோளாகக் கொண்டிருத்தல்.

1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம் கீழே குறிக்கப்பட்டுள்ள மேம்படுத்துவோர் திட்டங்களில் பங்குகளில் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



| வ. எண் | மேம்படுத்துவோரின் பெயர் | அரசினால் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1. | புளோரிகல்ச்சர் ப்ராஜக்ட்-மெசர்ஸ் சன் பிளாசம்ஸ் புளோரல்ஸ் லிமிடெட் பெடரா பள்ளி, ஒசூர், தருமபுரி மாவட்டம் | 20.00 |
| 2. | பட்டன் மஷ்ரூம் திட்டம் மெசர்ஸ் அக்னி அக்ரோ புட்ஸ் லிமிடெட் வாடிப்பட்டி, மதுரை மாவட்டம். | 20.00 |

மேலும் மத்திய அரசு உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களை பல்வேறு மாவட்டங்களில் நிறுவுவதற்காக மானியத் தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் தொழில் முனைவோர்களை மேம்படுத்துவதிலும் தொழில் நுட்பங்களை உபயோகப்படுத்தி, ஊரக விவசாய மூலப்பொருட்களைக் கொண்டு பதப்படுத்திய உணவுப் பொருட்களைத் தயாரிப்பதிலும், தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தால் அவர்களாகவே ஒரு சிறிய தொழில் பிரிவை மேலாண்மை செய்வதற்கும் உதவியாக இருக்கும். இத்திட்டம் ஊரக தொழில் முனைவோர்களுக்கு தொழில்நுட்பம், உற்பத்தி, விற்பனை, கணக்கு பராமரித்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு போன்றவற்றில் பயிற்சி அளிக்கிறது.

*உதவித் தொகையின் நீட்டிப்பு:*

அ. இத்திட்டத்தின் மூலம் வழங்கும் உதவியானது ரூ.2.00 இலட்சம் வரை இயந்திரங்களும் தொழிற்சாலை நிலையங்களுக்கு, தரத்தை நிர்ணயிக்கும் உபகரணங்களும் வாங்குவதற்காக வழங்கப்படும்.

ஆ. விதை மூலதனம் / சுழல் நிதிக்காக, ஒருமுறை மானியம் ரூபாய் ஒரு இலட்சம் வரை உணவு பதப்படுத்துதல் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு வாணிப உற்பத்திக்கு வகை செய்யப்பட்டுள்ளது ஒன்றிற்கு மேற்பட்ட தயாரிப்புக்கான உற்பத்திக்கும், பயிற்சி அளிக்கவும், இயந்திரம் தளவாடங்கள் வாங்க நிதி உதவி மற்றும் தரம் ஆய்வு செய்யும் கருவிகள் ஆகியவைகளுக்கு அதிகபட்சம் ரூ. 7.50 இலட்சங்கள் வரை அனுமதிக்கப்படும். விதை மூலதனம் / வாணிப உற்பத்திக்கு ரூ.2.00 இலட்சம் வரை சுழல் நிதியாக அனுமதிக்கப்படும்.

இதுவரை 13 உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு மத்திய அரசு உதவி மானியத் தொகை வழங்கியுள்ளது. மேலும் 29 உணவு

பதப்படுத்தும் பயிற்சி மையங்களின் திட்டங்கள், மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் மானியத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

**4. சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டம்**

சூரியகாந்தி பயிரிடுவது தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பெரும் புகழ் பெற்று வருகிறது. விவசாயிகள் சூரியகாந்தி பயிரிட மிக ஆர்வம் செலுத்துகின்றனர். மேலும், தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி என்ற இடத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கழகத்தால் சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலையும் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்குத் தேவையான சூரியகாந்தி விதைகளைக் கொள்முதல் செய்யவும் சூரியகாந்தி விதைகளை அதிக அளவில் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கவும், சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுடன் இணைப்பு தொடர்பு முறையில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது இத்திட்டத்திற்கென ரூ.26.70 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் உயர்தர மற்றும் அதிக மகசூல் தரக்கூடிய விதைகள் விவசாயிகளுக்கு 50 சதம் மானியத்தில் விநியோகிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 16,000 எக்டேர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்படும். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் போச்சம்பள்ளியில் உள்ள எண்ணெய் பிழியும் ஆலைக்கென கொள்முதல் செய்யப்படும்.

**5. விற்பனை அளவு மற்றும் இலாபம்**

1998-99 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.64.00 கோடிக்கு விற்பனை செய்ய உள்ளது. 1999-2000 ஆண்டில் ரூ.80.00 கோடிக்கு விற்பனை செய்து ரூ.45.00 இலட்சம் நிகர இலாபம் ஈட்ட உள்ளது.

**ஈ. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்)**

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனத்தின் (டான்ஹோப்) முதன் நோக்கம், உற்பத்தியாளர்களின் முழு ஈடுபாட்டுடன் வலிமையுடைய கூட்டுறவு கோட்பாட்டுடன் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வழிவகுத்தலாகும். இக்குறிக்கோளினை அடைந்திட அறுவடைக்குப்பின் பொருட்களைக் கையாள்வதற்குத் தேவையான உள்ளமைப்பு



வசதிகளைப் பெற்ற அடித்தளம் அமைத்துக் கொடுத்தலே முக்கியமானதாகும். இதன் அடிப்படையில், தோட்டக்கலைப் பொருட்கள் விற்பனை தொடர்பான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கொள்முதல் நிலையம் அமைத்தல், சேமிப்பு நிலையம் மற்றும் உற்பத்தி மையங்களிலிருந்து உற்பத்திப் பொருட்களை விற்பனை மையங்களுக்கு கொண்டுவர வாகன வசதி ஏற்படுத்தித் தருதல் மற்றும் நுகர்வோர் விற்பனை நிலையங்கள் திறப்பது போன்ற முக்கியமானவைகளை உள்ளடக்கியதாகும். இப்பணிகள் முதற்கட்டமாக நிறைவேற்றப்பட ரூ.1023 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. புதுடில்லி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அரசின் பரிந்துரையை ஏற்று முதற்கட்டமாக இத்திட்டத்தை சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு இசைவு வழங்கி ரூ.470 இலட்சம் அனுமதித்துள்ளது. அரசும் பங்குத்தொகை ரூ.188 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

| வ.எண் | இனம்/உறுப்புக்கள் | எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1. | சில்லறை விற்பனைக்கூடம் | 75 | 90.00 |
| 2. | அ. கொள்முதல் மையம் | 10 | 60.00 |
| | ஆ. குளிர்பதன சாதனத்துடன் கூடிய கொள்முதல் மையம் | 4 | 80.00 |
| 3. | போக்குவரத்து வாகனம் | 18 | 90.00 |
| 4. | பல்வகை பழரச அலகு | 1 | 15.00 |
| 5. | வாழைப்பழம் பழுக்கச் செய்யும் அலகு | 4 | 20.00 |
| 6. | குறைந்த அளவு ஆதாயத் தொகை | - | 20.00 |
| 7. | செயல்பாட்டுக்கு முந்தைய செலவினம்* | - | 45.00 |
| 8. | சில்லறைச் செலவினம் (5%) | - | 20.00 |
| 9. | கணிப்பொறி | - | 10.00 |
| | மொத்தம் | | 470.00 |

(*ஒரு வருடத்திற்கான நிர்வாகச் செலவினம் உட்பட)

இத்திட்டத்தைச் செயல்படுத்த மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.